கவியரசர்

# முடியரசன் படைப்புகள் - 4

நெஞ்சு பொறுக்கவில்லையே
மனிதனைத் தேடுகிறேன்
மனிதரைக் கண்டுகொண்டேன்



தமிழ்மண்

முடியரசன் படைப்புகள் - 4

வளையாத முடியரசன் வைரத் தூண்தான்!
வளமார்ந்த பெரியாரின் கொள்கை வாள்தான்!
தளையறுத்து தமிழ்ப்பகையின் தலை யறுக்கும்
தளைதட்டா வெண்பாக்கள் இவரின் தோட்டா
குலைஇளநீர் கொட்டியதாய் இனிமைப் பேச்சு!
'குடி'யறியாச் சிந்தனைகள்! தமிழே மூச்சு!
அலைகடலாய் கருத்துமனம்! பெரியார் அண்ணா
ஆழ்மனத்தில் வைத்திருந்த புதையல் காடு

உவமைக் கவிஞர். சுரதா

தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

கவியரசர்

# முடியரசன் படைப்புகள்

**4**

**நெஞ்சு பொறுக்கவில்லையே**

**மனிதனைத் தேடுகிறேன்**

**மனிதரைக் கண்டுகொண்டேன்**


*ஆசிரியர்*

கவியரசர் **முடியரசன்**



**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017*

## *நூற் குறிப்பு*


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **கவியரசர் முடியரசன் படைப்புகள் - 4** |
| ஆசிரியர் | : | முடியரசன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2008 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16+ 264 = 280 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **260/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030<br>மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in<br>இணையதளம் : www.tamilmann.in |

# தொகுப்புரை

"கவியரசர் **முடியரசன்** கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும்" என்பார் **பேராசிரியர் அன்பழகன்**. அச்செல்வங்களை நாட்டுடைமை ஆக்கினார் தலைவர் **கலைஞர்**. அவற்றில் மூன்றில் ஒரு பங்கே எம் தந்தையார் காலத்தில் நூல்வடிவம் பெற்றன. எஞ்சிய பெரும் பகுதி பெட்டகத்துள் கட்டுண்டு கிடந்தன. அவற்றின் சிறப்புகள் அப்போது எமக்குத் தெரியவில்லை. எந்தையும் ஏதும் கூறவில்லை. அவரின் இறுதிக்காலத்தில் தான் அதை உணர்ந்த நான், அச்செல்வங்களைத் தொகுத்து வெளியிட முயற்சி மேற்கொண்டேன். எனினும் அவரின் மறைவுக்கப் பின்னரே அவற்றிற்கு நூல்வடிவம் தர எம்மால் இயன்றது. அச்செல்வங்களைத் தமிழுலகிற்கு வழங்கியதன் மூலம், மகன் தந்தைக்காற்றும் கடமையை, கவின் கலைச்செல்வியாம் தமிழ் அன்னைக்கு ஆற்றும் தொண்டினை நிறைவேற்றிய மனநிறைவும் கொண்டேன். தொடர்ந்து அப்பணியை எம் வாழ்வின் இலக்காகக் கொண்டு, ஒல்லும் வகையெல்லாம் செயலாற்றி வருகின்றேன்.

இவ்வகையில், தந்தையின் அனைத்துப் படைப்புகளையும் ஒரே நேரத்தில் முழுத் தொகுப்பாகப் பதிப்பிக்க எண்ணியிருந் தேன். இந்நிலையில், 1999-இல் முனைவர் இளவரசு வழி, மொழிக்காவலர் கோ.இளவழகன் நட்பினைப் பெற்றேன். **தமிழ்மண்** பதிப்பகத்தின் முதல் வெளியீடு முடியரசன் நூல்களே. முழுத் தொகைப்பையும் தமிழ்மண் வெளியிடும் என அப்போது அவர் கூறினார். இப்போது அது கனிந்தது. முடியரசனார் படைப்புகளை முழுமையாகத் தொகுத்துத் தருமாறு அவர் கூறியதற்கிணங்க தொகுத்துத் தந்துள்ளேன்.

முந்தையரின் அரிய தமிழ்ச்சீர்களைத் தமிழர்க்களித்து வரும் அன்னார்க்கு என் பாராட்டு; அவ்வழி எந்தையாரின் செம்மொழிச் செல்வங்களையும் வழங்கும் அவர்க்கு என் நன்றி; தமிழ் மண்ணுக்கு என் வணக்கம்.

**முடியரசன்**

> **' காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான்ஓர்**
> **வாணிகப் பரிசிலன் அல்லேன்........**
>
> **.................**
>
> **முற்றிய திருவின் மூவரே ஆயினும்**
> **பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே'**

*என்னும் சங்கப் புலவர்களின் வைர வரிகளுக்குச் சான்றாகப் பெருமித வாழ்வு வாழந்தவர். சலுகை போனால் போகட்டும்; என்றன் தமிழ் வெல்லட்டும், ஆண்ட தமிழர் உயரட்டும் எனப் போராடியவர் வளையா முடியரசர்; வணங்கா முடியரசர்; தெய்வத் தமிழை வணங்கியவர். எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க் காத ஆண்மையாளர். இலக்கிய உலகில் சிங்கமென உலவியவர். இருபதாம் நூற்றாண்டின் கவிதையுலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர்*

*அழகும், இனிமையும், புதுமையும் கொஞ்சிக் குலவும் கவிதைகள் படைத்துத் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை - மனிதரிடையே பேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை - குருட்டுப் பழக்க வழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என முரசறைந்தவர்.*

*தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையாய், அல்மொழி திணிப்பார் வல்வரவெதிர்த்துத் தொடுமொழிப் போரில் தும்பை சூடிய, குடியரசோச்சும் கொள்கை கொண்ட மொழியரசோச்சிய முதல் முடியரசன். தமிழ்த் தேசியக்கவி; தமிழுலகின் அபூர்வப் படைப்பாளி; செந்தமிழ் ஊற்று; பைந்தமிழ்ப் பொழில்; திராவிட நாட்டின் வானம்பாடி; தமிழ்நாட்டின் பாடுங்குயில்;* ***அப்பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம்*** *முழுதும் தமிழே உயிர்; கவிதையே மூச்சு.*

*ஆதித்தமிழரில் சாதிகள் இல்லை; பாதியில் புகுத்திய சாதியை ஒழிக்க ஓதினார் கவிதைகள்; ஓதியவாறே ஒழித்தார் வாழ்க்கையில். வள்ளுவ நெறியை வாழ்வில் நாட்டி, பெரியார் வழியை ஒளியாய்க் காட்டி, புத்தன் புகட்டிய பகுத்தறிவூட்டி, சாதி, சமய, சாத்திரம் அறுத்து, வாக்கின்படியே வாழ்ந்து காட்டி வரலாறானவர்.*

**முடியரசன் நூல்கள்:-**

***முடியரசன் கவிதைகள்*** - ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவரேனும் ஆள்க எனத் துஞ்சாமல், தாய்மொழியின் ஆட்சிக்கும் தமிழகத்தின் மீட்சிக்கும் பாடிய போர்ப்பரணிகள். மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது, காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளப் பாய்ச்சிய கூர்வேல்கள். கயமைகள் வீழ வீசிச் சுழற்றிய கைவாள்கள். காசுக்கும் கைம்மாறு பெறுதற்கும் மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்துவிட்டும் கெஞ்சாத தன்மான வரிகள். தமிழ் மானம் மீட்டெடுக்கப் பாடிய படைக்கலன்கள். வீழ்ந்த தமிழர் வாழ்ந்த வரலாறு மீள விழித்தெழப் பாடிய வீரக்கனல்கள்.

திராவிட எழுச்சிக் காலத்தில் **கவியரங்கில் முடியரசன்** முழங்கிய கவிமுழக்கம், முத்தமிழ்த் தோழர்க்கு முரசொலி முழக்கம்; அயலார்க்கோ இடிமுழக்கம். **தாய்மொழி காப்போம்** எனுமவர் **தமிழ்முழக்கம்**. வீரத் தமிழரை வீறு கொண்டெழைத்த வேங்கை முழக்கம். திராவிடத் திருவிடத்திற்கு ஒளிதந்த **ஞாயிறும் திங்களும்**. அரங்குகளில் ஆர்ப்பரித்த அயன்மொழிப் பாடல் களை அடக்கவந்த **காவியப்பாவை.** தமிழிலே இசையில்லை என்ற கூகைகளின் கூக்குரரை நெறிக்கக் கூவிய **பாடுங்குயில்**. சிந்தை உருக்கும் தெய்வத் தமிழ்ப் பாசுரங்கள். குறள்நெறி கூறிய, தமிழ் மறை போற்றிய **வள்ளுவர் கோட்டம், மனிதரைக் கண்டுகொண்டேன்** என நற்சான்றோர் போற்றிய சொற்பூ மாலை. புரட்சி வெடிக்க, புதுமை பூக்க, பொதுமை மலர, சாதி ஒழிய, சமயம் அழிய, சாத்திரம் மறைய, சமத்துவம் தழைய, உழைப்போர் உயர, ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற **புதியதொரு விதி செய்வோம்** எனப் புகன்ற சிவப்புப் பிழம்புகள், குமுகாயத்தில் பண்பாடு புண்பட்டு, ஒப்புரவு கரவு பட்டு, கொடுமைகள் மலிந்து, குறைகள் நிறைந்ததை கண்டு, உள்ளம் கொதித்து **நெஞ்சு பொறுக்க வில்லையே** எனக் குமுறியும், மாந்தரிடையே கயமை, இழிமை, நேர்மையின்மை, ஒழுங்குமீறல் பரவியதையறிந்து, மனம் நொந்து, **மனிதனைத் தேடுகிறேன்** எனத் தேடி, பண்பாடு காக்க, கொடுமைகள் மாய, குறைகள் களைய, தீயவை தீய வெடித்துக் கிளம்பிய எரிமலைக் கவிதைகள்.

உலக மொழிகளில் தேசீயக் காப்பியங்கள் எனக் கூறத்தக்க மூன்றனுள் ஒன்று **பூங்கொடி** - மொழிக்கொரு காப்பியம், கண்ணனைய மொழிகாக்கக் கடிமணத்தைத் துறந்த ஒரு பெண்ணணங்கின் போராட்டம், மொழிப்புரட்சி வரலாறு.

*காதல், வீரம், கையாற்றவலம், முப்பெருஞ்சுவைகளும் முகிழ்த்தெழும்; காதலும், வீரமும் கரையென நிற்க, வீரப்பேராறு வீறிட்டுப் பாயும்* ***வீரகாவியம்.***

*பண்டைத் தமிழே, தமிழர்க்கு* ***ஊன்றுகோல்*** *எனப் பண்டிதம் பாடிய பைந்தமிழ்க் காப்பியம்.*

*'உண்டாலம்ம இவ்வுலகம்' எனப் பாடிய, பழந்தமிழ்ப் பாண்டியன், போர்வாள் எறிந்த* ***இளம்பெருவழுதி*** *கடலுள் மாய்ந்த நாடகக் காப்பியம்.*

***எப்படி வளரும் தமிழ்?*** *எனச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகள். மாணாக்கர்களை நல்வழிப்படுத்த* ***அன்புள்ள பாண்டியனுக்கும், இளவரசனுக்கும்*** *எழுதிய கடித இலக்கியங்கள்.*

***எக்கோவின் காதல்*** *கொண்டு, இச்* ***சீர்த்திருத்தச் செம்மல்****, பார் திருத்தப் படைத்த சீர்த்திருத்தச் சிறுகதைகள்.*

*முடியரசன் படைப்புகள், படிப்போர் தம் தசைநார்களைப் புடைக்க வைக்கும்; தோள்களை நிமிர வைக்கும்; வீறு கொண்டு எழ வைக்கும்; உள்ளம் உருகி அழ வைக்கும்; பண்பாடு காக்க வைக்கும்; தமிழுணர்ச்சி ஊட்டவைக்கும்; சங்க நூல்களைச் சுவைத்தது போன்று சிந்தை இனிக்கும்.*

*தாம் எழுதுகின்ற கருத்தை உணர்ச்சியோடு உரைத்துப் பிறர் உள்ளத்திற் குடிகொள்கின்ற பெற்றியாளரே கவிஞர் என்ற இலக்கணத்திற்கேற்ப, தம்* ***நெஞ்சிற்பூத்தவை*** *எனும் கவித்துவம் திகழும் செம்மொழிச் செல்வங்களைத் துய்ப்போர் உண்மையில் பெறும்பேறு பெற்றவரே.*

***தமிழ் வெல்லட்டும்! தமிழர் உயரட்டும்!***

***தமிழ்மண் சிறக்கட்டும்!***

**முடியரசர் கவிபரப்பி முத்தமிழுலகுக்கு முடிசூட்டுவோம்!**

***- பாரி முடியரசன்.***

*முடியரசன் குடில்*
*569, சூடாமணி நகர்,*
*காரைக்குடி - 630 003.*

# பதிப்புரை

*கவியரசர் முடியரசன் 1920இல் பிறந்தவர். 1998இல் மறைந்தவர். வாழ்ந்த ஆண்டுகள் 78. எழுதிய நூல்கள் 25. இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து பொருள் வழிப் பிரித்து 13 தொகுதிகளாக* ***கவியரசர் முடியரசன் படைப்புகள்*** *எனும் தலைப்பில் ஒரே வீச்சில் வெளியிடுகிறோம். கவியரசர் முடியரசன் பாவேந்தர் பாரதிதாசன் வழிநிலை அறிஞர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்களின் கொள்கையை தம் நெஞ்சில் தாங்கியவர்.*

*தன்னலம் கருதாது தமிழ்நலம் கருதியவர். தன்னை முன்னிறுத்தாது தமிழையும் தமிழரையும் முன்னிறுத்தியவர். இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்ப்பன. தமிழர்களுக்குப் படைக்கருவிகளாக அரண் சேர்ப்பன.*

*நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த அறிவுச் செருக்கும் கொண்ட பாரதியின் பாடலுக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர்.*

**புதுநூற்கள் புதுக்கருத்தால்,**
**பொதுவகையால் தரவேண்டும்**
**புலவ ரெல்லாம்**

*எனும் பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்து மறைந்தவர். இருபதாம் நூற்றாண்டில்* ***'பா'*** *உலகில் புதுமைப் பூத்த மரபுக் கவிஞர். இவர்தம் நூல்களை ஒருசேர வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.*

*நன்றி*

**கோ. இளவழகன்**

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

மு.பாரி

*நூல் உருவாக்கம்*

*நூல் வடிவமைப்பு*
செல்வி ச. அனுராதா

*மேலட்டை வடிவமைப்பு*
செல்வி வ.மலர்

*கணினிக்கோப்பு*
மு.ந.இராமசுப்ரமணிய ராசா,
சு. நித்தியானந், செல்வி சு. ரேகா

*மெய்ப்பு*
மு. பாரி, சுப. இராமநாதன், புலவர். இராசவேலு,
கி.குணத்தொகையன், அரு.அபிராமி,

*உதவி*
அரங்க. குமரேசன், வே. தனசேகரன்,
இல.தர்மராசு, ரெ. விஜயகுமார்,

*எதிர்மம் (Negative)*
பிராசசு இந்தியா (Process India)

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்

**இவர்களுக்கு எம் நன்றியும் பாராட்டும் . . .**

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்புராயலு - சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம். |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 7.10.1920 - இயற்கையடைவு : 3.12.1998 |
| கல்வி | : | பிரவேசபண்டிதம்,<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934 - 39)<br>வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,<br>மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை<br>உயர்நிலைப்பள்ளி, சென்னை, (1947 - 49).<br>மீ.சு.உயர்நிலைப்பள்ளி,<br>காரைக்குடி (1949 - 78) |
| திருமணம் | : | 2.2.1949<br>(கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| **மக்கள்:** | | **மருமக்கள்:** | | **பேரப்பிள்ளைகள்:** |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | அருள்செல்வம்,<br>திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

# இயற்றிய நூல்கள்

**கவிதைத் தொகுதி**

| | | |
|---|---|---|
| *1.* | *முடியரசன் கவிதைகள்* | *1954* |
| *2.* | *காவியப் பாவை* | *1955* |
| *3.* | *கவியரங்கில் முடியரசன்* | *1960* |
| *4.* | *பாடுங்குயில்* | *1983* |
| *5.* | *நெஞ்சு பொறுக்கவில்லையே* | *1985* |
| *6.* | *மனிதனைத் தேடுகின்றேன்* | *1986* |
| *7.* | *தமிழ் முழக்கம்* | *1999* |
| *8.* | *நெஞ்சிற் பூத்தவை* | *1999* |
| *9.* | *ஞாயிறும் திங்களும்* | *1999* |
| *10.* | *வள்ளுவர் கோட்டம்* | *1999* |
| *11.* | *புதியதொரு விதி செய்வோம்* | *1999* |
| *12.* | *தாய்மொழி காப்போம்* | *2000* |
| *13.* | *மனிதரைக் கண்டு கொண்டேன்* | *2005* |

**காப்பியம்**

| | | |
|---|---|---|
| *14.* | *பூங்கொடி* | *1964* |
| *15.* | *வீரகாவியம்* | *1970* |
| *16.* | *ஊன்றுகோல்* | *1983* |
| *17.* | *இளம்பெருவழுதி (நாடகம்)* | *2008* |

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| *18.* | *எக்கோவின் காதல்* | *1999* |

**கடித இலக்கியம்**

| | | |
|---|---|---|
| *19.* | *அன்புள்ள பாண்டியனுக்கு* | *1999* |
| *20.* | *அன்புள்ள இளவரசனுக்கு* | *1999* |

**கட்டுரைத் தொகுப்பு**

*21.* தமிழ் இலக்கணம் *1967*

*22* பாடுங் குயில்கள் *1975*

*23.* சீர்த்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் *1990*

*24.* எப்படி வளரும் தமிழ்? *2001*

*25.* பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன்வரலாறு) *2008*

# பொருளடக்கம்

தொகுப்புரை ........ iii
பதிப்புரை ........ vii
வாழ்க்கைக்குறிப்பு ........ ix
இயற்றிய நூல்கள் ........ x

## நெஞ்சு பொறுக்கவில்லையே

காணிக்கை ........ 5
நெஞ்சக் குமுறல் ........ 2
1 தமிழ்த்தாய் வணக்கம் ........ 7
2 நெஞ்சு பொறுக்குதில்லையே ........ 8
3 நெஞ்சத் துடிப்பு ........ 11
4 அச்சு முறிந்தால்... ........ 16
5 வகுப்பறையும் மாணவரும் ........ 19
6 நூலகமும் மாணவரும் ........ 21
7 ஒப்பனையும் மாணவரும் ........ 23
8 அரசியலும் மாணவரும் ........ 25
9 இதழ்களும் மாணவரும் ........ 27
10 திரைப்படமும் மாணவரும் ........ 29
11 பெற்றவர் தூங்கினால்.......? ........ 31
12 ஓடம் பழுதானால்.........? ........ 32
13 புலவர் குறிக்கோள் ........ 34
14 காசுக்கா நீதி? ........ 37
16 மருத்துவ மனையா? வருத்தும் மனையா? ........ 41
17 நியாய விலைக்கடை ........ 44
18 கையூட்டுலகம் ........ 47

19 பூக்களிற் புழுக்கள் ........ 49
20 ஏச்சு மேடை ........ 52
21 தேர்தலாற் கண்ட பயன் ........ 54
22 கண்ணீர்த்துளி ........ 56
23 எது நாட்டுப் பற்று? ........ 58
24 உலகை நினையுங்கள் ........ 60
25 எழுத்துலகம் ........ 63
26 கேள்வி - பதில் ........ 65
27 ஓதிக்கெட்டவன் ........ 68
28 திருமணச் சந்தை ........ 70
29 படிப்பும் நடப்பும் ........ 74
30 ஈழம் சிவந்தது. ........ 75
31 உலகம் சிவக்கும் ........ 79
32 தேவ தாசி ........ 82
33 முளையிலே கிள்ளுக ........ 86
34 ஒப்பனை மகளிர் ........ 89
35 திரையரங்க வீரம் ........ 92
36 மனித மந்தை ........ 94

## மனிதனைத் தேடுகிறேன்

பொழுது புலரட்டும் ........ 99
காணிக்கை ........ 101
குன்றக்குடி அடிகளார் ........ 101
1 நந்தா விளக்கே! ........ 102
2 மனிதனைத் தேடுகிறேன்.... ........ 104
3 அந்தோ அரசியலே! ........ 107
4 அரசியல் அரங்கம் ........ 109
5 வண்ணமும் எண்ணமும் ........ 110
6 நாடு உருப்படுமா? ........ 113
7 தேர்தல் திருவிழா ........ 114
8 சிலம்பட்டும் போர்முரசு! ........ 118
9 உரிமையும் கடமையும் ........ 121

10 எது துணிவு? ........................................ 123
11 தீண்டாமை ........................................ 124
12 நல்ல சமையமடா! ........................................ 126
13 கடைத் தெருவில் ........................................ 127
14 நமது வாணிகம் ........................................ 129
15 நல்ல உலகமடா! ........................................ 131
16 சிவப்பு விளக்கு ........................................ 133
17 முன்னறிவிப்பு ........................................ 135
18 இருண்ட வீடு ........................................ 138
19 துன்புறவோ பெற்றாள்? ........................................ 141
20 புது விதி செய்வோம் ........................................ 143
21 விடிவு தோன்றும் ........................................ 145
23 போலிக் குடும்பம் ........................................ 150
24 சமுதாய வீதியிலே ........................................ 154
25 திரையுலகக் கற்பு ........................................ 158
26 வாழ்வுப் பாதையில் - பக்தி ........................................ 159
27 இன்றைய மனிதன் ........................................ 165
28 வெம்புவான் கம்பன் ........................................ 170
29 பாரதி கண்ட பெண்ணுரிமை ........................................ 175
30 இதுவா முன்னேற்றம்? ........................................ 178
31 பெண்ணின் பெருமை ........................................ 180
32 அணையா விளக்கு ........................................ 187

## மனிதரைக் கண்டு கொண்டேன்

முன்னுரை ........................................ 195
தமிழ் வாழ்த்து ........................................ 197
1 என்றும் வாழ்வர் ........................................ 198
2 தமிழ்த் தொண்டு ........................................ 199
3 அப்பரடிகள் ........................................ 201
4 எழுத்து மலை ........................................ 202
5 வாழிய தமிழ் முனிவர் ........................................ 204
6 வாழிய மனித நேயம் ........................................ 206

7 பழமை வேண்டான்! ................................................ 208

8 தொடர்வோம் தொண்டு ........................................ 209

9 புதுக்கோட்டைக் காந்தி ........................................... 210

10 மணிவிழா வாழ்த்து .................................................. 212

11 வாழும் அண்ணாமலை ............................................ 216

12 தமிழ்க் கடல் .......................................................... 218

13 மாணிக்கப் புலவன் .................................................. 219

14 குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா ........................... 221

15 பதிப்புச் செம்மல் ...................................................... 223

16 உடன் பிறவாத் தமக்கை ........................................... 224

17 நட்பிற் பெரியன் ...................................................... 225

18 பொற்கிழி பெற்றவன் ............................................... 227

19 வணிக நோக்கறியான் .............................................. 229

20 கலைத்திறன் காட்டும் கணபதி .................................. 231

21 பழனி தந்த பாட்டு ................................................... 232

22 பாளைநகர்ப் பண்பாளன் ........................................... 233

23 உயர்ந்தவன் ........................................................... 235

24 அன்பு தரும் அழகன் ................................................. 237

25 தோள் தந்தான் ........................................................ 245

26 அழகின் சிரிப்பில் கலைஞர் ...................................... 246

27 தூற்றலுக்குத் துவளாதான் ......................................... 255

28 முறுவலிக்கும் இளையவனே ..................................... 257

29 வாழிய தமிழரசு ....................................................... 258

30 என்றும் உயர்க எழில் முல்லை ................................... 262

31 வாழிய கவிதை ....................................................... 263

32 உலகத் தமிழ்க் கழக வாழ்த்து .................................... 264

# நெஞ்சு பொறுக்கவில்லையே

# நெஞ்சக் குமுறல்

இந்திய நாடு விடுதலை பெற்று முப்பத்தெட்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. குடியரசு நாடென உலகுக்கும் உணர்த்தி விட்டோம். சில போர்களும் நடத்தி வெற்றியும் பெற்றுவிட்டோம். அறிவியல் துறையில் ஓரளவு முன்னேறி விண்வெளியில் கலம் செலுத்தும் அளவிற்கு உயரிய மதிப்பும் பெற்றுள்ளோம். அடிமை அகன்றது; மக்களாட்சி மலர்ந்தது; மகிழ்ச்சி.

ஆனால்..............? நாம் விடுதலை நாட்டில் வாழும் மக்கள் எனத் தக்க வகையில் தகுதி பெற்றுள்ளோமா? பண்பாட்டில். ஒழுக்க நெறியில், பொது வாழ்வில் வளர்ச்சி பெற்றுள்ளோமா? சாதிச்சழக்குகள் ஒழிந்தனவா? சமயப்பூசல்கள் ஓய்ந்தனவா? ஒருவரையொருவர் ஏமாற்றி வாழ்வதும், சுரண்டி வாழ்வதும் தொலைந் தனவா? தலைவர்களையே சுட்டுக்கொல்லும் அளவிற்குத்தானே முன்னேறியிருக்கிறோம்! விடுதலைபெறுவதற் காகச் சிந்திய குருதியைவிடப் பெற்ற பின் சிந்தும் குருதிதானே மிகுதியாக ஓடுகிறது. மக்கள் மாக்காளகியிருக்கிறோம்! அடிமைகளாகவே வாழ வேண்டியவர்களுக்கு விடுதலை ஏன்? என்று சலித்துக் கொள்ளும் வகையிற்றானே நாடு நடந்து கொண்டிருக்கிறது!

பண்பாட்டிற் சிறந்து விளங்கும் மக்கள் வாழும் நாடுதான் விடுதலையை, மக்களாட்சி முறையை நுகர்ந்து, அதன் பயனைப் பெற்று, இன்புற்று வாழ இயலும். மக்கட்பண்பு வளராத நாட்டில் விடுதலையால். மக்களாட்சியால் யாதுபயன்? அங்கே இன்பமோ அமைதியோ மகிழ்ச்சியோ அரும்புவதுண்டோ? குரங்கின் கையிற் சிக்கிய மாலையாகி எல்லாரும் இந்நாட்டு மன்னராகிக் குடிகளே இல்லாத நாடாகி, இறுதியில் நாடு அம்மன்னர் கையிற் சிக்கிச் சீர்குலைந்து நிற்கும். இது நாடோறும் நாம் நேரிற் கண்டறிந்து வரும் உண்மை.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை வழங்கிய நாடு; இன்னும் நூற்றுக்கணக்கில் நீதி நூல்களை உருவாக்கிய நாடு; உள்ளத்தாற் பொய்யாதொழுகிய காந்தியடிகளை அருளிய நாடு; சான்றாண்மை என்னும் சொல்லுக்கே இலக்கியமாக நின்ற தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வை ஈன்ற நாடு. சமுதாயச் சீர்திருத்தத்திற்காகவே வாழ்நாள் முழுதும் பாடுபட்ட பெரியார் பிறந்த நாடு; இன்னா செய்தார்க்கும் அவர் நாண நன்னயம் செய்த பேரறிஞர் அண்ணா தோன்றிய நாடு; இன்னும் எத்தனையோ சான்றோர்களைப் பெற்றெடுத்து, அதனாற் பெருமை கொண்ட நாடு, இற்றைநாள் மாந்தரின் இழிசெயலால் பழிக்குள்ளாதல் முறையோ? கயமைகள் என்று தொலையும்? அறிவுக் கண்கள் எப்பொழுது திறக்கும்? நாடு எந்நாள் திருந்தும்?

தனித்து உண்ணாதவர், முனிவில்லாதவர், துஞ்சாதவர், அஞ்சுவது அஞ்சுபவர், புகழெனின் உயிருங்கொடுப்பவர் பழியெனின் உலகு வரினுங் கொள்ளாதவர். அயர்வில்லாதவர், தமக்கென முயலாதவர், பிறர்க்கென முயல்பவர் என்றின்னோ ரன்னர் 'உண்மையால் உண்டாலம்ம இவ்வுலகம்' என இயம் பினான் இளம்பெருவழுதி. 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என அருளினார் அவ்வையார். பண்பு டையார்ப் பட்டுண் டுலகம் என வாய் மலர்ந்தருளினார் வள்ளுவப் பெருந்தகை. இத்தகைய நன்னெறிகளை யெல்லாம் நவின்றவன்தான்; நன்குணர்ந்தவன் தான்; ஆனால் இன்று?............

உருவத்தால் மனிதனாகி, உள்ளத்தால் விலாங்காகித் தானே திரிகின்றான். ஆடவர் பெண்டிர், இளையர் முதியோர் எவரும் விதிவிலக்கல்லர். அதிலும் குறிப்பாக நாளைய உலகை உருவாக்கும் மாணவர் உலகம் தம்மை மறந்து. நாட்டை மறந்து மயக்குற்ற நிலையில் திரிவதையே காண்கிறோம்.

எங்கெங்கு நோக்கினும் அங்கங்கே நேர்மை நெளிந்து கிடக்கிறது; நாணயம் நலிந்து கிடக்கிறது; ஒழுங்கு மழுங்கிக் கிடக்கிறது; தூய்மை துவண்டு கிடக்கிறது; சுருங்கக் கூறின் மனச்சான்றே மறைந்து கிடக்கிறது. 'புண்ணிய பூமி' என்று இந்த நாட்டுக்குப் பெயர்! ஒரோ வழி நன்மாந்தரைக் காணல் கூடும். எனினும் யாது பயன்? கடலிற் கரைத்த பெருங்காயந்தானே?

*இவ்வாறு நேர்மை முதலியன குறைந்து, பண்பாடுகள் மறைந்து மக்கள் மாறிவரும் நிலைமையைக் காணும் பொழுதெல்லாம் நினைந்து நினைந்து உருகி உருகி, நெஞ்சம் குமுறுவதுண்டு. அக்குமுறலின் வெளிப்பாடே இத்தொகுப்பிற் காணப்பெறும் கவிதைகள்.*

*நடுவுநிலைமையில் நின்று நாட்டைப் பார்க்கிறேன் நாட்டைச் சுற்றிக் குற்றங்களும் குறைபாடுகளும் முற்றுகையிட்டுக் கிடப்பதைக் காணுகிறேன். அவை கடியப்பட வேண்டுமென் பதற்காகக் கண்டிக்கிறேன். அக்கண்டனத்தில் என் நண்பர்களும் சிக்கலாம்; அதற்கென் செய்வது? கண்டனத்துக் குள்ளானோர் வருந்துவர் என்பதையும் அறிவேன். மாணவன் வருந்துவானே என்பதற்காக ஆசானும், மகன் வருந்துவானே என்பதற்காக அன்னையும் கண்டிக்காமல் இருந்துவிடின் நிலைமை என்னாவது?*

*குமுகாயம், மண்புக்கு மாயுமே என்று குமுறும் எனது நெஞ்சம், கடமையைச் செய்யத் தூண்டுகிறது. எனது கடமையை நான் செய்கிறேன். பிறரை வருத்த வேண்டு மென்பதற்காக எழுதவில்லை; அவரைத் திருத்த வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன். கண்டனத்தால் அவர்தாம் வருந்துவது உண்மை யானால். அவர்தம் செயலால் உலகம் வருந்துகிறதே அதற்கென் செய்வது?*

> ''தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
> மன்னுயிர்க்கு இன்னா செயல்''

*ஆதலின் தம்மைப்போற் பிறரையும் எண்ணித் தவறிழைக் காது தம்மால் இயன்ற அளவு நன்மை செய்க. பொது நலம் புரிக. ஒல்லும் வகையால் அறவினை ஆற்றுக! நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தலை அகற்றுக; நேர்மை பேணுக; மக்கட்பண்பு காத்து மக்களென வாழ்க! நாடு வாழும். மக்களாட்சி மலர்ந்து உண்மையில் மணம் பரப்பும். நாமும் நல்வாழ்வு துய்ப்போம்.*

காரைக்குடி அன்பன்

7-10-1985 **முடியரசன்**

# காணிக்கை

பொது வாழ்வுக்காகத் தம் வாழ்வையே
பொசுக்கிக் கொண்ட ஈகச் செம்மல்
கப்பலோட்டிய தமிழர்

***வ.உ. சிதம்பரனார்க்கு***
*காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.*

***- முடியரசன்***

## 1

# தமிழ்த்தாய் வணக்கம்

காவுக்குள் மலரை வைத்தாய்
    கண்டுக்குள் சுவையை வைத்தாய்
பூவுக்குள் தேனை வைத்தாய்
    பூமிக்குள் பொன்னை வைத்தாய்
ஆவுக்குள் பாலை வைத்தாய்
    ஆர்வத்தில் ஊறும் என்றன்
பாவுக்குள் அனைத்தும் வைப்பாய்
    பாருக்குள் முதன்மைத் தாயே.

கல்லுக்குள் தீயை வைத்தாய்
    கனலுக்குள் வெம்மை வைத்தாய்
வில்லுக்குள் வீரம் வைத்தாய்
    வேலுக்குள் கூர்மை வைத்தாய்
*செல்லுக்குள் இடியை வைத்தாய்
    சிந்தைக்குள் பொங்கும் பாடற்
சொல்லுக்குள் அனைத்தும் வைப்பாய்
    தொன்மைக்குள் தொன்மைத் தாயே.

*செல்-முகில்

## 2

## நெஞ்சு பொறுக்குதில்லையே

எங்கெங்குக் காணினும் தீமையடா- உல
கெங்கணும் வாய்மைகள் ஊமையடா
அங்கங்கு வாழ்பவர் எள்ளினரே-குணம்
அத்தனை யுங்கொண்டு தள்ளினரே
தங்கடன் செய்வதில் தூங்குகிறார்- மனச்
சான்றுகள் கொய்யவே ஏங்குகிறார்
இங்கவர் நல்லவ ராவதெந்நாள்?-கெடும்
எண்ணங்கள் யாவுமே போவதெந்நாள்?

பிஞ்சு மனத்தவ ராகினுமே- கலை
பேணி முதிர்ந்தவ ராகினுமே
வஞ்சியர் ஆடவர் யாவருமே -படும்
வாழ்வு மலர்ந்திடத் தீவினையே
அஞ்சில ராகியே கூட்டுகின்றார்-அந்தோ
ஆசையில் நேர்மையை வாட்டுகின்றார்
நெஞ்சு பொறுப்பதற் கில்லையடா- இந்த
நிலைகெட்ட மாந்தரால் தொல்லையடா

ஆறறி வுள்ளவர் மாந்தரடா- விலங்
காகிட ஏன்மனம் சாய்ந்ததடா?
சோறது பெற்றிடத் தாழ்ந்தனரே-மனத்
தூய்மையை விற்றிட வீழ்ந்தனரே

மாறிய போக்கினைக் கற்றனரே- உயர்
மான வுணர்ச்சியைச் செற்றனரே
கூறிய நீதிகள் எவ்வளவோ-அவை
கூறுவர் மேடையில் அவ்வளவே

தந்நலம் ஒன்றையே தேடுகிறார்- அதைச்
சட்டமென் றாக்கிட நாடுகிறார்
என்னதான் செய்யினும் நெஞ்சினிலே-முனம்
ஏற்றுகி றாரவர் வஞ்சனையே
பன்னிய நல்லறம் நீக்கினரே-மனப்
பண்புகள் யாவையும் போக்கினரே
இந்நிலை கண்டுளம் வாடுகிறேன் அதை
எற்றித் துவைத்திடப் பாடுகிறேன்.

எங்கெது காணினும் வஞ்சமடா- அதை
எப்படித் தாங்கிடும் நெஞ்சமடா
இங்கெவர் போக்கிலுங் குற்றமடா-இதை
எண்ணிடும் போதெலாம் செற்றமடா
எங்கணுங் கீழ்மையைச் சாடிடுவேன்-மனம்
ஏற்றம் பெறக்கவி பாடிடுவேன்
பொங்குக பண்புகள் பொங்குகவே-நலம்
பூத்துப் பொலிந்துவி ளங்குகவே

நாயினுங் கீழென வாழ்வதுவோ-திரு
நாட்டின் பெரும்புகழ் சாய்வதுவோ?
ஈயென எங்கணுந் தோய்வதுவோ?- மனம்
ஈனத் தனத்தினிற் பாய்வதுவோ?
போயெதிர் காலத்தை நோக்குகிறேன்-மனம்
புண்பட்டுப் போவதால் தாக்குகிறேன்
வாயினை எப்படி மூடிடுவேன்?-உயர்
வாய்மையைக் காத்திடப் பாடிடுவேன்

நாளைய நாடுன தாட்சியிலே- என
நாடி நடந்திடு மாட்சியிலே
காளையே தீமையைக் காய்ந்துவிடு-பல
கற்றவர் நூல்களை ஆய்ந்துபடி
தோளினைப் பாரினில் தூக்கிநட-வரும்
தோழனே கீழ்மையைத் தாக்கிவிடப்
பாளைச் சிரிப்பினைக் காட்டிடுவாய்-அதிற்
பண்புகள் யாவையும் ஊட்டிடுவாய்

தீய குணங்களைத் தூக்கிஎறி- அது
தெள்ளிய நாட்டினைக் காக்கும் நெறி
தூய மனத்தினைப் போற்றிநட-பொதுச்
சொத்தினைக் கண்ணெனக் காத்துநட
சேயுன தன்னையின் நாடுயர-மனச்
செம்மையைக் காத்திடப் பாடுபடு
தாயக மேன்மையை ஆக்கிவிடு-வளர்
தம்பிஎன் வேதனை நீக்கிவிடு

## 3
# நெஞ்சத் துடிப்பு

விழிசுமந்த அருளாலே வருவோர்க் கெல்லாம்
விருந்தளித்தோம் வரவேற்றோம் நட்புங் கொண்டோம்;
வழிசுமந்த பண்பாடு தமிழர்க் கென்றே
வாய்நிறையப் புகழ்ந்துரைத்தார் மகிழ்ந்தோம்; ஆனால்
எழில்சுமந்த என்நாட்டார் வந்தோர்க் கெல்லாம்
ஏமாந்து குனிகின்ற பித்த ராகிப்
பழிசுமந்து போனாரே என்ற போது
பதைபதைக்கும் துடிதுடிக்கும் எனது நெஞ்சம்.

நல்லவர்யார் கெட்டவர்யார் என்ப தோரார்;
நலிவகற்றி நலந்தந்து நாட்டை யாள
வல்லவர்யார் அல்லவர்யார் அதுவும் தேரார்;
வாயினிக்கப் பேசுவதை நம்பு கின்றார்;
மெல்லியலூர் மின்மினியை ஒளிவி ளக்கா
மேடைதனில் வைத்துவிட்டார்; இதனைச் செய்தார்
மெல்லியலார் என்றுரைப்பர்; ஆண்க ளென்ன
விதிவிலக்கா? இதையெண்ணித் துடிது டித்தேன்

‘சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்’ என்றே
ஓதியவூர் பாரதியும் செத்துவிட்டான்
உட்புகுந்த சாதிகளோ சாக வில்லை;

'வேதியர்கள் தாம்வாழ வகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள் தூள்' என்று
மோதினன் நம் பாவேந்தன்; வீதி தோறும்
முளைப்பதலால் தூளாக வில்லை யிங்கே!

ஒருருவம் இல்லாத கடவுள் பேரால்,
ஒவ்வாத பகைமூட்டும் மதத்தின் பேரால்.
சீரழிவு பெற்றுவரும் சமுதா யத்தைச்
செப்பனிட வந்தஒரு பெரியார் இங்கே
ஆறறிவுப் போர்தொடுத்து மாண்ட பின்பும்
அர்த்தமிலா எந்தமதம் மாண்ட திங்கே?
ஆரவர்போற் போராட வல்லார்?இன்னும்
அழிவகல வில்லையெனத் துடிது டித்தேன்.

'சாதிஎனச் சமயமென முளைத்து வந்த
சழக்குகளை விட்டுவிட்டேன்'என்று கூறி
மேதினியில் மறுமலர்ச்சி காண வந்த
மேன்மைமிகும் இராமலிங்கர் அருட்பா நூலை
ஓதிவரும் தொண்டருக்குப் பஞ்ச மில்லை;
சழக்குகளை ஒழிக்கத்தான் நெஞ்ச மில்லை;
யாதினிநாம் செய்வதென எண்ணி எண்ணி
அகமெல்லாம் துடிதுடிக்கும் வெம்பும் சோரும்

முடிவளர்ப்பர் புதர்முளைத்த செடிகள் போலே;
முகம்மறைப்பர் மூக்குக்கண் ணாடி யாலே;
அடிமறைக்கும் தொளதொளத்த காலின் சட்டை
அணிந்திருப்பர் பூப்பொறித்த மேலின் சட்டை;

---

படி-பூமி; நடை -ஒழுக்கம்.

*படிமறப்பர், *நடைமறப்பர், தெருவிற் செல்லும்
    பாவையரை வழிமறைப்பர், கூத்த டிப்பர்;
குடிகெடுக்கும் காளைகளைக் காணும் போது
    குமுறிமிகத் துடிதுடிக்கும் எனது நெஞ்சம்

எதிர்காலம் இவர்கையில் என்று நம்பி
    இருக்கின்றார் நிகழ்காலப் பெரியோர்; ஆனால்
உதிர்காலம் போலன்றோ இளைஞர் வாழ்க்கை
    உருள்கிறது; தளிர்காலம் வருமா என்னும்
புதிர்கோலம் இடுவதனால் எனது நெஞ்சம்,
    பொழிபனியின் குளிர்கால நடுக்கம் போல
விதிர்விதிர்க்கும்; துடிதுடிக்கும் அவர்தம் நெஞ்சில்
    விடிகாலம் அரும்பிவரும் காலம் என்றோ?

புதியஅலை எனும்வலையை வீசி விட்டால்
    பொருள்பெருகும் புகழ்வளரும் என்று நம்பி
மதிதவறி எழுத்தாளர் வீழ்ந்து விட்டார்;
    மனமயக்கம் தருகின்ற காமச் சாற்றைப்
புதுமுறையிற் பிழிந்தெடுத்து வார்த்து வைத்துப்
    புத்தகங்கள் பத்திரிகை எழுதி விட்டார்;
கதையிதுவா?கலையிதுவா? இளைய நெஞ்சம்
    கருகிவிடும் வழியன்றோ எனத்து டித்தேன்

நல்லறிவைப் பண்பாட்டை ஒழுக்கந் தன்னை
    நாகரிகக் கலைவளத்தை விஞ்ஞா னத்தைச்
சொல்லுதற்குப் படைப்பாற்றல் கொண்டோன் கையில்
    சுழல்கின்ற கோலொன்றே எழுது கோலாம்;
புல்லறிவால் பொருள்பெருக்கல் ஒன்றே நோக்கிப்
    புழுத்ததெலாம் வரையுங்கோல் கன்னக் கோலாம்;
நல்லறிவைக் கெடுத்துமிகப் பொருள்ப றிக்க
    நன்மைக்கே தீவைக்கும் நெருப்புக் கோலாம்

மறைப்பிடமே இல்லாமல் சதையைக் காட்டி
மதர்ப்புடனே நடிக்கின்ற மங்கை நல்லார்
கறைப்படுமே பண்பாடென் றெண்ணா ராகிக்
கன்னத்தை வாடகைக்கு விட்டால், மீண்டும்
தரப்படுமே நடிப்பதற்கு வாய்ப்பென் றெண்ணித்
தரங்கெட்ட காட்சிகளில் நடித்துக் காட்டும்
திரைப்படங்கள் வளர்வதற்கிங் கிடங்கொடுத்தால்
தெருப்புழுதி போலாகும் மக்கள் நெஞ்சம்

கற்பழிப்பு, களவாடல், கடத்தல் என்ற
கயமைஎலாம் கற்பிக்கும் கதைகள், கெட்ட
சொற்பெருக்கம் கொண்டொழுகும் காமப் பாட்டு,
துள்ளிவரும் நடனமெனப் பேயின் ஆட்டம்,
மற்போர்கள் செய்வதுபோல் காதற் காட்சி,
மாமேதை இயக்குநர்கள் திறமை,எல்லாம்
கற்போர்கள் நெஞ்சத்தைக் கெடுப்ப தல்லால்
கடுகளவு நலமேனும் தருவ துண்டோ?

எதைக்கண்டு துடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழர் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;
மிதிக்கின்ற வழிதேடி வடபு லத்தார்
மெல்லமெலப் புகுகின்றார்; இந்தி கொண்டு
வதைக்கின்ற வழியமைத்து வருதல் கண்டேன்
வடவர்பிடி எத்தனைநாள்? எனத்துடித்தேன்

இல்லத்தார் துடிதுடிக்க, மாலையிட்ட
இல்லாளும் துடிதுடிக்கப் பெற்ற பிள்ளை
சொல்லத்தான் முடியாமல் துடிது டிக்கச்
சூழ்ந்தஉயிர் அணுவெல்லாம் துடிது டிக்க

மெல்லத்தன் உயிர்த்துடிப்பே அடங்கும் வண்ணம்
மேனியிலே எரியூட்டிக் கொண்ட தோழர்
வெல்லத்தான் மொழிப்போரில் தமைக்கொ டுத்தார்
வியப்புமிகும் அத்துடிப்பே இன்றும் வேண்டும்

துடிக்கட்டும் உமதுமனம்; தமிழ்மொ ழிக்குத்
துளியேனும் பகைவருமேல் தூள்தூ ளாக
வெடிக்கட்டும் அப்பகைமை; தமிழர் நெஞ்சம்
விழிக்கட்டும்; இந்திமொழி ஆதிக் கத்தை
முடிக்கட்டும் இன்றோடு; கூடி எங்கும்
முழங்கட்டும் தமிழ்முழக்கம்; தமிழர் கைகள்
அடிக்கட்டும் போர்முரசு; பகைவர் கூட்டம்
அலறட்டும் சிதறட்டும் அஞ்சி நின்றே.

4

# அச்சு முறிந்தால்...

சாதியின் பேரைச் சொல்லிச்
சார்ந்திடுங் கட்சி சொல்லி
ஓதிடுங் கல்வி கற்போர்
உறுபகை கொண்டோ ராகி
மோதினர் என்ப தாலே
மூடினர் கல்விக் கூடம்;
காதிலிச் செய்தி வந்து
கனலெனப் பாய்ந்த தம்மா!

கற்கவோ வந்தீர்? அன்றிக்
கலவரஞ் செய்து வீதி
நிற்கவோ வந்தீர்? நாளை
நிகழ்ந்திடும் நன்மை யாவும்
விற்கவோ வந்தீர்? நீவிர்
விளைத்திடும் தீமை சொல்லச்
சொற்களே இல்லை இல்லை
துடிக்கிறேன் நெஞ்சம் நொந்து.

கற்றிட அரசு நல்கும்
காசெலாம் பாழே யாக்கிப்
பெற்றவர் பட்ட பாட்டைப்
பேணிய கனவை யெல்லாம்

முற்றவும் வீணே யாக்கி
      முழுமதி தேய்த்து விட்டாற்
பிற்றைநாள் வாழ்க்கை தன்னைப்
      பேரிருள் கவ்வு மன்றே?

படித்திட வந்த நீவிர்
      பண்பினை மறந்து விட்டுக்
குடித்திடக் கற்றுக் கொண்டீர்
      உரைக்கவுங் கூசு கின்றேன்
மடத்தினில் வீழ்ந்து நாளும்
      மயங்கியே திரியும் நும்மைத்
தடுத்திட வில்லை யென்றால்
      தறிகெட்டுப் போகும் நாடு.

திரிபறக் கற்றுப் பின்னர்த்
      தெளிந்தநல் லறிவு பெற்று
மருவிய பணிக ளேற்றும்
      மற்றவர் வணிகஞ் செய்தும்
அரசியல் சார்ந்தும் நாளை
      ஆள்பவர் பழுது பட்டீர்
திரிதருந் தேரின் அச்சு
      தெறித்திடின் நிலையென் னாகும்?

அடித்தளம் சிதையு மாகின்
      ஆங்கொரு மண்ட பந்தான்
படைத்திட யாரால் ஒல்லும்?
      பண்பினை மறந்தே ஆடும்
தடித்தனம் தவிர்ப்பீர் இன்றே
      நுங்கடன் தலைமேற் கொள்வீர்
நடைப்பிண மல்ல நீவிர்
      நாட்டினைக் காக்கும் வீரர்.

படிப்பதற் கேற்ற நல்ல
    பருவத்தைப் பாழிற் போக
விடுத்திடின் அதுதான் நாளை
    மீளுமோ? விளையும் நேரம்
கடித்திடும் விட்டில் வீழ்ந்தால்
    களஞ்சியம் நிரம்பு மோஎன்
றடிக்கடி எண்ணு வீரேல்
    அடையலாம் நலங்கள் யாவும்.

அடிக்கடி ஆசான் சொன்னால்
    அடிமையா நாங்கள் என்பீர்
படித்திடப் பெற்றோர் கூறின்
    அதற்கும்நீர் படிவ தில்லை
தடுத்திடும் சான்றோர் சொல்லை
    எள்ளியே தள்ளு கின்றீர்
அடுக்குமா இந்தப் போக்கு
    வாழ்வையே அழிக்கு மன்றோ?

5

# வகுப்பறையும் மாணவரும்

“வகுப்பறையா? கொலைக்களமா? இல்லை யில்லை;
வாய்ப்பூட்டுச் சட்டங்கள் உலவும் மன்றம்;
நகைத்துவிளை யாடுகிற சுதந்தி ரத்தை
நசுக்குகிற உலைக்கூடம்; உரிமை யாவும்
தகர்க்கின்ற சம்மட்டி வைக்குங் கொட்டில்;
தடையின்றிப் பறக்கின்ற உணர்வை எல்லாம்
தகைக்கின்ற கிளிக்கூடு; கதவும் பூட்டும்
தாங்காத சிறைச்சாலை; அடிமைச் சாலை.”

‘உயர்கல்வி பயில்கின்ற சாலை என்பார்
உணர்ச்சிகளைப் பிழிந்தெடுக்கும் ஆலை யாகும்;
அயர்வகல நிழல்நல்கும் சோலை என்பார்
அயர்வுடனே வெம்மைதரும் சாலை யாகும்;
துயரகலும் கலைபயின்றால் என்பர் தேர்வுத்
தொல்லைகளாற் கலங்கவைப்பர்; கல்லூரிக்குப்
பெயர்வரவே எம்மைஎலாம் கட்டுப் பாட்டின்
பேர்சொல்லி அடிமைஎன அடைத்து வைப்பர்.’

“எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்பார்
எமைமட்டும் அடிமைகளின் சின்னம் என்பார்;
கல்லாரும் மயங்குமிசைத் தட்டுப் பாட்டைக்
காதுகளில் பாயவிடும் நேரம் பார்த்துச்

சொல்லாருந் தமிழ்மொழியாம் கணக்காம் ஏதோ
துணைமொழியாம் அறிவியலாம் இப்படித்தான்
பொல்லாத பாடமெலாம் பாய்ச்சு கின்றார்
பொறுமையுடன் கேட்பதற்குச் சிலையா நாங்கள்?"

"வேளைதொறும் கல்விதரும் ஆசான் எங்கள்
விளையாட்டுச் சிறுபொம்மை; வகுப்போ நாங்கள்
ஆளயரும் பொழுதத்துச் சடையைக் கட்டி
ஆடைகளில் முடிச்சிட்டுக் களிக்கும் மேடை;
காளையரும் மங்கையரும் அகத்து றைக்குள்
களவியலை ஒத்திகைபார்த் திருக்குங் கூடம்
தோளுயரும் பொழுதத்தில் ஆசா னோடு
தொடுக்கின்ற போர்நடத்தும் களமும் ஆகும்."

மாணவர்கள் இவ்வண்ணம் உரைப்ப ரானால்
மதிநலந்தான் உருப்படுமா? நாட்டின் மேன்மை
காணவரும் நாள்வருமா? இந்த மண்ணில்
கல்விவளந் தான்பெறுமா? படிப்ப தற்குப்
பூணழகுப் பொருள்விற்றுக் காடு விற்றுப்
பொருளனுப்பி எதிர்கால ஒளியை நம்பிக்
காணஎதிர் பார்த்திருக்கும் பெற்றோர் நெஞ்சம்
களிப்புறுமா? விடிவெள்ளி அங்கா தோன்றும்?

**6**

## நூலகமும் மாணவரும்

புகுதற்குத் தகுதியிலா இடமே என்று
        புந்திதரும் நூலகத்தை ஒதுக்கி விட்டீர்;
நகுதற்கும் ஆடலுக்கும் மனத்தைத் தந்தோர்
        நாடிவரின் பலனில்லை; அறிவு வேலைத்
தகதகக்கக் கூர்ப்படுத்துஞ் சாணைக் கற்கள்
        சாருமிடம்; அறியாமைப் பகையை மாய்க்கும்
தகுதிபெற, நுழைபுலமும் கூர்மை யாகத்
        தகுதியுடன் பதமாகச் செய்யுஞ் சாலை.

ஒருமையுடன் நூலகத்துள் நுழைதல் வேண்டும்;
        உயர்ந்தகலை நூல்பலவும் படித்தல் வேண்டும்;
பெருமைதரும் நூலதனைப் படிக்கும் போது
        பேச்சின்றிப் புறவழியில் நாட்ட மின்றிப்
பொறுமையொடு கண்ணூன்றிக், கருத்தும் ஊன்றிப்
        புத்தகத்து நல்லமுதைப் பருகல் வேண்டும்;
பெறுபொழுதை இவ்வண்ணம் பயன்ப டுத்திற்
        பெருமைஎலாம் வழிவினவி வந்து சேரும்.

பெறற்கரிய பருவமிது; பெற்ற ஒன்றைப்
        பெருநெறியில் நல்வழியில் பயன்படுத்தின்
உறற்கரிய உயர்வெல்லாம் உம்மைச் சேரும்
        உமதறிவால் நாட்டுக்கு நன்மை சாரும்;

குறட்கருத்தை 'சாந்துணையும் கற்க' என்ற
கோலமொழி தரும்பொருளை நூல கந்தான்
தரற்குரிய இடமாகும்; பொழுதை எல்லாம்
தக்கபடி பயன்படுத்திப் பெருமை கொள்க.

அன்பருடன் நகைமொழிகள் பலவும் பேசி
அரட்டையடித் தலைவதுதான் பொழுது போக்கா?
நண்பருடன் திரைப்படங்கள் பார்த்து விட்டு
நடுத்தெருவில் திரிவதுதான் பொழுது போக்கா?
என்பெருமை கண்டீரோ? பொழுதை எல்லாம்
இவ்வண்ணம் போக்கடித்தால் பயனே இல்லை;
மின்பொழுதும் வீணின்றி நூல்ப டித்து
மேம்படுக, பருவத்தே பயிரைச் செய்க.

உலகரங்கில் அரசியலில் தனித்து நின்ற
ஒருமனிதர் இராசகோ பாலர் என்பார்
நிலவுபுகழ் மூதறிஞர் எனவு யர்ந்தார்;
நிகரில்லாப் பேச்சாளர், எங்கள் நெஞ்ச
மலருறையும் பண்பாளர், காஞ்சி அண்ணா
வான்புகழின் உச்சிக்கே சென்றார் என்றால்
குலவுபுகழ்ச் சென்னைநகர்க் 'கன்னி மாரா'
நூலகத்தை ஏணியெனக் கொண்டே யன்றோ?

**7**

# ஒப்பனையும் மாணவரும்

பாடலெது? உரைநடைதான் எதுவென் றிங்குப்
பகுத்துணர இனமுணர இயலா வண்ணம்
மேடையிலே முழங்குவதைக் கேட்டுக் கேட்டு
மெல்லியஎன் உள்ளமெலாம் நைந்து நைந்து
வாடுகிறேன்; அதுபோலக் கல்வி கற்க
வருபவர்தம் ஒப்பனையால் அவர்த மக்குள்
ஆடவர் யார்? மகளிர் யார்? தோற்றத் தாலே
அடையாளந் தெரியாமல் மயங்கு கின்றேன்.

பிடர்வரையில் தொங்குகிற முடிகள் வாரிப்
பேணாமல் சிதறுண்டு முகம்ம றைக்கும்;
தொடர்ந்துவரும் தமிழ்வீரந் தாழ்ந்து விட்ட
துயரத்தைத் தொங்குகிற மீசை காட்டும்;
அடர்செடிகள் விலங்கினங்கள் பொறித்த சட்டை
*அடவியில்வாழ் மாந்தரையே நினைவிற் கூட்டும்.
இடையணிந்த தொளதொளத்த காலின் சட்டை
இருக்கின்ற தூசியெல்லாம் தெருவிற் கூட்டும்.

முகமதிய ரானவர்தாம் கைலி என்று
மூட்டிவைத்த ஆடைதனை உடுத்திக் கொள்வர்;
*முகமதிய ரானவரும் பயிலும் போது
முற்போக்கென் றதனைத்தான் உடுத்து கின்றார்;

* அடவி - காடு
* முகம் மதியர் ஆனவரும் - மதிபோன்ற முகமுடைய மகளிரும்

பகலிரவில் எவ்விடத்தும் கைலி யைத்தான்
    பகட்டாக மாணவரும் உடுத்து கின்றார்;
நகைமொழிக்குக் கூறவில்லை; அம்ம தத்து
    நாடாக்க அவரெல்லாம் நினைந்தார் போலும்.

நலங்கோலம் செய்கின்ற பருவம் ஈது
    நாகரிக உடையணியும் பருவம்; ஆனால்
அலங்கோலஞ் செய்தன்றோ உலவு கின்றார்;
    அழகுக்குப் பொருளொன்றும் விளங்க வில்லை;
*நலங்காத புறக்கோலம் செய்தல் ஒன்றோ
    நன்மைதரும்? அகக்கோலம் வேண்டு மன்றோ;
நலங்காணும் நாட்டத்திற் சொல்லு கின்றேன்
    நாகரிக வளங்காண முயல்க நன்றே.

---

நலங்காத - கசங்காத

# 8
# அரசியலும் மாணவரும்

படிக்கின்ற பருவத்தைக் கல்விக் கென்றே
  பயன்படுத்திக் கொளல்வேண்டும்; அதைவி டுத்துத்
துடிக்கின்ற உணர்வுக்குத் தீனி யிட்டால்
  தொலையாத துயரந்தான் மிஞ்சி நிற்கும்;
வெடிக்கிடங்கில் எவரேனும் நெருப்பை வைத்து
  விளையாட நினைவாரோ? வேட்கை தீரக்
குடிக்கின்ற புனலூற்றை அடைத்து விட்டால்
  கொடும்வறட்சி தோன்றுமலால் வளமா தோன்றும்?

அரசியலைக் கற்றுணரும் ஆர்வம் வேண்டும்;
  அயல்நாட்டு நடைமுறையுந் தெரிதல் வேண்டும்;
புரையறுநூல் அறிவுவளம் பெற்ற பின்னர்ப்
  புகுவார்க்கே அரசியலில் வெற்றி வாய்க்கும்;
அரைகுறையாக் கல்வியினை விட்டு, மேடை
  அரசியலிற் புகுவதனாற் பயனே இல்லை;
பொருசமரில் படைக்கலங்கள் இல்லா மாந்தன்
  புகுவானேல் புறமுதுகே காட்ட நேரும்.

ஈரோட்டுப் பெரியார்தாம் என்ன கற்றார்?
  ஈடில்லாக் கலைஞரவர் என்ன கற்றார்?
பாராட்டுப் பெற்றிலரோ? என்று கேட்பர்;
  பயனில்லாக் கேள்வியிது; கல்லூ ரிக்குள்

பேரேட்டில் இவர்பெயர்கள் இல்லை; ஆனால்
பிழையின்றி இவர்கற்ற நூல்கள் எல்லாம்
ஓரேட்டில் அடங்காவே! அதனா லன்றோ
உலகவர லாற்றேட்டில் இடமும் பெற்றார்.

பருவங்கள் பலவுண்டு மாந்த னுக்கு;
பருவநிலைக் கேற்றவணம் செயல்கள் வேண்டும்;
திருமணமும் மாந்தனுக்குத் தேவை; ஆனால்
சிறுபிள்ளைப் பருவத்திற் செய்தல் நன்றோ?
அறிவுவளர் கலைபலவும் பயிலும் பிள்ளை
அரசியலிற் புகநினைதல் முறைமை யன்று;
உறைதயிரில் வெண்ணெய்தனை எடுக்கு முன்னே
உருகியநெய் வேண்டுமெனிற் காண்ப துண்டோ?

அரசியலில் நூலறிவைக் கற்றுக் கொள்க
அதனாலே வரும்பயனைப் பெற்றுக் கொள்க
அரசியலில் போர்நுழைவை விட்டுச் செல்க
ஆன்றோரின் அறிவுரையைப் பற்றிச் செல்க
அரசியலைப் படிப்பதுதான் இந்த வேளை
அத்துறையைப் பிடிப்பதுவா உங்கள் வேலை?
அரசியலை உரமாக்கி வளர்தல் வேண்டும்
அரசியலார்க் குரமாகி அழிதல் வேண்டா.

# 9
# இதழ்களும் மாணவரும்

நூலகத்துப் புகுந்துவரக் கூசு கின்றீர்
*நோய்நுண்மம் போற்பரவும் இதழ்கள் தம்மைப்
பாலமுதம் எனவெடுத்துப் பருகு கின்றீர்
பகுத்தறிவைப் பாழாக்க முனைந்து விட்டீர்
காலையெனும் ஒருபொழுது விடியு முன்னே
கயமைமிகும் இதழ்களையே வாங்கு கின்றீர்
பாலுணர்வுக் கோப்பைக்குள் வீழ்ந்து வீழ்ந்து
படிக்கின்ற வண்டானீர் இளைஞர் இங்கே.

திரைபோட்டு நிகழ்த்துகிற செயலை எல்லாம்
திரைநீக்கிக் காட்டுகிறார் இதழ்கள் என்றே;
திரைநீட்டிச் சங்கத்து நூல்க ளெல்லாம்
தின்றாயே கொடுங்கடலே இவற்றை மட்டும்
இரையாக்கிக் கொள்ளாமல் இருக் கின்றாயே
எத்துணையோ பாடல்களைச் சுவைத்த தீயே
குறைகாட்டிப் பொருளீட்டும் இதழை மட்டும்
கொழுநாவால் தீண்டாமல் ஏன்வி டுத்தாய்?

அறிவியலை இந்நாட்டில் வளர்க்க எண்ணும்
ஆர்வத்தால் பொருள்கொட்டி இதழ்ந டாத்த
அறிஞர்சிலர் முன்வந்தார்; ஆனால் இங்கே
அவர்கண்ட பலனென்ன? இந்த மண்ணில்

*நோய் நுண்மம் - நோய்க்கிருமி

அறிவியலே வளராது; களைக ளாக
அறியாமை மண்டுமெனக் கண்டு கொண்டார்;
"நெறிவிலகி வந்துவிட்டோம்; கற்பா றைக்குள்
நெற்பயிரா விளையும்?" என ஒதுங்கி விட்டார்

சிந்தனைக்கு வளர்ச்சிதரும் இதழ்கள், நல்ல
சீர்திருத்தக் கொள்கைதரும் இதழ்கள், ஆயும்
புந்திக்கு விருந்தளிக்கும் இதழ்கள், போற்றும்
பொதுமைக்கு வழிவகுக்கும் இதழ்கள் விற்க
முந்திக்கொண் டிங்கெழுந்து காலைப் போதில்
முனைப்போடு கடைவிரித்தார்; மாலை எனும்
அந்திக்குள் திறந்தகடை மூடி விட்டார்
அவைகொள்வா ரில்லாத கார ணத்தால்

நல்லறிவைப் பதப்படுத்தும் பருவத் துள்ள
நம்மிளைஞர் இவற்றையெலாம் புறக்க ணித்துப்
புல்லுணர்வைக் கிளறிவிடும் இதழ்கள் வாங்கிப்
போற்றுவிரேல் அறிவுநுனி மழுங்கிப் போகும்;
அல்வழியில் மனஞ்செல்லும்; பண்பு தேயும்;
அருமைமிகும் இளம்பருவம் கருகி வீழும்;
கல்வியது சருகாகிக் காற்றிற் போகும்;
காளையர்தம் பிஞ்சுள்ளம் வெம்பி வீழும்.

**10**

## திரைப்படமும் மாணவரும்

பண்பாடே சீர்குலைந்து போன தென்றால்
படத்துறைதான் முதற்களமாம்; அதை நினைந்தால்
கண்பாடு கொள்வதற்கு மனமேயில்லை;
கயமைகளின் விளைநிலந்தான் அந்தப் பூமி;
நண்பாலே உரைக்கின்றேன் இற்றை நாளில்
நடிகர்யார் மாணவர்யார் தெரியவில்லை;
கண்போலக் காக்குமிளம் பருவந் தன்னைக்
கயமைக்குள் கூத்தடிக்க விட்டு விட்டார்.

நாளெல்லாம் படித்தவைதாம் நினைவில் நில்லா
நடிகையின்பேர் நீங்காது நினைவில் நிற்கும்;
*கோளெல்லாஞ் சொல்கின்ற சாத கத்துக்
குறிப்பெல்லாம் அகலாது நினைவில் நிற்கும்;
தேளெல்லாம் கொட்டியது போலி ருக்கும்
தேர்வெனிலோ படித்தவையும் மறந்தே போகும்.
தோளெல்லாம் பூரிக்கும் திரைப்ப டத்தில்
தொங்கவிட்ட 'ஏ' என்னும் எழுத்தைக் கண்டால்

படிப்புக்கு மதிப்பளிக்கும் காலம் நல்ல
பண்புக்கு மதிப்பளிக்குங் கால மாகும்;
நடிப்புக்கு மதிப்பளிக்குங் காலம் இந்த
நாட்டுக்கே தீங்கிழைக்குங் காலம்; தோகை

கோள்எல்லாம் - கிரகங்கள்

நடிப்புக்கு விழைகின்ற காலம்; இங்கு
நற்கலைகள் வளர்கின்ற காலம்; கோழித்
துடிப்புக்கு மயங்குகின்ற காலம் நாடு
துறைமாறிப் போய்விட்ட காலம் ஆகும்.

சிறந்திருந்த காலந்தான் இறந்த காலம்;
சீர்களெலாம் நெகிழ்காலம் நிகழுங் காலம்;
வறந்திங்குப் பண்பெல்லாங் காய்ந்து வாடி
வருங்காலம் உதிர்காலம் ஆகா வண்ணம்
திறங்கொண்டு மாணவர்காள் எழுக; உங்கள்
திருநாட்டை விழிதிறந்து காண்க; உள்ளம்
திறந்திங்குப் பேசுகின்றேன் எதிர்கா லத்துத்
திருவிளக்கை ஏற்றுவது நுங்கள் கையே.

# 11

# பெற்றவர் தூங்கினால்.......?

கற்று வரச்சொல்லிப் போக்கினீர்- மக்கள்
கற்றன ராவெனப் பார்க்கிலீர்
குற்றம் இழைத்திட நாடுவார்- கல்விக்
கூடங்கள் தாக்கிடக் கூடுவார்
செற்றமு டன்கலாம் செய்யவோ?- அங்குச்
சென்றனர் பிள்ளைகள் ஐயவோ!
பெற்றவர் இப்படித் தூங்கினால்- நாளை
பின்விளை வென்னென்ன வாகுமோ?

மங்கையர் ஏகிடக் கூசுவார்-கற்கும்
மாணவர் அப்படிப் பேசுவார்
எங்கணும் தேர்வுகள் காணுவோர்- நெஞ்சில்
ஏக்கம் மிகுந்திட நாணுவார்
தங்கும் இடங்களில் போர்க்களம்- ஊர்தி
சார்ந்திடும் போதிலும் போர்க்களம்
இங்கிவர் இப்படி ஏகினால்- நாளை
எப்படி எப்படி யாகுமோ?

கண்டனம் இன்மையால் நேர்ந்ததோ -கல்விக்
கட்டணம் இன்மையால் சார்ந்ததோ?
சண்டை இடுங்கட்சி புக்கதோ- அன்றித்
தானெனும் ஆணவம் மிக்கதோ?
கண்டுளம் வேதனை கொள்கிறேன்- இந்தக்
காளையர் வாழ்ந்திடச் சொல்கிறேன்
மண்டிய தீமைகள் ஓங்குமே- பெற்றோர்
மற்றவர் போலினுந் தூங்கினால்.

## 12

# ஓடம் பழுதானால்........?

அறிவொளி பெருக்கிக் காட்டி
    அகவிருள் நீக்கும் ஆசான்
செறிதரும் இளைஞர் நெஞ்சிற்
    செம்மையைப் புகட்டும் ஆசான்
நெறிதனைச் சுட்டிக் காட்டி
    நேர்மையிற் செலுத்தும் ஆசான்
தெரிதரும் கடவுள் என்பேன்
    தெய்வம்வே றில்லை என்பேன்

நாட்டினை உயர்த்திக் காட்டும்
    நல்லதோர் பணியில் தம்மைக்
கூட்டினோர் தாமே இன்று
    குறுநெறி நடந்தார் என்று
கேட்டதும் துடித்தேன் இந்தக்
    கேட்டினை யாங்கு ரைப்பேன்;
மீட்டிட மேலே நிற்போர்
    படுகுழி வீழ்தல் நன்றோ?

வாழ்ந்திட வழிகள் காட்டும்
    வானுயர் பணியில் உள்ளீர்
வீழ்ந்திடக் குழிகள் காட்ட
    விழைவதோ? ஆணி வேரைப்

போழ்ந்திடல் முறையோ? இந்தப்
புன்மையில் இறங்கி நீவிர்
ஆழ்ந்திட நினைந்த தேனோ?
ஐயவோ கொடுமை யன்றோ.

உருவமும் உடையும் உங்கள்
உயர்வினைக் காட்ட வில்லை;
பருவமும் பழகும் பாங்கும்
படிப்பினைக் காட்ட வில்லை;
ஒருவனும் குறைகள் சொல்லா
தொழுகுக இனிமே லேனும்;
கருவறை பழுது பட்டாற்
கையினிற் குழந்தை ஏது?

பாடங்கள் புகட்டும் பாங்கைப்
பையவே மறந்து போனீர்
கூடங்கள் திறவா வண்ணங்
கூடிநீர் தூண்டி விட்டால்
ஏடுங்கள் கையிற் கொண்டும்
என்னதான் பயனோ சொல்வீர்
ஓடங்கள் ஓட்டை யானால்
ஒல்லுமோ கரையைக் காண?

## 13

# புலவர் குறிக்கோள்

புலவரெனும் மொழிசெவியிற் புகுந்திடுமேல்
உள்ளமெலாம் பூரிப் பேன்நான்;
அலகில்புகழ் மன்னரையும் அவரெதிரில்
இடித்துரைக்கும் அஞ்சா நெஞ்சர்
குலவிவரும் வறுமையிலும் கூடிவரும்
பெருமிதத்திற் குன்றாச் செல்வர்
உலகுறினும் பழிபுரியார் உயிர்செலினும்
நிலைகுலையார் உயர்ந்தே நிற்பார்

உலகினர்தாம் நெறிபிறழின் உளந்தரியா
தறிவுறுத்தும் உரிமை யுள்ளார்
பலர்விழையுஞ் செயலெனினும் பழியென்றால்
தடுத்துரைக்கும் பண்பு கொண்டார்
மலர்வருந்தா ததன்நறவை மகிழ்ந்துறிஞ்சி
இசைபாடும் வண்டு போல்வார்
நிலவுலகில் தம்வாழ்வை நினைந்தறியார்
பிறர்நலமே நெஞ்சிற் கொள்வார்.

அத்தகைய பெயர்தாங்கும் ஆசான்மார்
நிலைகாணின் அந்தோ நெஞ்சம்
பித்தாகி மயலாகிப் பேதுற்றுச்
சுழல்கின்றேன் பேசும் நாவிற்

*எத்தாலும் - எதனாலேனும்.

கொத்தாகி வரும்மொழியின் கூட்டத்தை
நும்முன்னர்க் கொட்டு கின்றேன்
*எத்தாலும் பழிகளுமக் கேற்படுமேல்
எனையுமவை சாரு மன்றோ?

பேசுங்கால் எழுதுங்காற் பிழைமலியக்
காண்கின்றேன்; பிறழ்ந்து நாவை
வீசுங்கால் வரையுங்கால் வீணாவர்
மற்றவரும்; விளைவைக் கண்டு
கூசுங்கள்; மாசுங்கள் மாதமிழ்க்குச்
சேர்க்காதீர்; கோல வாழ்விற்
காசுங்கள் குறிக்கோளா? கசடறுதல்
குறிக்கோளா? எதற்குக் கற்றீர்?

நாட்டவரைத் திருத்துதற்கு நல்லுரிமை
பெற்றவர்நீர் நலிதல் நன்றோ?
வேட்டெழுந்து மற்றவரா விளக்கியுமைத்
திருத்துவது? வெட்கம்! வெட்கம்!
நாட்டமுடன் முயன்றுரிய நலங்களெலாம்
தகுதியெலாம் நயந்து கொள்க
*கோட்டமது தவிர்த்திடுக கொண்டிருக்கும்
பொறுப்புணர்ந்து கொண்டாற் போதும்.

இனவுணர்வை ஊட்டுவதும் மொழியுணர்வை
ஏற்றுவதும் யார்பொ றுப்பு?
மனவுணர்வில் ஈருணர்வும் மதியுடையீர்
நும்மிடமே வதிதல் காணேன்;
சினவுணர்வு கொள்ளாதீர்; சிறந்தபணி
நமதன்றோ? சிந்தித் தாய்க;
எனவுமைநான் வேண்டுகின்றேன்; இனியேனும்
பொறுப்புணர்க ஏற்றங் காண்க.

*கோட்டம் - வளைவு, குறைபாடு

நாளையுல காள்பவரை நமதுகையில்
　　ஒப்படைத்தார் நாட்டு மக்கள்;
காளைகளைச் சிறுவர்களைக் கண்மணிபோற்
　　காப்பதுநம் கடமை யாகும்;
வேளையிது தவறிவிடின் விளைநிலத்திற்
　　களைகலால் வேறு தோன்றா
*பூளையெனப் போகாதீர் புன்மைகளை
　　நாடாதீர் புலவர் நீவிர்.

பொறுப்புணர மறுப்பீரேல் புலவரெனும்
　　பட்டத்தைப் பூணல் நன்றோ?
வெறுப்புடைய பேடிக்கு வீரனெனும்
　　பேரெதற்கு? வேலெ தற்கு?
விருப்புடைய புலவர்பெயர் வேண்டுமெனிற்
　　பெயர்க்கிழுக்கு விளையா வண்ணம்
கருத்துடன் நீர் காத்திடுக கடமைகளை
　　ஆற்றிடுக காலம் வாழ்த்தும்.

*பூளை - பூளைப்பூ.

# 14
# காசுக்கா நீதி?

வீதியிற் கடைச்ச ரக்கு
    விற்பனை யாதல் போல
நீதியை விலைக்கு விற்கும்
    நிலைமையைக் கூறக் கேட்டேன்
வேதனைத் தீயால் நெஞ்சம்
    வெந்திடப் பெற்றே னந்தோ!
கோதிலா இடத்திற் கூடக்
    கொடுமையா நிகழ்தல் வேண்டும்?

மாசறி யாத நீதி
    மன்றிலும் கையூட் டென்னும்
காசுதான் தீர்ப்பை வாங்கும்
    கயமையைக் காதாற் கேட்டேன்
கூசினேன்; அவர்க்குத் தூக்குத்
    தண்டனை கொடுப்ப தன்றிப்
பேசஒன் றில்லை; பூமி
    பித்தரைச் சுமக்க லாமோ?

படித்தவர் பட்டம் பெற்றோர்
    பதவியில் உச்சம் பெற்றோர்
கெடுத்தனர் அறத்தை என்றால்
    கீழ்களை விட்டு வைத்தல்

மடத்தன மன்றோ? நாட்டில்
    மக்களேன்? சட்டந் தான்ஏன்?
தடுத்திதை நிறுத்தா விட்டால்
    தாங்கிடுஞ் செங்கோல் ஏனோ?

கைப்பணம் ஒன்றுக் காகக்
    கடமையை விற்கும் மாக்கள்
பொய்ப்பிணம் போல்வர்; நாட்டில்
    நோய்செயும் புழுக்க ளாவர்;
பைப்பணம் காட்டி விட்டால்
    நாட்டையும் பகைக்கு விற்பர்;
செய்ப்புலக் களையால் நன்மை
    செழித்திட வழியே இல்லை.

ஆடாது சமன்செய் கோல்போல்
    அவரவர் செயலுக் கேற்பக்
கோடாது நடுவில் நின்று
    கூறலே தீர்ப்பின் பாங்கென்
றேடாளுஞ் சான்றோ ரெல்லாம்
    இயம்புவ துணர்ந்த நல்லோர்
ஊடாக இருத்தல் கண்டேன்
    உள்ளத்தில் அமைதி கொண்டேன்

# களவும் கற்பும்

பாழ்தருங் கள்ளொடு பரத்தைமை நாட்டிற்
காழ்கொளல் கண்டு கடிந்திட நல்லோர்
பழுத்த மதியாற் படைத்தநற் சட்டம்
எழுத்து வடிவில் ஏட்டில் உண்டு:
கள்ளின் மயக்கொடு காவலர் சிற்சிலர்
எள்ளும் பரத்தையர் இல்லிற் கிடந்தனர்
என்னுஞ் செய்தியை ஈங்குள தாளிகை
பன்னும் விந்தையும் பலபல உண்டு;
களைத்துப் படுத்துக் கண்ணயர் பொழுதில்
பிழைப்பு நடாத்திக் கொழுத்த திருடர்
நள்ளிருள் பார்த்து நாடிய பொருளைக்
கொள்ளை கொளாவணம் கூர்த்த நோக்கொடு
காவலர் பணிபுரி காவல் நிலையம்
மேவிய ஊரெலாம் மிகப்பல வுண்டு.
பொருள்கவர் கள்வர் பொறியிற் சிக்கினால்
திருத்தவும் ஒறுக்கவும் சிறைபல வுண்டு;
காவலுஞ் சிறையுங் காண்குதும் எனினும்
பாவிகள் பகலிற் படுகொலை செய்து
திருடிச் செல்லுந் தீரச் செயல்கள்
விரவுதல் செவியில் விழுவது முண்டு;
தீயவர் திருடிப் போயஅப் பொருளில்
காவலர் பங்கும் கணக்கில் உண்டாம்;

காமுகர் சிலரால் கன்னியர் கற்புத்
தோமுறா வண்ணம் தூயநல் லுணர்வுடன்
காக்கும் பணிக்கே காவல் நிலையம்
ஆக்கினர் என்பர் ஆகினும் உண்மை
நடப்பினை நாளிதழ் கொடுப்பதைக் காணின்
துடித்திடும் உள்ளம் வெடித்திடும் ஐயகோ!
பசித்திடும் உடலினர் பாவையர் கற்பைப்
புசித்தனர் அந்தப் புனித நிலையத்து
கடமை யுணர்வைக் காலால் நசுக்கி
உடலினைச் சுவைத்தவர் உயிரையும் பறித்தனர்
என்ற செய்திகள் எத்தனை! எத்தனை!
இமையோ விழிகளுக் கிடர்தர முயல்வது?
இந்நிலை தொடரின் எரிமலை ஒருநாள்
தன்னிலை மறக்கும் தானே வெடிக்கும்
மக்கள் பொருளும் மடவார் கற்பும்
தக்கவர் காவல் இன்றெனின் இன்றாம்;
மக்கள் கூட்டம் மனந்துடித் தெழுமேல்
தக்கோர் காவலை மறுநாள் தருமே.

**16**

## மருத்துவ மனையா? வருத்தும் மனையா?

பிணியிடை உழலும் மாந்தர்
 பேணுநர் இல்லோர் நோய்கள்
தணிவுற அரசின் சார்பில்
 தருகொடை மிகுதி யாகும்;
பணியினில் திறமை மிக்க
 *பண்டுவர் பலரும் உண்டு;
மணிமணி மருந்தும் உண்டு
 மற்றும்நல் லமுதும் உண்டு.

மருத்துவ மனைகள் யாவும்
 வறியராய் வருவோர் தம்மை
வருத்துவோர் மனைக ளாகி
 வருவது காணு கின்றேன்
வருத்தமே மிகுதி யாக
 வாடிடும் மனத்த னானேன்
திருத்தவோர் மருந்தா இல்லை?
 தெரியினுந் தீர வில்லை!

வெடுக்கெனப் பேசு வோரும்
 விறைப்புடன் கனன்று தேளின்
கொடுக்கெனக் கொட்டு வோரும்
 கொடுப்பதைச் சுருட்டு வோரும்

*மருத்துவர்

படுக்கையிற் கிடப்பார் தம்மைப்
பாவிகள் படுத்தும் பாடு
நடுக்கமே கொள்ளச் செய்யும்
நலிந்தவர் யாது செய்வர்?

விலையுயர் மருந்த னைத்தும்
வேறிடம் பறந்து போகும்
இலைகறி காய்க ளெல்லாம்
எங்கொங்கோ சமைய லாகும்
அலைவுறும் பிணியோர் இங்கே
அலையுறுந் துரும்பாய் நிற்பர்
நிலையிது காணுங் காலை
நெஞ்சினிற் கனலே மூளும்.

மருத்துவர் வீட்டிற் கேகி
வைப்பதை வைத்து விட்டால்
திருத்தமாக் கவனம் வைப்பர்
பிணிகளும் தீர வைப்பர்
நரித்தனத் தாதி மார்கள்
நாடகம் ஆடும் முன்பே
அரித்திடும் அவர்தம் கையில்
அதைஅதை வைத்தல் வேண்டும்

பண்டுவப் பணிதான் பாரில்
ஒப்பிலாப் பணியாம்; நன்மை
கண்டவர் கடவு ளென்றே
கைதொழு தவரை யேத்திக்
கொண்டுளம் மகிழ்வர்; மக்கள்
கும்பிடுந் தொழிலைத் தம்பாற்
கொண்டவர் ஈது ணர்ந்து
கொள்வரேற் குறைக ளேது?

மகிழ்வுடன் சம்ப ளங்கள்
    மருத்துவ மனையிற் கொள்வர்;
புகுபிணி யாள ருக்கோ
    புகலிடம் மருந்த ரில்லம்;
மிகுபொழு தழிவ தந்த
    மேலவர்க் கில்லி லேதான்
தொகுபொருள் நோக்க மானால்
    துவண்டவர் எங்கே செல்வர்?

புதுமனை மருத்து வர்க்குப்
    பொருள்தரச் செல்வருண்டு
*[1]பொதுமனை புகுவ தன்றிப்
    புகலிடம் வறியர்க் கேது?
மதுவுணும் மதியர் போல
    மருத்துவர் மயங்கா ராகி
எதுசரி யெனநி னைந்தே
    ஏற்றதோர் பணியைச் செய்க.

*பொது மருத்துவமனை

## 17

## நியாய விலைக்கடை

நிறுக்கின்ற பொருள்களிலும் அளக்கின்ற
பொருள்களிலும் நேர்மை யுண்டா?
வெறுக்கின்ற படியன்றோ விளையாடல்
புரிகின்றார்; விலைகொ டுப்போர்
கறுத்தெழுந்தால் நியாயவிலைக் கடையென்பார்
நியாயத்தைக் கடையில் விற்பார்;
பொறுத்திருந்து பார்த்திருப்போர் பொங்கியெழும்
நாளொன்று புகுந்தே தீரும்.

வாங்காதார் பெயர்களெலாம் வாங்கியதாப்
பதிந்திருக்கும்; வந்து விட்டால்
தீங்காளர் பொருள்நேற்றே தீர்ந்ததென்பார்;
அதுவேறு தெருவிற் போகும்;
போங்காலம் வாராதோ? பொதுமக்கள்
ஏங்குகிறார்; புல்ல ருக்கே
ஆங்காலம் ஆயிற்றா? அழிகாலம்
மேவிற்றா? ஆரே கண்டார்!

கண்ணெதிரில் அளந்தபொருள், கடையிலவர்
நிறுத்தபொருள் கடுகி வந்து
பின்னதனைப் பார்த்தாலோ பெற்றதெலாங்
குறைந்திருக்கும்; பெருத்த மாயம்

பண்ணிடுவர்; சுட்டெரிக்கும் பகற்பொழுதில்
வரிசைதனிற் பிச்சை மாந்தர்
நண்ணுதல்போல் மகளிரெலாம் நடுத்தெருவில்
காத்திருப்பர்; நடைதான் மிஞ்சும்.

விலையின்றி மனமிளகி ஈவதுபோல்
வந்தவரை விரட்டு கின்றார்;
தலையொன்று குறையாமல் தருவதற்குப்
பொருள்மிகவே தந்தி ருந்தும்
இலையென்று மொழிகின்றார் ஈவிரக்கம்
இல்லாமல் ஏய்த்து நிற்பார்;
கலையென்று கவருவதைக் கற்றவர்கள்
களியாட்டம் ஆடு கின்றார்.

இந்தநிலை மாறாதா? இழிவுநிலை
தீராதா? எளிமை யாக
வந்தவர்கள் பொருள்வாங்கி வாழும்நிலை
வாராதா? வாக்கு வாங்க
வந்தவர்கள், துயர்நீங்க வழியொன்றுஞ்
செய்யாரா? வாடும் மக்கள்
நொந்தமனம் ஆறாதா? நூறாண்டு
சென்றாலும் நோய்தீ ராதா?

விடுதலையும் பெற்றுவிட்டோம் விழாக்களையும்
நடத்திவிட்டோம் விண்கூ டத்தில்
படுவிரைவில் ஏறிவிட்டோம் பலமுனையிற்
சிறந்துவிட்டோம் பாழும் நாட்டிற்
கெடுதலையே காணுகிறோம் கீழ்மைகளே
பூணுகிறோம் கிடக்கும் மக்கள்
படுதுயரந் தீரவில்லை பஞ்சங்கள்
மாறவில்லை பயனே இல்லை.

விடுதலையால் என்னபயன்? வேளைதொறும்
நுகர்பொருள்கள் விரைந்து வாங்கப்
படுதுயரம் உறலாமோ? பகிர்ந்தளிக்குங்
கடைகளிலும் பழிகள் செய்யும்
கெடுதலைகள் வரலாமோ? கெடுநிலையில்
மக்களினும் கிடக்க லாமோ?
விடுதலையால் என்னபயன்? வெற்றொலியால்
என்னபயன்? வினவு கின்றோம்.

விடைபகர வாயில்லை விடுதலையை
நுகர்வோர்க்கு விழிகள் இல்லை
இடையிலெவர் உரைத்தாலும் இருசெவியும்
சரியில்லை என்னே விந்தை!
குடைநிழலில் அமர்ந்திருப்போர் கூர்வெயிலின்
வெம்மைதருங்கொடுமை காணார்
படைநடுங்கும் பெரும்புரட்சி பரவிவரின்
மக்கள்துயர் பறந்து போகும்;

# 18
# கையூட்டுலகம்

உலகிலே கையூட் டில்லா
ஓரிடம் உண்டா? எங்கும்
நிலவியே படர்ந்த டர்ந்து
செழித்துயர் நிலையில் நிற்கும்;
வலிவுறும் அஃதின் றாமேல்
வாழ்க்கையே இயங்கா திங்கே;
கொலைகளும் மறைந்து போகும்
கொடுத்திடுங் கையூட் டாலே.

இழிவெனக் கையூட் டேற்றல்
எண்ணினர் அற்றை நாளில்;
அழகெனக் கருது கின்றார்
அனைவரும் இற்றை நாளில்;
பழியெனப் பேசி, வாங்கக்
கூசினர் பழைய மாந்தர்
தொழிலது சரியே என்று
சொல்லுவர் புதிய மாந்தர்.

அரசுசார் அலுவல் மன்றம்,
அருங்கலை வளர்க்குஞ் சாலை,
புரையிலா நீதி மன்றம்,
புனிதமோ டேத்துங் கோவில்,
சிறையுறுங் காவற் கூடம்
எங்குமே சென்று வெற்றி
தருவது கையூட் டாகும்
தடுப்பவர் எவரு மில்லை.

மறைவினிற் பெறுவ தில்லை
    மறந்துமே விடுவ தில்லை
குறைவறத் தொகையைப் பேசிக்
    கொடுத்தபின் எதுவுஞ் செய்வர்
நிறைவதை ஒருவர் மட்டும்
    கவர்ந்திடா நேர்மை யுண்டு
பிறருடன் தகுதிக் கேற்பப்
    பகிர்வதே பெருவ ழக்கம்.

உரியதோர் கல்வி கற்றார்
    உயரிய பதவி பெற்றார்
சிறியதாம் பணியி லுள்ளார்
    சீரிய கல்வி யில்லார்
சரிநிக ராவர் வைக்கும்
    கையூட்டுச் சாமி முன்னர்;
அரியதோர் செயலே யில்லை
    எதனையும் அதுவே செய்யும்.

அலுவலைக் குறைத்துக் கொண்டான்
    ஆசையைப் பெருக்கிக் கொண்டான்
பலபழி செய்தும் வாழ்வைப்
    பகட்டுதற் கெண்ணி விட்டான்
நலவழி நடப்ப தற்கு
    நாட்டமே அவனுக் கில்லை
சொலவொரு சொல்லு மில்லைத்
    தூய்மையை மாய்த்தே விட்டான்

தேவையைப் பெருக்கிக் கொண்டால்
    திசைகளும் மாறிப் போகும்;
ஆவலை வளர விட்டால்
    அதற்கென எல்லை யில்லை;
கோவழி எதுவோ அஃதே
    குடிவழி யாகுங் கண்டீர்
ஆவது கருதும் மாந்தர்க்
    காட்சியிற் கவனம் வேண்டும்.

# 19
# பூக்களிற் புழுக்கள்

சேர்ந்தொரு கட்சி சொல்லித்
தேர்தலில் நிற்பார் தம்மை
ஓர்ந்துணர் ஆற்ற லின்றி
உவப்புடன் வாக்க ளித்துத்
தேர்ந்தெடுத் தாட்சி மன்றுட்
சென்றிட வழிவ குத்தோம்
போந்ததும் வேறு கட்சி
புகுந்திட மோப்பம் பார்ப்பர்

*ஆசற்ற தூயர் போல
ஏய்ப்புரை யாற்றிப் பின்னர்
ஆசைக்கே அடிமை யாகி
அவர்நிலை மறந்தா ராகிக்
காசுக்குத் தம்மை விற்கும்
கயவராற் சட்ட மன்றம்
மாசுக்குட் படுமே யன்றி
மாட்சிமைக் காட்ப டாது

கொள்கையின் மேன்மைக் காக
மாறிடிற் குற்ற மில்லை
கொள்ளையை மனத்திற் கொண்டு
கொம்புகள் தாவிச் சென்றால்
'எள்ளலுக் குரிய ரானார்
இழிகுணம் படைத்தா'ரென்றே
**அள்ளலில் எறிவ தன்றி
அவரையார் மதிப்பா ரிங்கே?

*குற்றமற்ற **சேறு

‘கொள்ளைகள் கொலைகள் செய்வோர்
பதுங்கிடும் கூடா ரம்போல்
உள்ளதே சட்ட மன்றம்’
என்றதோர் உணர்வு தோன்றி
உள்ளமே நொந்து போனார்
ஊரவர்; அவர்தம் நெஞ்சில்
வெள்ளமே திரண்டு வந்தால்
வீணரின் நிலைஎன் னாகும்?

வாக்குகள் அளித்தோம் சட்ட
மன்றமர் வாய்ப்பைப் பெற்றோர்
ஆக்குவர் நன்மை யென்றே
ஆவலிற் காத்தி ருந்தோம்;
தாக்குதல் நடத்து கின்றார்;
தகாமொழி பேசு கின்றார்
பூக்களில் தேனீ யில்லை
புழுக்களே நெளியக் கண்டோம்

நலந்தரு சொற்போர் அங்கே
நடத்துவர் என்றி ருந்தோம்
*வலம்படு மற்போர் ஒன்றே
நடத்திட வகுத்து நின்றார்;
சிலம்பமும் ஆடு கின்றார்
செருப்புகள் வீசு கின்றார்;
துலங்குமா சட்ட மன்றம்?
தூவென இகழ்தற் காகும்.

தேர்தலில் அரசின் சார்பிற்
செலவிடும் தொகைக ளெல்லாம்
யார்பணம்? மக்கள் கட்டும்
வரிப்பண மன்றோ? யாதும்

*வலிமை

நேர்மையை நினையா ராகி
　　நீதியை மதியா ராகித்
தேர்விளையாடு கின்றார்
　　தெருவிடைச் சிறுவர் போலே.

'நாட்டினை உயர்வு செய்யும்
　　நல்லதோர் நினைவை நீக்கி
வீட்டினை மேம்ப டுத்தும்
　　வீணர்க்கா வாக்க ளித்தோம்?
கேட்டினை வளர்ப்ப தற்கா
　　வாக்கினைக் கெடுத்து விட்டோம்?'
நாட்டினர் இவ்வா றெண்ணி
　　நலிவதைக் காணு கின்றோம்

மக்களை மக்கள் ஆள
　　வகுப்பதே மக்க ளாட்சி
மக்களை மக்கள் ஏய்க்கும்
　　மாண்பையே காணு கின்றோம்;
இக்குறை தீர்வ தென்றால்
　　எவரிடம் போயு ரைப்போம்?
தக்கவர் ஆள்வோ ரானால்
　　தழைத்திடும் மக்க ளாட்சி

பணத்தினால் வாக்கைப் பெற்றுப்
　　பதவியில் அமர்ந்த பின்னர்ப்
பணத்தினைக் குறிக்கோ ளாக்கிப்
　　பழிகள் தாம் செய்வ தென்றால்.
குணத்தினைக் கொன்று வீழ்த்தல்
　　குடியர சாட்சி யென்றால்
மணத்துடன் உலக மெங்கும்
　　வாழிய மக்க ளாட்சி

# 20

## ஏச்சு மேடை

அரங்கேறிப் பேசுகின்ற அரசியலின்
சார்பாளர் அறிவின் பண்பின்
திறங்காணும் படிபேசிச் செவிகுளிர
மனங்குளிரச் செய்வ துண்டு;
தரங்கூறும் அந்நிலையர் தமிழறிந்தோர்
சிலரானார் தமிழ கத்தில்
புறம்போகும் பேச்சாளர் புல்லறிவர்
பலரானார் புழுக்கள் போலே.

அரசியலின் நுணுக்கங்கள், ஆக்கவழித்
திட்டங்கள், அண்டை நாட்டில்
பொருளியலில் வளர்முறைகள், புதுமுறையில்
தொழில்வளர்ச்சி, பொதுமை நோக்கம்
விரவிவரும் உளப்பாங்கு, வேத்தியலின்
வரலாறு விளக்கிக் காட்ட
உரியவரா பேசுகின்றார்? ஓரளவும்
விளங்காதார் உளறு கின்றார்.

பண்பாட்டின் சிறப்பியல்பு, பகுத்தறிவு
விளக்கங்கள், படிப்பின் மேன்மை,
மண்மேட்டில் உழன்றுவரும் மக்களுக்கு
மறுவாழ்வு வழங்குந் திட்டம்,
கண்போலும் கல்விவளர் கழகங்கள்
உருவாக்கிக் காட்டல் எல்லாம்
எண்போட்டுக் காட்டாமல் ஏதேதோ
குழப்புகின்றார் ஏசு கின்றார்.

கருத்தாலே கருத்தெதிர்க்குங் கலையறியார்
      மன்றேறிக் கயவர் போலே
பெருத்தவசை பொழிகின்றார்; பிழைபட்ட
      செய்திகளைப் பேசு கின்றார்;
பொருத்தமிலாப் பொய்ம்மூட்டை பொதுவிடத்தில்
      அவிழ்க்கின்றார்; புண்ப டுத்தி
வருந்திடவே தனிமனித வாழ்க்கையினைத்
      திறனாய்வர்; வைது தீர்ப்பர்

அவைநடுவில் தகாமொழிகள் அருவருப்பைத்
      தருமொழிகள், அவர்ம னத்திற்
சுவையெனவே கொள்மொழிகள், சுடுமொழிகள்,
      இழிமொழிகள், தொகுத்தெ டுத்த
*நவைமொழிகள், பயனில்லா நகைமொழிகள்
      உதிர்ப்பவரால் நன்மை யுண்டோ?
இவைதவிர்க்கப் பொதுமக்கள் எழுச்சிகொளின்
      பொதுமேடை ஏற்றங் காணும்.

இழிமொழிகள் பழிமொழிகள் எடுத்துரைப்போன்
      பேசுகிறான் என்றால் நீவிர்
குழுமாதீர்; மனம்வெறுத்துக் கூடாமல்
      ஒதுக்கிவிடின் கொடியர் பேச
எழுவாரோ? நன்கொடைகள் ஈயாமல்
      எள்ளிவிடின் ஏது மேடை?
அழிவுதரும் இச்செயலை அழிப்பதற்கு
      நுமக்கன்றோ அறிவு வேண்டும்.

நன்மைகளை உருவாக்கும் நாட்டமுடன்
      வருவோர்க்கு நல்கல் வேண்டும்;
புன்மைகளை வளர்ப்பவர்கள் பொறுக்குவதைத்
      தின்பவர்கள் புகுவா ராகின்
தன்மையிலார் இவரென்று தருகொடையை
      நிறுத்திடுக தரங்கள் கெட்ட
புன்செயலுக் குடந்தையெனப் போகாதீர்
      நல்லுணர்வைப் போற்றி வாழ்க.

*தீய மொழிகள்

## 21

# தேர்தலாற் கண்ட பயன்

சாதிகளும் பொய்மொழியும் தன்னலமும்
 கையூட்டுந் தழைக்கும் நாட்டில்
ஏதுபயன் விடுதலையால்? என்னபயன்
 தேர்தலினால்? எத்தர் வந்தே
ஓதுகிற மொழியெல்லாம் உண்மையென
 நம்புபவர் உணர்வு கெட்டு
*மேதிகளாய் உள மட்டும் மேதினியில்
 தேர்தலினால் மேன்மை யில்லை.

சாதியைத்தான் முன்வைத்துச் சார்கின்றார்
 வேட்பாளர்; சமயம் பார்த்துச்
சாதிக்கோர் அமைச்சரெனச் சண்டைவரும்;
 சாதிக்கா சட்ட மன்றம்?
மீதிப்பேர் நிலைஎன்னாம்? வீழ்ந்தவரும்
 மேன்மைபெற வேண்டு மென்று
**சாதிப்போர் வேண்டுமலால் ***சாதிப்போர்
 தேவையிலை சட்ட மன்றில்.

உண்மைகளைச் சொல்லிவிடின் ஒருபோதும்
 வெற்றியிலை உலர்ந்து போன
மண்மதியர் முன்னின்று மனமறிந்த
 பொய்ம்மொழிகள் வழங்கி விட்டால்
பெண்மையினம் வாக்களிக்கும் பேதையர்போல்
 ஆடவரும் பின்னே செல்வர்
கண்ணிமைக்கும் முன்வெற்றி கண்டிடலாம்
 மாலையெலாங் கழுத்தில் வீழும்

---

*எருமைகள், *வற்புறுத்துவோர். *சாதிச்சண்டை.

‘பட்டினியாற் சாகவிடேன் பாட்டாளி
    இனத்துக்குப் பாலும் வார்ப்பேன்
தட்டழிய விடமாட்டேன் தரமளிக்குங்
    குடியொழிப்பேன் தாய்மே லாணை
அட்டவணைத் திட்டங்கள் ஆயிரத்தின்
    மேலுண்’டென் றறைவர்; வெற்றி
கிட்டியதும் தன்னலமே கிளைத்திருக்கும்
    பொதுநலமோ கெட்டு நிற்கும்

வாக்களிக்கக் கையூட்டு வாங்குகிறோம்
    வெற்றியொடு வந்தோர் பின்னர்
வாக்களித்த நம்மிடமே வட்டியொடு
    கையூட்டு வாங்கு கின்றார்;
ஆக்கமுளார் அமைச்சரென ஆகிவிடின்
    நன்கொடையென் றதன்பேர் மாறும்;
தீர்க்கவொரு வழியில்லை தேர்தலினால்
    விளைகின்ற தீமை யெல்லாம்

எதுசெய்தும் வெற்றிபெற எண்ணுவதால்
    தேர்தலிலே இழிந்த போக்கைப்
புதுமுறையிற் காணுகிறோம்; போடுகிற
    சீட்டுகளும் புகைந்து போகும்
விதிமுறையும் வேறாகும் வேட்பாளர்
    சாதிகளும் வேறாய்த் தோன்றும்
பதிவான சீட்டுகளிற் பலபெயர்கள்
    மாறிவரும் பறந்து போகும்.

கற்றறிந்து சிந்தித்துக் கண்டுணர்ந்து
    செயலாற்றும் கடமை வேண்டும்;
பற்றழிந்த தொண்டுளத்தைப் பண்புளத்தைப்
    பொதுநலத்தைப் பாது காத்தல்
உற்றவர்க்குக் கடமையென உளத்தூய்மை
    முறைமையென உணர்ந்து விட்டால்
பெற்றதொரு விடுதலைக்குப் பெருமைவரும்
    தேர்தலுக்கும் பெருமை யுண்டு

# 22
# கண்ணீர்த்துளி

பொற்புடைச் செல்வி பூம்புகார்த் தலைவி
கற்புடைத் தெய்வம் கண்ணகி கொழுநனைத்
தீதிலாச் செம்மலைத்திருடன் எனப்பொய்
ஓதிய உரைகேட் டோரா மன்னவன்
கொன்றனன் என்றதோர் கொடுமொழி செவிபுக
மன்றம் சென்றனள் வழக்கினில் வென்றனள்;
கன்றிய நெஞ்சங் கலங்கிய கண்ணகி
துன்றிய கண்ணீர்த் துளிகளைச் சிந்தினள்;
அன்றவள் சிந்திய அவலக் கண்ணீர்
கொன்றது மதுரைக் கொடுங்கோ லரசை
அல்லல் தாங்கா தழுத கண்ணீர்
மல்லல் வயல்சூழ் மாநில மன்னர்
செல்வம் தேய்க்கும் செறுபடை யாமெனச்
சொல்லும் திருமறைச் சொற்பொருள் மெய்யே;
எளியவர் சிந்தும் விழிநீர்த் துளிகள்
ஒளிவிடும் வாட்படை ஒக்கும் என்பர்;
ஆம்ஆம் அத்துளி அத்துணை யாற்றல்
தாமே பெற்றுள தன்மையை அறிகுவம்;
படியர சோச்சும் பான்மையைப் பெற்ற
முடியர சாகினும் குடியர சாகினும்
கொடுங்கோ லோச்சுங் குறிப்பினைக் காட்டிற்

சுடுங்கோ லாகும் சொட்டுங் கண்ணீர்!
வெந்துயர் பொறாது சிந்திய விழிநீர்
செந்தழலாகிச் சிதறிப் பரவும்;
சுவைபட முன்பு சொன்னதை மறந்து
புவியர சாள்வோர் புகுத்திய வஞ்சப்
பொல்லாங் கனைத்தும் பொசுக்கும் நசுக்கும்;
நல்லோர் ஆட்சி நாட்டினில் மலர்த்தும்;
அரியணை யமர்வோர் ஆய்ந்துளங் கொள்க;
நெறியறி மாந்தர் அறிவுரை யதனைச்
செவிபுக விடுக; செற்றமுங் கலாமும்
தவிர்க தவிர்க; தந்நலம் விடுக;
கொலையுங் களவும் நிலைபெறல் காணின்
அலைவுறும் எமதுளம் ஆறாது துடிக்கும்
விழிகள் கனன்று வெந்நீர் வடிக்கும்
விழிநீர் வடிப்பும் வெந்துயர்த் துடிப்பும்
அழித்தே அமையும் அதனெதிர் ஒன்றிலை;
விழித்தனர் மாந்தர் விளையாட் டயரேல்;
செருக்கும் தருக்கும் பெருக்கு வீராயின்
நொறுக்கும் அவைநுமை நொடிப்பொழு ததனில்
பொதுநலக் காவலர் பொறுப்பினை ஏற்றவர்
எதுநலம் எனவுணர்ந் தேந்துக கோலே,

## 23
# எது நாட்டுப் பற்று?

உழைப்பதே யின்றி நாடு
        வாழ்கவென் றுரத்துச் சொன்னால்
தழைத்திடும் என்று நீவிர்
        எண்ணுதல் தவறே யாகும்;
இழைத்திடுஞ் செயலொவ் வொன்றும்
        ஈன்றதாய் நாட்டைச் சாரும்;
உழைத்திட முயல்வோ மென்ற
        உணர்வுதான் நாட்டுப் பற்றாம்

உரிமையைக் கற்றுக் கொண்டீர்
        கடைமையை உதறி விட்டீர்
ஒருநிலை தாழ்ந்தும் மற்ற
        ஒருநிலை உயர்ந்தும் நின்றால்
வருபயன் ஒன்று மில்லை
        வளர்ச்சியும் வற்றிப் போகும்
*இருநிலை சமமாய் நின்றால்
        நாட்டினில் ஏற்றம் உண்டாம்.

அலுவலர் இருக்கை மேலே
        அமர்ந்திடும் நேர மென்ன?
பலவகை இதழ்கள் தூக்கிப்
        படித்திடும் நேர மென்ன?

*இருநிலை - உரிமையும் கடமையும்

கலகல வென்று பேசிக்
        கழித்திடும் நேர மென்ன?
சொலுமிடை வேளை என்றே
        சுற்றிடும் நேர மென்ன?

அனைத்தையும் கூட்டிப் பார்த்தால்
        அலுவல்செய் நேர மென்ன?
தினைத்துணை நேர்மை யேனும்
        சேர்ந்தவர் சிந்தித் தாய்க;
பனைத்துணை உயர்ந்த கோப்பிற்
        படிந்துள தூசி பாரீர்
நினைத்தினித் திருந்து வீரேல்
        நேர்ந்திடும் நாட்டுப் பற்று

கோப்புகள் பார்க்குங் கண்கள்
        கொழுவிய பைகன் பார்க்கும்
தீர்ப்புகள் எழுதுங் கைகள்
        தினவினைச் சொறிந்து காட்டும்
காப்புயர் நிலையம் இங்கே
        களவுகட் குடந்தை யாகும்
ஏய்ப்பவர் மிஞ்சி விட்டால்
        எப்படி நாடு வாழும்?

## 24
# உலகை நினையுங்கள்

உழைப்பினை நல்கா திங்கே
    உறங்கியே காலம் போக்கிப்
பிழைப்பினை நடத்த எண்ணல்
    பேதமைச் செயலே யாகும்
தொழத்தகும் தொழிலோர் சோம்பித்
    துஞ்சிடின் நாட்டு வாழ்வு
விழத்தகும் அன்றோ? உங்கள்
    வியர்வையால் உலகம் பூக்கும்.

அயர்வினை அகற்றல் வேண்டும்
    ஆர்ப்பொலி தவிர்த்தல் வேண்டும்
வியர்வையைச் சிந்தி நாளும்
    விளைவினைப் பெருக்கல் வேண்டும்
பயன்பெற விழைவோர் என்றும்
    பாடுபட் டுயர்தல் வேண்டும்
செயலிவை தொழிலோர் கொண்டால்
    சீர்பெறும் நமது நாடு

நாட்டினை உயர்த்தும் மாந்தர்
    உழைப்பினை நல்கல் மட்டும்
கேட்டினை அகற்று மென்று
    கிளத்திலேன்; செல்வம் அள்ளிப்

போட்டவர் நெஞ்சும் சற்றுப்
புதுமையிற் பொருந்தல் வேண்டும்
மேட்டுயர் வாழ்க்கை யொன்றே
மேன்மையென் றெண்ணல் வேண்டா

உடலினை வருத்தி இந்த
உலகினைக் காக்கும் மாந்தர்
படுதுயர் கண்டும் நெஞ்சிற்
பரிவொடும் அணுக லின்றிச்
சுடர்தரும் உழைப்பை யெல்லாம்
சுரண்டியே வாழ எண்ணின்
அடகெடும் வாழ்வை நீங்கள்
அடையும்நாள் தொலைவில் இல்லை

அடிமுத லாகத் தங்கள்
அயர்விலா உழைப்பை வைத்தோர்
மிடிபடத் துயரில் வீழ்ந்தால்
மேவிடும் புரட்சி திண்ணம்;
அடியொடு சுரண்டும் ஆசை
அகற்றிடல் வேண்டும்; இந்தப்
படியுணர்ந் துரிய பங்கைப்
பகிர்ந்தளித் திடுதல் வேண்டும்.

இணைந்தொரு துறையிற் புக்கோர்
இரண்டணி யாகத் தம்முள்
*தணந்துளம் பகைமை கொண்டு
**தரியல ராதல் கண்டேன்
சுணங்கிடும் எனது நெஞ்சிற்
சுடுதழல் பெய்தல் போல
உணர்ந்துளம் வாடு கின்றேன்
இருவர்க்கும் ஒன்று சொல்வேன்

*கணந்து - பிரிந்து, **தரியலர் - பளகவர்.

உரியவர் உழைப்போர் எல்லாம்
    உலகினை நினைதல் வேண்டும்
இருமுனை யாகத் தம்மை
    எண்ணியே பிரிந்து நின்றால்
வருமிடர் நாட்டுக் கன்றோ?
    வளமெலாம் சிதையுமன்றோ?
ஒருமுனை யாக நின்றால்
    உலகெலாம் வாழும் அன்றே.

# 25
# எழுத்துலகம்

சதைப்பசிக்குத் தீனியிடும் சங்கரிகள்
    கூட்டத்தார் தடித்த நெஞ்சால்
எதைக்கெடுத்தும் எழுதுகிறார் எதைக்கொடுத்தும்
    வாங்குகின்றார் இளைய நெஞ்சை;
கதைப்படைப்பாம் ஐயஓ காமத்தின்
    படைப்பைத்தான் காட்டு கின்றார்
அதைப்படிக்கும் சிறுவர்க்கும் ஆசையைத் தான்
    தூண்டுகின்றார் அனைத்தும் விட்டே

எழுத்தாளர் கைகளிலே இருப்பதெல்லாம்
    எழுதுங்கோல் என்று கூறேன்
பழுத்தோர்கள் வளர்ந்துவிடும் பண்பாட்டுப்
    பயிர்களெலாம் பாழாய்ப் போகக்
கழுத்தறுக்க வைத்திருக்கும் கருக்கரிவாள்
    என்றுரைப்பேன்; காமத் தீயில்
பழுக்காது காய்ச்சியிளம் பிஞ்சுள்ளத்தில்
    பாய்ச்சுகிற சூட்டுக் கோலாம்,

கதைக்கேற்ற படமென்பார் கவர்ச்சிதரும்
    படமென்பார் காமஞ் சொட்டும்
சதைக்கேற்ற மெருகேற்றிச் சரிந்துவிழுந்
    துணிகாட்டிச் சாயம் பூசி

எதைக்காட்டிப் பணம்பறிப்போம் எனநாட்டில்
இதழ்விற்போர் இளைஞர் நெஞ்சிற்
பதைப்பேற்றி வைக்கின்றார் பாழ்பட்ட
நெஞ்சத்தார் பண்பே யில்லார்.

பரத்தமைதான் எழுத்துலகில் பரவிவரல்
எவர்குற்றம்? பணத்துக் காகத்
தரத்தைவிடும் எழுத்தாளர் தாமோ அத்
தாள்நடத்தும் தரகர் தாமோ?
உரத்தபசிக் குணவாக உவந்தோடிப்
பாய்ந்ததனை உண்ணு கின்ற
மரத்தமனம் படைத்தவரோ? மதியிழந்த
மூவருந்தான் கூண்டில் நிற்போர்.

பாலுணர்ச்சிப் பசியாளர் பல்குதலும்
காண்கின்றோம் பழுதுபட்ட
மாலுணர்ச்சி எழுத்தாளர் மல்குதலும்
காண்கின்றோம் மதியை யூட்டும்
நூலுணர்ச்சி யற்றவராய் நோயுற்ற
மாந்தரிவர் நுடங்கு கின்றார்
காலுணர்ச்சி மானத்திற் கைக்கொளினும்
போதுமடா காலம் மாறும்.

## 26
## கேள்வி - பதில்

குடும்பத்தார் பயில்கின்ற கொள்கைவழி
வருமிதழாம்; கோண லின்றி
உடம்பைத்தான் காட்டுகிற ஒருத்திபடம்
மேலுறையில்; ஒருநாள் கண்டேன்;
விடம்வைத்த பேழையென விளங்காமல்
படித்துவிட்டேன் வியர்த்துப் போனேன்;
கெடும்பைத்தான் அதிற்கண்டேன் 'கேள்விபதில்'
கீழ்மையைத்தான் கிளத்தக் கண்டேன்.

மூதாட்டி அதைப்படிக்க முந்துகிறாள்
முதியவரும் மோது கின்றார்
தீதூட்டும் அதனைத்தான் சிறியவருந்
தேடுகிறார் தேன்நி றைந்த
*போதாட்டி உணும்வண்டாய்ப் பூவையரும்
ஆடவரும் போய்ப்ப டிப்பார்
**ஏதாக்கும் எனநினையார் இதனாற்றான்
குடும்பத்தார் இதழென் றாரோ

குடும்பத்தில் மறைவிடத்தில் கூடிமகிழ்
பொழுதத்திற் குலவல் பற்றி
நடும்வித்தின் அளவேனும் நாணமிலாள்
வழியொன்று நாடிக் கேட்பாள்;

*மலரை அசைத்து **குற்றம்

கெடும்வித்தை கற்றவனும் கேள்விக்கு
விடையளிப்பான்; கீழ்மை யில்லாக்
குடும்பத்தாள் குலவுவதற்குக் குறிப்புகளை
மற்றவனா கொடுக்க வேண்டும்?

'நடிகைக்குக் கணவன்யார்? நள்ளிரவில்
என்செய்வாள்? நாடும் என்பாற்
*படிகைக்கு வருவாளா? பாவைக்குத்
தொகையென்ன? படுக்கை நொந்து
விடிகைக்கு வாடுகிறேன் வினவுகிறேன்
விடைசொல்லும்' வீணன் **இந்தப்
படிகைக்கு வந்ததெலாம் வரைகின்றான்
***பாழிதழார் பதிலும் சொல்வார்.

அழகிக்கு மணவாளர் எத்தனைபேர்?
யாரிடத்தில் அவளுக் காசை?
பழகுவதற் கினியவளா? படுக்கையிலே
ஒருசாய்ந்து படுப்ப துண்டா?
எழிலிக்கு வயதென்ன? எடையென்ன?
இரவிலவள் உண்ப தென்ன,
தொழிலுக்கு வாங்குகிற தொகையென்ன,
உடுத்துகிற துணிக ளென்ன?

அவளுக்குக் காதலன்யார்? அழகிமனத்
தவ்வுணர்ச்சி அரும்பா? காயா?
எவனுக்கு மாலையிட எண்ணுகிறாள்,
பருவமகள் என்ன வானாள்?
அவளொருவன் மனைவியென ஆனபினும்
மற்றவன்மேல் ஆசை வைக்குந்
தவறுக்கேன் ஆளானாள்? தனதெழிலால்
கவர்ச்சிமிகும் தையல் யாவள்?

பத்திரிகை தாங்கிவரும் பாழ்பட்ட
வினாக்களிவை; பதிலும் ஏந்தும்;
இத்துறையில் வினாவிடைகள் எழுமானால்
குமுகாயம் இழிந்து விட்ட

*படிவாளா, **இந்தப்படி கைக்கு வந்தது, ***பாழான பத்திரிகையாளர்.

அத்துயர்தான் மிஞ்சிவரும்; அவனுக்கோ
காசுவரும்; ஆக்க நோக்கில்
எத்துறையில் ஐயங்கள் எழவேண்டும்,
அத்துறையில் எழவே யில்லை.

நச்சுமிழும் வினாக்களுக்கு நல்லவரா
விடையளிப்பர்? நஞ்சு தன்னை
எச்சமயம் புகுத்திடலாம் எனப்பார்க்கும்
இழிந்தவரே இதனைச் செய்வர்;
அச்சமிலார் நாணமிலார் அரிவையர்தம்
கதைசொல்லி ஆள்கள் சேர்க்கும்
கொச்சைமனங் கொண்டவர்கள் குமுகாயங்
கெடுப்பதற்குக் கூச மாட்டார்.

நடிகையரை ஆய்வதற்கா நாளிதழ்கள்?
நாட்டவர்தாம் நடத்து கின்ற
கெடுதிகளைத் தெரிவதற்கா கிழமையிதழ்?
இளநெஞ்சிற் கீழ்மை யெல்லாம்
படியவிடும் நோக்கிற்கா பாழிதழ்கள்?
இவைவிடுத்தாற் பயனில் மூடக்
கொடுமைவளர் பேரிதழ்கள்! காசுபெற
எதுசெயவும் கூச வில்லை

அங்கங்கே அறிவியலின் ஆய்வுரைகள்.
அரசியலை ஆழ்ந்து கற்றோர்
எங்கெங்கே என்னென்ன எழுதியுளார்?
இலக்கியத்தின் நயங்க ளென்ன?
இங்கவற்றைத் தெரிந்துகொள இளைஞரினம்
முன்னேற எடுத்து ரைத்தால்
எங்களினம் எழுச்சிபெறும் எம்நாடும்
ஏற்றமுறும் எந்நாள் அந்நாள்?

## 27
# ஓதிக்கெட்டவன்

'யாதும் ஊரே யாவருங் கேளி'ரென்
றோதிய மணிமொழிக் குரியவன் தமிழன்;
எனினும் இவனைக் கேளிரென் றெண்ணும்
மனிதனை மாநிலத் தியாண்டுங் காண்கிலேன்
இவன்வாழ் ஊரை எனதூர் என்று
தவறியும் நினைந்துகை தருவோ ரிலையே;
'தீதும் நன்றும் பிறர்தர வாரா'என்
றோதும் இவனே யாவும் பிறரால்
வருவன என்றே வாழ்நா ளெல்லாம்
தெருவெலாஞ் சுற்றித் திரிதரல் கண்டேன்;
'சாதலும் புதுவ தன்' றெனச் சாற்றினன்
யாதொரு செயலும் அஞ்சி யஞ்சிப்
போதெலாம் செத்துப் புலம்பினன் அவனே;
'இனிதென வாழ்வை மகிழ்தலும் இலமே
முனிவின் இன்னா தென்றலும் இலமே'
எனுமொழி இசைத்தவன் இவன்றான் எனினும்
தாழ்செயல் பலவும் தயங்கா தியற்றி
வாழ்வே இனிதென மகிழ்தலும் உண்டு;
பழித்தும் இழித்தும் பகர்ந்து வாழ்வை
மறுத்துப் பேசி வெறுத்தலும் உண்டு;
'நீர்வழிப் படுஉம் புணைபோல் ஆருயிர்

முறைவழிப் படுஉம்' எனவும் மொழிந்தனன்;
அதனால்
நீந்தும் முயற்சியை நீத்தனன் ஆழ்ந்தனன்;
'பெரியோரை வியத்தலும் இலமே தம்மிற்
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'
எனுமொழி அவன்றன் ஏற்றமுங் காட்டும்;
மனத்துறு பண்புடன் மானமுங் காட்டும்.
எனினும் ஒருவரை ஏற்றிப் புகழ்ந்து
தனிநலம் ஒன்றே தகுமெனப் பேணித்
தனித்திறங் காட்டுவன்; தாழ்த்த நினைப்பின்
இவன்போற் பிறரை இகழ்வதில் பழிப்பதில்
இனிமேல் யாண்டும் எவனும் பிறவான்
தீதகல் வழியும் தேனிகர் மொழியும்
ஓதிக் கெட்டவன் இவன்போல் இலனே
உரைத்த குறிக்கோள், நடத்தும் வாழ்க்கை
இணைத்து நோக்கின் இரண்டும் தனித்தனி;
நினைதொறும் நினைதொறும் நெட்டுயிர்ப் புயிர்த்து
நனிபட ரெய்தி நலிவுறும் மனனே.

## 28

# திருமணச் சந்தை

கனிமுதற் பொருள்கள் யாவும்
 விற்றிடுங் கடைக ளுண்டு
நுனிபடுங் கொம்பு மாடு
 நுவல்விலைச் சந்தை யுண்டு
மனிதனை விற்குஞ் சந்தை
 மற்றுமொன் றுண்டு கண்டீர்;
இனிஅவன் உயர்தி ணைக்குள்
 இயம்புதற் குரிய னாகான்

மருள்படும் மனிதன், பெற்ற
 மகனையே விலைக்கு விற்று
வருதலைக் காணு கின்றேன்
 வதைபடும் மனத்த னானேன்
பெருகிய குமுகா யத்திற்
 பிணிதரு புழுவே யானான்
திருமணச் சந்தை யென்று
 செப்பியே திரிகின் றானே

'பிணியெதும் அணுகா வண்ணம்
 பெருந்தொகை செலவு செய்தேன்;
துணிமணி கல்விக் கான
 தொகையையும் சிறிது பாரும்;

பணியிடை அமர்த்து தற்குப்
    பணத்தினை யள்ளித் தந்தேன்;
மணமகன் வேண்டு மென்றால்
    மற்றிவை வேண்டும்' என்பான்.

பெற்றவன் மகனுக் காகப்
    பெருந்தொகை செலவு செய்தல்
உற்றதோர் கடமை யாகும்;
    உணர்விலான் ஊரி லுள்ள
மற்றவன் தலையிற் கையை
    வைத்திட நினைந்தாற் பெண்ணைப்
பெற்றவன் யாது செய்வான்
    பித்தனாய் மாற லன்றி?

பெண்களைப் பெற்ற தந்தை
    பெருந்தொகைக் கியலா னாகிப்
புண்களை நெஞ்சில் வைத்துப்
    புழுங்கியே வாடு கின்றான்
பெண்களும் மணங்கா ணாராய்ப்
    பேதலித் தழிந்து போனார்;
எண்ணிநல் வழியைக் காண
    எவனுமே விரும்ப வில்லை.

கண்கவர் எழிலைப் பாரான்
    கல்வியின் பெருமை காணான்
பெண்மகள் குணத்தை நோக்கான்
    பிறவுயர் பண்பும் நோக்கான்
உண்மையில் மனப்பொ ருத்தம்
    உள்ளதா எனவும் எண்ணான்
பொன்பொருள் மட்டுந் தானே
    புன்மகன் நோக்கு கின்றான்!

திட்டங்கள் பலவு ரைத்தோம்
செயலிலே பயனே இல்லை
சட்டங்கள் பலவுஞ் செய்தோம்
தப்புகள் அகல வில்லை
தட்டுங்கை யோசைக் காகத்
தடபுடல் மேடைப் பேச்சு
மட்டுந்தான் காணு கின்றோம்
மற்றவர் வீட்டிற் காணோம்.

எத்தனைப் பெண்கள் தாமே
சாவினை ஏற்றுக் கொண்டார்!
எத்தனைப் பெண்கள் வாழ்வில்
இடறிவீழ்ந் துழலு கின்றார்!
இத்தனைக் கொடுமை கண்டும்
இரக்கமே தோன்ற வில்லை!
பித்தளை வெள்ளி தங்கம்
கற்பினிற் பேசு கின்றான்!

கற்பினிற் *மாற்றுக் காணுங்
கண்கள் தாம் எவனுக் குண்டு?
பற்பல தீமை பெல்லாம்
பல்கிடச் செய்தான் யாவன்?
பொற்பினர் வாழ்வை யிங்கும்
பொசுங்கிடச் செய்தான் யாவன்?
கற்படு மனத்தன் காசைக்
கருதினன் அதனா லன்றோ?

பெண்களை **அழுக வைத்தான்;
பெரும்பொருள் காணாப் பெற்றோர்
கண்களை அழவும் வைத்தான்
காசுக்கே அடிமை யானான்;

*மாற்று - உயழ்வுதாழ்வு. **அழுக - கெட

மண்ணுறும் மகளிர் வாழ்வை
மதிப்புரை செய்வ தற்குக்
கண்ணிலான் இவனுக் கெந்தக்
கயவனிங் குரிமை தந்தான்?

அழுகையில் மகளிர் வாழ்க்கை
ஆழ்ந்தினிப் போகா வண்ணம்
பழிபடக் குமுகா யத்தைப்
பாழ்ங்குழி தள்ளா வண்ணம்
எழில்பெறச் செய்ய வேண்டின்
இரக்கமே யில்லா மாக்கள்
இழிவினை அகற்ற வேண்டும்.
இளைஞரும் விழித்தல் வேண்டும்.

## 29

# படிப்பும் நடப்பும்

படைத்துவைத்த நீதிகளுக் கேதடா பஞ்சம்?
படித்தவன்தான் நாணமின்றிச் செய்கிறான் வஞ்சம்
கொடுத்துவைத்த பொருளிருந்தும் ஏனடா பஞ்சம்?
குறுக்குவழி நடப்பதனால் என்னடா மிஞ்சும்?

நடுநிலைமை கொண்டுநட வாழ்க்கையி லென்றார்
நடைவழியில் ஓரமறிந் தேகிடச் சொன்னார்
கெடுவழியே நாடுபவன் மாறி நடந்தான்
கீழ்மகனாய் நல்வழியை மீறி நடந்தான்

பிறர்பொருளைத் தன்பொருள்போற் போற்ற மொழிந்தார்
பேதையிவன் அப்பொருளை மாற்ற நினைந்தான்
எவர்பொருளுந் தன்பொருளே என்று நடந்தான்
எதையுமிவன் ஏப்பமிட வாயைத் திறந்தான்

உள்ளமதில் மாசகற்ற ஓதி யறிந்தான்
உடல்தனையே தூய்மைசெய நாளும் முயன்றான்.
கள்ளவழி தானறிந்து செல்ல நினைந்தான்
கற்றதெலாம் காற்றில்விட உள்ளம் விழைந்தான்

தத்துவங்கள் வித்தகங்ள் கூட்டி யெடுத்தான்
தான்படித்த வித்தைகளைக் காட்டி முடித்தான்
புத்தகங்கள் அத்தனையும் வீசி யெறிந்தான்
புன்மைகளைத் தான்பிடித்தே வாழ நினைந்தான்.

# 30

## ஈழம் சிவந்தது.

பூணுநல் லுரிமை வேண்டிப்
 போரிடும் ஈழ நாட்டீர்
பேணுநர் இன்றி நீவிர்
 பேதுறும் நிலைமை கேட்டேன்
*வாணுனி கொண்டென் னெஞ்சை
 வகிர்ந்தது வகிர்ந்த தந்தோ!
கோணிய கொடுங்கோ லாட்சி
 குலையும்நாள் தொலைவில் இல்லை.

சுடும்படி தூண்டி விட்டுச்
 சூழ்ச்சிகள் பலவும் பேசும்
கொடுஞ்செய வர்த்த னேக்குக்
 கோலொன்று கிடைத்த தாலே
இடும்பிணக் காடா மென்ன
 ஈழத்தை யாக்கி நின்று
கடும்புலி வாழுங் காடு
 நன்றெனக் காட்டி விட்டான்.

தொட்டிலிற் றுயின்ற பிள்ளை
 தோள்களிற் கிடந்த பிள்ளை
முட்டிய வயிற்றுப் பிள்ளை
 முதுமையிற் றளருந் தாயர்

*வாணுனி - வாள் நுனி

கட்டிய தாலி தொங்குங்
கழுத்தினர் இளையர் என்னா
தெட்டிய மட்டுங் கொன்றார்
இழிந்தசிங் களத்து மாக்கள்

ஆவணத் தெருவிற் கொள்ளை
அளியவர் மனையிற் கொள்ளை
காவலர் திருட ரானாற்
களவுகள் நிற்ப தேது?
தாவரும் மாந்த ரில்லம்
தமிழர்தம் தொழிலார் கூடம்
யாவையுஞ் சாம்ப ராக
ஆணவத் தீயர் செய்தார்

பகலிலே கொள்ளை யிட்டார்
பதறிடக் கொலைகள் செய்தார்
தகவிலார் சிங்க ளத்தார்
தணிவிலா வெறிய ராகி
மகளிர்தங் கற்பைத் தின்று
விலங்கென மாறி நின்றார்
பகிர்ந்திடும் உரிமைக் காகப்
பாடெலாம் நீவிர் பெற்றீர்

நாடனெ எமக்கொன் றில்லேம்
நற்றமிழ் மாந்தர்க் குற்ற
கேடுகள் களைவ தற்குக்
கிளர்ந்தெழும் நிலையு மில்லேம்
வீடண ரிடையே வாழ்வேம்
வெந்துழல் மனத்த ராகிச்
சாடுத லன்றிக் கைகள்
தந்திட வழியே இல்லை

விடுதலைப் புலிக ளாகி
    வெந்துயர்க் குரிய ராகிக்
கெடுதலை எதிர்த்து நின்றீர்
    கிளர்ந்தெழும் நும்மைக் காக்க
உடலினால் உதவி செய்ய
    ஒருபடை எமக்கிங் கில்லை
தொடுமன வுணர்ச்சி யொன்றால்
    துணைவர்க ளாகி நிற்போம்

நம்மைநாம் உணர்வ தில்லை
    நமக்குளே பகைமை கொள்ளை
தும்மினால் வீழ்வார் கூடத்
    துரும்பென எண்ணி நம்மை
அம்மவோ தாக்கு கின்றார்
    ஆரிடம் போயு ரைப்போம்
நம்மின வுணர்வு தோன்றின்
    நரிகளா அரியைத் தாக்கும்?

எங்குள தமிழ னுக்கும்
    இடரொன்று நேர்ந்த தென்றால்
இங்குள தமிழ ரெல்லாம்
    எதிர்த்திட ஒன்றாய்க் கூடிப்
பொங்கிடின் நம்மைத் தாக்கும்
    கொம்பனும் புவியி லுண்டோ?
கங்குலிற் சிதறி விட்ட
    கருமணி யாகி விட்டோம்

சிதறிய நிலையர் தம்முட்
    சிந்தனை யுடைய நல்லோர்
பதறினர் இனத்தின் மானம்
    படைத்தவர் நொந்து நொந்து

கதறினர் ஊர்கள் தோறும்
　　கழறினர் உலகப் பற்றை
உதறிய துறவி தாமும்
　　போர்வெறி உடையரானார்

கதிரவன் வரவு காட்டக்
　　கடலிடைச் சிவத்தல் காணீர்
எதிர்வருங் கால மெல்லாம்
　　இடர்பகை இனிமே லில்லை
புதியநல் வாழ்க்கை யொன்று
　　பூத்தது தமிழர்க் கென்றே
அதிர்ந்தது முரச மெங்கும்
　　ஆர்த்தது வெற்றிச் சங்கம்.

## 31

# உலகம் சிவக்கும்

பிறப்பினால் உயர்வு தாழ்வு
பித்தினாற் பேசு கின்றார்
கருப்பினால் தோற்சி வப்பால்
பிளவுகள் காட்டு கின்றார்
பொறுக்குமா இன்னும் வையம்
என்றுளம் பொங்கி நின்றால்
தருக்கினாற் சாற்று கின்றார்
சாத்திரம் வகுத்த தென்றே

பொருளினால் உயர்ந்த வாழ்வு
பூமியிற் பெற்றா ருள்ளார்
தெருளிலா மதிய ராகித்
தெருவிடை வாழ்வா ருள்ளார்
இருளிலே சிலரும் மிக்க
ஒளியிலே சிலரும் இங்கே
விரிவதேன்? முறையா என்றால்
கடவுளின் விதியா மென்பார்.

பொறுப்பிலார் பேசு கின்ற
பொய்ம்மலி சாத்தி ரத்தை,
வெறுப்புகள் விளையா வண்ணம்
மறைத்திடும் விதியை, உண்மைக்
கருத்திலார் கழறி நிற்கும்
கற்பனைக் கடவுள் தம்மை
நொறுக்கினால் அன்றி நாட்டின்
நோய்களே நீங்கா இங்கே.

கடவுளும் விதியும் மற்றைச்
சாத்திரக் கசடு யாவும்
மடமையுள் வீழ்த்து தற்கும்
மக்களைச் சாய்ப்ப தற்கும்
உடந்தையென் றாகு மானால்
உலகினர் அவற்றை யெல்லாம்
கடலினுள் வீசி விட்டு
வழியொன்று காணல் வேண்டும்.

தலைவிதி யென்று நம்பி
முயற்சியில் தாழ்ந்து போனார்
சிலைகளைக் கடவு ளாக்கிச்
சீரெலாம் சிதைந்து போனார்
கலையெனச் சாத்தி ரத்தைக்
கருதியே கவிழ்ந்து போனார்
நிலைமிகத் தாழ்ந்த பின்னும்
அவற்றையேன் நினைக்க வேண்டும்?

உலகினை உயர்த்து தற்கே
உழைப்பவர் தாழ்ந்தோர் ஆனார்
பலருடைய உழைப்பை யுண்டு
பருத்தவர் உயர்ந்தோர் ஆனார்
நலமெலாந் தமதே ஆக்க
நாடுவோர் ஏய்க்கும் நாள்கள்
நிலவுதல் இனிமே லில்லை
நிமிர்ந்தனர் தாழ்ந்தோ ரெல்லாம்.

பிறப்பினாற் பொருளால் ஆன
பிரிவுகள் தொலைக்கும் நல்ல
அறத்தினால் வளரும் நாடே
அடிமைகள் இல்லா நாடாம்

திறந்தினாற் பொதுமை காணத்
திறந்தனர் விழியை மக்கள்;
கரப்பினார் சொல்லும் எந்தக்
கதையையும் நம்ப மாட்டார்

பொறுத்தது போது மென்றே
பொங்கியே எழுந்து விட்டார்;
கருத்தினில் தெளிவு பெற்றார்
கண்களில் ஒளியும் பெற்றார்;
மறுப்பவர் பழைய பாட்டை
மன்றிடைப் படிக்க வந்தால்
ஒறுத்திட அஞ்ச மாட்டார்
உலகமே சிவப்பாய் மாறும்.

தெய்வத்தின் குரல்தான் என்றால்
தீயிட்டு வேள்வி செய்வர்
பொய்வைத்த புளுகு மூட்டைப்
புராணத்தைச் சான்று காட்டின்
நெய்வைத்து நெருப்பு மூட்டித்
தூள்பட நீறு செய்வர்
மைவைத்த நெஞ்ச மெல்லாம்
மண்ணொடு மண்ணாய்ப் போகும்
எத்தனை நாள்கள் ஏய்ப்பர்?
ஏய்ப்பரை நம்பி வந்தோர்
எத்தனை நாள்பொ றுப்பர்,
இருளிடை உழன்ற மக்கள்,
புத்தொளிப் பொதுமை காட்டிப்
புறப்படுங் கதிரைக் கண்டார்;
இத்தரை முழுதுஞ் செம்மை
எழில்நிறங் கொண்டு தோன்றும்.

## 32
# தேவ தாசி

நரதசுரம் எனுங்கருவி நற்றமிழர்
கண்டதனை நாடு மெச்ச
ஊதுவதில் வல்லோரை உயர்ந்தஇசை
வேளாளர் என்று ரைப்பர்,
வேதசுரர் இதுகண்டு வியர்க்கின்றார்
வெறுக்கின்றார்; மேள காரர்
ஈதொன்றே அவ்வினத்துக் கேற்றபெயர்
மாற்றுவதேன்? என்றுஞ் சொன்னார்

முப்புரியார் பிரமன்றன் முகத்துதித்தார்
வேதபுரி முதல்வ ரானார்
இப்படியேன் சொலல்வேண்டும்? இவர்க்கென்ன
இடையூறு? சாதி யெல்லாம்
அப்படியே அமைத்திடவும் அவரினத்தை
உயர்த்திடவும் ஆசை கொண்டு
தப்புரைகள் உரைப்பவரைத் தாள்வணங்கி
வாழ்த்துவதா தமிழன் பண்பு?

சாமியெனும் பெயராலே தமிழினத்துப்
பெண்களுக்குப் பொட்டுக் கட்டிக்
காமுகர்கள் துய்ப்பதற்குக் கருணைமொழி
புகல்கின்றார் காஞ்சிப் பீடம்;

பூமியிலே மீண்டுமதைப் புதுப்பிக்க
முயல்கின்றார் பூணூல் மார்பர்;
காமுகர்க்குத் தூதுசெலக் கடைவழியில்
நிற்கின்றார் கடவுள் தூதர்.

'பரத்தைமையை நாடாதீர் பரத்தினையே
நாடுங்கள் பாவஞ் செய்யேல்
அறச்செயலே செய்க'வென அறிவுரைகள்
ஆற்றாமல் அதைவி டுத்துப்
பரத்தைமைக்குக் கடைதிறப்புச் செய்கின்றார்;
பாழ்நரகிற் பதிவு செய்யப்
புறப்படவே விருப்பமெனில் போகட்டும்
நாமவர்க்குப் புகல்வ தென்ன?

கடவுளையும் மனறகளையும் கட்டுரைத்த
கதைகளையுங் காட்டிக் காட்டி
மடமையிலே வீழ்த்திஎமை மாட்டினத்திற்
கீழாக மதித்து வந்தீர்
தடமனத்தேம் நீர்விரித்த தந்திரங்கள்
தெரியாமல் தாழ்ந்து கெட்டோம்
எடுபிடிகள் எனஇனியும் எமைக்கருதின்
எரிமலைகள் வெடிக்கக் காண்பீர்.

தருப்பைப்புல் மந்திரங்கள் தகுதியிலாச்
சாத்திரங்கள் தமிழர் நெஞ்சில்
வெறுப்பைத்தான் வளர்த்ததலால் வேறொன்றும்
செய்யவில்லை; மீண்டும் அந்த
நெருப்பைத்தான் வெடிக்கிடங்கிற் கொட்டுகிறீர்
விளைவென்னாம்? நினைத்துப் பாரும்
பொறுப்புணர்ந்தா பேசுகிறீர் பூசுரரே
பொறுமைக்கும் எல்லை யுண்டு.

நிமிர்குடுமிப் பூதேவர் எனச்சொல்லி
        நரிச்செயல்கள் நிகழ்த்தும் கூட்டம்,
திமிர்பிடித்துப் பணம்படைத்துத் திரிகின்ற
        மனிதவுருத் திமிங்கி லங்கள்
எமதினத்தைப் பாழ்படுத்த இழிதேவ
        தாசிமுறை வேண்டு மென்று
நமநமத்துத் திரிகின்றார் நல்லதொரு
        புண்ணியமாம் நவிலு கின்றார்.

ஆண்டவற்குச் செய்கின்ற புண்ணியமென்
        றறைகின்ற ஆரி யத்தீர்
பூண்ட எழில் நிறைநல்லார் புதுநடனக்
        கலைவல்லார் புண்ணியத்தை
வேண்டுகிற உமதினத்திற் பலருண்டே
        அத்தகுநல் விறலி யர்க்குப்
பூண்டுகொளப் பொட்டொன்று கட்டிவிடும்
        புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளும்.

நாலுமுகன் திருமுகத்திற் பிறந்தவன்றான்
        இவ்வண்ணம் நவிலு கின்றான்
மூலமகன் தொடைப்பிறந்த மூடனுமா
        அவ்வண்ணம் மொழிய வேண்டும்?
ஏலமிட மானத்தை எண்ணுகிறான்
        இழிமகனாய் எதிரி நீட்டும்
காலதனைக் கழுவுகிறான் கடைத்தெருலில்
        நாயானான் கயவன் ஆனான்

கவருமெழில் கண்டுமனங் கலங்கியதால்
        மயங்கியதால் கயவ னான
இவனனைய மடையர்சிலர் இனுமிங்கே
        இருப்பதனால் மீண்டும் மீண்டும்

தவறுபல செய்கின்றார்; தன்மான
இனவுணர்வு தழைத்து விட்டால்
எவர்வருவார் நமைப்பழிக்க? இடுப்பொடிந்து
போகாரே எதுவுஞ் சொன்னால்?

அவ்வினத்தின் அரவணைப்புக் காசையுடன்
அலைகின்றான் அதனால் தன்னை
எவ்விலைக்கும் விற்கின்றான் எதுசெய்தும்
வாழ்கின்றான் இனத்தின் மானம்
தெவ்வரிடம் பறிபோ கத் திரிகின்றான்
தன்னலமே தேடு கின்றான்
இவ்வகையான் உடன்பிறந்த நோயானான்
எதிரிக்குப் பாயும் ஆனான்.

## 33
## முளையிலே கிள்ளுக

தெருவிடையே நடக்குங்கால் திரிதருமோர்
எருமையெனத் திமிர்ந்து செல்வான்
வருமொருவன் எதிர்ப்படினும் வழிவிலகும்
உணர்வின்றி மதர்த்துச் செல்வான்
குருடனென நடுவழியிற் குறிவைத்துப்
பித்தன்போற் குறுகிச் செல்வான்
இருபுறமுஞ் சிறுமகன்போல் எதையெதையோ
நோக்கிடுவான் எதிரில் நோக்கான்

ஊர்திஎதிர் வரும்பொழுதும் ஊதுவதுங்
கேளானாய் ஊர்ந்து செல்வான்
நேர்வருவோர் நேரிழையார் எனினுமவன்
விலகாது நெருங்கிச் செல்வான்
தேர்வரும்நாள் எனவுரைத்தால் தீயனுக்கே
வருகின்ற திருநா ளாகும்
தீர்வறியாக் கொடுமைகளைத் திருநாட்டில்
யார்வருவார் திருத்து தற்கு?

தந்தையொடு சென்றாலும் தங்கொழுநர்
உடன்செலினும் தைய லர்க்கிங்
கெந்தவொரு காப்புக்கும் இடமில்லை
ஏதேதோ நேரும் தொல்லை;

வந்தவொரு சுதந்திரத்தை வாலிபர்கள்
நுகர்கின்ற வகைதான் என்னே!
இந்தவழி ஏகிடத்தான் என்னவழி?
சட்டங்கள் ஏதுஞ் செய்யா.

மிதிவண்டி ஏறுபவன் மிடுக்கோடு
செல்கின்ற வேகங் காணின்
கதிகலங்கும்; முன்னோக்கான் கன்னியரின்
பின்னோக்கிக் கண்செ லுத்தும்
எதிர்வருவோர் மேல்மோதும் ஏகுகிற
வழிவிலகி எங்கோ செல்லும்;
மிதியடிதான் இச்செயலை வீழ்த்துமலால்
சட்டங்கள் வேலை செய்யா.

முச்சந்தி நாற்சந்தி முடுக்குகளிற்
கூடுகிற முரட்டுக் காளை
எச்சந்தில் எந்நேரம் எவர்வருவார்
எனநோக்கி எக்க ளித்தே
அச்சங்கள் இல்லாமல் அவர்தம்மை
எள்ளிநகைத் தாடல் கண்டோம்
இச்செயல்கள் கசையடியால் ஏகுமலால்
வேறொன்றால் ஏக மாட்டா.

பள்ளிசெலும் சிறுமியரைப் பகற்பொழுதில்
இளைஞரினம் பகடி பேசி
எள்ளிநகை செய்கின்றார் இதுகண்டு
பெற்றோரும் இருக்கின் றாரே!
பிள்ளைகளைப் பேணாது பெற்றவரும்
இருந்துவிடின் பீழை யன்றோ?
முள்ளுமரம் முற்றாது முளையிலதைக்
கிள்ளுவதே முதன்மை வேலை.

பிஞ்சுகளைப் பேணுவதும் பிழைசெய்யின்
 கடிவதுவும் பெற்ற வர்க்கே
எஞ்சலிலாக் கடனாகும் எமக்கென்ன
 என்றவர்தாம் இருப்ப ரானால்
மிஞ்சுவது தீமையன்றோ? மேன்மைநிலை
 விளைந்திடுமோ? வீணிற் பெற்றுக்
கொஞ்சுவது போதாது குடிமக்கள்
 ஆக்குவதும் கொள்கை யாகும்

கோதுக்குட் போகாமல் குமுகாயம்
 மேலோங்கும் குறிக்கோள் கொண்டு,
சாதிக்கோ உறவுக்கோ சார்ந்திருக்குங்
 கட்சிக்கோ தாழ்த லின்றி,
நீதிக்கு மதிப்பளிப்போர் நேர்மைக்கு
 வழிவகுப்போர் நெஞ்சம் உள்ளோர்
வீதிக்கு வீதியொரு குழுவமைத்து
 முயலுவரேல் விளைவு நன்றாம்.

## 34

# ஒப்பனை மகளிர்

அழகெனுமோர் சொல்லுக்கே அமைந்தபொருள்
    மங்கையர்தாம் எனினும் அன்னார்
*இழைமணியால் பொன்னகையால் எழில்மலரால்
    முகப்பொடியால் இடையிற் கட்டும்
**இழைதெரியும் மெல்லுடையால் விரல்நகத்தின்
    ஒதுக்குவதா சீர்தத் பண்பு
கள்ளாலே மயங்குதல்போற் கன்னியர்கள்
    சாயத்தால் இதழின் பூச்சால்
***குழைவகையால் சிறுகச்சால் கூடிவரும்
    எழில்காணக் கோலஞ் செய்வர்.

ஒப்பனைகள் பலசெய்தும் உருவத்தை
    அழகுறுத்தல் உலகி யற்கை;
அப்பணியில் தலைசிறந்தார் அரிவையர்தாம்
    தனித்தன்மை அவர்க்கே யாகும்;
அப்பப்ப! ஆனாலும் அவர்செய்யுங்
    கோலங்கள் ஆள்ம யக்கும்
தப்பினையே செய்துவிடும்; தவறுகளைச்
    சுட்டுதற்குத் தயங்கு கின்றேன்.

தயக்கத்தால் கூச்சத்தால் தவறுகளைக்
    கண்டிக்கத் தவறி விட்டால்
மயக்கத்தால் உழல்கின்ற மதியில்லார்
    கூட்டத்துள் வாழ்வேன் ஆவேன்;

---
*இழைத்துச் செய்யப்பட்ட **நூல் ***காதணி

நயத்தைத்தான் அவர்மனத்தில் விதைக்கத்தான்
    நாடுகிறேன்; நாணம் ஒன்றை
நயக்கத்தான் நவில்கின்றேன்; *நல்லாராய்
    வாழ்வதைத்தான் நயந்து சொல்வேன்

உள்ளாடை தெரியும்வணம் உடுத்துவதா
    நாகரிகம்? உடலிற் பாதி
**தெள்ளாகத் தெரியும்வகை சீலைகளை
    ஒதுக்குவதா சீர்த்த பண்பு
கள்ளாலே மயங்குதல்போற் கன்னியர்கள்
    இடைவயிறு காணும் வண்ணம்
தள்ளாடிச் சரிந்துவிழத் ***தானைகளைத்
    தளர்த்துவதா தாய்மைப் பண்பு?

பவளஇதழ் உடையரெனும் பாவையர்தாம்
    கற்றாளைப் பழத்தின் சாயம்
தவழஅதிற் றடவிடுவர்; தளிர்விரலில்
    வளர்நகத்தில் தகத கக்கும்
‡சிவலைநிறம் பூசிடுவர்; செம்முகத்தில்
    வெண்பொடியைத் தேய்த்து வைப்பர்;
அவரவர்தம் நிலைக்கேற்ப ஆடையெனச்
    சிறுதுணியை †அசைத்து நிற்பர்.

கடைச்சரக்கால் உடலழகு காண்பவர்க்குத்
    தெரிவுறவே கட்டி விட்டுக்
கடைத்தெருவில் திரிவதுவா கன்னியர்க்கு
    முன்னேற்றம்? கலைகள் யாவும்
படிப்பதிலே நூல்பலவும் படைப்பதிலே
    இல்லறத்துப் பாங்கு கற்று
நடப்பதிலே உயர்பதவி தொடுப்பதிலே
    முன்னேற்றம் நாட வேண்டும்.

---

*நல்லவராக பெண்ணாக **தெயிவாக ***ஆடை ‡சிவப்பு நிறம் †கட்டி

தோற்றத்தால் நடையுடையால் தொழத்தக்க
நாகரிகம் தோகை யர்க்குச்
சாற்றத்தான் விழைகின்றேன் சால்புநெறி
கண்டறிந்து சார்தல் வேண்டும்;
ஏற்றத்தால் பெண்மகளிர் மாநாடு
கூட்டிடுவோர் இழிவைச் சற்றே
மாற்றத்தாம் முயல்வரெனில் மங்கையர்க்கு
நலமாகும் மாண்பும் ஆகும்.

சரிநிகராய் வாழ்வதுதான் சரியெனவே
உடன்படலில் தாழ்ச்சி யில்லை
உரிமையெனும் பேர்சொல்லிப் பெண்மையையே
உரிவதைநான் ஒப்ப வில்லை
கரிமனத்தர் விழிவழியே கனல்புகுத
ஒப்பனைகள் காட்டி யெங்குத்
திரிவதுதான் உரிமையெனிற் சீறியதைச்
சாய்ப்பதுதான் எனது வேலை.

# 35
# திரையரங்க வீரம்

திரைப்படமா போர்க்களமா எனநினைக்கத்
தெருவெல்லாந் திரளுங் கூட்டம்
நெருக்கடியிற் சிக்குண்டு நேரிழையார்
வதங்கிடினும் நிற்க மாட்டார்
நரைக்கிழவர் முதலாக நல்லஇளங்
குமரிவரை நாடி நிற்பார்
உருப்படஓர் வழியில்லை ஒழுக்கத்தைப்
புதைக்கின்றார் ஊரார் கூடி

வியர்வையினால் உடல்நனைய விலையுயர்ந்த
உடைகிழிய விரைந்து சென்று
வெயில்நடுவே மற்றவரை வீரமிகு
தோள்களினால் விலக்கித் தள்ளி
அயர்விலராய்க் கூட்டத்தின் அணியுடைத்துப்
புகுந்துவரும் ஆண்மை மாக்கள்
செயலெல்லாம் படம்பார்க்குஞ் சீட்டொன்றைப்
பெற்றிடத்தான்; வீரம் வாழ்க.

நாணத்தை மானத்தை நாகரிக
நங்கையர்கள் நல்ல வண்ணம்
பேணித்தம் பெண்மைக்கு மதிப்புவர
நடப்பதுதான் பெருமை யாகும்;

காணச்செல் திரையரங்கில் கன்னியர்தம்
நடைமுறையுங் கைக லப்பும்
காணக்கண் கூசுமவர் வாய்மொழிகள்
கேட்பதற்குக் காது கூசும்.

மகளிர்க்கு வீரமிலை எனவுரைத்தால்
மடமாகும்; மாளி கைக்குள்
புகுதற்குள் அவர்புரியும் போர்முறைகள்
பார்த்தபினர்ப் புகலல் செய்யார்;
வெகுளிக்கே இலக்காகி மேலாடை
உடல்நழுவி விழுதல் காணார்
புகுவெற்றி கண்டதன்பின் போர்விடுப்பர்
பூவைமறம் பொலிந்து வாழ்க.

## 36

## மனித மந்தை

ஒருவழியிற் போவென்றால் வரும்வழியிற்
புகுகின்றான்; ஓரஞ் சென்று
தெருவழியில் நடவென்றால் தெளிவில்லான்
நடுவழியிற் றிரிகின் றானே;
ஒருவழியுந் தேறானாய் உயர்வழியும்
அறியானாய் ஓடு கின்றான்;
மருள்வழியே செல்கின்றான் வழிவிலகிப்
போகின்றான் மதியுங் கெட்டான்

ஊர்திகளில் ஏறிவிடின் உரிமையவன்
பெற்றதுபோல் ஒதுங்க மாட்டான்
யார்வரினும் இடமில்லை அப்பக்கஞ்
செல்கவென அறிவுஞ் சொல்வான்;
நேர்மையுளான் போற்பேசும்; நிற்பவர்க்கும்
இடங்கொடுக்க நெகிழா துள்ளம்;
போர்புரிவான் எவரேனும் புகுந்துவிடின்;
பொதுநலமே போற்ற மாட்டான்.

உந்துகளில் ஏறுங்கால் ஒருபெரிய
சமர்விளைப்பான் ஒழுங்கு போற்றான்;
வந்தமர்ந்து வெற்றிலையை மடித்தெடுத்துக்
குதப்புமவன் வழியில் துப்பி

அந்தவழி ஏகிடுவார் ஆடைகளைச்
 செந்துளியால் அழகு செய்வான்
இந்தஒரு மடையனுக்கு மந்தையிலே
 திரிவதலால் இங்கென் வேலை?

ஒதுங்குகிற இடமிருந்தும் உணர்வுடைய
 மனிதனவன் ஒதுங்க மாட்டான்
மதம்படுவான் கூச்சமிலா மாடுகள்போல்
 நடமாடும் வழியி லெல்லாம்
ஒதுங்குகிறான்; பகுத்தறியும் உணர்வில்லா
 உடலானுக் குடைய தற்கு?
வதங்கிடுமா இவன்மேனி? வழிவிலகிப்
 பழகியவன் மாறான் போலும்?

# மனிதனைத் தேடுகிறேன்

# மனிதனைத் தேடுகிறேன்

## பொழுது புலரட்டும்

மக்கள், எண்ணிக்கையில் பெருகினர். பண்பாட்டில் அருகினர். உருவத்தாற் பொலிவு பெற்றனர்; உள்ளத்தால் நலிவு பெற்றுள்ளனர் உருவமும் உறுப்புகளும் வலிவும் பொலிவும் பெற்று விளங்குவதால் மட்டும் மக்கள் என்னும் பெயர் வாய்த்துவிடுவ தில்லை. உள்ளத்தால்- உயரிய பண்பால்-ஒழுகும் நெறியால் மக்கள் என்று சான்றோரால் அழைக்கப் பெறுவர். "உயர்திணை என்மனார் மக்கட் கட்டே" என்றுதான் தொல் காப்பியம் பேசுகிறது.

இன்றைய உலகில். அரசியலாயினும் சரி, ஆலயம் ஆயினும் சரி. கல்வி நிலைமாயினும் சரி, கடைத்தெருவாயினும் சரி-எதனை நோக்கினும் துறைதோறும் துறை தோறும் பண்பாடு குறைந்து வருகிறது. நல்லவர் உள்ளம் எலாம் நலிந்துருகும் வண்ணம் தீமைகள் மலிந்துவிட்டன. பண்பாட்டுக் குறைவு ஒரு நாகரிக மாகவே மாறி வருகிறது. ஆடவராயினும் மகளிராயினும். சிறியராயினும் பெரியராயினும், கற்றாராயினும் கல்லாராயினும், எவராயினும், விதிவிலக்கின்றி எவர்மாட்டும் இக்குறைபாடு இரண்டறக் கலந்து பரவி நிற்கிறது. 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்' என்று புலம்ப வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இந்நிலை குலைவிற்குப் பலப்பல கரணியங்கள் இருப்பினும் நாம் சிறிதுங் கவலை கொள்ளாது மக்களைப் பெருக்கி வருவதும் ஒரு தலையாய கரணியமாகும். மக்கட் பெருக்கமே பண்பாடு குன்றுவதற்கு அடிப்படைக் கரணியமாகும் என்பது என் எண்ணம். பெருகிவரும் மக்களுக்கேற்பப் பொருட் பெருக்கம் ஏற்படவில்லை, அப்பெருந்தொகையினர் வாழ்ந்தாகவேண்டும்.

எதைச் செய்தேனும் எப்படியேனும் வாழ்ந்து தீரவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிவிட்டனர். அதனால் பொருள் ஒன்றுதான் குறிக்கோளே தவிர அது வரும் வழியைப் பற்றி அக்கறை கொள்ளவோ சிந்திக்கவோ அவர்களுக்கு நேரமில்லை.

ஆகவே பண்பாடு பற்றிக் கவலைப்படாமல், நாடோறும் மக்களைப் பெருக்கிக் கொண்டேயிருக்கும் குமுகாயம், கண்ணை மூடிக்கொண்டுதான் பயணம் செய்து கொண்டிருக்கிறது, பயணஞ் செய்யும் வழியில் ஆழங்காண இயலாத பெரும்பள்ளம் இருப்பதை உணர்ந்தோர் சிவப்பு விளக்கைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனினும் விழித்துப் பார்க்காமல் வேகமாக நடைபோட்டுக் கொண்டுதான் செல்கிறது குமுகாயம். என்று விழிக்குமோ தெரியவில்லை!

பண்பாட்டை ஓர் ஏளனப் பொருளாகக் கருதிப் புறக்கணித்து விட்டு, மக்கள் நடந்து செல்வதைக் காணுந்தொறும் மனம் வருந்தி உருகுவதுண்டு. மக்களின் தவறான போக்கு, என் நெஞ்சத்தில் அழுத்திக் கொண்டேயிருக்கும். வாய்ப்பு நேரும் போதெல்லாம் அவ்வழுத்தத்தால் ஏற்பட்ட வேதனைகளை வெளிப்படுத்துவதுண்டு. அதனை என் கடமையாகவே ஏற்றுள்ளேன். "கவிதை என் கைவாள்" என்று கவிஞர் ஒருவர் கூறியதை அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு. குமுகாயக் குறைகளை - தீமைகளை - கொடுமைகளை எதிர்க்க அக்கைவாளைப் பயன்படுத்தி வருகிறேன்.

இவ்வாறு பாடுவதனால் குறைகள் தீர்ந்து. தீமைகள் மடிந்து, நன்மைகள் வளர்ந்து, குமுகாயம் நல்லதோர் மலர்ச்சி பெற்றுவிடுமா? கருதிய வெற்றி கைகூடுமா? என்று வினவலாம். வெற்றி தோல்வி யைப் பற்றிக்கவலை கொள்ளாமல், எதற்கும் அஞ்சாமல், துணிவொன்றையே அடிப்படையாகக் கொண்டு, போராடுவது தான் உண்மையான போர் வீரனுடைய கடமையாகும். அதே கடமை உணர்வுடன்தான் என் கைவாள் சுழல்கிறது. கோழி கூவியா பொழுது விடிகிறது என்பர். அது கூவுவதால் விடிகிறதோ இல்லையோ அதற்காகக் கோழி கூவாமல் இருப்பதில்லை. விடியும் பொழுது விடியட்டும், மக்கள் விழிக்கும் போது விழிக்கட்டும்.

அன்பன்
முடியரசன்

## காணிக்கை

தமிழ்மொழியின் விடுதலை
சமுதாயச் சீர்திருத்தம்
சமைய மறுமலர்ச்சி

**இம்முத்துறையிலும் அயராதுழைத்து வரும்**

*திருப்பெருந்திரு*

**குன்றக்குடி அடிகளார்**

*அவர்களுக்கு*

*இந்நூலைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்*

***-முடியரசன்***

**1**

# நந்தா விளக்கே!

### நிலைமண்டில ஆசிரியப்பா

செந்தமிழ் மொழியே சீர்சால் விளக்கே!
முந்திய மொழியே முழுமையின் ஒளியே!
கற்றோர் நெஞ்சங் களிக்கும் வகையில்
ஞான ஒளியினை நல்கிடும் விளக்கே!
வறுமையும் இடரும் *வட்கார் பகையும்
உறுமிடி புயலென உருத்தெழு நிலையிலும்
என்னுள் நின்றொளி எழிலுற விளங்கிட
நண்ணும் என்னுயிர் நத்தா விளக்கே
ஆய்தொறும் ஆய்தொறும் அரும்பொருள் நல்கலில்
ஓய்தல் இல்லா உயர்கொடை விளக்கே!
பலபல மொழிகள் பரந்திவண் தோன்றினும்
உலகில் நிகரிலா தோங்குவான் விளக்கே!
நையும் நிலையிலும் நான்களி கொள்ள
உய்யும் வழிதரும் பொய்யா விளக்கே!
காற்றும் மழையுங் கடுகிய போதும்
ஏற்றிய உனக்கோர் இடையூ றின்றிப்
போற்றுதல் கடனெனப் பூண்டுளேன் நோன்பு;
தணியா உழைப்புந், தக்கோர் உறவும்,

---

*வட்கார் - பகைவர்

துணிவுடன் என்னுள் தோன்றுநல் லார்வமும்
முப்புரித் திரியென மொய்ம்புடன் ஏற்றி
எப்பொழு தும்நினை ஏத்துதல் உடையேன்;
உணர்வெனும் நெய்யில் ஊறிய யாப்பில்
புணரணி ஏற்றிப் பொருள்தெரி வகையால்
உலகம் அனைத்துநின் ஒளியினைப் பரப்பக்
குலவும் நினைவே கொண்டுளேன் அதனால்
செய்யும் பணிகள் செல்விதன் இலங்கிடக்
கைகுவித் தேத்தினேன் காத்தருள் தாயே!

**2**

# மனிதனைத் தேடுகிறேன்....

### எண்சீர் விருத்தம்

மானுடத்தை உலகெங்குந் தேடித் தேடி
மனமயங்கிச் சோர்வுற்றுத் தளர்ந்தே னன்றி
நானெடுத்த முயற்சியிலே வெற்றி காணேன்;
நடுத்தெருவில் பகற்பொழுதில் விளக்கெ டுத்தே
ஊனொடுக்கங் கொண்டவுடற் கிழவர் ஓர்நாள்
ஒவ்வொருவர் முகம்பார்த்துஞ் சலிப்புக் கொண்டு
மானுடத்தைக் காணவிலை என்ற யர்ந்த
மதிமிகுந்த கதையைத்தான் நினைவிற் கொண்டேன்.

அணுவெடுத்தான் பிளந்துடைத்தான் அதனைக் கண்டேன்
அடடாஓ! எனவியந்தேன்; அறிவால் பெற்ற
துணிவெடுத்தே அண்டத்தைத் தூள்தூள் ஆக்கத்
தொடங்கிவிட்டான் அன்பினையே உடைத்து விட்டான்
கணுவடுத்த மூங்கில்மரம் தான்பி றந்த
காட்டகத்தை எரிப்பதுபோல் ஆகி விட்டான்
பிணமடுத்த காடாக உலகை யாக்கும்
பேதைமைகண் டையோவென் றலறு கின்றேன்.

விண்மதியை மிதித்துவிட்டான் மானு டத்தின்
வெற்றியென மகிழ்ந்திருந்தேன் வியந்து நின்றேன்;
*ஒண்மதியை மிதித்துவிட்டான் மானு டத்தின்
ஒருதோல்வி எனத்தளர்ந்தேன் ஓய்ந்து நின்றேன்;

*ஒண்மதி - அறிவு

விண்வழியில் மிதந்துவந்தான் மானுடத்தின்
வெற்றியிது வெனமகிழ்ந்தேன் வீறுங் கொண்டேன்;
மண்வழியை மறந்துவிட்டான் மானு டத்தின்
மறுதோல்வி எனவீழ்ந்தேன் மயக்கங் கொண்டேன்.

வாழ்வென்னும் வழியதனிற் செல்லும் போது
வழுவாமல் நடுவில்தான் நடத்தல் வேண்டும்
பாழ்மனிதன் அதைமறந்தான் ஓரஞ் சென்றே
பழகிவிட்டான்; கடைத்தெருவில் ஏகுங் காலை
நீள்வழியின் ஓரத்தே நடத்தல் வேண்டும்
நெடுமனிதன் நடுவில்தான் செல்லு கின்றான்
சூழ்மதியன் எதுசெயினும் மாறு பட்டே
தொலைகின்றான் ஆறறிவிற் குறைந்தே போனான்.

துறவுநிலை தனைநோக்கின் மனந்தி றந்து
சொல்வதற்கோ வழியில்லை; வாணி கந்தான்
கரவுகளுக் கிருப்பிடமாம்; கல்விக் கூடம்
கட்டவிழப் பயில்களமாம்; கோவி லென்றால்
திருடர்களும் கயவர்களும் மறைந்து கொள்ளத்
தேர்ந்தெடுத்த குகையாகும்; மாக்கள் போல
அறநெறியை அறமறந்தார் வெறியுங் கொண்டார்
அதனைத்தான் மதமென்றும் விளம்பு கின்றார்.

நானெடுத்து மொழிந்தவெலாம் பொய்ம்மை யன்று;
நாட்டகத்தே இச்செயல்கள் மலியக் கண்டேன்
மானுடத்தைக் காண்பதெங்கே? பேசு கின்ற
மாவினத்தைக் காண்கின்றேன் யாது சொல்வேன்?
ஊனெடுத்த உடலாலோ உடலை மூடும்
உடையாலோ உணவாலோ ஊர்தி யாலோ
மானுடத்தின் நிலையெய்த இயலா தாகும்
மனப்பண்பு மிக்கவரே மக்க ளாவர்.

மற்றவர்தம் துன்பத்தைக் காணும் போது
மனமுருகி விரைந்தணுகி அதனை நீக்கக்
கற்றவனே கற்றவனாம்; உதவும் பண்பைக்
கல்லாதான் கல்விபல கற்றா னேனும்
முற்றியநல் மரம்போல்வான்; மரத்தில் ஒன்று
முரிந்தொடிந்து வீழ்ந்திடுமேல் நிற்கும் ஒன்று
மற்றதற்கு மனமிரங்கி உதவ லுண்டோ?
மானிடனும் அவ்வாறு நிற்றல் நன்றோ?

மற்றவர்க்கே உரியதனைக் கவர்வ தற்கு
மனத்தாலே நினைத்தாலும் கவர்ந்த தைப்போல்
குற்றமெனக் கருதுகின்ற உணர்வு வேண்டும்;
குறைவறியா அறநூல்கள் உரைத்த வற்றைக்
கற்றபடி கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்;
கற்றவர்கள், பெரியவர்கள், தந்தை தாயர்
சொற்றபடி நடக்கின்ற ஆர்வம் வேண்டும்;
தூய்மையிலே தோய்கின்ற நெஞ்சம் வேண்டும்,

சாதியினால் பதவியினால் சமயப் போக்கால்
தாழ்ந்தவரும் உயர்ந்தவரும் இல்லை யென்றே
ஓதுவதாற் பயனில்லை; உள்ளம் ஒன்றி
உடன்பிறப்பென் றனைவரையுஞ் சமமாக் கொண்டு
மேதினியில் வாழ்வதுதான் மானி டர்க்கு
மேன்மைதருஞ் செயலாகும் மேல்கீழ் எல்லாம்
வேதமொழி எனவந்தால் மக்கள் இங்கு
வேறாகி மாக்களென நீண்டு நிற்பர்.

கடமைசெயத் தயங்குகிறோம்; கண்ணி யத்தைக்
காற்றின்மிசைப் பறக்கவிட்டோம்; கட்டுப் பாட்டை
அடிமைநிலை எனக்கருதி உதறி விட்டோம்;
ஆதலினால் மானுடத்தைச் சீர ழித்தோம்;
கெடுவினையை விட்டொழித்தால் அருவ ருக்கும்
கீழ்மைதனைச் சுட்டெரித்தால், இருளில் வீழ்த்தும்
மடமையினைத் தகர்த்தெறிந்தால், மக்கட் பண்பை
மதித்திருந்தால் மானுடமே வெல்லும் வெல்லும்.

# 3

# அந்தோ அரசியலே!

### எண்சீர் விருத்தம்

ஒலிபெருக்கி முழங்கிற்றுச் சற்று நின்றேன்;
    உணர்ச்சிமிக்க பேச்சாளர் தமது நெஞ்சில்
வலிவிருக்கும் வரைகத்திப் பழித்துக் கூறி
    வாய்க்குவந்த படியெல்லாம் பொழிந்தார் மாரி;
அலிஎனத்தன் நிலைமறந்து மாறி மாறி
    அரசியலை விளையாட்டுக் களமாக் கொண்டார்;
பலிகொடுக்க ஏமாளிக் கூட்ட முண்டு
    பாவையென ஆட்டுகிறார் பகட்டுக் காரர்.

காலையிலே ஒன்றுரைப்பார் மாலை வந்தால்
    கட்சியினைக் கொள்கையினை மாற்றி நிற்பார்;
ஓலையிலே விழுந்தபுனல் போல அங்கும்
    ஒட்டாமல் ஓடிடுவார்; விடிந்த பின்னர்
காலையிலே சொன்னதுதான் உண்மை என்பார்;
    காசுக்குப் பாய்விரிக்கும் பெண்டிர் ஆனார்;
நூலறியார், அரசியலிற் கேடு செய்ய
    *நோய்நுண்மம் படர்ந்ததுபோல் படர்ந்து விட்டார்.

அறமுரைக்கும் பெருநூல்கள் நமது நாட்டில்
    ஆயிரங்கள் உண்டென்பர்; ஆனால் அந்த
அறமனைத்தும் நூல்களுக்குள் அடக்க மன்றி
    ஆறறிவு படைத்தவர்பால் அரும்ப வில்லை;

*நோய்நுண்மம் - நோய்க்கிருமி

திறமிகுந்த அரசியலைப் பாழ டித்தார்
    தீவினைகள் அடிதடிகள் சூது வஞ்சம்
உருவெடுத்து வரச்செய்தார்; தனிந லத்தை
    உயிர்ப்பிக்கும் நிலைக்களனாக் கொண்டு விட்டார்.

பட்டறிவும் நுண்மதியும் பொதுந லத்தைப்
    பரிவுடனே புரிகின்ற தூய நெஞ்சும்
எட்டுணையும் அஞ்சாத துணிவுங் கொண்டோர்
    எவர்அவரே அரசியலிற் புகுதல் வேண்டும்
பட்டம்விடுஞ் சிறுவர்களும், பள்ளி சென்று
    பயில்பவரும், குழப்பங்கள் விளைவிப் பாரும்,
கட்டவிழ்ந்த காளையரும் புகுந்து விட்டால்
    கலகமலால் மற்றென்ன விளையும் அங்கே?

நன்றெனினுந் தீதெனினுந் தமது செய்கை
    நாட்டைத்தான் சாருமென நினையா ராகித்
தின்றலையும் வாழ்வுக்கே அடிய ரானார்
    சிறிதேனும் நாட்டுணர்வும் இல்லா ரானார்;
ஒன்றுணர்வால் இணைந்ததுபோல் இணைந்தி ருப்பர்
    உள்ளத்தே நஞ்சதனை மறைத்தி ருப்பர்
கொன்றனைய செய்தற்கும் கூசா மாந்தர்
    *குய்யங்கள் அரசியலில் விளைத்து நிற்பர்.

எங்கெங்கும் வேலையில்லை. வாழ்வுக் காக
    ஏதொன்றும் வழியில்லை, பிழைக்க வேண்டி
அங்கங்கே அவரவர்தம் தகுதிக் கேற்ப
    அமைந்ததொரு வழியைத்தான் தேர்ந்து கொண்டார்;
இங்கிதனைத் தொண்டென்று சொல்லிக் கொள்வார்
    இதுதவிர வேறுபொருள் தெரியக் காணேன்
தங்குகிற நிழலாகத் தொண்டைக் கொண்டார்
    தன்னலத்தை வளர்க்கின்ற வயலாக் கொண்டார்.

*குய்யங்கள் - வஞ்சனைகள்

4

# அரசியல் அரங்கம்

நண்பரும் பகையாய் நலிவுகள் தரலாம்,
பகைவரும் நண்பாய்ப் பரிவுடன் வரலாம்
இருவரும் ஒருநாள் மாறலும் மாறலாம்,
அரசியல் மேடை உரைசெயும் பாடம்
ஈதென உணர்ந்தனம்; ஆதலின் அவர்தாம்
தீதெனப் பழித்தும் மேலென உயர்த்தும்
மேடையில் உரைப்பன மெய்ம்மைகள் ஆகா;
நாடக மொழியென நம்புதும் யாமே;
இனமொழி நாடென இயம்புவர் ஒருநாள்;
மனமொழி மாறி மயங்குவர் மறுநாள்;
தொண்டெனும் போர்வையில் தோன்றுவோர் பலராய்
மண்டித் திரிதலின் மக்களும் மயங்கினர்
மெய்ம்மையை மறைக்கும் பொய்ம்மைகள் பல்கலால்
பொய்யெது மெய்யெது புலப்படா தொழிந்தன;
அதனால்
ஒருவரை அளவின் றுயர்த்தலும் இலமே
ஒருவரை இகழ்தல் அதனினும் இலமே.

*16.4.1978*

**5**

# வண்ணமும் எண்ணமும்

செங்கதிரோன் கீழ்வானில் முகத்தைக் காட்டிச்
 செவ்வொளியால் உலகுக்கு வண்ணம் பூசிப்
பொங்கிவரும் பேரெழிலைப் படைக்கும் போது
 பொதியத்து மலைச்சரால் கண்டு நின்றேன்;
அங்கிருக்கும் அழகெல்லாம் விழியா லுண்டேன்
 அடடாஓ! அடடாஓ! என்று நெஞ்சம்
பொங்கியதாற் கவியானேன்; ஆடிப் பாடிப்
 புகலரிய இன்பத்தில் திளைத்து நின்றேன்.

கொடிவிரித்த மலர்கண்டேன் கிளையில் நீரில்
 குலவுகின்ற மலர்கண்டேன் தலைய சைத்துச்
செடிசிரிக்கும் மலர்கண்டேன் அவற்றி லெல்லாம்
 செப்பரிய வண்ணங்கள் சிந்தை யீர்க்கும்
படியிருக்கக் கண்டுகளி கொண்டேன்; காற்றில்
 பரவிவரும் நன்மணத்தில் ஒன்றி நின்றேன்;
செடிகொடியில் இதழ்விரித்த மலர்கள் தோறும்
 தேனீக்கள் படிந்தெழுந்து போதல் கண்டேன்.

இதழ்சுவைத்து நறவருந்தி விரைந்து சேர்க்கும்
 ஈகண்டேன் எழுத்தாளர் நினைவு கொண்டேன்;
கதவடைத்த கற்பனையைத் திறந்து புக்குக்
 கருத்துடனே சிந்தனையாம் மலர்தி ளைத்துப்

புதுமைமிகும் இலக்கியத்தேன் சேர்த்தல் ஒன்றே
பொறுப்புள்ள எழுத்தாளர் கடமை யாகும்;
இதழ்சுவைத்து மதுவருந்தித் திரிவோ ரெல்லாம்
எழுத்தாளர் அல்லரெனும் உண்மை கண்டேன்.

வண்டொன்று பாடிவரக் கண்டேன் அங்கு
வண்ணமலர்த் தேன்குடித்து மயங்கி இன்பம்
கண்டவுடன் அறிவிழந்து சோலை எங்கும்
கண்டகண்ட மலர்தோறும் மாறி மாறிக்
கொண்டிருந்து பண்பாடித் திரிதல் கண்டேன்;
குடிக்கின்ற எழுத்தாளர் கொள்கை மாறிக்
கண்டபடி பாடிவரும் இயல்பைக் காட்டிக்
களிவண்டு தனைமறந்து வீழ்ந்த தந்தோ!

எழுத்தாளர் எனச்சொல்லி நிலையே யின்றி
இன்றொன்றும் நேற்றொன்றும் குழப்பும் பாங்கில்
முழுத்தாளில் அச்சடித்து விற்போ ரெல்லாம்
முதன்மைபெறும் எழுத்தாளர் போல நின்று
கொழுத்தார்கள் நாட்டுக்குப் பயனே இல்லை;
கும்பிக்கும் புகழுக்கும் மொழியை நாட்டைப்
பழித்தார்கள் பிழைத்தார்கள் இவரால் நாடு
பாழாகும் விழிப்புணர்வு நமக்கு வேண்டும்;

அப்பாலோர் மரக்கிளையில் ஓந்தி கண்டேன்
அழகொழுகும் பச்சையொடு சிவப்பு மஞ்சள்
இப்பாலே கருவண்ணம் காட்டிக் காட்டி
இமைப்பினிலே நிறமாறும் விந்தை கண்டேன்;
அப்பாவி மக்களிடை மாறி மாறி
அரசியலில் நிறமாறும் மாந்தர் செய்கை
செப்பாமற் செப்புவதை நானு ணர்ந்தேன்
சிந்தையெலாம் மிகவுளைந்து திரும்பி விட்டேன்.

வண்ணங்கள் பலபூசிப் பகலோன் வானில்
வடிவழகு செய்கின்ற மாலை வேளை
எண்ணங்கள் சுழன்றாட நடந்து சென்றேன்;
இசைகலந்த சொன்மாரி பொழியக் கேட்டேன்;
வண்ணமிலான் வடிவமிலான் இறைவன் என்பர்
மங்கைக்குப் பங்களித்த கடவுள் மேனி
வண்ணத்திற் சரிபாதி கருப்பு, மற்றை
வடிவமெனும் ஒருபாதி சிவப்பாம்' என்றார்.
கருப்புநிறம் சிவப்புநிறம் கலந்த மேனிக்
கடவுளவன் தென்னாட்டுக் குரியன் என்றார்;
விருப்பமுடன் செவியேற்ற என்றன் சிந்தை
விடுதலையில் அரசியலில் விரைந்த தங்கே;
கருப்புடனே சிவப்புநிறம் கலந்து வானில்
காட்சிதரும் இருவண்ணக் கொடியே இங்கும்
பொறுப்புடனே தென்னாட்டுக் குரிய தாகும்
புகுந்தவையே பிறவெல்லாம் எனநி னைந்தேன்.

*எழுத்தாளர் மன்றம்*
*மதுரை*
***22.7.1962***

## 6

# நாடு உருப்படுமா?

நாட்டுக்கு நன்மைசெய நாடும் அரசியலைக்
கேட்டுக்கே ஆக்கிக் கிடைத்தவெலாஞ் சுற்றுகிற
தந்நலத்தை நாடும் தகவில்லாத் தன்மையரை
இந்நிலத்தே காணுங்கால் ஏங்கித் தவிக்கின்றேன்;
இங்கொன்றும் அங்கொன்றும் ஏற்ற படியுரைத்து
தங்கள் நலங்காக்கச் சண்டைகளை மூட்டிவிட்டும்
ஒட்டி யிருந்தாரை வெட்டிப் பிரித்துவிட்டும்
கிட்டும் பொருள்சுருட்டும் கீழ்மை நரிக்குணத்தர்,
நேற்றொன்றும் இன்றொன்றும் நேரியர்போல் பேசிவிட்டுக்
காற்றடிக்கும் பக்கம் கடிதோடிச் செல்பவர்கள்,
ஏழையர்தம் வாழ்வுக்கே இப்பிறவி கொண்டதுபோல்
வேளையெல்லாம் பொய்சொல்லி வேட்டை புரிபவர்கள்,
சாதி ஒழிப்பதெனச் சாற்றிவிட்டுத் தேர்தலுக்குத்
தேதி வரும்போது சாதிக்குக் காப்பளிப்போர்,
கூடி அரசியலைக் கொண்டு நடத்துவரேல்
நாடிங் குருப்படுமோ நன்கு?

***1.3.1970***

# 7
# தேர்தல் திருவிழா

(கலிவெண்பா)

தேர்தல் திருவிழா என்றிங்குச் செப்பிவைத்த
சீர்மை மிகநன்று; சீர்தூக்கிப் பார்த்திடுவோம்;
உள்ளூறும் அன்பால் உருகும் அடியவரும்
*அள்ளூறி நின்றிருப்பர் அந்தத் திருநாளில்;
உள்ளத்தில் வஞ்சம் ஒளித்தமைத்துச் செய்கின்ற
கள்ளத்தை யாருமே காணா வகைசெய்யப்
பூச்சால் மணியால் பொதிந்த திருமேனி
ஆச்சார சீலர் அவரும் அருகிருப்பர்;
தின்பண்டம் விற்போரும் செய்தசிறு பாவைகளை
முன்வந்து விற்போரும் மொய்த்தங்கு நிற்றலுண்டு;
ஆண்பாலர் பெண்பாலர் ஆடுஞ் சிறுபாலர்
காண்பார் பெரும்பாலோர் கைகளையும் பைகளையும்
கண்ணால் துருவுகின்ற கைவரிசைக் காரர்களும்
பின்னால் தொடர்ந்து பெரியவர்போல் நின்றிருப்பர்;
காதுகளும் நோவாமல் யாருமதைக் காணாமல்
மோதுகிற கத்திரியும் முன்னிற்கும்; அஃதேபோல்
நாட்டுக்குத் தொண்டுசெயும் நல்லெண்ணங் கொண்டோரும்
வேட்டிங்குத் தேர்தலிலே வேட்பாளர் ஆவதுண்டு;
நாளெல்லாம் ஊரார்பால் நம்பும் படிபேசி
வாழ்வெல்லாம் பொய்க்கின்ற வஞ்சம் தனைமறைக்கச்
சட்டைத் துணிமாற்றி தாயகத்தைக் காப்பனென

ஒட்டித் திரிகின்ற உத்தமரும் நிற்பதுண்டு;
வீரங்கள் பேசிவிட்டு வேட்பாள ராய்நின்று

*அள்ளூறி - மனமுருகி

பேரங்கள் பேசும் பெருமனிதர் தாமுமுண்டு;
விண்ணப்பந் தந்துவிட்டு வீட்டிற்குச் சென்றவுடன்
எண்ணத்தில் சூழ்ச்சிமுறை எத்துணையோ எண்ணியெண்ணி
எங்குப் பணங்கிடைக்கும் என்று தவங்கிடக்கும்
தங்கக் குணம்படைத்தோர் தாளுருவங் கண்டவுடன்
முன்வாங்கிக் கொண்டு முகமூடிச் சென்றுடனே
பின்வாங்கிப் போய்ப் பதுங்கும் பேதையருங் காண்பதுண்டு;
முன்னாளில் இந்நாட்டில் தேர்தல் நடந்ததுண்டு-
அந்நாளில் தென்னாட்டார் ஆக்கிவைத்த தேர்வுமுறை
எந்நாடுங் காணாத ஏற்றந் தருமுறையாம்
அன்னார் குடவோலை என்றே அதைச்சொல்வர்
தக்கர்யார் நிற்கத் தகுதியிலார் யாரென்றே
அக்கால மக்கள் அமைத்த விதியுண்டு;
கையூட்டுப் பெற்றார், களவாடல் செய்தவர்கள்,
பொய்ச்சான்று சொன்னோர் புகுந்தகுதி யில்லாரே
என்றுரைத்த சட்டத்தை இன்றெடுத்து நோக்குவமேல்
நின்றிங்கு மிஞ்சுபவர் நேர்பாதி காண்பரிது;
தொண்டறியார் ஆட்சிமுறை கண்டறியார் தங்கருத்தை
விண்டறியார் ஆனாலும் வேட்பாளர் ஆகிநின்று
மக்கள் தமையணுகி மாயங்கள் செய்வதெலாம்
மிக்க நகையாகும்; மேட்டுக் குடிவாணர்
வீட்டுக்கு வீடு வெளிநின்று பல்லெல்லாம்
காட்டுதற்கு நாணார்; கலிகாணா மேனி
வளையும் குழையும் வணங்கித் துவண்டு
நெளியும் மறுநாள் நிமிரும் அடடா!
நடக்காத கால்கள் நடந்துவரும், ஒன்றுங்
கொடுக்காத கைகள் கொடுத்துவரும்; தேர்தலிலே
வாக்காளர் எல்லோரும் வானுறையுந் தெய்வங்கள்
பார்க்காத பேரெல்லாம் பார்த்திடுவர் கும்பிடுவர்;
வெற்றி கிடைத்துவிடின் வேட்பாளர் மேலாவர்
வெற்றுப் படிக்கல்லாய் வீழ்ந்திடுவர் வாக்காளர்;

மாண்டவரும் மீண்டுவரும் மாய விளையாட்டைக்
காண்டல் எளிதாகும் இந்தத் திருநாளில்;
விந்தைமிகும் வேடிக்கை எத்துணையோ தேர்தலெனும்
சந்தையிலே காணும், சதிகள் விளையாடும்;
நிற்பவர்கள் நிற்கட்டும் நேர்மை நிலைநாட்டல்
கற்றவர்க்கும் மற்றவர்க்கும் உற்ற கடனாகும்;
தீட்டுகிற திட்டத்தால் ஈட்டும் வளமெல்லாம்
நாட்டில் ஒருதிசையில் நன்கு வளர்ப்பவர்தாம்
தேய ஒருமைஎன்று தீந்தமிழை மாய்ப்பதற்கே
ஆய வழிவகைகள் ஆற்றும் நிலைகண்டோம்;
இந்தி மொழியொன்றை இங்கே திணிக்கின்றார்
அந்தநிலை போதாதென் றன்று தமிழ்மாந்தர்
ஆய்ந்தமைந்த நல்லெழுத்தை அப்படியே நீக்கிவிட்டுக்
காய்ந்து சிறுகயிற்றில் தொங்குகிற *கண்டம்போல்
நேர்கோட்டில் தொங்கும் நெளிவெழுத்தைக் காட்டுகிறார்
யார்கேட்பர் இந்நாட்டில் என்னும் நினைவவர்க்கு;
நம்பால் இவர்தாமும் நல்வாக்குக் கேட்கின்றார்;
வெம்பி யிருக்கையில் வேறோர் திசைதன்னில்
நாட்டில் தருமம் நலிந்ததென்று கண்கலங்கி
நாட்ட வருகின்றார் நான்கு வகைத்தருமம்;
தந்திரத்தால் நல்ல தருமத்தின் பேர்சொல்லி
மந்திரங்கள் ஓதி வருபவரைக் காண்கின்றோம்;
தாய்நாட்டுப் பற்றினிலும் தாய்மொழியின் அன்பினிலும்
சேய்நாட்டுப் பற்றுமிகுஞ் சிந்தையரும் கேட்கின்றார்;
'அன்று முடியரசர் ஆண்ட திருநாட்டை
இன்று பெறுவோம் இனவழியில் ஒன்றாவோம்'
என்று முரசார்த் தியங்குகிற ஓரணியில்
நின்றுபணி செய்வோரும் நேர்நின்று நம்மிடத்தே
'உங்கள்நல் வாக்கை உவந்தே கொடுத்திடுக

*கண்டம் - உப்புக் கண்டம்.

எங்கட்கே என்றுநமைக் கேட்கின்றார் இந்நாளில்;
யாருக்கு வாக்களிப்போம் என்றுமிகச் சிந்தித்துப்
பாருக்கு நன்மைதரும் பான்மைதனை மேற்கொள்க!
காசு பணங்காட்டிக் கைநீட்டிக் கேட்பவரை
வீசி எறிந்திடுக! விற்காதீர் தன்மானம்!
நாளைக் கொருகொள்கை பேசும் நயவஞ்சர்
தாளைப் பிடிப்பார்கள் தந்து கெடுக்காதீர்!
நாட்டைத் திருத்திடுவேன் என்று நமைஏய்ப்பர்
வீட்டைப் புதுக்கலன்றி வேறொன்றும் தாமறியார்
ஆங்கவர்க்கும் வாக்கை யளிக்காதீர்! சாதிஎனும்
நீங்காப் பெருநோயை நேர்நிறுத்திக் கேட்பவர்க்கும்
கண்ணோட்டங் காட்டாதீர்! காட்டிவிடின் தன்தலைமேல்
மண்வாரிப் போடும் மதயானை போலாவீர்;
ஆதலினால் எப்பிழைக்கும் ஆளாகிப் போகாமல்
தீதறியா நல்லோரைத் தேர்தலிலே கண்டறிக!
சாதி சமயமென்று தாழ்வுயர்வு சாற்றுதலை
மோதித் தகர்த்தெறியும் முன்னேற்றப் பண்பினரை,
ஏழைமையைப் போக்கி இனிமைமிகும் வாழ்வுதரும்
தோழமையை நெஞ்சில் துணையாகக் கொண்டவரை,
செந்தமிழின் ஆக்கஞ் சிதையாமல் காப்பவரை,
நொந்திருக்கும் நாட்டவரின் நோவைத் தணிப்பவரை,
கற்றவரைத் தந்நலங்கள் அற்றவரை மெய்யொன்றே
சொற்றவரைத் தூயவரைத் தொண்டுள்ளம் பெற்றவரை
நன்றாய்ந்து தேர்ந்தெடுத்து நாடாளச் செய்வோமேல்
நன்றாக வாழும்நம் நாடு.

***தியாகராசர் கல்லூரி - மதுரை***
***27.1.1962***

**8**

# சிலம்பட்டும் போர்முரசு!

**(பாகித்தான் தொடுத்த போரில் இந்தியாவின் வெற்றி கண்டு பாடியது)**

மதவுணர்ச்சி ஒருபுறத்தே ஒதுங்கி நிற்க
மானமிகு மொழியுணர்ச்சி நிமிர்ந்து நிற்கப்
புதுமலர்ச்சி கொண்டெழுந்தே உரிமை வேண்டிப்
போர்முரசு கொட்டியது கிழக்கு வங்கம்;
விதிர்விதிர்த்துக் கொதித்தெழுந்த யாகி யாகான்
வீரத்தை மறந்துவிட்டு வீம்புக் காகக்
கொதிகலத்திற் கையிட்டான்; வங்க மக்கள்
குருதிதனைப் பருகுதற்கு வெறியுங் கொண்டான்;

போர்வெறியன் ஏவிவிட்ட படையின் கூட்டம்
புன்மைமிகும் வெறியாட்டம் ஆடக் கண்டோம்;
கார்குழலார் கற்பழித்துக் கொடுமை செய்து
கருவுற்ற மாதர்தமைச் சீர ழித்து
நீர்வழியும் விழியுடனே குழந்தை யெல்லாம்
நின்றலறப் பெற்றோரைச் சுட்டெ ரித்துச்
சார்மன்னன் ஆட்சியினை விஞ்சி விட்ட
சரித்திரத்தைப் படைத்ததுகாண் அந்தக் கூட்டம்.

குண்டுமழை பொழிந்தாலும் தமது மெய்கள்
குருதிமழை பொழிந்தாலும் கலங்கா வுள்ளங்
கொண்டெழுந்த வங்கத்தார் அஞ்சா ராகிக்
கொடுங்கோலர் கொட்டத்தை எதிர்த்து நின்றார்;

பெண்டிழந்தார் மகவிழந்தார் வீடி ழந்தார்
பெருமான மட்டுமவர் இழக்க வில்லை
“கண்டிடுவோம் உரிமைபெறும் வங்க தேசம்
காத்திடுவோம்” என்றெழுந்தார் சிங்க மாந்தர்

தூண்டிவிடும் அமெரிக்கர் சொல்லை நம்பித்
தூண்டிலுறும் புழுவான பாகித் தானம்
தாண்டியது நீதிதனை; வெறியின் வேகம்
தலைக்கேறி ஆடியது; தேர்தல் நாளில்
வேண்டுமிவர் எனமக்கள் வாக்க ளிக்க
வென்றுவரும் ரகுமானை வஞ்சப் பேச்சால்
கூண்டதனில் அடைத்துவிட்டு மேடை ஏறிக்
கொக்கரித்தான் அறப்போரை அறியா வீரன்

முறையற்ற செயலிதுவென் றுலகை நோக்கி
முறையிட்டோம் மனமுள்ள கார ணத்தால்;
தரைமுற்றுஞ் சென்றுநிலை சொல்லி வந்தோம்;
தவித்துவரும் மக்களுக்குப் புகலுந் தந்தோம்;
வெறியுற்ற மனப்போக்கர் வலிய வந்து
விண்வெளியில் பறந்துநமைத் தாக்கி நின்றார்;
நெறிகெட்டு வந்தவர்க்குப் பழைய பாடம்
நினைவூட்ட நிமிர்ந்தெழுந்தோம் ஒன்று பட்டோம்.

குண்டொன்று தலைவீழக் குருதி வெள்ளம்
கொட்டிடவும் வானத்தில் பகைவன் ஊர்தி
கண்டங்குச் சுட்டெரித்து வீழ்த்தி விட்டுக்
கண்மலர முகமலர அதனைப் பார்த்துக்
கொண்டுயிரை விட்டானே எனது நாட்டுக்
கொற்றவனாம் ஆறுமுகம் அவனைப் போன்றோர்
மண்டமரில் திறங்காட்டப் பாகித் தான
மாவீரர் புறங்காட்ட வெற்றி கண்டோம்

மூட்டிவிட்ட சினத்தீயில் யாகி யாகான்
முகம்பொசுங்கி அகம்நசுங்கி இருளில் வீழ்ந்தான்
பூட்டுடைத்து வெளிவந்தார் வங்க மாந்தர்;
பூத்துவிட்டான் புதுக்கதிரோன் கிழக்கு வானில்;
*கேட்டுமனங் கொண்டிருக்கும் பூட்டோ மட்டும்
கிலிபிடித்துத் தோல்வியினால் புலம்பு கின்றான்;
நாட்டவரை ஏமாற்ற உளறு கின்றான்;
நல்லறிவு பெற்றதுபோல் தோன்ற வில்லை.

புலம்பட்டும் நமக்கென்ன? புத்தி கெட்டுப்
போர்முறையே விருப்பமெனில் வந்த பின்னர்க்
கலங்கட்டும் தனித்திருந்தே; அமைதி ஒன்றே
காலமெலாம் விரும்புகிறோம்; அதைக்கெ டுத்துப்
புலங்கெட்ட பூட்டோவும் போர்தொ டுத்தால்
பொன்றட்டும் நமக்கென்ன? நமது நாட்டில்
சிலம்பட்டும் போர்முரசு! மக்கள் வெள்ளம்
திரளட்டும் ஒருமுகமாய்! ஒருகை பார்ப்போம்.

* கேட்டுமனம் - கெடுதலையுடைய மனம்

9

# உரிமையும் கடமையும்

**அறுசீர் விருத்தம்**

வேண்டுவீர் உரிமை என்றால்
    வெறுப்பவர் எவரு மில்லை,
தாண்டிடேல் கடமை யாற்ற
    எனச்சொலுந் தலைவ ருண்டோ?
ஈண்டிய தொழிலோர் நும்முள்
    இணைகுவீர் உரிமை என்றால்;
வேண்டுக கடமை என்றால்
    விலகியே விரைந்து செல்வீர்!

உழைப்பவர் நலிந்து வாட,
    ஒருசிலர் சுரண்டி வாழ,
இழைத்திடுங் கொடுமை காணின்
    எதிர்த்திடும் உரிமை வேண்டும்;
உழைப்பினை நல்க லின்றி
    உறுபயன் மட்டும் வேண்டிப்
பிழைப்பதைப் பிழையே என்று
    பேசிடுங் கடமை வேண்டும்.

வீட்டினைப் புரப்ப தற்கே
    விரும்புவீர் உரிமை தன்னை;
நாட்டினை உயர்த்து தற்குக்
    கடமையை நயந்த துண்டோ?

கோட்டமில் மனத்தாற் சொல்வேன்
　　கூறிய இரண்டும் வேண்டும்;
கேட்டினை நாமே செய்தால்
　　கிளர்ச்சியாற் பயனே இல்லை;

இருள்மிகு நமது வீட்டில்
　　எழில்ஒளி புகுவ தற்குப்
பொருள்வரு வழியை மூடிப்
　　போடுதல் முறையோ? சொல்வீர்!
மருளுற நாட்டு மக்கள்
　　மயக்குறச் செய்த பின்னர்
வரும்நம துரிமை என்றால்
　　வாழ்வென ஒன்று வேண்டா.

நம்முடை வறுமை நீக்க
　　நாட்டினை வறுமை செய்தால்
அம்முறை சரிஎன் றோதார்
　　ஆதலின் தோழர் தம்மை
வம்மென அழைப்போம் கூடி
　　வந்தபின் உழைப்போம் ஒன்றாய்;
நம்முயர் நாடுங் காப்போம்
　　நலமுற வீடுங் காப்போம்.

# 10

## எது துணிவு?

நல்லவை எண்ணுக! நயம்பட எழுதுக!
வல்லமை உளதேல் வாய்மையைப் பேசுக!
செயலெது செய்யினும் சிறிதள வேனும்
பயன்பிறர் பெறவும் நயந்தது புரிக!
இவைநிகழ் பொழுதில் இடர்பல நேரினும்
துவளுதல் இன்றித் தொடருதல் வேண்டும்
'இதைத்தான் *செய்வல்' என்றொரு வரையறை
'இவ்வணந் தான்செயல்' என்றொரு வரன்முறை
அமைத்ததன் வண்ணம் ஆற்றிடல் வேண்டும்;
நமைப்பல துயரம் நண்ணிய போதும்
இமைப்பொழு தேனும் இழுக்கா வண்ணம்
தொடருதல் ஒன்றே துணிவெனத் தகும்தகும்;
எழுதுதல் பேசுதல் இயற்றுதல் அனைத்தும்
பழுதுகள் தருமேல் பகரார் துணிவென;
எதையும் செய்தல் எப்படி யுஞ்செயல்
இதனைத் துணிவென ஏலார் சான்றோர்;
அறநெறிச் செயல்கள் ஆற்றலே துணிவு
மறநெறிச் செயலின் மறுபெயர் கயமை
அதனால்
துணிவே துணையெனத் தொடருக நீயே

***22.12.1975***

* செய்வல் - செய்வேள்

# 11
# தீண்டாமை

(கலிவெண்பா)

நெஞ்சத்தால் தூயனவன் நேர்மை பிழைத்தறியான்
வஞ்சத்தை ஓர்நாளும் வாழ்வதனிற் கண்டதில்லை;
ஆண்டான் திருவடிக்கே ஆளடிமை செய்துவந்தான்
ஆண்டவன் கோவிலுக் காகும் பொருளெல்லாம்
கொட்டிக் குவித்திருந்தான் கூலிஎன வேலைசெய்து
கொட்டிக் குவித்தான் குலமாண்ட வேதியற்கு;
தன்னலமே கண்டதில்லை; *தாண்டவமே கண்டதில்லை
முன்னமவன் கண்டதில்லை; முத்திதரும் தில்லைஎனக்
கண்டவர்கள் சொன்னதுண்டு கண்டுவரும் ஆர்வமிகக்
கொண்டெழுந்தான் அன்புளத்துத் தொண்டனவன் ஆதனூர்
வந்துதித்த நந்தனவன்; வந்தவனை அந்தணர்கள்
செந்தழழிற் போட்டுச் சிவபெருமான் பேர்சொல்லிச்
செம்மைப் படுத்திவிட்டார்; செம்மல் கருமேனி
வெம்மைச் சுடுதழலால் வேதித்தார் வேதியர்கள்;
உள்ளத்தாற் சொல்லால் உடலால் எனுமூன்றால்
எள்ளத் தனைபிறழா தென்றும் இருப்பானை
ஓங்கும் ஒழுக்கத் துயர்ந்தானை எவ்வெவர்க்கும்
தீங்கு நினையானைச் சேரிவாழ் நந்தனைப்
பொன்னம் பலத்துட் புகுந்து வழிபடத்தான்
முன்னம் தடுத்தார்கள் முப்புரியார்; முப்புரத்தைச்

* தாண்டவமே கண்டதில்லை - நடனமே கண்ட தில்லைப்பதி

சுட்டான் திருமுன்னர்த் தொண்டன் திருவுருவைச்
சுட்டார் புடமிட்டார் தூய உடலாக்கி
உட்புகுதச் செய்தார்; ஒருவிழியில் தீயுடையான்
அப்புறந்தன் ஏற்றான் அவனை எனவுரைப்பர்;
தீண்டாமை என்றதொரு தீய பழக்கத்தால்
ஆண்டான் அடிமைஎனும் ஆணவமுங் கொண்டதனால்
சேரிப் புறத்திற் சிறுகுடிலில் வந்தவனைப்
பேரில் உயர்ந்தோர் பெருந்தீங்கு செய்துவிட்டார்;
சீரங்கம் கொண்டானைச் சிந்தை நினைந்துருகிப்
பாரெங்கும் பாடிப் பரவிவரும் *பாணனவன்
ஊரின் ஒருபால் ஒதுங்கிக் கிடக்குமொரு
சேரி தருங்குடிசை செய்தவத்தால் வந்தமகன்
காவிரியின் ஓர்கரையில் கண்மூடிக் கொண்டங்கு
நாவிரிக்கும் பாடல் நலம்விரித்துப் பாடுங்காற்
பூசைக்குச் செல்கின்ற பூசுரர்கள் அப்பாடல்
ஓசை செவிபுகுத ஓர்பால் தனிநின்று,
செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்கள் ஆனமையால்
வெந்தழல்போற் சீறி விரைந்தெறிந்தார் கல்லெடுத்து;
விட்டெறிந்த கல்லின் விரைவால் தலையுடைந்து
கொட்டுகிற செங்குருதி கூடியது காவிரியில்;
கண்டுநிகர் பாடல் கசிந்துருகிப் பாடியவன்
மண்டை உடைய மதிகலங்கக் காரணமென்?
தீண்டாமை யன்றோஅத் தீய பழக்கத்தைப்
பூண்டோடு தீயிற் பொசுக்கும்நாள் எந்நாளோ?
தாழுங் குமுகாயம் சாதிச் சழக்ககற்றி
வாழும்நாள் எந்நாள் வரும்?

---

* பாணன் - திருப்பாணாழ்வார்.

**12**

# நல்ல சமையமடா!

**கலிவெண்பா**

ஒன்றே குலமென்றும் ஒன்றே கடவுளென்றும்
நன்றே புரிந்து நலம்பெற்றோம் முன்னாளில்;
நீறுந் திருமண்ணும் நெற்றிதனில் நாமணிந்தோம்
சேரும் படியாகச் செய்தணிந்தோம் தொப்பிகளை;
நெஞ்சிற் சிலுவைதனை நேராகத் தொங்கவிட்டோம்
*மஞ்ஞைதருந் தோகை மதித்தெடுத்துக் கைப்பிடித்தோம்;
நீண்ட சடைமுடித்தோம்; நேருந் தலைமழித்தோம்;
வேண்டித் **துவர்தரித்தோம்; வேள்விக் கடன்முடித்தோம்
ஊரில்லை பேரில்லை ஒன்றும் வடிவில்லை
மாறில்லை ஓர்பிறப்பும் மாய்வும் உடையதிலை
என்றெல்லாங் கூறும் இறைவனுக்கு வைத்தபெயர்
ஒன்றிரண்டா ஓரா யிரமன்றோ! மேலுமுண்டு;
பாரில் பிறக்கவைத்தோம்; பாவந் துயர்கொடுத்தோம்;
தேரில் நிறுத்தித் திருமணங்கள் செய்துவைத்தோம்;
ஆட்டாத ஆட்டமெலாம் ஆண்டவனை ஆட்டிவைத்தோம்
பூட்டா மனக்கதவைப் பூட்டிவிட்டுப் பூசைசெய்தோம்;
இன்று பலவாகி எங்கும் வளர்சமையம்
நன்று புரியாமல் நாட்டில் எளியவரை
ஏய்த்துப் பிழைப்போர்க் கிடமாகிப் போனதலால்
பூத்தநலம் உண்டோ புகல்?

* மஞ்ஞை - மயில் **துவர் - காவியுடை

## 13

# கடைத் தெருவில்

### எண்சீர் விருத்தம்

ஏகுங்கால் நடுத்தெருவில் வரிசை யாக
இரண்டுகால் காளைசில நடக்கக் கண்டோம்;
வேகஞ்சேர் உந்தெனினும் விலக லின்றி
விளையாட்டு மொழிபேசி நகைத்துக் கூவிப்
போகுங்கால் அவ்விளைஞர் செய்யுஞ் செய்கை
பொல்லாங்குப் போக்காகும் என்று நெஞ்சம்
வேகுங்கால், அவள்சொன்னாள் 'மாக்க ளாக
விரைகின்ற புதுமைக்கோர் அறிவிப்'பென்று.

மடந்தையரைத் தெருவழியில் காணும் போது
மானத்தை நாணத்தை மதித்த லின்றி
நடந்தருகிற் செல்லுவதும், முறைத்துப் பார்த்து
நகைப்பதுவும், ஊளையென ஓஓ வென்று
தொடர்ந்துகுரல் எழுப்புவதும், எள்ளல் செய்து
துரத்துவதுங் கண்டுமனம் நைந்தோம்; 'இங்குப்
படர்ந்துவரும் இச்செயல்தான் தமிழர் நாட்டுப்
பண்பாட்டுக் கேட்டுக்கோர் அறிவிப் பென்றாள்'

வருத்தமுடன் வழிநடந்தோம் பெண்க ளென்னும்
வடிவத்தைத் தாங்கியுள சிலரைக் கண்டோம்;
பொருத்தமிலா ஒப்பனைகள், எண்ணெய் காணாப்
புன்முடிகள், அரைகுறையில் அணிந்த ஆடை,

நரிக்குறவர் தந்தமணி பாசி மாலை,
நாகரிகப் போர்தாங்கு கடைச்ச ரக்கு,
மருட்கொளிபோல் தரித்துவரக் கண்டோம்; பெண்மை
மானத்தின் அழிவுக்கே போதல் கண்டோம்.

பின்னரொரு கடைபுகுந்தோம், பொருள்கள் கேட்டோம்
பெருவணிகர் இல்லைஎனப் பணிந்து ரைத்தார்;
என்னஇனிச் செய்வதென ஏங்குங் காலை
இரட்டிப்பு விலைதந்தால் கிடைக்கு மென்றார்;
பன்னரிய நலஞ்சேரும் வாணி கத்துட்
பகற்கொள்ளைக் கூட்டங்கள் புகுந்த தாலே
நன்னெறியிற் சீர்தூக்குங் கோலை வைத்தே
நாணயத்தை விற்கின்ற நிலைமை கண்டோம்.

திரும்புங்காற் பிணியுற்று முதுமை யுற்றுத்
தேடுவார் எவருமற்றுச் சோறு மற்று
நரம்புந்தோ லும்படிந்த நரைமூ தாட்டி
நடந்துவரக் கண்டுமனம் நைந்து போனோம்;
அரும்புங்கண் ணீர்விழியில் ததும்பி நிற்க
அங்கங்கே இரவலரும் நிற்கக் கண்டோம்;
விரைந்துலகம் கடைவழிக்கே போகும் போக்கை
விழியிரண்டால் கண்டுருகித் திரும்பி விட்டோம்.

# 14
# நமது வாணிகம்

**கலிவெண்பா**

வங்கக் கடலகத்தே தங்கி உருவாகிப்
பொங்கும் புயலொன்று புக்குவர லாமென்று
வானொலியில் ஓர்செய்தி வந்தவுடன் வேகமுடன்
ஆன பொருளெல்லாம் அப்பாலே போய்ப்பதுங்கும்
எங்கே பதுக்குகிறார்? எப்பால் பதுக்குகிறார்?
எங்கே எவரறிவார்? இங்கே விலையேறும்;
உண்ணும் பொருளெனினும் உள்ளம் நடுங்காது
மண்ணும் பிறபொருளும் மாற்றறிய மாட்டாமல்
பண்ணுந் திறமெல்லாம் பாரறியும்; மேல்நாட்டு
மண்ணில் நமதுபுகழ் மண்மூடச் செய்துவிட்டார்;
உண்ணும் பொருளெனினும் ஓர்நாட்டுக் கேற்றுமதி
பண்ணும் பொருளெனினும் பாங்குற நாம்கலக்கும்
விந்தையினைக் கண்டு வெளிநாட்டார் தூற்றுகிறார்
நிந்தையிது வென்னும் நினைப்பில்லை வாணிகர்க்கு;
வாணிகத்திற் போற்றி வளர்த்துவரும் வெங்கொடுமை
தோணிகட்டி ஏற்றத் தொலையாது; மேலும்
கடத்தல் மறைத்தல் கலத்தல் பதுக்கல்
முடக்கல் தொழிலைந்தும் முற்றத் தெரிந்துள்ளார்;
ஐந்தொழிலும் வல்லான் அரனென் றுரைத்திடுவர்

நைந்துருகித் தோற்பான் வணிகர் நடைமுறையால்;
நாணயத்தைக் கூட்டுதற்கு நாணயத்தை விற்றுவிட்டார்;
வாணிகத்தின் சீர்மைதனை வாட்டி வதக்கிவிட்டார்;
வாங்கும் பிறர்பொருளை வாணிகர் தம்பொருள்போல்
தீங்கின்றிப் பேணிச் செயலே அறமாம்
இவரோ பிறர்பொருளை ஏப்பம் இடுவார்;
தவறுகள் செய்யத் தயக்கம் சிறிதுமிலார்
வாணிகத்தின் பேரால் வழிப்பறிகள் செய்கின்றார்;
நாணிகந்து செல்வரென நாட்டில் உலவுகின்றார்
கொள்ளை யடிப்பதற்குக் கூசாப் பெருவணிகர்
வெள்ளையப்பன் ஒன்றே விரும்பிக் குவிக்கின்றார்;
சட்டங்கள் போட்டுள்ள சாமி படந்தொங்கும்
மொட்டும் மலரும் முழநீளச் சரந்தொங்கும்
பத்திக் கொருநாளும் பஞ்சம் இருந்ததிலை
எத்திப் பிழைக்க இறைவன் துணையென்பார்
நாட்டைக் கெடுக்கும் நயவஞ்ச வாணிகத்தைப்
போட்டுப் பொசுக்கிப் புதைகுழியில் மூடிவிட்டு
நாட்டுக்கு நற்பெயரை ஈட்டித் தரமுயல்க
ஈட்டுந் தொழிலோர் இனி.

***1.3.1970***

## 15

# நல்ல உலகமடா!

**கலி வெண்பா**

விண்ணைத் தொடநிமிர்ந்த விந்தைப் பெருமலைஎன்
கண்ணிற் புகுந்து கருத்தில் இடம்பெறவே
வண்ண எழிலெல்லாம் வாரிப் பருகமனம்
எண்ணியதால் ஆங்கோர் எழில்முகிலா மாறிமிக
ஓங்கும் மலைமுகட்டின் உச்சிப் பெருவெளியில்
தேங்கித் தவழ்ந்து திரிந்துவிளை யாடிவந்தேன்;
பூத்துக் குலுங்கும் பொலிவுடைய மாஞ்சோலை
பார்த்துக் களித்தங்குப் பாடுங் குயிலானேன்
கேளென்று வந்த கிளைக்குயிலைக் கூடிநின்று
நாளெல்லாம் நல்ல தமிழ்பாடிக் கொண்டிருந்தேன்;
முற்றி முதிர்கனிகள் மொய்த்திருக்கக் கண்டதனால்
பற்றி அவையுண்ணப் பாய்ந்துவரும் சிற்றணிலா
மாறிக் கிளைதோறும் மாங்கனிகள் துய்ப்பதற்
கேறிக் குதித்தங்கே எக்களித்து நான்திரிந்தேன்;
நாற்றைச் செழிப்பாக்கி நாட்டைச் சிறப்பாக்க
ஆற்றிற் சலசலவென் றார்த்துப் புனலோடக்
கண்டேன் குதித்தேன் கயலாகிப் பாய்ந்தின்பம்
கொண்டேன் அதனுட் குளித்தெழுந்து துள்ளிக்
குதித்து நெளிந்தோடிக் கொத்தடிமை யின்றி,

எதிர்த்துவரும் நீருள் எழிலாக நீந்திவந்தேன்;
ஆறும் நெடிதோடி ஆர்த்தெழும்பும் நீள்கடலுட்
சேரும் பொழுதத்துச் சீறும் அலையானேன்
பொங்கிக் கரைமோதிப் போய்த்திரும்பி ஆடுகையில்
அங்கே முகில்வரலும் ஆசைப் பெருக்கதனால்
மீண்டும் முகிலாகி மேலே தவழ்ந்தேறி
யாண்டும் திரிந்துமனம் ஆரக் குளிர்ந்ததனால்
பெய்யும் மழையானேன் பேசும் மனிதரவர்
செய்யுங் கொடுமைகளுஞ் சேராப் பிளவுகளும்
வஞ்சம் கொலைகளவு வாட்டும் வறுமைஎன
அஞ்சும் படிகண்டேன் ஐயவோ என்றரற்றி
நல்ல உலகமடா! நாகரிக மாந்தரெனச்
சொல்ல மனங்கூசும்; சூது மிகவுடையார்;
இன்ப வுலகத்தை ஈங்கிருந்து காண்பரிது
துன்ப வுலகமிது துன்பம் எனநெஞ்சம்
ஆற்றாமல் நல்லுலக ஆசையினால் மீண்டுமொரு
காற்றோடு போனேன் கரைந்து.

## 16

# சிவப்பு விளக்கு

ஒன்றிரண்டு பெற்றிருந்தால் மகிழ்ச்சி பொங்கும்
உள்ளமெலாம் அன்பூறும்; கண்ணே முத்தே
என்றிருந்து கொஞ்சிமகிழ்ந் தின்பங் காண்போம்;
எட்டென்றும் பத்தென்றும் பெருக்கி விட்டால்
கன்றிமனம் நோவதலால் இன்பம் ஏது?
கனிவேது? குலவிவரும் அன்பும் ஏது?
முன்றில்தனில் வரும்போதே எரிந்து வீழ்வோம்,
முப்பொழுதுங் கடுகடுப்பே முகத்தில் வாழும்.

தந்தைக்கும் நலனில்லை; சுமந்து பெற்ற
தாய்தனக்கும் நலனில்லை; பெருகு மக்கள்
மந்தைக்கும் நலனில்லை; வீடும் நாடும்
வளஞ்சிறக்க வழியில்லை; இவற்றை எல்லாம்
சிந்திக்கும் மனமில்லை; சொன்னால் கேட்கும்
செவியில்லை; இவ்வாறே நடந்தால் நம்மை
நிந்திக்கும் வருங்காலம்; இல்லை என்ற
நெடுஞ்சொல்லே எத்திக்கும் நிறைந்தி ருக்கும்;

முக்கோண வடிவத்தைக் காணும் போது
முகங்கோணுஞ் சிலருக்கு; நாட்டு மக்கள்
எக்கேடு கெட்டாலும் தம்மி னத்தார்
இனிதாக வாழ்வதுதான்அவர்தங் கொள்கை;

தக்கார்தம் நெஞ்சமெலாம் தாம்பி றந்த
 தாய்நாட்டின் நலம்நினைக்கும்; குடும்பத் திட்டம்
எக்காலும் தமதுநலத் திட்ட மென்றே
 எல்லாரும் நினைந்தொழுகின் நாடு வாழும்

கருப்படியில் விளையாடிக் களிக்கும் மாந்தன்
 காமமெனும் நெருப்படியில் நின்று கொண்டே
நெருக்கடியைத் தன்வீட்டில் ஆக்கி விட்டு,
 நெடுந்தெருவில் பள்ளிகளில் ஊரில் எங்கும்
நெருக்கடியை ஆக்குகிறான்; ஆள்வோர்க் கென்றும்
 நெருக்கடியை ஆக்குகிறான்; இவனால் நாட்டில்
உருப்படியாய் நலமொன்றும் வளர்வ தில்லை
 ஒளிநெருப்பில் அவன்நலமும் கருகித் தீயும்.

செல்வழியில் இடர்ப்பாட்டை முன்னு ணர்த்தச்
 சிவப்புநிற விளக்கொன்று வைத்தல் போல
இல்வழியில் இடர்ப்பாட்டை முன்னு ணர்த்த
 இருப்பதுதான் முக்கோணச் செவ்வி ளக்கு;
நல்வழியில் நடந்துசெல நினைவோர் அந்த
 நலம்பயக்கும் ஒளிவிளக்கைத் துணையாக் கொள்வர்;
சொல்வழியைக் கேளாரேல் விளக்கி ருந்தும்
 தோண்டுகுழி வீழ்ந்தழியும் மூடர் ஆவர்.

**17**

# முன்னறிவிப்பு

**எண்சீர் விருத்தம்**

தனிமையிலே ஒருவெள்ளி கிழக்கு வானில்
தகதகத்துக் கண்சிமிட்டி நிற்க எங்கள்
இனிமையது வளர்ந்துவரக் கண்டோம்; ஆனால்
எங்கிருந்தோ ஒருகோழி கூவக் கேட்டோம்;
நனிமகிழும் எமக்கிரவு கழிந்த தேயோ?
நலமறியாக் குரற்கோழி வாய்தி றந்தால்
இனிவிடியல் வருமென்னும் அறிவிப் பன்றோ?
எனமயங்கி அதன்குரலை வெறுத்து நின்றோம்.

இன்பத்தின் பங்காளி யாகி நின்றாள்
இணைவிழிக்குள் படர்ந்திருக்கும் நிறத்தை விஞ்சப்
பொன்பற்றி உருக்கியதை வார்த்த தைப்போல்
புதியநிற எழிற்கோலம் அடிவா னத்தைப்
பின்பற்றிப் பரவியது; பூமி யெங்கும்
பேரொளியை வீசுதற்குப் பகலோன் வந்தான்
முன்முற்றக் கதவதனைத் திறந்து வைத்தோம்
முகிழ்த்துவரும் காதலுக்குக் கதவ டைத்தோம்

இவ்வண்ணம் வாழுங்கால் ஒருநாள் என்றன்
எழிலரசி வந்தென்பால் குழைந்த வண்ணம்
'கைவண்ணம் முன்னையினுஞ் சுவைக்கும் வண்ணம்
காய்வண்ணஞ் சமைத்துள்ளேன் உண்ணும்' என்று;

மெய்வண்ணம் அழகேறும் வண்ணம் வந்தாள்;
மேலெண்ணம் யாதோஎன் றையங் கொண்டேன்;
ஐவண்ணப் பட்டொன்று பார்த்தா ளென்ற
அறிவிப்பின் வண்ணமெனப் பின்பு ணர்ந்தேன்.

ஒருநாள்நான் வாய்குமட்டி மயங்கி நின்றேன்
உதவாத பித்தத்தின் அறிவிப் பென்றாள்
இருநாளும் அருகிருந்தே இஞ்சிச் சாற்றை
எலுமிச்சைச் சாற்றுடனே கலந்து தந்தாள்;
மறுநாளவ் வேந்திழைவாய் குமட்டக் கண்டேன்
மாதுனக்கும் பித்தத்தின் அறிவிப் பென்றேன்;
தெரியாதோ இதுகூடப் போங்க ளத்தான்
தெரிவையரைத் தாயாக்கும் அறிவிப் பென்றாள்.

மக்கள்மெய் தீண்டுதல்நம் உடலுக் கின்பம்
மற்றவர்தம் மொழிகேட்டல் காதுக் கின்பம்
இக்குறளின் பொருளினிக்குஞ் செய்தி சொன்னாய்
ஏந்திழையே வாழியநீ; எனினும் ஒன்றை
அக்கறையோ டுனக்குரைத்தல் கடமை யாகும்;
அங்கேபார் சுவரெல்லாம் முக்கோ ணங்கள்!
அக்குறிதான் நம்குடும்ப நலத்தைக் காக்கும்
அறிவிப்பாம் அளவறிந்து பெறுதல் வேண்டும்.

பெறுவதற்குள் முக்கோண நினைவு வந்து
பிதற்றுகிறேன் எனமூக்கில் விரலை வைத்தாய்!
கருவயிற்றாய் முன்னுணர்ந்து நடவா விட்டால்
கன்னத்தில் விரல்வைப்பாய் பின்னை நாளில்;
திருமணத்தை நடத்திடுவோர், குடும்பப் பாங்கைத்
தெரிந்துநலம் பெறவிழைவோர் நெற்றி மீது
விரல்வைத்துச் சிந்திக்கும் பழக்கம் பெற்றால்
விடிவுண்டு நாட்டுக்கும் நமக்கும் என்றேன்.

சிந்தனையே இல்லாமல் எட்டும் பத்தும்
    சீரழிய மகப்பெறுதல் வீட்டிற் குள்ளே
வந்துபுகும் வறுமைக்கோர் அறிவிப் பாகும்;
    வளமிழந்து நலமிழந்து நாடு தானே
நொந்தழியுஞ் சிறுமைக்கோர் அறிவிப் பாகும்;
    நுண்மதியர் ஈதுணர்ந்தே வீடும் நாளும்
வெந்துயரில் வீழாமற் காப்ப தற்கு
    விளக்குகின்றார் முக்கோணச் சின்னங் காட்டி.

என்றுரைத்தேன் மொழிந்தவெலாங் கேட்ட நல்லாள்
    'எழில்கொழிக்கும் நமதில்லம்; நலங்கள் பெற்று
நின்றினிக்கும் நம்நாடு; நெஞ்சில் என்றும்
    நிலைத்திருக்கும் இவ்வெண்ணம்; அதனால் நீங்கள்
நன்றுரைக்கும் படிநடப்பேன்; கட்டுப் பாட்டு
    நலங்காக்கும் பொறுப்புமக்கும் வேண்டு மத்தான்!
என்றனுக்கு மட்டுமிது கடனாம் என்றே
    ஏமாந்து போகாதீர்' என்று ரைத்தாள்.

## 18
# இருண்ட வீடு

வரம்பெல்லாம் கதிர்வளைந்து முதிர்ந்தி ருக்கும்
வயல்தந்த மணிகுவியும் களஞ்சி யங்கள்
வரம்பில்லாச் செல்வங்கள், தென்றல் வீசும்
வளமனைகள், குறிப்புணர்ந்து பணிகள் செய்வோர்,
நிறங்குன்றாப் பொன்னணிகள் முதலா யாவும்
நிறைந்ததொரு வாழ்வெனினும் பிள்ளை இன்றேல்
நரம்பில்லா யாழாகும்; உயிர்த்த லில்லா
நன்மண்ணாற் புனைந்தஎழிற் பாவை யாகும்.

பளபளக்கும் வெண்ணிறத்துச் சுவர்கள், நான்கு
பக்கத்தும் நின்றொளிரும் பளிங்குத் தூண்கள்,
வழுவழுப்புத் தரையின்மேல் வண்ணப் பூக்கள்
வகைவகையாச் செய்திருக்கும் பளிங்குக் கற்கள்,
குளுகுளுத்த தென்றல்வரும் சாள ரங்கள்
கொண்டிலங்கும் மாமனைதான்; எனினும் அங்கே
தழுதழுத்த மொழிபேசும் பிள்ளை ஒன்று
தவழ்ந்திலதேல் மலரில்லாச் சோலை யாகும்.

பெற்றெடுத்த பிள்ளையினைத் தொட்டு ணர்ந்து
பெறும்பயனைப் பெற்றிலதேல் என்ன கையோ?
சிற்றுருவப் பொற்சிலையைத் தூக்கித் தூக்கித்
திளைத்தின்பம் அடையாத்தோள் என்ன தோளோ?

முற்றிவரும் செழுந்தேனைப் பொழியும் வாயின்
　　முத்தங்கள் பெற்றிலதேல் என்ன கன்னம்?
கற்றவர்க்கும் பொருள்விளங்கா மழலை கேளாக்
　　காதினர்க்குச் செவியிருந்தும் பயன்தான் என்ன?

உழைத்தலுத்து வருவோர்க்குக் களைப்பை நீக்கி
　　உள்ளத்துக் கவலைக்கும் மருந்தாய் நிற்கும்;
பிழைப்புக்கு வழியறியாக் குடிலுக் குள்ளும்
　　பெருஞ்செல்வங் குவிந்தமனைக் குள்ளும் அன்பு
தழைத்திருக்க ஏற்றிவைக்கும் ஒளிவி ளக்காம்;
　　தவழ்ந்துவரும் மகவிலையேல் எந்த வீடும்
செழித்திருக்கக் கண்டதிலை இருண்டே தோன்றும்;
　　சிரிப்பொலியின் எதிரொலியும் கேட்ப தில்லை;

இசையினிமை பயக்கும்யாழ் பிள்ளை என்றேன்;
　　எல்லையின்றிப் பெறின்வாழ்வே உடைந்த யாழாம்;
நசைமிகுந்த பேசும்பொற் சிலையைக் கொண்ட
　　நல்லதொரு வீடொன்றே கோவில் என்றேன்;
திசைகடந்து வரம்பதனை மீறி விட்டால்
　　சிதறுண்டு பாழ்பட்ட மண்ட பந்தான்;
பசிமிகுந்த கூக்குரலே கேட்கும் அங்கே
　　பண்ணொலியோ யாழொலியோ கேட்ப தில்லை.

எட்டென்றும் பத்தென்றும் பெற்று விட்டால்
　　எடுத்தணைக்கும் கைகளிலே இன்பம் உண்டோ?
தொட்டெடுத்துத் தோள்வைத்துச் சுமப்ப தென்றால்,
　　சுமையாகத் தோன்றுமலால் இன்பம் ஏது?
சுட்டெரிக்கும் பசிக்கொடுமை வாட்ட வாடித்
　　துவண்டிருக்கும் கன்னத்தில் முத்த மெங்கே?
பட்டென்றும் பசியென்றும் கேட்டுக் கேட்டுப்
　　பதறியழும் அழுகுரலே செவியிற் கேட்கும்.

கவலைக்கு மருந்தாகும் பிள்ளை; ஆனால்
    கணக்கின்றிப் பிறந்துவிடின் அதுவே உள்ளக்
கவலைக்கு விருந்தாகிச் சலிப்பை ஊட்டும்;
    காப்பதற்கு வழியின்றித் தவிக்கச் செய்யும்;
உவமைக்கு விளகென்று சொல்வ ரேனும்
    ஒருவர்க்குப் பலமகவு பிறந்து விட்டால்
அவலத்தைக் காண்பதலால் ஒளியா தோன்றும்?
    அவர்அகத்தில் களிப்பேது? சிரிப்பும் ஏது?

கதிரவனும் நிலாமகளுங் கூடிப் பெற்ற
    கணக்கில்லாப் பிள்ளைகள்தாம் விண்மீன் கூட்டம்;
அதிகஒளி அக்கூட்டம் பெற்ற துண்டோ?
    அங்கங்கே மின்மினிபோல் ஒளிரக் கண்டோம்;
புதியவழி பின்பற்றித் திட்ட மிட்டுப்
    புகுகின்ற மனமின்றிப் பெருக்கி விட்டால்
மதிமயங்கி ஒளிகுறைந்து துயரந் தோய்ந்து
    வழியறியா இருட்டறையாய்ப் போகும் வீடு.

## 19

# துன்புறவோ பெற்றாள்?

இன்பத்தை வாழ்வதனில் விழையும் மாந்தர்
இருக்கும்நிலை யுணர்ந்துமகப் பெறுதல் வேண்டும்
பன்மக்கள் பெறலொன்றே கடனென் றெண்ணிப்
பலபெறலால் அவர்பொறுப்புத் தீர்வ தில்லை;
துன்பத்தை அவர்காண்ப தன்றி நாட்டின்
துயருக்கு விதைதூவி விட்டோர் ஆவார்;
நன்மக்கள் எனநாடு போற்றும் வண்ணம்
நலிவகற்றி வளர்ப்பதவர் கடமை யன்றோ?

வீட்டுநிலை நாட்டுநிலை அறியா மாந்தர்
வெறும்பருவ நலமொன்றே குறியாக் கொண்டு
கூட்டுணர்வால் ஆண்டுதொறும் தவறா வண்ணம்
குழந்தைகளைப் பெற்றுவிட்டு, வளரும் நாளில்
வாட்டுகிற பிணிநீக்கி உண்டி தந்து
வளர்கல்வி யறிவூட்டிப் பேணிக் காக்க
மாட்டாமல் துயர்க்கடலுள் மூழ்கிக் கண்ணீர்
வடிக்கின்ற குடும்பங்கள் மிகவே கண்டோம்.

பிணியுழந்து மகவொன்று ஒருபால் வீழும்;
பெரியமகன் கல்விக்குப் பொருளை வேண்டும்;
மணியணிந்த எதிர்வீட்டுச் செல்வப் பிள்ளை
வைத்திருக்கும் தின்பண்டம், பட்டுச் சட்டைத்

துணிவிழைந்தே அடம்பிடிக்கும் மற்றி ரண்டு;
தொடுகறிகள் பற்றவிலை என்று கூறி
அணிவகுத்து நின்றிருக்கும் மூன்று பிள்ளை;
அத்தனைக்கும் என்செய்வான் பெற்ற தந்தை?

'பூப்படைந்த பெண்ணிரண்டை வீட்டில் இன்னும்
பூட்டிவைப்ப தெத்தனைநாள்? கையில் காதில்
காப்பணிகள் ஒன்றில்லை, துணிகள் இல்லை,
கவலையிலா திருக்கின்றீர்' என்று கேட்டு
நாப்பணிய மொழிந்திருப்பாள் மனைவி நல்லாள்
நாளெல்லாம் இதைநினைந்தே மெலிந்த மெய்யாள்
சாப்பிடவும் மனமின்றித் துயிலு மின்றித்
தவிப்பதற்கே பிள்ளைகளைப் பெற்று விட்டான்;

வருவாயோ மிகக்குறைவு மக்கட் செல்வ
வளர்ச்சிக்கோ குறைவில்லை; தீராத் துன்பம்
உருவாகக் கொண்டவன்முன் வீட்டுக் காரன்
ஓரைந்து மாதமென்றான் வாட கைக்கு;
கருவான மாதத்தை எண்ணிக் கொண்ட
கருங்குழலாள் தன்வயிற்றைத் தடவிக் கொண்டாள்
உறுவாழ்வு துன்புறவோ பெற்றாள்? அந்தோ!
ஒன்றிரண்டு பெற்றறிருந்தால் துன்பம் ஏது?

# 20

# புது விதி செய்வோம்

ஒருவனுக்கோர் மனைவியெனச் சட்டஞ் செய்தால்
ஊரிலுளார் அனைவருமே ஏற்க வேண்டும்
ஒருமதத்தை மட்டுமது கட்டு றுத்தும்
ஒருமதத்தைக் கட்டுறுத்த இயலா தென்றால்
அரசெடுத்த திட்டத்தாற் பயனே யில்லை;
அனைவர்க்கும் பொதுவான சட்டம் வேண்டும்
கருவிதைத்த பெருக்கத்தைத் தடுக்க வேண்டின்
கண்ணோட்டங் காட்டாமல் நடத்தல் வேண்டும்,

மடம்விட்டு நாண்விட்டுத் துணியும் விட்டு
வருமானங் காட்டிவருந் திரைப்ப டங்கள்,
உடம்பொட்டி இதழொட்டிக் கன்னம் ஒட்டி
ஒடிந்துவிழும் இடைபற்றிக் கைகள் பற்றி
இடம்விட்டுப் போகாமல் ஒட்டிக் காட்டும்
இழிவுதருஞ் சுவரொட்டி இவற்றைக் காண்பார்
தடங்கெட்டுப் போகாமல் என்ன செய்வர்?
தவிதவிக்கும் முக்கோணச் சின்னம் அங்கே.

மணஞ்செய்ய மகளிர்தமக் கிருபத் தைந்து
வயதாக வேண்டுமென வகுக்க வேண்டும்;
பணஞ்செய்யுந் திரைப்படத்தார் சமுதா யத்தைப்
பாழ்படுத்துங் கெடுகாமக் காட்சி காட்டா

வணஞ்செய்ய விதிவகுக்க வேண்டும்; காமம்
வழிகின்ற கிண்ணங்கள் போன்ற தாள்கள்
குணங்கொய்யப் பெருகுவதைத் தடுத்தல் வேண்டும்;
குடும்பநலத் திட்டங்கள் வெற்றி யாகும்.

மடமையினைத் தகர்த்தெறிந்து நாட்டு மக்கள்
வளமாக வாழ்வதற்குப் பெரியார் சொன்ன
திடமருவுங் கொள்கைகளை மனத்திற் கொண்டு
தெளிந்துணர்ந்து நடைமுறையில் போற்றல் வேண்டும்
கடமையொடு கண்ணியமுங் கட்டுப் பாடும்
காத்துவருங் குடும்பங்கள் தோன்றச் செய்வோம்
கொடுமைக்கே ஆளாகிப் பாழா காமல்
குடும்பநலங் காப்பதனால் நாடுங் காப்போம்.

## 21

# விடிவு தோன்றும்

நேர்கோட்டில் நடந்துசெலத் தயங்கு கின்றான்
நெறிவிலகி நடப்பதையே விரும்பு கின்றான்
பார்போற்ற வகுத்தமைத்த அகன்ற பாதை
பார்த்தபினும் சந்தினையே தேடு கின்றான்
சீர்காட்டும் தெருவிளக்கு நிற்கக் கண்டும்
தெளிவின்றி இருட்டுக்குள் உலவு கின்றான்
யார்தூற்றிப் பழித்தாலும் அவனுக் கென்ன?
எப்படியோ குறுக்குவழி ஒன்றே கண்டான்.

நல்வழிகள் பலவிருந்தும் அவற்றை விட்டு
நடுத்தெருவில் விலங்குகள்போல் திரிய லுற்றான்
அவ்வழியில் செல்வதையே தேர்ந்து கொண்டான்;
அதற்குரிய காரணமென்? வீடு தோறும்
நெல்விளையும் கழனிகள்போல் விளைந்து நிற்க
நெருக்கடியை ஆக்கிவிட்டான்; அதனால் மாந்தன்
புல்வழிகள் மேற்கொண்டான் செம்முக் கோணம்
புகட்டுகிற நெறிநடந்தால் விடிவு தோன்றும்.

## 22

# நிலமகளா கொடியவன்?

நீதியொடு குடிமக்கள் நலம்நி னைக்கும்
நெஞ்சுடையார் மூவேந்தர் ஆண்டி ருந்தார்;
ஆதியிலவ் வாட்சிக்கு நிகரே யில்லை;
ஆயினுமப் பரம்பரையின் பெயரு ரைக்க
நாதியிலை; ஏனில்லை? நிலம டந்தை
நலம்வேட்டுத் தமக்குள்ளே போர்தொ டுத்து
மோதியதால் அழிந்தொழிந்தார் அந்தோ! அந்த
மூவரசை யழித்தவளைக் கொடியன் என்பேன்.

வடபுலத்து மன்னரையும் விட்டா ளல்லள்
வாழ்விழந்த பாண்டவர்க்கும் நூற்று வர்க்கும்
கெடுமனத்தைப் பகையுளத்தைத் தந்து நின்றாள்
கிளைஞருக்குள் பகைமூட்டி அழித்தொ ழித்தாள்;
அடுகுணத்துச் செஞ்சீனர் அண்டை நாடர்
அகப்பகையாய் நமதுபனி மலையின் பாங்கர்
இடர்விளைக்க வழியமைக்கச் செய்த வள்யார்?
இழிபழியை அவர்க்களித்தாள் அவளே யன்றோ?

உலகத்தை ஒருகுடைக்கீழ் ஆள எண்ணி
ஒவ்வாத போர்வெறியர் உலகில் யாண்டும்
கலகத்தை விளைவித்துப் போர ரக்கன்
கடுவாயில் போய்வீழ்ந்தார்; அவரை எல்லாம்
இலவுக்குக் காத்திருந்த கிளிபோ லாக்கி
ஏலாத பேராசை உள்ளத் தூட்டி
நலமழித்த நிலமகளை எப்பேர் சொல்லி
நானழைப்பேன்? மாபாவி என்ப தல்லால்.

பாவமவள்! நிலமகளா குற்றஞ் செய்தாள்?
பாராள வந்தவர்தாம் குற்றஞ் செய்தார்;
யாவுமவர் ஆசையினால் வந்த தீமை
அதற்கவளா பொறுப்பாளி? இல்லை இல்லை;
காவலர்கள் *பிறர்க்குரியாள் தோள்வி ழைந்தார்
கருத்தழிந்தார் உருத்தெழுந்தார் தானே மாண்டார்;
மேவுகின்ற ஆடவர்தாம் நல்ல ரானால்
மெல்லியலாம் நிலமகளும் நல்லள் ஆவாள்.

நிலமகளின் ஆசையினாற் கொடிய மாந்தர்
நெடுகிலுமே செய்தீமைக் களவே யில்லை;
பலவுயிரும் பலபொருளும் பிறப்ப திந்தப்
பரந்துபடும் நிலத்திற்றான்; பின்னர் அந்தக்
குலமுழுதும் மறைந்தொடுங்கி மாய்வ தெல்லாம்
கூறுமிந்த நிலத்திற்றான்; இதைம றந்து
நிலமுழுதும் தாமுண்ண முயலு கின்றார்
நிலையாகத் தமதென்றும் எண்ணு கின்றார்,

பெரும்பொருளும் உயர்மனையும் வயலும் இன்னும்
பேறனைத்தும் பெற்றாலும் இறுதிக் காலம்
வரும்பொழுது மனிதனுக்குச் சொந்த மென்று
வாய்த்தநிலம் ஆறடிதான்; அதைம றந்து
வரும்மனிதன் வாழ்வெல்லாம் பிறர்நி லத்தை
வளைப்பதற்கே முயல்கின்றான்; வளைத்த பின்னும்
அரும்புகிற ஆசையைத்தான் காட்டு கின்றான்
ஆசைக்கோர் அளவில்லை அதனாற் போலும்.

* பிறர்க்குரியாள் - பிறர்க்குரியநிலமகள்

தோண்டுங்காற் பொன்தருவாள் சோர்வ கற்றித்
துளைத்தெடுத்தால் தந்திடுவாள் எண்ணெய்; மேலும்
வேண்டுங்கால் நிலக்கரியும் ஈவாள்; ஆழ
வெட்டுங்கால் புனல்தருவாள்; ஆழ்ந்த கழ்ந்து
கீண்டுங்கால் இரும்புமுதற் கனிக ளெல்லாம்
கிடைக்கஅருள் நல்கிடுவாள்; ஏர்மு கத்தால்
தீண்டுஞ்சால் வழியெல்லாம் பயிர்கள் காட்டிச்
செழித்திருப்பாள் வளமெல்லாம் கொழித்தி ருப்பாள்

கனிதருவாள் காய்தருவாள் வாழும் வண்ணம்
காலமெலாம் உயிர்தருவாள்; உடல்வ ருத்தி
இனிதருளும் ஈகையினால் அவளை *வள்ளி
எனுஞ்சொல்லாற் புகழ்ந்துரைக்க ஆசை தோன்றும்
நனிமுயன்றே பாடுபடின் பொருளை வாரி
நல்கிடுவாள்; உழைப்பின்றி அயர்ந்து நின்றால்
முனிவுகொடு பொருள்குறைப்பாள்; உழைப்ப றிந்து;
முதல்கொடுக்கும் முதலாளி என்றுஞ் சொல்வேன்;

நமக்கென்றே இருப்பவளை வாழ்நா ளெல்லாம்
நலிவுறுத்தி வருகின்றோம்; தலையி டத்துச்
சுமக்கவென மரம்வைத்தோம் மனைகள் கட்டத்
தூண்வைத்தோம் கல்வைத்தோம் காலும் வைத்தோம்
எமக்கென்ன என்றவள்மேல் உமிழு கின்றோம்
இரும்பெடுத்தே அவளுடலை அகழு கின்றோம்
சுமக்கின்றாள் பொறுக்கின்றாள் பொறுமை சாலி
தொழிலாளி போலிருக்குந் திறமை சாலி.

* வள்ளி - வள்ளன்மையுடையவள்

கடல்சுமந்தாள் மலைசுமந்தாள் கான்சு மந்தாள்
　　கால்நடைகள் பலசுமந்தாள் மாந்தர் என்ற
உடல்சுமந்தாள் வயல்சுமந்தாள் நதிசு மந்தாள்
　　ஊர்சுமந்தாள் நகர்சுமந்தாள் செடிசு மந்தாள்
குடல்சுமந்து பெற்றெடுத்த அன்னை யில்லாக்
　　குலப்பிள்ளை போலாகி நின்றாள் அந்தோ!
மிடல்சுமந்த அவளுருத்துச் சினந்து நின்றால்
　　மேலாளர் வாழ்வெங்கே அவளே வெல்வாள்.

- ஈரோடு

# 23
# போலிக் குடும்பம்

### கலிவெண்டபா

காற்றையே விஞ்சுங் கடுவேகங் கொண்டிலங்கும்
மேற்றிசையார் தந்தஒரு மேலான ஊர்திதனில்
முன்னே கணவன் முறுக்கோ டமர்ந்திருப்பான்
பின்னே மனையாள் பெருமிதத்தில் வீற்றிருப்பாள்
வேகத்தால் ஆடை விலகுவதும் தான்ஓராள்
மோகத்தி னுள்ளே முழுகி எழுந்தவள்போல்
கையொன்றால் சுற்றிக் கணவன்றன் மெல்லிடையை
மெய்யொன்றச் சாய்ந்து மிடுக்கோ டணைத்திருப்பாள்
கட்டிப் பிடித்துக் களிப்போடு போமிவரை
எட்டி நடப்போர் இருகண்ணால் பார்த்திருந்(து)
"ஒட்டி உறவாடும் உள்ளன் புடையரிவர்!
விட்டுப் பிரியாத விந்தைமிகும் அன்றிலிவர்!
ஈதன்றோ நற்குடும்பம்! இக்குடும்பம் போற்குடும்பம்
யாதொன்றுங் கண்டதிலை" என்றே நயந்துரைப்பார்
போகும் வழிப்படுவோர் போற்றிப் புகழ்ந்துரைக்க
வேகம் மிகக்கொண்டு வீதியெலாஞ் சுற்றியபின்
வீட்டிற் புகுந்தவுடன் வேகங் குறைந்துவிடும்
ஏட்டிக்குப் போட்டி! எலிபூனை ஆகிடுவர்;
சீறி விழுவார் சிறிதேனும் அன்பறியார்

மாறி நடப்பார் மனைவி கணவனெனும்
பேரைக் கடப்பார் பெருமைமிகும் இல்லறத்தின்
சீரை ஒருசிறிதும் சிந்தித்துத் தாம்நடவார்;
காட்சிக் குடும்பமெனக் கட்டுரைப்ப தன்றிஇது
மாட்சிக் குடும்பமெனும் *மாற்றஞ் சொலப்படுமோ?
மாலை முடித்த மணவாளன் தான்கொண்ட
வேலை முடித்துப்பின் வீடு திரும்புங்கால்
மாலை யடுத்திருக்கும் மங்கிருளும் சூழ்ந்திருக்கும்
சீலை யுடுத்திருக்குஞ் சேயிழையாள் மட்டுமிராள்;
மெய்சோர்ந்து கைசோர்ந்து மேலும் மனஞ்சோர்ந்து
சோர்ந்து வந்தானைப் பார்த்து வரவேற்க,
உண்ணுஞ் சுவைநீர் உவந்து கொணர்ந்துதர.
எண்ணங் களிக்க, இனிய மொழிசொல்ல,
இல்லாள் மனையகத்தே இல்லா நிலைகண்டு
நல்லான் அருகிருந்த நாற்காலி மேலமர்ந்தான்;
தொங்குசிறு பையொன்று தொங்குகிற கையுடையாள்
தங்குமொரு சிற்றுடையுந் தாங்காத மெய்யுடையாள்
வெள்ளைப் பொடியால் விளங்கும் முகமுடையாள்
அள்ளிச் சுருட்டி அமைத்த குழலுடையாள்
ஆடி அசைந்தே அழகுமயில் போல்வருவாள்;
வாடி அமர்ந்திருப்போன், வந்தாள் முகம்நோக்கி,
''எங்குநீ சென்றிருந்தாய்? இந்நேரம் ஆனபினும்
தங்கி வருவதுமேன் தையால்'' எனக்கேட்டால்
''மாதர்கழ கத்தில் மனைவிமார் தங்கடமை
ஓதுதற்குச் சென்றிருந்தேன் ஊர்மெச்சப் பேசிவந்தேன்;
கற்பென்றா லென்ன? கணவன் உரிமைஎன்ன?

*மாற்றம் - சொல்.

பொற்புடைய மாதர் பொறுப்பென்ன? என்றெல்லாம்
சொற்பொழிவு செய்தேன் சொலற்கரிய கைதட்டல்!
அற்புதமே என்ன அமைந்துவிட்ட" தென்றுரைப்பாள்
இப்படியும் நாட்டில் இயங்கும் குடும்பங்கள்
பற்பலவும் இந்நாளில் பார்த்தல் எளிதாகும்;
செல்வப் பெருக்காலுங் கல்விச் செருக்காலும்
பல்வகைய நாகரிகப் பாங்குக்கும் ஆட்பட்டுச்
சீரழிந்து போன சிலகுடும்பம் உள்ளதனை
ஊரறியும் நாடறியும்; ஒவ்வாக் குடும்பமிது;
மண்ணில் அடிவைக்க மாட்டாமல், உண்டவரை
விண்ணில் மிதக்கவைக்கும் விந்தைக் குடிபழகி
வந்தோன் குடும்பம், வருகின்ற நாளெல்லாம்
நொந்தே அழியும்; நொடிப்பொழுதும் இன்பமிலை;
கட்டிவந்த தன்மனையாள் கன்னம் முதுகெல்லாம்
கொட்டிவரும் மத்தளந்தான் கொண்டவன் கைகளுக்குத்
தற்கொண்டான் கொட்டுகிற தாளந் தவறாமல்
இற்குரியாள் ஓவென் றிசைப்பாள் அவலப்பண்;
பாழுங் குடியாற் பழுதுபடும் அக்குடும்பம்
நாளும் இளிவரலால் நைந்துபடும்; அவ்வில்லில்
வீரம் இருக்கும் வெகுளி உடனிருக்கும்
நேரஞ் சிறிதானால் நீள்அழுகை தானிருக்கும்
அச்சம் இருக்கும் அடுத்து நகையிருக்கும்
மெச்சும் உவகையதும் மேவிக் கலந்திருக்கும்
எண்சுவையுங் கூடி இயங்குமொரு நாடகத்தைப்
பண்சுவையுஞ் சேர்த்துப் படைக்கும் மதுக்குடும்பம்;
கல்லாக் குடும்பத்துங் கற்ற குடும்பத்தும்
எல்லாக் குடும்பத்தும் இச்சிறுமை காண்பதுண்டு;

வையத்துள் வாழ்வாங்கு வாழாத ஓர்குடும்பம்
நையப் புடைக்கும் நரகம் எனவாகும்;
எங்கோ நரகொன் றிருக்கின்ற தென்றுரைப்பார்
இங்கேதான் அந்த இடர்நரகுங் காண்பதுண்(டு)
இல்லாள் மனைமாட்சி இல்லாளேல் அவ்வாழ்க்கை
பொல்லா நரகாகும் பொன்றாத் துயராகும்;
பேரின்ப வீடெனவும் *பீழை யுறுநரக
ஊருண் டெனவும் உரைத்திடுவர் கண்டதிலை;
ஆனாலும் நம்மருகில் அவ்விரண்டும் உண்டென்று
காணா தலைகின்றோம் கண்ணிருந்துங் காணுகிலோம்!
போலித் தனமெல்லாம் போற்றித் திரியாமல்
வேலிக்குள் நின்றே விளைபயனைத் துய்த்திடுவோம்
அன்பே துணையாக ஆற்றுங் குடும்பத்தில்
இன்பம் நிலைக்கும் இனிது

***- மன்னர் கல்லூரி***
***சிகங்கை***
***29.1.1972***

பீழை - குற்றம், துன்பம்.

## 24

# சமுதாய வீதியிலே

### எண்சீர் விருத்தம்

சாதிமதம் வேர்விட்டுக், கூடி நின்ற
சமுதாயம் சீர்கெட்டுப், பிளவு பட்டு,
மோதிவரும் பகையுற்றுத் தாழ்வும் உற்று
முன்னேறும் நெறிகெட்டு, மிடியும் பட்டு,
*மேதியினும் கீழாகி, உணர்வு கெட்டு,
மேலான மதிகெட்டு, மானம் விட்டு,
மேதினியில் அடிமைஎன உரிமை கெட்டு,
மெய்சுமந்து மாந்தரென வாழ்ந்து வந்தோம்.

**மண்சுமந்த தோள்களிலே வீரங் கொண்ட
மாமன்னர் வழிவந்தோர், சங்கம் ஏறிப்
பண்சுமந்த பாடலினால் உலகை யாண்ட
பாமன்னர் வழிவந்தோர், தமிழ மாந்தர்;
கண்சுமந்து வந்தாலும் பார்வை கெட்டுக்
காலிடறி வீழ்ந்தனரே என்று நெஞ்சில்
புண்சுமந்து நொந்தெழுந்து புரட்சி செய்யப்
பொங்கிஎழுந் தரியேற்றைப் போல வந்தார்,

*மேதி - எருமை **மண்சுமந்த - நிலத்தை ஆண்ட

வெண்தாடி வேந்தரவர், ஐயா என்றே
விழைந்தழைக்கும் கிழவரவர், பெரியார் என்றே
பண்பாடிப் போற்றுகின்ற தலைவர், எங்கள்
பகுத்தறிவுப் பகலவனார், தமிழர் பண்பு
மண்மூடிப் போகாமல் காக்க வந்த
மாவீரர், பாழ்பட்ட சமுதா யத்தின்
கண்மூடிப் பழக்கத்தால் எழுந்த கோட்டை
கலகலத்தே இடிந்துவிழச் செய்த தீரர்.

அப்பெரியார் திருப்பெயரைத் தலையில் தாங்கி,
*ஆளுடைய பிள்ளையிவர் அரவ ணைப்பால்
ஒப்பரிய நடைமுறையில் இயங்கு கின்ற
ஒளிநிறுவுங் கல்லூரி யதனிற் கல்வி
**தப்பிரியப் பயில்கின்ற இளைஞர் நீவிர்
சமுதாயச் சிந்தனையை மனத்திற் கொண்டீர்;
அப்பெரிய மகிழ்ச்சியினால் வாழ்த்து கின்றேன்
அடடாஓ சமுதாயம் வாழும் என்றே.

எதைஎதையோ சிந்திக்கும் இளைஞர் கூட்டம்
இருக்கின்ற நிலைகண்டு வருந்தி நெஞ்சம்
பதைபதைக்கும் இயல்புடையேன் ஆனால் நீவிர்
பயனுள்ள சிந்தனைக்கு வந்து விட்டீர்;
இதைநினைந்து மகிழ்கின்றேன்; இன்று நீங்கள்
இளைஞரெனும் நிலையிலுளீர், நாளை நாட்டின்
விதையனையீர், வேரனையீர், வளர்ந்த பின்னர்
விடுதலையின் பயன்நுகரும் தலைவர், ஆவீர்.

இன்றுள்ள சமுதாய வீதி தன்னில்
எங்கேனும் நல்லொழுக்கம், உரிமை வேட்கை
ஒன்றுள்ள தாவென்று தேடிப் பார்த்தேன்;
ஒளிந்திருக்கும் இடங்காண முடிய வில்லை;

*ஆளுடையபிள்ளை - கல்லூரிமுதல்வரின் பெயர். **தப்பு இரிய - பிழை நீங்க

நன்றுள்ள பொதுநலந்தான் மாந்தர் நெஞ்சில்
நலம்பெற்று வளர்கிறதா என்று பார்த்தேன்;
நின்றுள்ள நிலைகாணேன்; தன்ன லந்தான்
நிலைபெற்றுக் கோலோச்சக் கண்டு நொந்தேன்.

வீதியிலே சமுதாயம் நிற்கக் கண்டேன்
விலைபேசிப் பண்பாட்டை விற்கக் கண்டேன்;
போதனையே செய்வாரைக் காணு கின்றேன்
புகன்றபடி ஒழுகுபவர் எவருங் காணேன்
ஏதினிமேல் நல்வாழ்வு? மாந்தர் நெஞ்சில்
இருளகன்று சுடரொளிதோன் றாதோ? என்று
வேதனையே கொள்கின்றேன் நிலையிற் கெட்ட
விலங்கியல்பு மானிடரை நினையும் போது;

போலிகளே சமுதாய வீதி தன்னில்
பொன்னோடும் புகழோடும் உலவல் கண்டேன்;
மாலையெலாம் அவர்பெறுவர் மதிப்பும் கொள்வர்;
மாமேதை என்றெல்லாம் விருதும் கொள்வர்;
மேலவரோ எள்ளலுற்றார். ஏசல் பெற்றார்,
மிதிபடுமோர் பொருளானார், தாழ்வே கண்டார்;
*சாலியிலே பதருக்கு மதிப்பைக் கண்டேன்
சாறறியா வெம்பலுக்கும் மதிப்பைக் கண்டேன்

சீர்கெட்ட சமுதாய வீதி தன்னில்
சிவப்புநிற விளக்குகளே ஒளிரக் கண்டேன்
கூர்கெட்ட மாந்தருக்கு நெறியைக் காட்டிக்
கூப்பிடுமோர் பச்சைநிற விளக்கைக் காணேன்;
தேர்விட்ட நெடுந்தெருவில் மேடு பள்ளம்
தெரியாமல் படர்கின்ற புதர்கள் கண்டேன்;
வேர்கெட்ட எட்டிக்கு நீரை வார்த்தார்
விழலுக்கே நீர்பாய்ச்சும் பேதை மாந்தர்.

* சாலி - நெற்பயிர்

கடவுளென வேதமெனச் சாத்தி ரங்கள்
காட்டுகிற நெறிகளெனச் சொல்லிச் சொல்லி
மடமையிலே மூழ்கிஒளிர் மதியைத் தேய்த்து
மாந்தரையே மாற்றுகிற கயமை கண்டேன்;
இடமுடைய மண்மீதில் நடப்ப தற்கோர்
ஏற்றநெறி காட்டாமல் விண்ணை நோக்கிப்
படர்வழியைக் காட்டுகிறார்; காவி ரித்தாய்
*பாலிருந்தும் கானலையே காட்டல் கண்டேன்.

ஒருத்தியென ஒருவனென உரைத்த காதல்
உயர்வாழ்வை அகப்பொருளென் றொருபேர் தந்து
பொருத்தமுற நம்முன்னோர் உரைத்து வைத்தார்;
புதியஅலை எனும்பெயரால் படமெ டுப்போர்
கருத்திலராய்ப் புறப்பொருளா மாற்றி விட்டார்
காசுக்கு வளைவதற்குக் கூசாப் பெண்டிர்
உருத்தெரிய மேனியெலாம் உலர விட்டால்
உருப்படுமோ சமுதாயம்? என்று நொந்தேன்

கலைக்கோட்டம் என்றிருந்தேன் காமக் கோட்டக்
கதவன்றோ திறந்துவிட்டார்; இளைஞர் அந்தப்
புலைக்கோட்டம் புகுவதற்கே ஆசைப் பட்டுப்
பொல்லாத கனவுகளைக் கண்டு கெட்டார்;
வலைக்கோட்டு மானினம்போற் சிக்கிக் கொண்ட
வஞ்சியரும் தறிகெட்டுத் திரிதல் கண்டேன்;
விலைப்பாட்டுக் கவிஞரெலாம் எழுதும் பாட்டை
விலைமாதும் கேட்பதற்குக் கூசி நிற்பாள்.

காதலெனும் மென்மலரைக் கசக்கி மோந்து
காட்டுகிற திரைப்படங்கள் உலவி வந்தால்
ஏதமுறத் தோலுரித்துக் காட்டும் பாங்கில்
எழுதிவரும் திரைப்பாட்டைக் கேட்டு வந்தால்
தீதகலக் காந்திநபி ஏசு புத்தர்
தெருத்தெருவா நின்றிருந்து போதித் தாலும்
ஓதுபயன் உண்டாமோ? தணிக்கை செய்வோர்
ஒளிபெற்ற கண்பெற்றால் நன்மை உண்டாம்.

---

* பாலிருந்தும் - பக்கத்திலிருந்தும்

## 25

# திரையுலகக் கற்பு

**கலிவெண்பா**

தென்னாட்டுப் பண்பனைத்துஞ் சேர்த்தெடுத்துக் காணுங்கால்
இந்நாட்டுக் கற்புநெறி ஈடில்லாப் பொற்புநெறி
என்றே இலக்கியங்கள் எக்காலும் ஓதிவரும்;
இன்றோ அதன்நிலைதான் ஏளனத்தின் கூடாரம்!
ஏற்றமிகும் கற்புநெறி இங்கே திரையுலகில்
நாற்றம் எடுத்தொழிய நாடகங்கள் ஆடுகின்றார்;
யாரும் அறியா தகத்தே நிகழ்வதெலாம்
பாரும் எனக்காட்டிப் பண்பை அழிக்கின்றார்;
கூடும் அகத்திணையைக் கூத்தாட்டக் காரரிவர்
ஆடும் புறப்பொருளை ஆக்கிப் படைக்கின்றார்;
மேடை மிசையேறும் மெல்லியலார் நல்லுடலில்
ஆடை அணிவதற்கே அச்சப் படுகின்றார்;
சுட்டெரிக்கும் போதில் சுருண்டுவிழும் ஓர்புழுப்போல்
வட்டமிட்டு மேனி வளைத்து நெளிந்தவர்தாம்
தாயாகும் பண்பைத் தவிடுபொடி யாக்கிவிட்டுப்
பேயாட்டம் ஆடிப் பெரும்பழியைச் சேர்க்கின்றார்;
கற்புநெறி யிங்கே கடைச்சரக் கானதலால்
மற்றபடி உண்டோ மதிப்பு?

***- 1.3.1970***

# 26

## வாழ்வுப் பாதையில் - பக்தி

'ஆண்டவனே எனைக்காக்க உன்னை யன்றி
ஆருள்ளார் இவ்வுலகில்? வேண்டி நிற்போர்
வேண்டுவதை வேண்டியவா றளித்துக் காத்து
வினைதீர்க்க வல்லவனே! கருணை நெஞ்சம்
பூண்டவனே! பொன்பொருள்கள் போகம் ஈவோய்!
புத்தாண்டுப் பிறப்புக்குப் பரிசுச் சீட்டு
வேண்டியவை வாங்கியுளேன்; மற்ற வர்க்கு
வீழாமல் தடுத்ததனைக் காப்பா யப்பா!'

'பரிசென்றால் ஒன்றிரண்டா? பத்து லட்சம்!
பகவானே உனைநம்பி வாங்கி யுள்ளேன்
அரசென்றால் ஈதன்றோ அரசு! நல்ல
ஆண்டவனும் நீயன்றோ? பத்து லட்சம்
பரிசொன்றும் எனக்குவரச் செய்து விட்டால்
பாரிலுனை எந்நாளும் மறக்க மாட்டேன்;
வரிசையுடன் வெள்ளிவிளக் கொன்று வாங்கி
வைத்திடுவேன் சந்நிதியில்; அருள்வா யப்பா!'

ஆண்டவன்முன் இவ்வண்ணம் வேண்டி நிற்கும்
அடியர்பலர் கோவிலுக்கு வந்து செல்வர்;
ஈண்டவர்தம் செயலெல்லாம் பக்தி என்றால்
இனியுலகம் ஏற்காது வெறுத்துத் தள்ளும்;
வேண்டுகிற பரிசிலது மற்ற வர்க்கு
விழவேண்டா என்னுந்தன் னலமா பக்தி?
காண்டகுநல் லின்பமெலாம் வையம் பெற்றுக்
களித்திடுக என்பதன்றோ பக்தி யாகும்

கையூட்டுத் தருவதுவா கடவுள் பக்தி?
　　காசுபணம் தந்ததனால் பங்குக் காக
நெய்யூற்றும் விளக்கொன்று தரலா பக்தி?
　　நினைந்தழுங்கும் காசுபண வெறியா பக்தி?
பையூட்டம் பெறுவதற்குக் கடவுள் முன்னே
　　பத்துலட்சம் பத்துலட்சம் எனலா பக்தி?
பொய்யூட்டும் வாணிகத்தைக் கோவி லுக்குள்
　　புகுத்துவதும் ஏய்ப்பதுமா நல்ல பக்தி?

முற்றிநலம் பழுத்திருக்கும் அன்பி னைத்தான்
　　மொழிந்திடுவர் பக்தியென உணர்ந்த நல்லோர்
பற்றியெழும் அவ்வன்பால் உளமு ருக்கிப்
　　பண்படுத்திக் கொள்வதுதான் பக்தி யாகும்;
பற்றுடனே மாந்தரிடம் அன்பு செய்யப்
　　பயிலாமல் கடவுளுக்குப் பூசை செய்தால்
உற்றவனும் ஏற்பதில்லை; உலகந் தானும்
　　ஒருபோதும் பக்தியெனக் கொள்வ தில்லை.

கைவிரல்கள் செபமாலை உருட்டும், மெய்யில்
　　கால்வரையும், நீண்டதொரு சட்டை தொங்கும்,
உய்வழிகள் மற்றவர்க்கே அவர்வாய் ஓதும்,
　　உளக்குறிப்பை முகத்தாடி மறைத்துக் காட்டும்,
பொய்விளையும் நெஞ்சத்தை மறைக்கும் சின்னம்
　　பொலிவுடனே அசைந்தாடி மார்பில் தொங்கும்;
செய்வினைகள் திரைமறைவில் கயமை காட்டும்;
　　திரிகின்றார் பக்தியெனும் பசுத்தோல் போர்த்து.

மெய்யான மண்டலங்கள், மறுமை யின்பம்,
　　மேலுலகம், என்றெல்லாம் நமக்குக் கூறிப்
பொய்யான வேடத்தால் உலகை ஏய்க்கும்
　　புரட்டர்களின் நடிப்பைப்போய் பக்தி என்றால்
அய்யய்யோ ஆண்டவனே நைந்து போவான்;
　　‘ஆத்திகரின் நாத்திகரே மேலாம்’ என்பான்,
‘செய்யாத செயல்செய்யும் கொடிய ரெல்லாம்
　　சேர்ந்திருக்கும் மறைவிடமா பக்தி’ என்பான்.

வட்டிக்கு வட்டியென்று வாங்கி, ஏழை
வயிறெரிய நெஞ்செரிய அவன்றன் வாழ்வில்
பட்டினிக்கு வழிவகுத்துச் சுரண்டிச் சேர்த்துப்
பாடுபடும் அவன்வீட்டில் இருளுண் டாக்கி,
விட்டெரிக்கும் மின்விளக்கால் கோவி லுக்குள்
வெளிச்சத்தைப் போடுகிறான்; விளக்கின் மேலே
ஒட்டுகிறான் தன்பெயரை; விளம்ப ரத்தின்
ஒருபகுதி தான்ஈது பக்தி யில்லை.

ஏசுசிவன் மால்அல்லா என்ற பேரால்
எத்தனையோ உண்டாக்கி வணங்கி நிற்போம்;
ஆசையுடன் ஒன்றின்பால் அன்பு கொண்டே
அயல்மதத்தை அவ்விறையைத் தாக்கித் தாழ்த்திப்
பேசிவரும் மதவெறியில் குறைந்தோ மல்லோம்;
பிழையுறநாம் ஏசலெலாம் யாரைச் சாரும்?
ஈசனையே சென்றடையும் என்பர் மேலோர்
எல்லாமும் அவனாக இருப்ப தாலே.

ஓரிறையைப் பலபெயரால் வாழ்த்து கின்ற
உண்மைநிலை உணராமல் ஒன்றைத் தாழ்த்தி
ஊரறிய வாய்மதத்தால் ஏசி வந்தால்
ஒப்புவனோ அவ்விறைவன் பக்தி என்று?
வேரரிந்து போட்டுவிட்டுச் செடியை நட்டு
விடுகின்ற தண்ணீரால் பயனே இல்லை;
ஆறறிவு படைத்துளநாம் கடவுள் என்னும்
அன்புருவை நன்குணர்ந்து பேணல் வேண்டும்.

தொட்டருகில் சென்றுதொழ உரிமை யில்லை;
தூரத்தே நின்றுதொழக் கூறு கின்றார்;
மட்டவிழும் மலர்தூவித் தாய்மொ ழிச்சொல்
வழிபாடு செய்வதற்கும் வழியே யில்லை;

எட்டுணையின் அளவேனும் உண்மை யின்றி
    ஏய்க்கின்றார் கடவுளையே என்றால், பக்தி
மொட்டவிழும் என்றின்னும் நம்ப லாமோ?
    மூடமதிச் செயலுக்கா பக்தி யின்பேர்?

தெருவோரம் குத்துக்கல் தெரிந்தாற் போதும்
    சிலநாளிற் கடவுளென அதன்பேர் மாறும்;
திருநீறும் குங்குமமும் ஒருநாள் தோன்றும்;
    சிலமலர்கள் அதன்தலைமேல் மறுநாள் தோன்றும்;
வருவோரும் போவோரும் அதனைக் கண்டு
    வழிநின்று வியந்துபல பேசிச் செல்வர்;
மறுநாளே பாவாடை யம்ம னாகும்
    மலர்சூடம் ஊதுபத்தி வாடை வீசும்.

பாவாடை யம்மனுக்கு வெள்ளி செவ்வாய்
    பாலாலே அபிடேகம் நடக்கும்; அங்கே
பூவோடு வருமாதர் கூட்டம் சேரும்;
    பூவாடைப் பக்தர்களின் குழுவும் கூடும்;
போவாரும் வருவாரும் மிகுத லாலே
    பொலிவுள்ள உண்டியலும் அங்கே தோன்றும்;
ஓவாதே உண்டியலும் நிறைவ தாலே
    உள்நாட்டுப் பூசல்களும் மிகவே தோன்றும்,

குத்துக்கல் சாமிக்குச் செல்வம் பொங்கிக்
    குவிகின்ற நிலைவரலும் உரிமைக் காகப்
பத்தருக்குள் அடிதடிகள் குத்து வெட்டுப்
    பரிமாறல் தவறாமல் நடப்ப துண்டு;
குத்துக்கல் எனதென்றே ஒருவன் சொல்வான்;
    குங்குமத்தை முதன்முதலில் நான்தான் போட்டுப்
பத்திக்கு வழிவகுத்தேன் என்பான் மற்றோன்;
    பணமெனக்கே சொந்தமென்பான் இடத்துக் காரன்

வெள்ளிமணி, தங்கமணி, *அக்கு மாலை,
வேடத்தால் பொலிகின்ற சமயச் சின்னம்,
வெள்ளமென வருதிரளில் ஓடும் தேர்கள்,
வீதியிலே கண்டபடி செய்யும் பூசை,
கொள்ளைநிதி மிகத்திரட்டி இறைவன் பேரால்
கூத்தாடல், எனுமிவைதாம் பக்தி யல்ல;
உள்ளமதில் தூய்மைநிலை இல்லை என்றால்
ஒவ்வொன்றும் வெளிப்பகட்டுச் செயலே யாகும்.

காயமிது மாயமென்பார், காய கல்பம்
கண்டருந்தித் தம்முடலைக் காயம் செய்வார்;
மாயமடா இவ்வுலகம் என்பார், நம்மை
மயக்கிமிகப் பொருள்தொகுக்க மாயம் செய்வார்;
தேயுமடா சிற்றின்பம் என்பார், அந்தத்
தெரிவையர்தம் நலம்நினைந்தே தேய்வர் நாளும்;
சாயமெலாம் வெளுத்திடினும் மீண்டும் பூசித்
தம்வாழ்வைப் பக்தியினால் மெருகு செய்வார்.

நிலையாமை உணர்த்துவதே பக்தி என்றால்
நீணிலத்தை வெறுத்துவிடல் பக்தி யன்று;
நிலையாமை தனையுணர்ந்தே உலக வாழ்வில்
நிலைத்தசெயல் செய்வதுதான் பக்தி யாகும்;
கலையாமல் தன்மனத்தைக் கட்டுப் பாட்டில்
கட்டுறுத்துக் கடமைகளைச் செய்வ தொன்றே
உலையாத கண்ணியஞ்சேர் பக்தி யாகும்;
உலகத்தை விரும்புவதே உயர்ந்த பக்தி.

மேலுலக வாழ்வுக்கு வழியைக் காட்ட
மேன்மை பெறும் இவ்வாழ்வை மாயம்என்போர்
பாலுடனே முந்திரிகைப் பழங்கள் உண்டு
பயன்பெறுவர் பணம்பெறுவர் பக்தி என்பர்;

* அக்குமாலை - உருத்திராக்கமாலை

காலளவு தொங்குகிற தங்க மாலை
      கழுத்தணிந்து மெய்யடியார் போல்ந டிக்கும்
போலிகளை நம்பாதீர்! கண்ணை மூடிப்
      புலம்பாதீர்! விழிதிறந்தே உலகைக் காண்பீர்!

கையகத்தே பழமிருக்கக் கிளையில் தொங்கும்
      கனிதனக்கே வாய்திறந்து நிற்றல் நன்றோ?
வையகத்தை நம்பாமல் பக்தி என்று
      வானத்தை நோக்குவதால் என்ன கண்டோம்;
*மையகத்தில் படராமல் தூய்மை செய்து,
      வாழ்ந்துவரும் தாயகத்தின் பக்தி பூண்டு
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி
      வானுலகை இவ்வுலகில் படைப்போம் வாரீர்!

(வானொலியில் இப்பாடலைக் **கேட்ட** பக்தர்கள் கண்டனக் கடிதங்கள் கணக்கின்றி எழுதினர்)

***- திருச்சி வானொலி நிலையம்***
***14.4.1970***

மை அகத்தில் படராமல் - மனத்தில் மாசுகள் படராமல்

# 27
# இன்றைய மனிதன்

பூவுலகங் கண்மலரப் பொங்குங் களிசிறக்கப்
*பாவுங் கதிர்பரப்பிப் பைய வருங்கதிரோன்
நட்ட நடுவானில் நண்ணிவெயில் விட்டெரிக்கும்
பட்டப் பகலில் பலபேர் நடமாடும்
வெட்ட வெளியில் விரிந்த நடுத்தெருவில்
**முட்ட நரைத்த முதுமைப் பெருங்கிழவர்
தாங்கும் இடக்கையில் தண்டூன்றித் தந்தலைமேல்
ஓங்கும் வலக்கையில் ஒள்விளக்கை ஏந்திநின்று
முன்னே வருவோர் முகமெல்லாம் பார்த்தலுத்துப்
பின்னேயுந் தேடிஅவர் பேதலித்து நின்றிருந்தார்;
ஆண்டு வருவோர்தாம் அக்கிழவர் பாலணுகி
'ஈண்டெதனைத் தேடி இளைத்தீரோ' என்றார்க்குத்
'தேடுகிறேன் மாந்தனைத்தான் தேடி அலைந்தலைந்து
வாடுகிறேன்' என்றுரைத்தார்; 'வெய்ய பகல்தனிலோ
கையில் விளக்கெடுத்துக் காணப் புறப்பட்டீர்?
வெய்யில் கொடுமை விளைத்த புதுமையிதோ?
ஒன்றும் புரியவில்லை உம்செயலே விந்தையதாம்'
என்று பலசொல்லி எள்ளி நகைத்தார்கள்;
'எள்ளி நகைப்போரே இவ்வண்ணந் தேடினுமே

---

*பாவும் கதிர் - பரவிய ஒளியை, **முட்ட - நிறைய

உள்ளும் மனிதனைநான் ஓரிடத்துங் காண்கிலனே'
என்று விடையிறுத்தார் எல்லாந் தெரிகிழவர்;
ஒன்றுங் கதையிதனுள் உண்மைப் பொருளென்ன?
கட்டுடலுங் கைகாலும் கண்ணும் பிறவுறுப்பும்
மட்டும் உடையானை மாந்தன் எனப்புகலார்;
ஒப்பிலா நல்மனமாம் ஒருறுப்புக் கொண்டவனே
இப்புவியில் வாழ்மனிதன் என்றுரைக்கத் தக்கவனாம்;
பட்டுடையும் வானுயர்ந்த கட்டமும் எக்காலும்
தட்டறியாச் செல்வமுடன் மற்றுமுள எப்பொருளும்
பெற்றவனை நாகரிகம் பெற்ற மனிதனெனச்
சொற்றவரைக் கண்டதில்லை; தூய்ய அகத்துறுப்பா
அன்புமுதற் பண்புகட் காளாகி நின்றானே
மன்பதையுள் போற்றும் மனிதன் எனப்படுவான்;
பண்புமனம் அற்றவரே பார்முழுதும் ஈண்டிவிட்டார்
பண்புமனம் கொண்டவரைப் பார்த்தல் அரிதாகும்
என்னுங் கருத்தை எடுத்து விளக்குவதே
முன்னங் கதையின் முழுமைப் பொருளாகும்;
தென்னாட்டு முன்னோர் திணையிரண்டு சொல்லிவைத்த
பண்பாட்டை எண்ணிப் பகுத்துணர நாம்மறந்தோம்,
மக்கள் உயர்திணையாம்; மாண்பார் உயர்ஒழுக்கம்
மிக்கமையால் அத்தகுநல் மேன்மைநிலை பெற்றார்கள்,
தேன்தமிழில் அந்தத் திணையென்னுஞ் சொல்லுக்குள்
ஆன்ற பொருள்ஒழுக்கம்; அவ்வொழுக்கம் இல்லாரேல்
மக்கள் நெடிலாகி மாக்கள் எனவாகித்
தக்க நிலையின்றித் தாழ்ந்த திணையாவர்;
மக்கள் வடிவொன்றால் வாய்க்கா துயர்திணைதான்
மக்கள் இயல்பதுதான் மாண்பார் உயர்திணையாம்
என்னுங் கருத்தை இலக்காக்கி வாழ்ந்தோமா?

இன்னும் மனிதரெனும் பேரால் இயங்குகிறோம்;
விண்ணிற் பறக்கின்றோம் வெற்றி சிறக்கின்றோம்
எண்ணிற் பெருமைஎலாம் எண்ணில் அடங்காவே!
ஆழ்புனலில் மூழ்குகிறோம் ஆங்கெழிலா நீந்துகிறோம்
சூழ்பெருமை அத்தனையும் சொல்லுக் கடங்காவே!
என்று பறைசாற்றி எக்களித்து நிற்கின்றோம்.
நன்றுநன் றென்றாலும் நாணும் நிலையுளோம்;
நம்மிற் பறவையினம் நன்றே பறப்பதுண்
டிம்மி யளவும் இரும்புனலில் நீந்துவதில்
மீனிற் சிறக்கவிலை மேன்மை நமக்கேது?
வானிற் படுதோல்வி! வார்புனலில் அத்தோல்வி!
விண்ணகத்தும் நீரகத்தும் வெற்றி இலைஎனினும்
மண்ணகத்து வெற்றிஎதும் வாய்த்ததுவோ? வாயில்லை;
காட்டில் விலங்கினமுங் கண்டபடி தானடக்கும்
நாட்டில் திரிகின்ற நம்நடையும் அப்படியே;
நல்ல நடையுண்டா? நம்நடையில் செம்மையுண்டா?
இல்லை பொலிவுண்டா? ஏனோ முடமானோம்?
கற்கின்றோம் நூல்கள் கசடறவே, கற்றவணம்
நிற்கின்றோம் என்றுரைக்க நீதியுண்டா? நன்கு
நடக்காமல் நிற்கின்றோம்; நாவன்மை கொண்டோம்
அடுக்காத தீச்செயல்கள் ஆயிரமே செய்தாலும்
மூடி மறைப்பதற்கே முன்கற்ற கல்வியிலே
தேடி அலைந்து தெரிவிப்போம் சான்றுகளும்;
கற்றார், பழிக்குக் கடுகளவும் நாணவிலை;
மற்றார் அதற்கு மனங்கூசி நிற்பர்;
உரிமை உரிமைஎன்றே ஓயாமற் சொல்லி
மருவும் உரிமை மனிதர்பொதுச் சொத்தாக
எண்ணா தலைகின்றோம் ஏய்த்துத் திரிகின்றோம்

பண்ணா தனவெல்லாம் பண்ணி மகிழ்கின்றோம்;
வாழ்வின் நலமெல்லாம் வாய்க்க முயன்றிடுவோம்
தாழ்வு வருமேல் தரியோம் அதுமுறைதான்;
ஆயினுமவ் வாழ்க்கை அயலவர்க்கும் வேண்டுமன்றோ?
தீயனவே செய்ததனைத் தீய்த்துக் கரியாக்கி
மாய்ப்பதுதான் நல்லதொரு வாழ்வாமோ?அன்னவரை
ஏய்த்துப் பிழைப்பதுதான் ஈங்கினிய வாழ்வாமோ?
மாண்புயர்ந்த காதல் மலரைவிட மெல்லிதெனக்
காண்பதுதான் நம்முன்னோர் கண்டுரைத்த நல்வழியாம்;
இல்லறத்து வாழ்வில் ஒருவன் ஒருத்திஎன்ற
நல்லறத்தைச் சொல்லி நடந்தவரும் நம்முன்னோர்;
நாகரிகப் பேரால் நலமறியாப் பாழுக்கு
வேகமுடன் ஏகுகிறோம்; வீணை நரம்பதனை
மெல்ல வருடாமல் வேல்கொண்டு சாடுகிறோம்;
நல்லதொரு பூவை நசுக்கிக் கசக்கிவிட்டுச்
சொல்லரிய தேன்சுவைக்கச் சூழுகிறோம் அந்தந்தோ!
இல்லறத்தில் வாழும் இருவர் பெறுமின்பம்
ஈங்குத் தனியுடைமை; இவ்வரிய செம்மைநெறி
நீங்கிப் பொதுவுடைமை யாக்க நினைக்கின்றோம்
இன்பம் பெறவே இழிசெயல்கள் அத்துணையும்
வன்பிற் புரிந்திங்கு வாழ்கின்றோம்; நாம்மனிதர்!
நட்பைப்போல் நற்பண்பு நானிலத்துக் கண்டதிலை
அப்பப்பா அவ்விடத்தும் ஆற்றுகிறோம் வஞ்சகங்கள்;
நம்மைத் தெளிந்திருக்கும் நண்பர்க்குந் தீமைசெயல்
செம்மை நெறிஎன்றே செய்து வருகின்றோம்;
எள்ளுங் கயமை எவையுளவோ அவ்வெல்லாம்
உள்ளம் உவந்தே உயர்வாக ஆற்றும்நமை
மக்களே போல்வரென வைத்திருக்கும் இவ்வுலகம்

மக்களெனப் போற்றி மதித்து வழங்காது;
நாட்டில் பொதுத்துறைகள் நல்ல பணித்துறைகள்
வேட்டம் புரியிடம்போல் தேட்டை யடிக்கின்றோம்;
நீதி யுரைக்கும் நெடுமன்றில் பேரறத்தை
மீதி யிருக்கத்தான் விட்டோமா? நம்மாட்சி!
ஆண்டவன் கோவிலுக்குள் ஐயஓ! நாம்புகுந்து
வேண்டா வினையெல்லாம் செய்யாமல் விட்டோமா?
செய்யாத தீமையிலை செய்யா இடமில்லை
நையாமல் நைந்துமனம் நாளும் உருகுகிறேன்;
நீதிகெடும் மாந்தர்தமை நெஞ்சம் நினைந்துவிடின்
வேதனைகள் கொஞ்சமல்ல வெந்துழன்று வாடுகிறேன்;
பண்புடையார்ப் பட்டுண் டுலகம் எனவுரைத்த
பண்புணர்ந் தாற்றுவமேல் பாரில் உயர்ந்திடுவோம்;
ஆதலினால் பண்புயர்க அன்புயர்க என்றுசில
ஓதி முடித்தேன் உவந்து.

# 28
# வெம்புவான் கம்பன்

**கலிவெண்பா**

செந்நெல்லும் பைங்கரும்புஞ் சேர்த்து விளைவித்துப்
பொன்கொழிக்கச் செய்தமையாற் பொன்னியெனும்
பேர்கொண்டாள்;
காணும் இடமெல்லாங் காவிரித்துச் செல்லுதலால்
பேணுமொரு காவிரியாம் பேர்பூண்டாள்; நாளெல்லாம்
வற்றா வளஞ்சுரந்து வாழ்வளித்துக் காப்பதிலே
பெற்றாள் எனவுரைக்கப் பெற்றாளவ் வாரணங்(கு)
உச்சி முடியிருந் தோடிவருங் கங்கையினும்
மெச்சும் புனிதத்தால் மேம்பாடு கொண்டவளின்
*கால்பட்ட மண்ணெல்லாம் **கஞ்சமுறு செல்வமகள்
கால்பட்டுப் பூத்துக் களிநடனஞ் செய்ந்நாடு
சால்பட்ட செய்யெல்லாஞ் ***சாலி தலைசாய்த்து
வேல்தொட்ட கண்மடவார் வெட்குதல்போற் காட்சிதரும்
வந்தார் பசிநீக்கி வாட்டந் தவிர்க்கின்ற
நந்தா வளநாடு நன்செய்ப் பெருநாடு;
நாற்று வளத்தாலே நானிலம் போற்றும்வணம்
சோற்று வளம்படைத்த சோணாட்டுப் பேரூரில்
பாட்டரசன் தான்பிறந்தான் பன்னும் புகழ்ச்சோழ

கால்பட்ட - வாய்க்கால் சென்ற, ** கஞ்சம் - தாமரை, ***சாலி -நெற்பயிர்

நாட்டரசன் வேத்தவையில் நண்ணித் தமிழ்வளர்த்தான்;
கூட்டரசு கொண்டிலங்கு கோமான் சடையப்பன்
காட்டியநல் லன்பால் கலைக்கோவில் ஒன்றெடுத்தான்;
*நாட்டரசன் கோட்டை நகர்விடுத்துத் தென்பாண்டி
நாட்டரசன் கோட்டை நகரடைந்தான்; அப்பதியில்
கம்பன் கதைமுடித்தான் காயச் சுமைவிடுத்தான்;
நம்பன் புகழ்நிற்க நண்ணினான் கல்லறைக்குள்;
சாவேந்திப் போய்விட்ட சான்றோன், கவியுலகிற்
பாவேந்தன் என்றுரைத்த பாட்டாளி, இவ்வுலகைக்
காண நினைந்தின்று கம்பன் வருவானேல்
நாணம் மிகக்கொண்டு நம்மை நகைப்பானே!
மாந்தர் உருவுடையார் மானஞ் சிறிதுமிலார்
போந்து புரிகின்ற புன்மையெலாங் காணின்
மகிழ்வானோ? அன்றி மனமுவந்து நெஞ்சாற்
புகழ்வானோ? சற்றே புகலுங்கள் பொய்வேண்டா;
நம்பவா சொல்கின்றீர்? நம்செயலைக் கண்டவுடன்
வெம்புவான் வெம்புவான் வெம்பியே நொந்திடுவான்;
ஆயிரம்பல் லாயிரமா ஆக்கிவைத்த பாக்கடலுள்
போயிறங்கி முக்குளித்துப் புத்தம் புதுச்சுவையை
மாந்திக் களித்தோர் மதிமயங்கி அக்கடலுள்
நீந்திக் குளித்ததற்பின் நீள்கரையில் ஏறாமல்
அந்தச் சுவைமயக்கில் ஆழ்ந்து திளைத்தவராய்ச்
சொந்தக் கவிபுனைந்து சொல்லரசன் கம்பன்றன்
பாட்டுக்குள் ஏற்றியே பாடிக் களித்தார்கள்;
**கேட்டுக் கவிகளைத்தான் கேட்டுப் புலவனிவன்
வெம்பா திருப்பானோ? வெம்புவான் வெம்புவான்
அம்மா அவன்வெம்பும் வேதனைக்கோ ரெல்லையிலை:

* நாட்டு அரசன் கோட்டை நகர் விடுத்து - நாட்டை ஆளும் அரசனுடைய கோட்டை சூழ்ந்த நகரை நீங்கி. **கேட்டுக் கவிகள் - கெட்ட கவிதைகள்

அச்சுப் பொறியில்லாக் காலம் அவன்காலம்
நச்சிப் படியெடுத்தார் நாவலன்றன் பாடல்களை
ஏட்டில் எழுதும் எழுத்தாணிப் போக்கினிலே
ஓட்டிக் கெடுத்தார்கள்; ஓதியநற் பாடல்களை
வாய்மொழியாற் சொன்னவரும் வாய்போன போக்கினிலே
போய்மகிந்தார்; பின்னர்ப் புகுந்துவிட்ட பேதங்கள்
பாட்டுக்கு நூறாய்ப் பரந்து விரிந்தனவாம்;
நாட்டுக்குள் கம்பன் நயந்து வருவானேல்
பாட்டுள் கிளைத்தெழுந்த பாடத்தைத் தன்செவியாற்
கேட்டுக் களிப்பானோ? கேளாமல் வெம்பிடுவான்;
ஆய்ந்துரைத்த தன்பாவில் யார்யாரோ கைவைத்துத்
தோய்ந்துரைத்த பாடமிது தூயதிது வென்றே
திருத்தங்கள் செய்வதையும் சிற்சிலபா கம்பன்
விருத்தங்கள் அல்லவென வெட்டிக் கழிப்பதையும்
கம்பனவன் வந்திங்குக் காண்பானேல் "இவ்வண்ணம்
வம்புகள் செய்வதற்கு வாய்த்த முறையென்ன?
இன்றெனது பாட்டில் இவர்க்கோர் உரிமையுண்டா?"
என்றியம்பி நெஞ்சம் இனைந்தன்றோ வெம்புவான்;
பாட்டுலகைக் காணப் பரிவோடு கம்பனிந்த
நாட்டகத்தே வந்தால் நலிவெய்திப் போகானோ?
பாடும் மரபறியார் பாட்டின் திறமுணரார்
கூடும் இலக்கணத்தைக் கொல்லும் வகைதெரிவார்
பாவென்ற பேராலே பாடித் தொகுத்தெடுத்து
நாவொன்று கொண்டு நவில்கின்றார்; அன்னவர்தாம்
நாட்டிற் கவிஞரென நல்லதொரு பேர்தாங்கி
ஏட்டில் எழுதியதும் ஏறுநடை போடுகின்றார்;
குற்றஞ் செறிந்தகவி கொட்டித் திரிபவரைச்
செற்றமிகக் கொண்டு செவியை அறுப்பதற்குங்
குட்டுதற்கும் வெட்டுதற்கும் கூறும் அவர்சொல்லைத்

தட்டுதற்கும் ஆளில்லை என்ற தருக்காலோ
பாட்டுலகைப் பாழ்படுத்திப் பாடித் திரிகின்றார்?
கேட்டைக் களையக் கிளர்ந்தெழுவார் இல்லைஎனில்
பாட்டுந் தமிழும் பரவும் இலக்கியமுங்
கேட்டுக் கிலக்காகிக் கீழ்நிலையிற் போய்வீழும்;
வீழுநிலை வந்து விடுமோ எனமயங்கிச்
சூழும் புகழ்க்கம்பன் துன்பத்தால் வெம்பிடுவான்;
அண்டை மொழிகள் அருமைத் தமிழ்மொழிக்குள்
ஒண்டஇடம் தந்தால் ஒலிக்கும் மரபறிந்து
சொல்லும் முறைதெரிந்து சொல்லினான் நம்கம்பன்;
புல்லுங் கவிபுனைவோர் புக்கமொழிச் சொல்லைஎலாம்
அள்ளிச் செருகி அயன்மொழியின் ஓசைதனைச்
சொல்லிக் கதைக்கின்றார் சொன்னாற் புரிவதிலை;
செம்மொழியாம் நம்மொழிக்குச் சேயாய்ப் பிறந்திருந்தும்
எம்மொழிதான் வந்தாலும் ஏத்தித் துதிக்கின்ற
பேதை மனத்தவராய்ப் பேரால் தமிழரென்பார்
தீது வரும்நிலையில் செந்தமிழைக் கண்டாலும்
ஏதும் அறியா திருக்கின்றார் பேரளவில்;
ஓதுந் தமிழின் உயர்வொன்றும் எண்ணுகிலார்;
தாய்மொழிக்குத் தன்னுரிமை தாராத வன்கொடுமைப்
பேய்நிலையைக் கண்டபினும் பேசா திருக்கின்றார்;
இத்தகுநன் மாந்தர்தமை எம்கம்பன் காணுங்கால்
“பித்தரெனத் தக்கவரைப் பிள்ளைஎனப் பெற்றாளே!
நன்றறிவு காண்கின்ற நாளிவர்க்கு வாராதோ?”
என்றெல்லாம் எண்ணி இரங்கிமனம் வெம்பிடுவான்;
எல்லா வுயிர்க்கும் பிறப்பொக்கும் என்றுணர்ந்தும்
அல்லா நெறிசென்றோம் அப்பிறப்பில் தாழ்வுயர்வும்
செல்வம் பதவியெனச் செப்பும் அவற்றுள்ளும்
பல்வகைய வேற்றுமை பண்ணிப் பிளந்தோம்

கொடுப்பாரும் அப்பொருளைக் கொள்வாரும் இல்லா
மிடுக்கான ஒருலகம் வேண்டும் எனவெண்ணிக்
காதையொன்று கண்டான் கனவொன்றுங் கண்டானிங்
கேதொன்றுங் காணவிலை இன்றுவந்த நம்கம்பன்
தீது மிகக்கண்டான் தேவையிலா வேற்றுமைகள்
மோதி வரக்கண்டான் மூச்செறிந்து வெம்புகிறான்;
பெண்மைக் குயர்வுதரப் பேணி மதிப்பளிக்கக்
கண்ணுக் கிணையாக் கருதிவர எண்ணிச்
சிறையிருந்தா ளேற்றத்தைச் செப்பினான் கம்பன்
நிறைமிகுந்த பெண்டிர் நெறிபிறழ்ந்து செல்வதையும்
நாகரிகப் பேரால் நடமாடிச் சீர்குலைந்து
வேகமுடன் பாழ்நிலைக்குள் வேண்டிப் புகுவதையும்
ஆடைக் குறைப்பென் றலங்கோலஞ் செய்வதையும்
மேடைப் பொருளாகி மேல்மினுக்கித் தாழ்வதையும்
காணுங்கால் நம்கம்பன் கண்பொத்தி நின்றிடுவான்;
நாணம் எனுமொன்றை நாடே வெறுத்ததென
வேடன்கைப் புள்ளேபோல் வெம்பியே போய்விடுவான்
நாடுபுகழ்க் கம்பன் நலிந்து

***கம்பர் விழா திருமலைராயன்பட்டினம்***
***16.4.1967***

# 29

# பாரதி கண்ட பெண்ணுரிமை

நாட்டுணர்வு மூட்டி நரம்பில் முறுக்கேற்றிப்
பாட்டுணர்வைத் தீட்டிப் படைவலிமை காட்டியவன்,
பாரதியாய்ப் பாவலனாய்ப் பார்புரக்குங் காவலனாய்ச்
சீரதிகம் கொண்டிலங்குஞ் செம்மலவன், 'இந்நாட்டை
யாரடிமை கொண்டான்?' எனக்கனன்று நோக்கியவன்
பேரறிவால் ஓருண்மை பேசுகின்றான், மானிடரே!
வீட்டடிமை நீக்காமல் நாட்டடிமை போக்கவரின்
ஏட்டளவில் நிற்குமலால் எள்ளளவும் நன்மையிலை;
பெண்ணை மிதித்துவிட்டு மண்ணை மதித்தெழுந்தீர்!
கண்ணை யிழந்தபினர்க் காட்சியிலே ஏதுபயன்?
மண்ணுரிமை வேண்டுமெனில் பெண்ணுரிமை வேண்டுகநீர்
கண்ணிரண்டில் தாழ்வுயர்வு காட்டல் முறையாமோ?
பட்டங்கள் ஆள்வதுவும் சட்டங்கள் செய்வதுவும்
மட்டவிழும் கோதையர்க்கு மட்டும் விலக்காமோ?
கூர்த்த மதியுடைமை கோதையர்க்கும் உண்டிங்கே
யார்க்கும் இளைப்பில்லை எத்துறைக்கும் நேர்நிற்பர்;
பூத்தொடுக்கும் மெல்விரலால் போர்தொடுப்பர்; பூவுலகம்
ஏத்தெடுக்கச் செங்கோல் எடுத்திருப்பர் ஆமாம்;
அடுப்பிற் குழலூதும் அவ்வாயால் மூங்கில்
கொடுக்குங் குழலூதும் கொற்றம் அவர்க்குண்டு;
பாலூட்டித் தாலாட்டிப் பாட்டிசைத்த தாய்க்குலத்தை,

மாலூட்டுந் துன்பத்தை மாற்றுகின்ற பெண்ணினத்தைப்
பேணா தடிமையென்று பேசுகின்றீர்! சற்றேனும்
நாணா துரிமைபெற நாடுகிறீர் பித்துடையீர்!
பேயென்றும் நாயென்றும் பேதுரைகள் கொட்டுகிறீர்!
தாயென்றுந் தங்கையென்றுந் தக்கதுணை என்றெல்லாம்
உற்றமுறை சொல்வதற்கிங் குற்றவரார்? மாதரன்றோ?
குற்றமெலாஞ் செய்தாலும் பற்றுடனே காப்பவரார்?
அன்னை நகிற்பாலால் ஆற்றல் மிகப்பெற்றீர்,
மின்னை நிகர்மனையின் விஞ்சுசுவைத் தேன்மொழியால்
விண்ணையுஞ் சாடிவரும் வீரமுற்றீர், என்றாலும்
பெண்ணை யிகழ்கின்றீர்! பெண்ணுக்கு முன்னேற்றம்
தாராத நாட்டில் தருமுரிமை மெய்யாகச்
சேராது; பொய்யன்று செப்பும் வரலாறே;
'இன்றுரிமை வேண்டி எழுந்துவிட்டார் பெண்ணினத்தார்
நன்றன்று பெண்ணுரிமை; நால்வேதம் ஒவ்வாது
அடிமைப் பிறப்பாகும் அப்பிறவி' என்றால்
கடிதே அதைப்பொசுக்கக் காட்டுகிறான் தீப்பந்தம்;
மங்கையர்க்குச் சார்பாக மாவீரன் பாடுவதை
இங்கெடுத்துப் போற்றுவமேல் ஏற்றமுறும் நம்நாடு;
'ஞனம் உரிமைஅறம் நல்லகுடிப் பெண்மகட்குப்
பேணுங் குணமாகும்; பீடுபெறும் இக்குணங்கள்
பெற்றுள்ள மாதரார் பெற்றெடுத்த நன்மக்கள்
கற்றறிவும்; தாய்நாடு காக்குங் கடனுணர்வும்
முற்றி யிருப்பர்; முளைத்துவரும் நெற்பயிர்கள்
உற்ற நிலத்தியல்பை ஒத்திருத்தல் உண்மையன்றோ?
எஞ்சாத ஞானத்தின் எக்களிப்பும், யாவர்க்கும்
அஞ்சாத நல்வழியும், ஆண்மையுறு நன்னடையும்,
நேர்கொண்ட பார்வையொடு நேரிழையார் பெற்றுவிடின்

சீர்கொண்ட நம்நாடு செம்மை திறம்பாது;
நாற்றிசையும் ஓங்கியுயர் நாடெல்லாம் இந்நாட்டுக்
கோற்றொடியார் சென்றங்குக்கூடும் புதுமைகளைக்
கொண்டுவந் தின்பங் கொழிக்கச் செயவேண்டும்;
மண்டும் புகழ்நூல்கள் வாழ்வில் உறுநுட்பம்
கற்றுத் தெளிந்துணர்ந்து கட்டுக் கதைதகர்த்துச்
சுற்றுந் துயர்துடைக்கச் சொல்லும் புதுமைப்பெண்
நாட்டுக்கு வேண்டு, மென நல்ல சுவைகூட்டும்
பாட்டுக்கு வேந்தனெனும் பாரதி சொல்லிவைத்தான்;
'பூவுலகோர் நம்நாட்டைப் போற்றிப் புகழவெனில்
பாவையர்கள் முன்னேற்றப் பாதைதனிற் சென்றிடுக'
என்னுங் கருத்தை எடுத்துரைத்தான்; அன்னவரும்
முன்னம் இருந்தகொடும் மூடப் பழக்கத்தைக்
கல்லிக் கடிந்தெறிந்து கல்வித் துறைமுதலாச்
சொல்லும் நெறியெல்லாந் தோன்றுகின்றார் முன்னேறி;
வாழ்விற் சரிபங்கு வாய்ப்பும் பெறுகின்றார்;
தாழ்வுறுதல் இல்லையவர் தாம்.

***திருச்சி வானொலி நிலையம்***
***14.1.1965***

## 30

## இதுவா முன்னேற்றம்?

முன்னேற்றம் பெற்றுவிட்டீர் மூடத் தனத்தைஎலாம்
பின்னேற்றிச் சுட்டெரித்தீர் பேருவகை கொள்கின்றோன்;
ஆனாலுந் தாய்க்குலத்தீர் அன்பால்நான் ஒன்றுரைப்பேன்
மேனாளில் செய்தவற்றை மீண்டும் நினைந்துளத்தில்
வாங்கும் பழியுணர்வால் வாட்டாதீர் ஆண்குலத்தை;
ஏங்கும் அடிமையென எண்ணி வருத்தாதீர்;
முன்னேற்றம் என்றுரைத்து மொய்குழலீர் செய்பவைதாம்
இந்நாட்டுப் பண்பாட்டை எள்ளி நகையாடும்;
கார்குழலைக், கொவ்வைக் கனியிதழை, வண்ணஎழில்
சேர்முகத்தைக், கைவிரலைச் செய்யும் அலங்கோலம்
கண்டுவிடின் ஐயஒ கண்ணீர் பெருகிவரும்;
பண்டை எழில்சிதைக்கும் பான்மையிதா முன்னேற்றம்?
கொண்டான் தவித்திருக்கக் கொஞ்சுமொழிப் பிள்ளைகளும்
திண்டாடிக் கூவத், தெரிவையர்கள் சங்கமென்று
வீட்டை மறந்துவிட்டு, வெள்ளைப் பொடிபூசி
ஈட்டும் பணச்செருக்கை எல்லார்க்கும் காட்டுதல்போல்
கையில் அசைந்தாடக் காசுப்பை தொங்கவிட்டு,
மெய்யின் எழில்காட்டி, வீதிஎலாஞ் சுற்றாதீர்;
பெண்மையைத்தான் தெய்வமென்று பேசுகின்றான் பாரதிஅம்
மென்மையைத்தான் ஏன்மறந்தீர்? மேவியநல் இல்லறத்தில்
ஏற்றுந் திருவிளக்கே ஏந்திழையார் என்றுரைப்பர்

தூற்றுந் தெருவிளக்காய்த் தோன்றுவதேன்? திங்கள்முகம்
காய்ந்துலர்ந்து காண்பதுமேன்? கட்டழகு மேனியெலாம்
தேய்ந்துலர்ந்து வாடியதேன்? சிந்திப்பீர்; நாகரிகப்
பேரால் கடைச்சரக்கைப் பேணுவதோ முன்னேற்றம்?
தீராப் பெருநோயாய்த் தீப்பழக்கம் சூழ்ந்ததுவே!
மேலாடை யில்லாமல் மேனி மறைக்காமல்
நூலாடை என்றுசொலி நுண்ணிடையில் சுற்றிவிட்டு
மெய்யெல்லாங் காட்டுகிற செய்கையிதோ முன்னேற்றம்?
தையல் இனத்துதித்தீர் தாய்க்குலத்தீர் ஆய்ந்துரைப்பீர்;
நாட்டை உருவாக்கும் நல்லகுலம் நீங்களம்மா
பாட்டால் குறைசொன்ன பான்மைக்குச் சீறாதீர்;
கல்வியிலும் ஆட்சியிலும் காட்டுந் திறமையிலும்
பல்வகையாம் நுண்கலையின் பாங்கினிலும் ஓர்நிகராய்
முன்னேற்றங் கொண்டுயர்க; மொய்குழலீர் நாடுயரும்
நன்னோக்கங் கொண்டுரைத்தேன் நான்.

***திருச்சி வானொலி நிலையம்***
***14.1.1966***

31

# பெண்ணின் பெருமை

ஆண்மைஎனப் பெண்மைஎனப் பேசு கின்ற
ஆயிரண்டின் கூட்டுறவே உலகம் ஆகும்;
ஆண்மையின்றிப் பெண்மையிலை பெண்மை யின்றி
ஆண்மையிலை; வீரமொன்று; காதல் ஒன்று;
மாண்பமைந்த இவ்விரண்டும் உயிர்ப்பண் பாகும்;
மாநிலத்தின் வளர்ச்சிக்கும் இவையே வித்தாம்;
வீண்மையது மேல்கீழென் றிவற்றுட் காணல்;
வியனுலகின் இருவிழியே ஆண்மை பெண்மை.

இருவிழியுள் உயர்ந்ததென ஒன்றைப் போற்றி
இழிந்ததென மற்றொன்றைத் தாழ்த்தித் தூற்றி
வருபவரும் உளராயின் பித்தர் *என்கோ?
வகைகெட்ட குறைபட்ட மதியர் என்கோ?
ஒருபொருளைக் காண்பதெனின் விழியி ரண்டும்
உறுதுணையாக் கொளலொன்றே இயற்கையாகும்;
அருள்வழியில் இல்லறந்தான் இனிதி யங்க
ஆண்மையுடன் பெண்மையிரு விழிக ளாகும்,

ஆணுயர்வா பெண்ணுயர்வா என்ற ஐயம்
ஆறறிவுங் கூரறிவுங் கொண்டோர் தம்பால்
நாணும்வகை நானிலத்தில் தோன்றக் கண்டோம்;
நலமில்லாப் புலமில்லா ஐயம் அன்றோ?

*என்கோ - என்பேனா

சேணுயர்ந்த வானுலகத் தேவர் தாமும்
சிவம்பெரிதா சக்திபெரி தாவென் றார்த்து
மாண்பழியச் செய்தனரேல் மண்ணில் வாழும்
மாந்தரைநாம் குறைசொல்லிப் பயனே இல்லை.

பாருலகில் *இவ்வையம் தோன்றி விட்டால்
பாழ்படுமே **இவ்வையம் என்ப தோரான்
சீருறவே தன்னலத்தை மிகுப்பான் வேண்டிச்
சிந்தித்தான் ஒருவழியை; அற்றை ஞான்றே
பேரழகுப் பெண்ணினத்தை இழித்து ரைத்தான்
பேயென்றான் நாயென்றான் மாயை என்றான்;
ஆருடைய மணிவயிற்றில் பிறந்தா னோஅவ்
வன்னையைத்தான் இவ்வண்ணம் இகழ்ந்து ரைத்தான்,

அடக்கத்தின் மறுபெயரே பெண்மை; தூய
அழகியலின் மறுபதிப்பே பெண்மை; அன்புத்
தொடக்கத்தின் பிறப்பிடமே பெண்மை; உண்மைத்
தொண்டுக்கோர் இருப்பிடமே பெண்மை; மற்றோர்
இடர்க்கிரங்கும் அருமைத்தே பெண்மை; வந்த
இன்னல்கொளும் பொறுமைத்தே பெண்மை; செல்வ
முடக்கத்தும் ஒப்புரவுப் பண்பே பெண்மை;
மொழிந்தவற்றின் கூட்டணியே பெண்மை யாகும்.

வணங்குகிற நிலைகொடுக்கும் அன்னை யாகி
வளர்காதற் கலைபடைக்கும் மனைவி யாகி,
உணங்கலிலா அன்புக்கோர் உடல்போல் நிற்கும்
உடன்வயிற்றுப் பிறப்பாகி, நெஞ்சில் ஊறும்
நுணங்குரிய பரிவுக்கே இலக்காய்த் தோன்றும்
நுண்ணிடைய மகளாகி, உலகில் நல்ல
குணங்களெலாம் வளர்வித்து மகிழ வைத்துக்
குளிர்வித்து வாழ்வதன்பேர் பெண்மை யாகும்.

*- இ + ஐயம், ** இ + வையம்

அறுசுவையாம் உணவனைத்தும் ஆக்கி வைப்பர்
அலுவலுக்குச் சென்றயர்ந்த கொழுநன் மீண்டு
வருநெறியில் விழிவைத்துக் காத்து நிற்பர்;
வளர்கல்விப் பள்ளிக்குச் சென்ற பிள்ளை
குறுகுறுவென் றோடிவரும் திசையை நோக்கிக்
கூடத்தில் அமர்ந்திருப்பர்; இல்ல றத்தின்
உறுபயனை வருவிருந்தைப் பார்த்தி ருப்பர்
ஒருபோதும் தந்நலமே கருதாப் பெண்டிர்

கண்ணுக்குப் புலனாகும் அமைதி யைத்தான்
கற்றவர்கள் பெண்மைஎனக் கழறி நின்றார்;
மண்ணுக்குப் பொறையுடைமை உரிமை என்றால்
மங்கையர்க்குப் பிறகன்றோ அதற்குச் சேரும்;
எண்ணுக்குள் அடங்காத இன்ன லுற்றும்
எள்ளளவும் தளராமல் உலகைக் காக்கும்
பெண்ணுக்கு நிகராக ஒன்றுண் டோ? அப்
பிறப்பெடுக்க மாதவந்தான் வேண்டு மம்மா!

முன்பிருந்த தமிழ்மாந்தர் பெண்ணி னத்தின்
முதன்மைக்கு மதிப்பளித்துப் போற்றி வந்தார்;
அன்பிருந்த காரணத்தால் ஆண்மை பெண்மை
அவ்விரண்டும் சமமென்று நினைந்து வாழ்ந்தார்;
நன்குணர்ந்த அவ்வைமுதல் மகளிர் தம்மை
நாட்டிலுயர் அரசரெலாம் மதித்து வாழ்ந்தார்;
பின்பிறந்தார் எப்படியோ பேத லித்தார்
பெண்ணினத்தை வேதனைக்குள் வீழ்த்தி விட்டார்.

கற்புக்கும் பண்புக்கும் இல்ல றத்தின்
காப்புக்கும் கண்ணகித்தாய் சான்றாய் நின்றாள்;
பொற்புக்கும் நற்கலைக்கும் தன்ன லத்தைப்
போக்குதற்கும் மாதவித்தாய் சான்றாய் நின்றாள்;
*அற்புக்கும் அருளுக்கும் ஆசை எல்லாம்
அடியோடு துறந்ததற்கும் சான்றாய் இங்கு
நிற்றற்கு மேகலைபோல் யாரே உள்ளார்?
நேரிழையார் பெருமைசொல இவரே போதும்,

அன்னையொடு தந்தையையும் தெய்வ மென்றார்;
ஆண்டவனை விளித்தவரோ அம்மே அப்பா
என்னவொரு பாவுரைத்தார்; சத்தி யாகிச்
சிவமாகி என்றவொரு பாட்டும் உண்டு;
முன்னையவர் மொழிந்தவற்றை உற்று நோக்கின்
முதலிடத்தைப் பெண்மைக்கே அளித்தி ருந்தும்
பின்னையவர் ஏன்மறுத்தார்? பெண்மைக் கேனோ
பிழைபுரிந்தார்? பிறபண்பின் நுழைவோ? யாதோ?

கல்விதனைக் கலைமகளென் றுரைத்து வைத்தார்;
கடலுலகை நிலமகளென் றழைத்து வந்தார்;
பல்வகைய செல்வத்தை மலரில் ஏற்றிப்
பணிந்த**திரு மகளெண்மர் என்றார்; நாளும்
சொல்விளையும் தமிழ்மொழியைத் தாயே என்றார்;
துணைசெய்யும் நன்மைஎலாம் நல்லார் என்றார்;
***எல்வளையர்க் கிவ்வண்ணம் மேன்மை தந்தும்
எப்படியோ பின்னாளிற் கீழ்மை தந்தார்,

*அற்பு - அன்பு **திருமகள் எண்மர் - அட்ட இலக்குமி
***எல்வளையர் -ஒலி பொருந்திய வளையலணிந்த பெண்டிர்,

உயிரினத்திற் கமைந்ததோர் இயற்கைப் பண்பே
    உரிமைஎனச் செம்பொருளோர் உரைப்பர்; ஆனால்
பயிரினத்தில் விலங்கினத்தில் பறந்து வாழும்
    பறவைமுதல் அஃறிணையில் உரிமை யாவும்
உயிரெனவே நிலைபெறுங்கால், பகுத்து ணர்ந்த
    உயர்திணையில் பெண்ணுரிமை மறுத்தல் ஏனோ?
*செயிர்அவர்மேல் தோன்றுவதேன்? சமமா எண்ணிச்
    சேர்ந்துறைந்து வாழ்ந்தாலென்? குறைந்தா போகும்?

**தமிழ்முனிவர் தாய்க்குலத்தின் பெருமை எல்லாம்
    தந்துரைத்த வண்ணமொரு சிலவே சொன்னேன்;
அமுதமொழிப் பாவையர்க்கு நான றிந்த
    அன்புரைகள் ஒன்றிரண்டு புகலல் வேண்டும்;
உமியளவுங் குறைசொல்லும் எண்ண மில்லை
    ஒவ்வாத செயல்முறைகள் காணும் போது
குமுறுமென துளக்கருத்தைச் சொல்வ தொன்றே
    கொண்டகடன்; எனக்கதுவே இயல்பும் ஆகும்,

கற்றறிந்த மகளிர்சிலர் திரும ணத்தைக்
    கடிந்தொதுக்கக் காண்கின்றேன்; 'கணவ னுக்கோர்
உற்றடிமை ஆவதுவோ? பிள்ளைப் பேறாம்
    உறுதுயரால் சாவதுவோ? அடிமை அல்லோம்;
பெற்றவர்சொற் படிநடவோம்' என்றே ஆர்ப்பர்;
    பெண்ணினமே திருமணத்தை வெறுத்து விட்டால்
அற்றுவிடும் மாந்தரினம்; பிறப்பே இல்லை;
    அன்னைநிலைக் கஞ்சுவதோ? இயல்போ ஈது?

*செயிர் - கோபம், **தமிழ் முனிவர் - திரு.வி.க.

மண்ணுரிமை வேட்டவர்தாம் வீரங் கொண்டு
    மறப்போரைத் தொடங்கிடுவர் முறையும் ஆகும்;
பெண்ணுரிமை வேட்டெழுந்தோர் ஆண்மை யோடு
    பெரும்போரைத் தொடங்குவது முறைமை யாமோ?
கண்ணுரிமை வேட்டெழுந்தே இமைக ளோடு
    கடும்போரைத் தொடங்கிடுமேல் விளைவென் னாகும்
பெண்ணுரிமை யாதென்னில் அடிமை யின்றிப்
    பேரன்பாற் சரிநிகராய் வாழ்தல் ஆகும்

மென்மையைத்தான் பெண்மையென உலகம் பேசும்
    மெல்லியலார் இவ்வுண்மை உணர்தல் வேண்டும்;
வன்மையைத்தான் ஆண்மையென நவில்வர் மேலோர்;
    வாய்ப்பிதனால் கடமைகளும் வேறு வேறாம்;
நன்மையைத்தான் நாடுகின்ற நங்கை யர்க்கும்
    நடைமிகுந்த காளையர்க்கும் உரிமை ஒன்றாம்;
புன்மையைத்தான் விட்டொழித்துச் சமமாய் நின்று
    புத்துலகப் பயணத்தைத் தொடங்கல் நன்றாம்.

சுவையுணவைச் சமைப்பதற்கு மறுத்து விட்டால்
    சொல்கின்ற பெண்ணுரிமை வந்தா சேரும்?
சுவையுணரா வாழ்வுமொரு வாழ்வா? நூல்கள்
    தொடுகின்ற கைகளினாற் பானை தொட்டால்
நவைஎதுவும் நிதழ்வதில்லை; தாலாட் டுப்பா
    நன்கறிந்த தாய்மார்தாம் எவரே உள்ளார்?
இவையறிந்தால் பிற்போக்காம்! நன்மை யாவும்
    எடுத்தெறிந்தா முற்போக்குக் காணல் வேண்டும்?

முன்னேற்றம் என்றுசொலி முழங்கும் மாதர்
    முகத்துக்குப் பொலிவுதரும் மஞ்சள் உண்டா?
மின்னேற்றம் பொலிமுகத்தில் பொடிமாப் பூசி
    மீசைக்குப் போட்டியிடல் நன்றோ? சொல்வீர்!

என்னோற்றோம் இதுகாண? தாழ்ந்த கூந்தல்
எப்படியோ உயர்ந்ததம்மா; கொண்டை என்று
பன்னூற்று வகைகளிலே பாழ்ப டுத்திப்
பாவையரே அழகெல்லாஞ் சிரிக்கச் செய்தீர்!

கானத்தும் குகையிடத்தும் வாழ்ந்த நாளைக்
காட்டுகிறார் முன்னேறிச் செல்லும் நல்லார்;
மானத்தைக் காக்கின்ற ஆடை தன்னில்
மதியுடையார் சிக்கனத்தை விழையார் அம்மா;
மேனிக்கும் மனத்துக்கும் மென்மை வேண்டும்
மேலாடை ஒன்றுக்கும் மென்மை வேண்டா!
மானுக்கு நிகராக வாழ்தல் ஒன்றே
மாதர்க்கு நற்பெருமை யாகும் அம்மா!

***திரு.வி.க. நினைவு நாள் - தஞ்சை***
***9.1.1966***

## 32

# அணையா விளக்கு

### நேரிசை ஆசிரியப்பா

கொடையே வாழ்வின் குறிக்கோ ளாக
உடையோன் அழகன் ஒருதனிச் செம்மல்
திரைகட லோடித் தேடிய செல்வம்
குறைவற வார்க்கும் நறுநெய் யாகக்
கலைத்திறன் முற்றக் கைவலா ரியற்றிய
நிலைத்தநற் கூடம் நெடியதோர் *தகழியா
ஏற்றிய விளக்கின் இலங்கொளி பெற்றுத்
தோற்றிய அறிவால் துலங்கிடும் மணிகாள்,
விளக்கெனும் ஒருசொல் விளக்கிடும் பொருளை
உளத்தினிற் புலப்படத் தெரிந்திடல் நன்றாம்;
இருளெனும் ஒருபகை எங்கும் பரந்து
பொருள்தெரி யாவணம் புதைத்ததை மறைத்திடும்!
தெரியாப் பொருளைத் தெள்ளிதின் நமக்குத்
தெரியச் செய்வது செவ்விய ஒளியே;
விளங்காப் பொருளை விளக்கிய ஒளியை
விளக்கென முன்னோர் விளம்பினர்; அதுதான்
உள்ளும் புறமும் ஒளிசெய் வகையால்
கொள்ளும் இருவகைக் கூறெனக் கூறுவர்;
கடல்வளை உலகிற் காரிருள் சூழ்ந்து,

*தகழி - அகல் விளக்கு

புடைபடு புறத்துப் பொருள்களை மறைத்து,
நேர்படக் காணா நிலையினைத் தந்து
சீர்கெடச் செய்யும்; செய்திடுங் காலை
இருளினை ஓட்டிப் பொருளினை விளக்கி
இருவிழி களிக்க வருமொளி ஒன்று;
மட்புலன் விளக்கி மயக்கந் தவிர்க்குங்
கட்புலன் காணுங் கதிர்விளக் கஃதாம்;
அகமெனு முலகில் அறியாப் பேரிருள்
புகுதலின் நல்லன புரியா தொளித்து,
நேர்படக் காணா நிலையினைத் தந்து
சீர்கெடச் செய்யும்; செய்திடுங் காலை
மருளினை ஓட்டி மாண்பினை விளக்கித்
திருவுளங் களிக்க வருமொளி ஒன்றாம்:
வருமொளி அதுதான் வளரறி வாகும்
உட்புலன் விளக்கி உள்ளிடர் தவிர்க்கும்
மெய்ப்புல மாகிய விளக்கிஃ தாகும்;
புறவிளக் கெனவும் அகவிளக் கெனவும்
இருவகைத் தாகும் இயம்பிய விளக்கு;
விண்ணில் தோன்றி விழிக்கொளி நல்கி
மண்ணிற் படுபொருள் கண்ணிற் படும்வணம்
அரைநாள் விளக்கி வரையறை செய்யும்
குறையுடைத் தாகும் கூர்கதிர் விளக்கே;
அகத்தினில் தோன்றும் அறிவெனும் விளக்கோ
மனத்தொளி நல்கும் மாண்பொருள் விளக்கும்;
வரையறை யின்றி வாழ்நாள் எல்லாம்
புரையற ஒளியினைப் போற்றி நல்கிடும்;
*தண்மதி யென்னும் ஒண்கதிர் விளக்கும்

* தண்மதி - குளிர்நிலா

நண்ணும் முழுமை நலியும் தேயும்;
*உண்மதி யென்னும் ஒளிவிளக் கிதன்பால்
நண்ணும் முழுமை நலிதலும் இல்லை
தேய்தலும் மாய்தலும் சிறிதும் இல்லை;
வாழும் நாளில் வழிவழி சிறந்து
நாளும் வளரும் நந்தா விளக்கு;
நெய்விளக் காயினும் எவ்விளக் காயினும்
பெய்ம்மழை தன்னால் பெருவளி மின்னால்
குறைந்தும் அணைந்தும் மறைந்திங் கொழிவன;
அகல்விளக் காயினும் அகல்விளக் காகும்;
பெரும்புய லாயினும் பேரிடி யாயினும்
வரும்பொழு திங்கே உறுதுய ரில்லா
அணையா விளக்கே அறிவெனும் விளக்கு
குறையா விளக்கே குலவுமெய் விளக்கு
நினைத்தெழும் அறிவெனும் நேரிய விளக்கே
அனைத்துல கெங்கும் அகல்விளக் காகும்;
பொய்விளக் காகிய புறவிளக் கதனினும்
மெய்விளக் காகிய அகவிளக் கொன்றே
தலைவிளக் காகும்;தக்கோர் விழையும்
நிலைவிளக் காகும் நினைவினிற் கொள்க;
கைவிளக் கில்லான் காரிருள் நெறியிற்
செய்வதொன் றறியான், செல்வழி தெரியான்
எதிர்வரும் உருவினை இன்னதென் றுணரான்,
மிதிபடுங் கயிற்றினை மேவிய அரவெனக்
குதிபடத் தாவிக் கோவென் றலறுவான்,
எஞ்சிய சிறுமரம் எதிரிற் றோன்றிடின்
அஞ்சியும் நடுங்கியும் ஐயஓ பேயென்

* உண்மதி - அறிவு

றாடிய காலுடன் ஓடிட முயல்வான்
ஓடிட முடியா துடலெலாம் வியர்ப்பான்;
உயிர்ப்பும் அடங்கி ஒடுங்கிய தோவென
அயிர்க்கும் வகையி லமைந்து கிடப்பான்;
வழியிடை மேவும் குழியும் மேடும்
தெளிவுற அறியாது திணறுவன் கலங்கி;
ஏறியும் இறங்கியும் இடறியும் நெறிதடு
மாறியும் மயங்கியும் மனத்துய ரெய்தி,
அழிது ருற்றே அலமந் தேகுவன்,
விழியொளி பெறாற்கு விளைவன இவையாம்.
மதியொளி பெறானும் மடமையிற் சென்று
கதியொன் றறியாது கலங்குவன் இவ்வணம்;
எதிர்நாள் வருவதை இன்னதென் றுணரான்;
ஒன்றைமற் றொன்றாப் பிறழ்ந்திட வுணர்ந்து
பொன்றுவன்; ஒன்றும் புரியா தொழுகுவன்;
தீதும் நன்றுந் தெரியா திறங்கி
வேதனைக் குழியில் வீழ்ந்து மயங்குவன்;
ஆதலின் வாழ்வில் ஆய்ந்து நன்னெறி
ஈதென வுணர்ந்தே இன்ப மெய்திட,
நல்லன தீயன நாடி யறிந்து
செல்வழி நோக்கிச் சென்றிட உய்ந்திட
அறிவெனும் விளக்கினை அடைந்திடல் வேண்டும்;
உலக மாந்தர் நிலையினை நோக்கின்
விலகிய நெறியே விழைவது கண்டோம்;
அன்பும் பண்பும் ஆர்ந்துநம் மாந்தர்
இன்பவாழ்வின் இலங்கிட விழைந்தோம்;
அவர்தம் துன்ப வாழ்வே துணையெனக் கொண்டு
தொடர்வது கண்டு துவண்டதெம் முளமே;

இடருறல் கண்டேம் *இனைந்ததெம் மனனே;
விளக்கொன் றிருந்தும் விளங்கா மாந்தர்
கிணற்றில் வீழும் கெடுநிலை யுற்றார்;
காலைக் கதிரவன் தோன்றிய பிறகும்
நீளத் துயிலுதல் நெறியோ? முறையோ?
அறியாப் பேரிருள் அகற்றிட எழுந்தான்
நெறியால் முறையால் நீள்கதிர்ச் செல்வன்;
எழுக எழுக என்றினிப் பாடுதும்
தொழுக தொழுக சுடரெனப் பாடுதும்;
தூண்டும் விளக்கெனத் துலங்கிடும்; மணிகாள்
வேண்டும் வேண்டும் விழிப்பினி வேண்டும்
நும்பா லமைந்துள நுண்ணறி வொளியைக்
கண்போற் காக்கக் கருதும்=நும் ஆசான்
தூண்டத் தூண்டத் துலங்கிடும்; ஆதலின்
தூண்டும் விளக்கெனச் சொல்லினம் நும்மை;
அத்தகு விளக்கினை அனுகிய யாமும்
ஒத்தநன் முறையால் தூண்டுதல் உரியேம்;
அயன்மொழிப் பற்றெனும் ஆரிருள் நீங்கிட
உயர்மொழி தாய்மொழி ஒன்றே விளங்கிட
அணையா விளக்கென ஆக்குதல் எங்கடன்
துணையாய் வருகெனத் தூண்டுதும் யாமே;
எம்மொழி யாயினும் அம்மொழிக் கடிமை
செய்ம்முறை வேண்டேல், செந்தமிழ் வேண்டி
எழுக எழுக என்றுமைத் தூண்டித்
தொழுக தொழுக சுடரென
மொழிவதே எங்கடன் முயலல்நும் கடனே..

***அழகப்பர் கலைக்கல்லூரி - காரைக்குடி***

*இனைந்தது - வருந்தியது.

# மனிதரைக் கண்டு கொண்டேன்

# முன்னுரை

என் தந்தையார் கவியரசர் முடியரசனார் அவர்களின் இயற்கையடை விற்கு முன்பிருந்தே, நூல் வடிவில் வெளிவராத அவரின் கவிதைகளைப் பல நூல்களாக நானே பதிப்பித்து வெளியிட எண்ணி, அவரது கவிதைகளைத் தேடி எடுத்துத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தேன். என் தந்தை நெடுங்கால மாக உடல் நலிவுற்று படுக்கையில் இருந்தமையால், தொகுப்பிற் கான சரியான அறிவுரைகளை அவரிடமிருந்து என்னால் பெற இயலவில்லை. இதனால் நூல் வெளியீடுகள் காலத்தாழ்வாகிக் கொண்டேயிருந்தன. இந்நிலையில் என் தந்தையை இயற்கை கொண்டு சென்றது.

பின் மீண்டும் நான் தொகுப்புப் பணியில் ஈடுபட்டேன். அப்பொழுது, "மனிதரைக் கண்டு கொண்டேன்" என்ற தலைப்பில் நூலொன்றைத் தொகுத்திருப்பதாக, என் தந்தை 'முன்னுரை' மட்டும் எபதி வைத்திருந்த ஒரு தாள் மட்டும் என் கைக்குக் கிடைத்தது. அம்முன்னுரை இதோ;

'மனிதரைக் கண்டு கொண்டேன்'

"குமுகாயத்திற் குறைகள் மலிந்து விட்டன. பண்பாடுகள் நலிந்து விட்டன. அந்நிலையைக் காணும்பொழுதெல்லாம் நெஞ்சம் குமுறுவதுண்டு; பொறுமுவதுண்டு; புழுங்குவதுண்டு. அந்த வேதனைகளில் வெடித்துக் கிளம்பிய பாடல்களைத் தொகுத்து, 'மனிதனைத் தேடுகிறேன்" என்ற தலைப்பில் ஒரு நூலாக்கினேன்.

20.2.81 இல் மதுரைப் பாத்திமா கல்லூரிப் பாட்டரங்கில் தலைமை யேற்றுச் சிறிது நேரம் பேசியமர்ந்ததும் குளிர் காய்ச்சலால் தாக்குண்டேன். அவ்வமயம் முதல்வரும் பேராசிரியர்களும் காட்டிய பரிவுணர்ச்சி என்னுளத்தை நெகிழ வைத்து விட்டது.

பண்பாடுகள் வாடிவிட்டன; உண்மைதான். எனினும் ஆணிவேர், அற்றுவிடாமல் அங்கங்கே கிளை வேர்களை விட்டுக் கொண்டு தானிருக்கிறது என்ற ஓர் உணர்வு தோன்றியது. அதனால் குறைகளை மட்டுமே சுட்டிக் காட்டாமல் நிறைகளையும் எடுத்துக் காட்ட வேண்டும் என்ற ஆர்வம் அன்று அரும்பியது. ஆதலின் ஆங்காங்கே தம்மாலான நற்பணிகள் ஆற்றிவரும் மாந்தரை - நாட்டுக்கு, மொழிக்கு, மக்களுக்கு ஒல்லும் வகையால் உழைப்பினை நல்கும் நல்லோரை - ஆன்று அவிந்து, அடங்கிய கொள்கைச் சான்றோரைக் கண்டு, மகிழ்ந்து பாடிய பாடல்களைத் தொகுத்து, ‘மனிதரைக் கண்டு கொண்டேன்’ என்ற தலைப்பில் ஒரு நூலாக்கினேன்.

குறைகளைச் சுட்டிக் காட்டித் திருத்த முயல்வது ஒருமுறை. நிறைகளை எடுத்துக் காட்டி ஆர்வமூட்டி நெறிப்படுத்துவது மற்றொரு முறையாகும். அதனால், தனி மனிதரைப் புகழ்வது என் நோக்கமன்று. தன்னலம் தவிர்த்து பொது நல நோக்கு ஓரளவு காணப்படினும் அவர்களைப் பாடியிருக்கிறேன். வளருங் குமுகாயத்திற்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கைதான். வேறொன்றுமில்லை.”

அன்பன்

**முடியரசன்**

மேற்கண்ட ‘முன்னுரை’ எழுதப்பட்ட தாள் மட்டும்தான் கிடைத்ததே தவிர, அதில் குறிப்பிட்ட கவிதைகள் கிடைக்க வில்லை. அவை எவையென்றும் தெரியவில்லை.

இந்நிலையில் எந்தையின் ஆசைப்படி ‘மனிதரைக் கண்டு கொண்டேன்’ என்ற தலைப்பில் நூலொன்று தொகுக்க எண்ணி, மேற்கண்ட எந்தையின் முன்னுரையில் குறிப்பிட்ட படியான மொழி, மக்கள், நாட்டுக்குத் தொண்டாற்றிய மாந்தர் பற்றி, என் தந்தை பாடிய பாடல்கள் ஒரு சிலவற்றை நான் தொகுத்து இந்நூலிற் கொடுத்துள்ளேன்.

அன்பன்

**மு. பாரி**

## தமிழ் வாழ்த்து

முழுமதியே! செந்தமிழே! காலங் கண்டும்
    மூவாத மலர்ப்பொழிலில் ஆடி வந்த
அழகொழுகும் இளமையிலே! உலக மாந்தர்
    அகமனைத்தும் குளிர்விக்கும் தென்றற் காற்றே
பழகுசுவைக் கனிமூன்றும் சுவைத்துப் பார்த்துப்
    பாடிவரும் பூங்குயிலே! எனது நெஞ்சில்
அழகுதவழ் தோகைவிரித் தாட வாவா!
    அவ்வரங்கில் குரலெடுத்துப் பாட வாவா!

- 25.08.1979

## 1

# என்றும் வாழ்வர்

அள்ளிக் கொடுத்தவர் சாவதில்லை
அன்பு மனத்தவர் மாய்வதில்லை - அள்ளிக்

உள்ளம் மிகுத்தவர் வீழ்வதில்லை
ஓங்கு பெரும்புகழ் சாய்வதில்லை - அள்ளிக்

முல்லைக் கொடிக்கொரு தேர்கொடுத்தான் - **பாரி**
முத்தமிழ் வாணர்க்கோ ஊர்கொடுத்தான் - அள்ளிக்

சொல்லுந் தமிழ்க்குயர் வாழ்வளிக்கக் **குமணன்**
தூய தலைகொள வாள்கொடுத்தான் - அள்ளிக்

நெல்லிக் கனிக்கொரு பேரளித்தான் **அதியன்**
நீள்புகழ் அவ்வைக்கு வாழ்வளித்தான் - அள்ளிக்

கல்விப் பணிக்கெனச் சீர்கொடுத்தான் - **அழகன்**
கைப்பொருள் யாவையு மேகொடுத்தான் - அள்ளிக்

வள்ளல்க ளாமென வாழ்பவரை
மாய்ந்தனர் என்றிங்கு யாருரைத்தார்?

உள்ளம் இருப்பவர் யாவருமே
உலக வரைப்பினில் வாழ்ந்திடுவார்.

# 2

# தமிழ்த் தொண்டு

தமிழ்ப்புலவர் அரசியலில் வல்லா ருண்டா?
தகுதிமிகு செய்தித்தாள் நடத்த லுண்டா?
தமிழ்ப்புலவர் தொழிலாளர் இயக்கங் கண்டு
தலைமைபெறும் நிலையுண்டா? சிறையிற் பட்ட
தமிழ்ப்புலவர் முன்புண்டா? சமய வாதி
தன்கருத்தைப் பெரியார்முன் மொழிந்த துண்டா?
தமிழ்ப்புலவர் பொதுமைநெறி புதுமைப் போக்குச்
சார்ந்ததுண்டா? **திரு.வி.க.** ஒருவர் உண்டு.

பன்மொழிகள் கற்றதனால் பான்மை கெட்டுப்
பைந்தமிழ்க்கோர் ஊறுசெய நினையா நெஞ்சர்;
தென்மொழியும் வடமொழியும் கரைகள் கண்டார்;
தீந்தமிழைச் செந்தமிழை உயிராக் கொண்டார்;
நன்மைதரும் உரைவல்லார்; சங்க நூலின்
நயம்பொழியும் நாவல்லார்; பூங்குன் றத்து
நன்மகனைப் **பண்டிதமா மணி**யை நெஞ்சால்
நாடிடுவோர் தமிழ்மொழிக்குத் தீங்கு செய்யார்.

நாவாழும் தமிழ்மொழிக்கே வாழ்வு வேண்டி
நயத்தக்க ஆய்வுரைகள் எழுதிக் காட்டித்
தீவாழும் நெஞ்சுடைய ஆரி யத்தின்
திரிபுரையைப் பகுத்தறிவால் மறுத்துக் காட்டிக்
கோவாக நம்முன்னே வீற்றி ருக்கும்
கொடுமீசை சிவந்தவிழி கருத்தமேனிப்
**பாவாணர்** படைத்தளித்த எழுத்த னைத்தும்
பசுந்தமிழுக் காணிவேர் ஆகி நிற்கும்.

மேவாத மனமுடையார் ஒன்று கூடி
மேலான எழுத்தாளர் என்று கூறிக்
காவாத நாவினராய் வீட்டுக் குள்ளே
கழறுகிற மொழியெல்லாம் எழுதி வைத்துச்
சாவாத இலக்கியமென் றியம்பிவந்த
சழக்கருக்கே முதலிடமென் றிருந்த நாளில்
மூவாத தமிழ்வளர வழிவ குத்த
**மு.வ.**வின் தமிழ்த்தொண்டே தலைநின் றோங்கும்.

அறிவியலைத் தமிழ்மொழியில் ஆக்க வேண்டி
அதற்கென்றே உழைத்துவரும் கோவை தந்த
பொறியியலில் வல்லார்கள் வெளிக்கொ ணர்ந்த
பொன்மலராம் **கலைக்கதிரின்** புதுமை காட்டும்
நெறிமுறையை நாமின்னும் உணர வில்லை;
நிலையான அவர்பணியை மதித்துப் போற்றின்
வருமுலகம் நமைவாழ்த்தும் புகழும் சேர்க்கும்
வளர்தமிழில் புதுமைகளும் மலர்ந்து நிற்கும்.

## 3
# அப்பரடிகள்

திருத்தலங்கள் பலசென்று, கசிந்து நின்று
திருவாயால் தேவாரம் பாடி வந்தார்;
உருக்குலைந்த இடமெல்லாம் தூய்மை செய்ய
உழவாரப் படையொன்று கையிற் கொண்டார்;
அருத்தியொரு ஞானப்பால் உண்ட வாயால்
அப்பரெனச் சம்பந்தன் அழைக்க நின்றார்;
திருத்தமுற நடையறாத் துறவு பூண்டார்;
**திருநாவுக் கரச**ரெனப் புகழும் பெற்றார்.

வெப்புறுத்திக் கடலுக்குள் கட்டி வீழ்த்தி,
வேதனைக்குள் தள்ளிடினும் கொள்கை மாறா
அப்பருக்குச் சமமாக ஒப்பு ரைக்க
ஆளில்லை; சமயங்கள் பலவுந் தோய்ந்து
தப்பறுக்கும் நிலையுணர்ந்த தரும சேனர்;
தவமுனிவர், வேளாளர், தகுதி மிக்கார்;
அப்பழுக்கே இல்லாத ஒழுக்க சீலர்;
அவர்கொண்ட தொண்டுள்ளம் வாழ்க வாழ்க.

**4**

# எழுத்து மலை

தொழுத்தகுநற் றமிழ்மொழியும் அதனோ டொத்த
    தொன்மைமிகும் ஆரியமும் கற்றுத் தேர்ந்து
பழுத்தமலை; பண்புவளர் ஆங்கி லம்போற்
    பலமொழிகள் பயின்றமலை; சான்றோர்நெஞ்சம்
வழுத்துமலை; வளர்ந்துயர்ந்த எழுத்து வல்லார்
    வற்றாத அருவியெனத் தோன்றச் செய்த
எழுத்துமலைப் பெருமையெலாம் விண்டு ரைத்தல்
    எளியதொரு செயலாமோ? அரிய தன்றோ?

அளக்கஒரு கருவியிலா அளவு கொண்டான்;
    அலகில்பல பொருள்கொண்டான்; பகைவர் யாரும்
துளக்கரிய நிலைகொண்டான்; புகழால் ஓங்கித்
    தொலைவிலுளார் அறியவளர் தோற்றங் கொண்டான்;
உளத்துறுநம் தமிழ்நினைவு வறந்த போதும்
    உலகினர்க்கு வளந்தருதல் வண்மை கொண்டான்;
வளத்திலுயர் அம்மலையை மறைப்பான் வேண்டி
    வஞ்சனையார் முயல்வரெனின் மதிதான் என்னே!

நாடகநூல், பாவகைநூல், ஆய்ந்து ரைத்த
    நலமிகுநூல், அறிவியல்நூல், நுழைபு லத்தார்
நாடறிவு, நூல்பலவோ டுரைநூல், நெஞ்சம்
    நயக்கின்ற நெடுங்கதைநூல் இன்னோரன்ன
பீடணையும் பெருநூல்கள் எழுதித் தந்த
    பெருமலையாம் **மறைமலை**யின் எழுத்து வன்மை
நாடறியும் வீடறியும் நல்லோர் நெஞ்சம்
    நன்கறியும்; அறியாதார் அறியா தாரே.

சமயமெனக் கடவுளெனப் பேர்கள் சொல்லித்
      தழைத்துவரும் போலிகளைக் கடியும் கூர்வாள்;
தமிழரிடைப் படர்ந்துவரும் சாதித் தீமைச்
      சழக்குகளை வேரொடுசுட் டெரிக்குஞ் செந்தீ;
இமயமலை தந்தபொது மொழியீ தென்றே
      இந்திவரின் தடுத்தொழிக்கும் கேட யங்காண்;
நமதினத்தை விழிப்புறுத்தும் வெற்றிச் சங்கம்
      நாளெல்லாம் அவனெழுதித் தந்த நூல்கள்.

'நக்கீரர் சிவஞான முனிவர் என்போர்
      நாம்மகிழ ஓருருக்கொண் டிங்குத் தோன்றி
இக்காலை நற்றமிழை வளர்க்க வந்தார்,
      இந்நாடு தனைமறந்து துயிலுங் காலை
எக்காளம் எடுத்தூதி விழிக்கச் செய்தார்
      இவரென்று மண்முழங்கும் மரம்மு ழங்கும்
முக்காலும் ஈதுண்மை' என்று சான்றோர்*
      முழங்கினரேல் அவனெழுத்தின் பெருமை என்னே!

கல்லாதார் தமிழ்மொழியைக் கரைகண் டாற்போல்
      கருதினராய் அயன்மொழிச்சொல் பலவுங் கூட்டி
இல்லாத வழுமொழியும் சிதைந்த சொல்லும்
      எண்ணிறந்து குழப்பியதை எழுதிக் காட்டிப்
பொல்லாத செயல்புரிந்து தமிழின் தன்மை
      புரியாத படிசெய்த இருட்டர் கூட்டம்
நில்லாது வெருண்டோட எழுந்து வந்த
      நீள்கதிராம் மறைமலையைத் தொழுவோம் வாரீர்.

**10.06.1969**

---

* சான்றோர் - திரு.வி.க

5

## வாழிய தமிழ் முனிவர்

தாயைத் தந்தையைத் தம்முடன் பிறந்தார்
தோயும் அன்பைத் துறந்தனர் எனினும்
முப்பா லூட்டிய முத்தமிழ் அன்பினில்
தப்பா தொழுகுந் தவமுனி யவர்தாம்;
வீட்டுப் பற்றும் வேறுள பற்றும்
*வீட்டுந் துறவறம் விழைந்தவர் எனினும்
நாட்டுப் பற்றினை நயந்திடுங் குறிக்கோள்
வேட்டுப் பணிசெயும் வியத்தகு தொண்டர்;
மனத்துப் பற்றினை விடுத்தனர் ஆகினும்
இனத்துப் பற்றோ டியங்கும் நடத்தையர்;
தம்மைத் தூற்றினும் தாம்பகை கொள்ளார்
எம்மவர் என்றே இனநலம் பேணுவர்;
கருத்து வேற்றுமை கருதில ராகிப்
பொறுத்துச் செல்லும் புன்னகை முகத்தினர்;
பன்னெறி யாளரும் பழகுதற் கேற்ற
நன்னெறி யாளர் நாநலம் மிக்கார்;
எளியோர்க் காணின் இரங்கும் நெஞ்சினர்
அளியால் பற்பல அறங்கள் புரிபவர்:
அருச்சனை ஒன்றே ஆண்டவன் அருளைப்
பெறத்தகு வழியெனல் பேணா ராகி,
உருக்குலைந் தொடுங்கிய உழைப்பினர் வாழத்

* வீட்டும் - அழிக்கும்

தெருத்தெரு வாகத் திரிவோர் உய்ய
வாழ்வின் துய்ப்பிலா வறியவர் நலம்பெறச்
சூழ்வதே ஆண்டவன் தொண்டெனத் தொடர்வார்;
திருமடம் ஒன்றே உறைவிடம் என்று
கருவறைப் புகுந்து காலங் கழியார்
ஊர்தொறும் ஊர்தொறும் ஓயா தோடிச்
சீர்பெறும் சிந்தனை செப்பிடும் பணியினர்;
சமயம் சார்தரு குறைகளைச் சாடிடச்
சமயம் வருங்காற் சற்றுந் தயங்கார்;
நற்றமிழ் பாடிய சொற்றமிழ்ச் சுந்தரன்
சொற்றிடும் பாடலிற் சொக்கிய சொக்கன்
தோழமை தந்தும் துணைபல புரிந்தும்
வாழும் வகைஎலாம் வழங்கினன் என்பர்;
அடிகளும் என்பால் அரும்பிய பாடலின்
அடிகளில் மயங்கினர் அன்புறு தோழமை
தந்தென துளத்தைக் கொண்டனர் தமிழ்முனி;
குன்றைச் சூழ்ந்துள **குன்றக் குடி**யில்
ஒன்றிய திருமடம் உறைதரும் **அடிகள்**
நன்றிவண் வாழ்கென நலமிகு நெஞ்சே
சென்றுரை அவர்பால் சேவடி பணிந்தே.

14.9.75

# 6

# வாழிய மனித நேயம்

தொழத்தகு சுந்தரன் தோழமைக் குரியன்
பழுத்த பாவலன் பாரோர் போற்றும்
வலிய தொண்டன் வஞ்சமில் நெஞ்சம்
மெலிபிறை சூடிய மேன்மைக் கொடைஞன்
கண்ணுதற் பெருமான் கருத்தும் பிணைந்தது
பண்ணுறத் தோய்ந்த பைந்தமிழ் ஒன்றால்;
அதுபோல்,
**குன்றக்** **குடி**யிற் குடியமர்ந் ததுமுதல்
என்றன் செந்தமிழ்ப் பாட்டால் இணைந்தவர்
ஈடுபட் டென்னைக் *'**கவியர**' **சென்**றனர்
பீடுடை **அடிகள்** பெயருக் கேற்றவர்
நாடுயர் வழிகள் நல்கிய பெருமகன்
மண்ணிற் புழுவென மடியாது மாந்தர்
மண்ணில் நிமிர்ந்து வாழச் சொன்னவர்
எளியோர்க் கிரங்கும் இளகிய நெஞ்சர்,
எளிமையும் வறுமையும் இருப்பதை நாடார்,
உழைப்போன் வயிற்றில் உறுபசி வந்து
வளைத்து வாட்டி வருவது தாளார்,
ஆலயம்பதி னாயிரம் எழுப் புவதின்
மேலாம் கல்விச் சாலை எழுப்புதல்
எனப்பறை சாற்றும் இயல்பினர், தொழில்கள்

* 1966 - ஆம் ஆண்டு, பறம்பு மலையில் நடைபெற்ற 'பாரி விழா'வில் 'கவியரசு' என்ற பட்டத்தைக் குன்றக்குடி அடிகளார் வழங்கிச் சிறப்பித்தார்.

வனப்புறக் கண்டவர் வளர்த்தும் வந்தவர்,
பண்டித நேருடன் பழகிய பண்பினர்,
பண்டைய கொள்கை பகுத்துணர் பெரியார்,
தொடர்பும் பொதுமையும் மலரும் தோட்டம்,
அடரும் பகைமை அண்டாக் கோட்டை,
ஏற்றத் தாழ்வுகள் இல்லாப் புதுமை,
சாற்றத் துடிக்கும் சமநிலைப் பாசறை,
கலகமில் உலகம் காணத் துடிக்கும்
உலக அமைதிக் குழைக்கும் வெண்புறா,
இனைய நலன்கள் விளையும் நோக்குடன்
புனையும் துறவு பூண்டவர், அடிகள்
மண்ணும் மனிதரும் என்னுந் தலைப்பில்
எண்ணி யெழுதினர் விகடன் இதழில்;
நம்கயல் தினகரன் நாடித் தொகுத்து
என்மனம் களிக்க ஈந்தனர் நூலென
வாழ்க வாழ்க மனித நேயம்
வாழ்க தமிழகம் வாழிய உலகே!

**2.2.1996**

## 7

# பழமை வேண்டான்!

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையாளன்
பாழான பழமை வேண்டான்!
மாண்டநல்ல சங்கத்தார் தமைப்போல்வான்
மனத்தில்எழும் புதுக்க ருத்தை
வேண்டியமட் டுங்கொடுப்பான்! வீரத்தை
ஊட்டிடுவான்; ஊழிக் காலம்
தாண்டியநல் தமிழ்மொழியால்! மீசையின்மேல்
தணியாத காதல் கொண்டான்!

இனிஅஞ்சார் தமிழ்மக்கள்; தமிழுக்கோர்
இடுக்கண்இனி வருதல் இல்லை!
கனிமொழியில், காதலைத்தான் பகுத்தறிவுக்
கதிரைத்தான் காட்டி விட்டார்!
நனிமகிழ்ந்து தமிழரெலாம் போற்றுகிறார்
நம்மினத்தார் விளங்கப் பாண்டி
இனிதளித்த பரிசிலவன் எதிர்ப்பஞ்சா
இயற்கவிஞன் ஏறு போல்வான்!

கடவுளரைப் பாடிமகிழ்ந்த ததன்பிறகு
காலத்தை எதிர்த்து நின்று,
மடமையினை மாய்த்திட்டான் **பாரதி**யின்
**தாச**னென மதிப்பும் பெற்றான்!
திடமுடனே அவன்கருத்தைச் செப்புகிறான்;
தீந்தமிழின் உரிமை காக்க
உடல்கொடுப்பேன் என்கின்றான்! அவனளிக்கும்
ஓவியங்கள் வாழ்க நன்றே!

# 8

# தொடர்வோம் தொண்டு

மூவாத் தமிழுணர் **மு.வ.** தமக்குச்
சாவா? அச்சொலைச் சற்றும் நம்பிலோம்;
விடிந்தது பொழுது தொடர்ந்தது செய்தி;
படர்ந்தது துயரம்; நடந்தது கொடுமை!
சரியா மனத்தர் சரிந்தனர் எனுஞ்சொல்
சரியா? பிழைபிழை; சாவே பிழைபல
புரியா நின்றனை புரியா மதியால்;
பெரியார் அறிஞர் பெரும்புல வோர்கள்
எவரே யாகினும் எழும்நின் பசிக்குத்
தவறார் கொல்லோ தடுப்பே இலையோ?
ஆம்ஆம் இயற்கையின் ஆற்றலை அறிவோம்;
அறிவோம் ஆகினும் ஆற்றாத் துயரால்
சிறிதே மறந்தனம் சிந்தையும் மயங்கினம்
உயிர்தான் பிரிந்தது; உடல்தான் மறைந்தது;
செயலும் செயலால் செழித்தநற் றமிழும்
உண்டிவன் அன்றோ? ஒண்மையர் அவர்தம்
தொண்டினை இன்னே தொடருதும் யாமே.

# 9
# புதுக்கோட்டைக் காந்தி

கற்றுணர்ந்த மேலவனே, கற்ற வற்றைக்
கடைப்பிடித்து வாழ்பவனே, கவிஞர் தம்மை
முற்றுணர்ந்த புலவர்தமைச் சாவா வண்ணம்
முன்னின்று காத்தவனே, எங்கள் தந்தாய்,
உற்றவரும் மற்றவரும் அண்ணா என்றே
உரிமையுடன் அழைக்கின்ற அண்ணால், எங்கள்
சுற்றமெலாம் வாழ்விக்க வந்த கோவே
**சுப்ரமண்யப்** பெயரோய் நீ வாழ்க நன்றே.

பிறப்பெடுத்த மாந்தரிலே பலரும் தம்மைப்
பேணுதற்கே வாழ்கின்றார்; சிலர்தாம் என்றும்
மறப்பதற்கு முடியாத வண்ணம் வாழ்வை
மற்றவர்க்கும் பயன்படுத்தி வாழ்ந்து நிற்பார்
சிறப்புடுத்த இவ்வாழ்வை நின்பாற் கண்டோம்;
சீரியனே பயன்கருதாத் தொண்டுக் கென்றே
சுரப்பெடுக்கும் அருளுளத்தால் வாழ்ந்து நிற்கும்
தோன்றல்நினக் கெவ்வாறு நன்றி சொல்வோம்?

மழைபொழிந்து பார்புரக்கும் முகில்த னக்கு
மாநிலத்தார் எவ்வாறு நன்றி சொல்வர்?
விழைவெழுந்து பாலூட்டும் தாய்க்கு நன்றி
விளம்பிடஓர் சொல்லுண்டோ? எளியேம் எம்மை
விழிதிறந்து வாழ்வுக்கு வழிதி றந்து
வீறுபெற உய்வித்தோய் நினக்கு நன்றி
மொழிவதற்கும் மொழிகாணேம்; எங்கள் நெஞ்சால்
முப்பொழுதும் தொழுவதன்றி வழியுங் காணேம்.

பொறியியலில் வல்லவரை, வானில் நீரில்
　　போர்புரியும் படைஞர்தமை, அறிவு நல்கி
நெறியியக்கும் பல்வகைய ஆசான் மாரை,
　　நெஞ்சிரங்கும் மருத்துவரைப் புலவர் தம்மைப்
பெரியவனே எம்மிடையில் தோற்று வித்தாய்!
　　பிள்ளையென எம்மையெலாம் வளர்த்து வந்தாய்!
வறுமையிருட் படுகுழியில் கிடந்த எம்மை
　　வாழ்விக்க வரும்தலைவா! வணங்கு கின்றோம்.

காந்திநகர் மக்களுக்கு வாழ்வு நல்கக்
　　கல்விவளர் கழகமென ஒன்று கண்டாய்;
ஈந்துபொருள், ஒளிநல்கி, நூல்கள் நல்கி,
　　எமக்கெனஓர் ஆசானும்நல்கி, என்றும்
போந்திங்கு மேற்பார்வை இடையீ டின்றிப்
　　புரிந்துவரும் ஆசிரியப் பெரியோய்! நாங்கள்
காந்தியென நின்னைத்தான் காணு கின்றோம்
　　கருணைமனம் வாழ்கவென வாழ்த்து கின்றோம்.

***(அண்ணல் சுப்பிரமணியனார்க்குப் புதுக்கோட்டைக் காந்திநகர் மக்கள் 17.10.1970-இல் நடத்திய பாராட்டு விழாவில் அம்மக்கள் பாடுவதாக அமைக்கப்பட்ட பாடல்)***

## 10

# மணிவிழா வாழ்த்து

சுவைபழுத்த செந்தமிழின் சோலை புக்குச்
சோர்வின்றி ஆர்வமுடன் வாழ்நாள் எல்லாம்
நவைதவிர்த்த ஆய்வுரைகள் நல்கி வாழும்
நலம்பழுத்த தமிழ்பழுத்த நல்லோய்! இந்த
அவையகத்தில் புலம்பழுத்தோர் பலரும் வாழ்த்த
அவர்குழுவில் எனையுமுடன் கூட்டு வித்தார்
கவிதொடுத்து வாழ்த்துகின்றேன் அறுபான் ஆண்டு
கண்டோய்! நின் புகழ்வாழ்க வாழ்க என்றே.

பொருள்கருதிப் புகழ்கருதி எழுத்து வேந்தர்
புல்லியமென் காகிதத்தால் வண்ணப் பூக்கள்
இருள்பெருகப் படைத்துவரல் காணு கின்றோம்;
இவைவிரும்பும் சுரும்பினமாய் மாந்தர் மொய்த்து
மருள்பெருகிச் சுழலுகின்றார் அந்தோ! இந்நாள்
வண்டமிழின் நலங்கருதி நுண்பு லத்தால்
தெருளறிவு மணமலர்கள் நீப டைத்தாய்!
திறங்கண்டு மனங்கொண்டு வாழ்த்து கின்றேன்.

ஒருதுறையில் எவரேனும் வெற்றி காணின்
ஊரிலுளார் அனைவருமே அதனைச் செய்வர்
பிறதுறையை நினைவுகொளார்; ஆனால் நீயோ
பிறர்புகுதாத் தனித்துறையை வகுத்துக் கொண்டு

வருதுறையில் வெற்றியுடன் தமிழ் வளர்த்தாய்!
    வாகைகொளும் நினைவாழ்த்த வாய்ப்புப் பெற்றேன்
பெருமைமிகக் கொண்டுன்னை வாழ்த்து கின்றேன்
    பெரியோய்நின் திறம்வாழ்க வாழ்க என்றே.

பழகுதற்கு மிகஇனிய பண்பு கொண்டாய்!
    பலநூல்கள் யாத்திருக்கும் அறிவு சான்றும்
அழகுதரும் உயர்வுதரும் அடக்கம் கொண்டாய்!
    ஆய்ந்துணரும் ஆற்றலினை எடுத்துக் காட்டும்
விழியுடையாய்! எவரிடத்தும் வெறுப்புக் கொள்ளாய்!
    வேறுபடு கருத்துக்கும் மதிப்ப ளிப்பாய்!
எழிலுடையாய்! தமிழ்வாழ நின்னை வாழ்த்தி
    ஏத்துகிறேன் நலமுடன்நீ வாழ்க என்றே

ஆன்றமைந்த பண்பினிக்கும்; வஞ்சம் இன்றி
    அன்பளைந்து செப்புகின்ற சொல்லி னிக்கும்;
ஈன்றளித்த ஆய்வுரைசேர் நூல்கள் எல்லாம்
    இனித்திருக்கும்; துணையின்றித் தனித்தி ருந்து
சான்றாண்மை பெற்றோய்! நின் உழைப்பி னிக்கும்;
    சார்ந்துள்ள புகழினிக்கும்; செயலி னிக்கும்
தோன்றலுன்பால் அத்துணையும் இனிக்கக் கண்டோர்
    **சீனிவேங் கடசாமி** என்றார் போலும்!

மலர்தோறும் மலர்தோறும் சென்று வண்டு
    மணம்சுவைத்துத் தேன்சுவைத்துச் சேர்த்து வைக்கும்;
பலவாகும் சமயமெலாம் நீபு குந்து
    பைந்தமிழை நுழைபுலத்தாற் சேர்த்து வைத்தாய்;

புலர்காலை எழுகதிரோன் உலகுக் கெல்லாம்
பொதுவெனல்போல் வெவ்வேறு சமய மாந்தர்
பலர்சேர்ந்து வாழ்த்துகின்றார்; சமய மில்லேன்
பாமாலை கொண்டுன்னை வாழ்த்து கின்றேன்.

பல்வேறு சமயத்தார், சமயம் இல்லார்,
பன்மொழிகள் கற்றுணர்ந்தார், ஒன்று கற்றார்,
பல்வேறு கட்சியினர், கட்சி சாரார்,
பலபிளவுச் சாதியினர், சாதி வேண்டார்,
எல்லாரும் ஒன்றாகிப் போற்று கின்றார்;
இன்றமிழால் ஒன்றுபடும் காட்சி கண்டேன்;
நல்லோர்தாம் பன்மையினாற் சிதறுண் ணாமல்
நலமிக்க ஒருமையினால் தமிழைக் காப்பர்.

குடியரசு நின்போலும் சான்றோர் தம்மைக்
கொண்டாடி விருதளிக்க மறந்த தேனும்
முடியரசன் நின்பெருமை பாடு கின்றேன்
மூவேந்தர் மரபறிந்து வாழ்த்து கின்றேன்;
மடியின்றிச் சுறுசுறுப்பால் தமிழைத் தேடும்
மாண்பால்அஞ் சிறைத்தும்பி என்று நின்னைப்
படிஅழைக்க விருதளித்தேன்; என்பாற் செல்வம்
பாடலொன்றே அதையளித்தேன் பரிசி லாக.

தாய்மொழியைப் பாராட்ட விழையும் மாந்தர்
தம்மொழியிற் சான்றோரைப் போற்றல் வேண்டும்
தாய்நாட்டு முதலமைச்சர் மாலை சூட்டத்
தகுகல்விப் பொறுப்பேற்ற அமைச்சர் நின்று

* சேய் நாட்டார் - தூர நாட்டவர்.

வாய்விட்டுப் பாராட்ட நிதிய மைச்சர்
　வரையாது மனங்குளிர்ந்து பரிசில் நல்கச்
*சேய் நாட்டார் வியந்துரைக்க யானை மீது
　செம்மாந்து செலல்வேண்டும் அந்தச் சான்றோர்.

செம்மாந்து செல்கின்ற காட்சி காணச்
　சேர்ந்தோடி வருகின்ற மக்கள் கூட்டம்
அம்மாஎன் றதிசயிக்க வேண்டும் என்றன்
　ஆவல்நிறை வேறுகின்ற நாள்தான் என்றோ?
இம்மாநி லத்திருக்கும் புலவர் என்போர்
　எல்லாரும் ஒன்றாகி எழுந்தால் உண்டு;
சும்மாஇங் கிருந்ததெலாம் போதும் போதும்
　சூளுரைத்து நாமெழுதல் வேண்டும் வேண்டும்.

**(திரு மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா - சென்னை 17.3.1961)**

**11**

# வாழும் அண்ணாமலை

ஈட்டுவதும் கூட்டுவதும் ஈட்டியதை
வகுப்பதுவும் இயல்பாற் செய்து
காட்டிய**அண் ணாமலைமன்** கருணையொடு
வாழ்ந்திருந்த கால மெல்லாம்
வேட்டெழுந்து தமிழ்மொழிக்கும் விளைபயனாம்
கல்விக்கும் வேண்டும் மட்டும்
நீட்டியதை நாடறியும் நிறைபுலவோர்
ஏடறியும் நெஞ்சும் சொல்லும்.

நெருஞ்சிபடர் வேட்களத்தை நிலமாக்கி,
நகராக்கி, நிலைத்து நிற்க
அருங்கலைகள் பல்கெழுமும் கழகமென
ஒருகோவில் ஆக்கி வைத்து
வரும்பொருளை அதுவளர வகுத்தளித்த
கையானை வைய மெல்லாம்
தரும்புகழாற் பொலிவானை தனியண்ணா
மலையானைத் தலைக்கொள் வோமே.

கலைமலிந்த தில்லையிலே கற்கோவில்
தமிழரசன் கண்டான் அன்று;
கலைபலவும் திகழ்கின்ற கலைக்கோவில்
ஒன்றின்று கண்டான் அண்ணா
மலையரசன்; அதுகண்டு கூத்தரசன்
மனங்களித்து மன்றில் நின்று
கலையறிய ஆடுகிறான் என்றகவி
மணிமொழியைக் கருத்தில் வைப்பாம்.

நிலையாத உலகத்தில் நிலைத்தசெயல்
　　செய்தமையால் நெஞ்சந் தோறும்
சிலையாக நிற்கின்றான் சித்திரமாத்
　　தோன்றுகின்றான் செழுமை கொண்ட
மலையாக வாழ்கின்றான் கலையாக
　　வளர்கின்றான் மனத்துள் எண்ண
அலையாக அசைகின்றான் அரியணையா
　　நம்முளத்தை ஆக்கிக் கொண்டான்.

அரங்கிருக்கும் கடமிருக்கும் அருகிலிசைக்
　　கருவியெலாம் அமைந்தி ருக்கும்
சுரமிருக்கும் தோற்கருவி துணையிருக்கும்
　　குழுவொன்று சூழ்ந்தி ருக்கும்
நரம்பிழுக்க மூச்சடக்கி நடுவிருந்து
　　பாடுபவர் நாவ சைத்தால்
கரகரத்த குரலிருக்கும் தமிழ்மட்டும்
　　அங்கிருக்கக் கண்ட தில்லை.

தமிழ்நாட்டில் தமிழ்த்தெருவில் தமிழரிடை
　　இசையரங்கில் தமிழை நீக்கித்
திமிர்காட்டும் மனமுடையர் தேர்ந்தெடுத்துப்
　　பிறமொழியைத் திணிக்குங் காலை
சுமைதாங்கிக் கல்லாகச் சூடில்லாச்
　　சிலையாகச் சோர்ந்து நின்றோம்
அமிழ்தூட்டும் தமிழெங்கே? என அதட்ட
　　அறியாத ஆமை யானோம்.

அன்றுநமக் குணர்வூட்டி, ஆர்ப்பரிக்க
　　வழிகாட்டி, அறிவா னாய்ந்து
நின்றுநமை நெறிப்படுத்தி, நிலைத்திருந்த
　　வசைநீக்கி, நிமிர்ந்து நிற்கக்
குன்றெனவே நின்றானைக் குய்யமதை
　　வென்றானைக் கூடிப் பாடி
இன்றுமிவண் வாழ்வானை என்றுமுள
　　தென்றமிழால் ஏத்தி நிற்போம்.

**(அண்ணாமலைப் பல்கலைக் கழக வைரவிழா மலருக்காக)**

குய்யம் - வஞ்சனை

# 12
# தமிழ்க் கடல்

பச்சைமா மலைமுகட்டில் ஆழ்வார் பெய்த
பாடல்நா லாயிரமும் செந்தேன் ஆறு;
மச்சவுரு மாலவனும் அயனும் அண்ணா
மலைவாழும் சிவமலையில் மூவர் பெய்த
மெச்சுமிசைத் தேவாரம் தீம்பா லாறு;
மேலவர்வாழ் குன்றத்தூர்ப் பெருமான் பெய்த
இச்சைமிகும் திருதொண்டர் பெருமை பேசும்
எழில்மிகுந்த வரலாறும் ஒருபே ராறு.

அவனடியைத் தொழுதுருகும் வாச கந்தான்
அழுதழுது பொழிந்துவைத்த கண்ணீர் ஆறாம்;
எவனடியால் உலகளந்தான் அவன்றன் காதை
இயம்புமநூல் உயிராறாம்; பயில்வார் நெஞ்சைக்
கவருமுலா தூதுபிள்ளைத் தமிழோ டின்னும்
கலம்பகங்கள் சிற்றாறாம்; இவ்வா றெல்லாம்
தவறாது மனம்புகுந்து பொங்கி யோங்கும்
தமிழ்க்கடலே நம்**இராய சொக்க லிங்கம்.**

**16.9.1973**

# 13
# மாணிக்கப் புலவன்

யாதும் அவாவிலன் யாமையென் றடங்கினோன்
போதும் எனுமனம் பூத்த நெஞ்சினன்
பயனில சொல்லாப் பாவலன் என்றும்
நயனுள பொழியும் நாவலன் என்பால்
ஈடிலா அன்பன் எளியன் இனியன்
கேடிலா மனத்தன் கிளர்ச்சித் தலைவன்
எங்கள் கழகப் புலவன் இவனெனப்
பொங்கும் உணர்வாற் பொலிந்த பெற்றியன்
பெருக்கிய புகழ்நிலை பேணிவந் துறினும்
செருக்கே அறியாச் சீர்மை யாளன்
அருமை அருமைஎன் றான்றோர் போற்றும்
பெருமிதங் குன்றாப் பேரறி வாளன்
தொல்காப் பியத்தைத் துருவித் துருவிப்
பல்கால் ஓதிப் பாங்குற மொழிந்தவன்
உள்ளந் தெளிவுற உலகம் மகிழ்வுற
வள்ளுவந் தந்த மாமணி நாளும்
சிந்தனைப் புதுமையைச் செவ்விதிற் காட்டும்
செந்தமிழ் நடையிற் சீரியன் கூரியன்
ஆள்வோ ராகினும் அவர்க்கும் அறிவுரை
கேள்போல் நின்று கிளத்தும் துணிவன்
ஆசாற் றொழுதெழும் அரும்பெறல் மாணவன்

பேசான் பழிமொழி ஏசான் பிறரை
நண்பன் பண்பன் நயத்தகு தமிழைக்
கண்ணென் உயிரெனக் கருதும் இயல்பினன்
கல்வியைத் தமிழிற் கற்கத் தடையெனில்
அல்வினை யதுதான் அழிகவென் றெழுந்து
வல்வில் லம்பெனச் சொல்லமர் தொடுத்தவன்
அமர்க்களம் சென்றவன் ஆங்கே மாண்டனன்
எமக்கெலாம் துயரே தந்தனன் ஐயஓ!
யாவன் அவனென வினவின் தீவினை
செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான்
பொய்யா **மாணிக்கப் புலவன்** அவனே.

20.5.1989

**(முனைவர் வ.சுப.மாணிக்கனார் மறைவு குறித்துப் பாடியது)**

## 14

## குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

வஞ்சனை அறிய மாட்டான்
　　வாய்மையில் நழுவ மாட்டான்
பஞ்சினும் மென்மை நெஞ்சன்
　　பழகிட இனிய நண்பன்
அஞ்சிடும் தீமை காணின்
　　அவ்விடம் விலகி நிற்பான்
பிஞ்சிளங் குழந்தை காணின்
　　பேணுவான் தெய்வ மென்றே.

ஆர்ப்பரிப் பொன்று மில்லான்
　　அடக்கமே என்றுங் கொள்வான்
சேர்த்திடும் நண்ப ரெல்லாம்
　　சிறுவர்தம் வாழ்வில் அன்பு
வார்த்திட வழிகள் சொல்லி
　　வளர்த்திடும் நாட்டங் கொண்டான்
கூர்த்தநல் மதியில் நெஞ்சில்
　　குழந்தைகள் நினைவே கொள்வான்

சென்றிடும் இடத்தில் எல்லாம்
　　சிறுவர்க்குச் சங்கம் காண்பான்;
நன்றறி சிறுவர் சூழ
　　நடுவினில் அமர்ந்து பேசி

மன்றினில் மகிழ்தல் ஒன்றே
வாழ்க்கையின் பயனாக் கொண்டான்
வென்றிகள் பலவும் பெற்றான்
விழையுமென் நட்பும் பெற்றான்.

மழலையர் தெரிந்து கொண்டு
மனத்தினிற் பதித்துப் பாடிப்
பழகிடப் பாடல் தந்தான்;
பச்சிளங் குழந்தை நெஞ்சில்
அழகிய பாட்டு ணர்ச்சி
அரும்பிட வேண்டும் என்ற
விழைவுடன் ஈடு பட்டான்
வியத்தகு குறிக்கோள் கொண்டான்.

குழந்தைகள் பாடல் பாடக்
குழந்தையின் உள்ளம் வேண்டும்
பழந்தமிழ் உணர்வு வேண்டும்;
பண்புறும் நெஞ்சம் வேண்டும்;
வழங்கிடும் பண்பு வேண்டும்
வாய்மையோ டெளிமை வேண்டும்
மொழிந்திடும் அனைத்துங் கொண்டான்
முனைப்பிலா **வள்ளி யப்பன்.**

21.3.1981

## 15
# பதிப்புச் செம்மல்

கற்கும் நாள்முதல் கனிவும் பணிவும்
பற்பல பண்பும் பதிந்த நெஞ்சினன்

மேலோர் தொடர்பு மேலெனக் கொண்டவன்
நூலோர் போற்றும் நுண்மதி பூண்டவன்

பல்கலைக் கழகத்தில் பயிலுங் காலை
நல்லவர் பலரொடு நட்புப் பூண்டோன்

அரும்பெறல் நூல்கள் அழகுறப் பதித்துப்
பெருந்திறல் காட்டிப் பெயர்சொல உழைத்தோன்

பதிப்புச் செம்மல் என்று பலரும்
மதித்துப் போற்றும் மாண்பமை நண்பன்

எழுத்தும் பேச்சும் இனிக்க, செயல்கள்
வழுத்தும் படியா வாய்க்கும் இயல்பன்

**மெய்யப்பன்** என்னும் மேலோன்
வையை மணலினும் வாழினும் இனிதே.

26.7.1998

## 16

## உடன் பிறவாத் தமக்கை

தனித்துப் பிறந்து தவிக்கும் என்னை
இனித்த மொழியால் இனிய முகத்தால்
உள்ளூறும் அன்பால் உடன்பிறப் பாக்கி
அள்ளி யுதவி அரவணைத் தளிக்கும்
**பார்வதி தேவியைப்** பணியும் புகழும்
ஓர்தமிழ் உணர்ந்தஎன் உயர்சிறு நாவே.

*(1927இல் காந்தியாரைத் தம் இல்லத்தில் தங்க வைத்துத் தமிழகத் தென் மாவட்டங்களில் பேராயக் (காங்கிரசு) கட்சிப் பொதுக்கூட்டங்கள் நடத்தியவரும், நேதாசி சுபாசு சந்திர போசுடன் பழகி, அவரின் விடுதலைப் போராட்டத்திற்குத் தம் பெரும் பொருளைக் கொடுத்தவரும், பின்னாளில் தந்தை பெரியாரின் பேரன்பைப் பெற்றுச் சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாநிலப் பொருளாளராக இருந்து சமுதாய சீர்திருத்தத்திற்குப் பெரும் தொண்டாற்றியவரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி, கவிமணி தேசிக விநாயகம், பாரதியார், பாரதிதாசன், கவியரசு முடியரசனார், பொது உடைமை இயக்கத் தலைவர் ப.சீவானந்தம் மற்றும் பல தலைவர்களைப் போற்றிப் புரந்த வள்ளலுமான சீர்திருத்தச் செம்மல் கானாடுகாத்தான் வை.சு.சண்முகனாரின் திருமகள் திருமதி ந.பார்வதி தேவியைப் பாடியது.)*

# 17

# நட்பிற் பெரியன்

தைக்கின்ற ஊசிதனில் கூர்மை யுண்டு
**தமிழண்ணல்** நுழைபுலத்தும் அதனைக் கண்டேன்;
மொய்க்கின்ற அலைகடலில் ஆழம் உண்டு
முன்னவன்றன் கல்வியிலும் அதனைக் கண்டேன்;
மெய்க்கின்ற முகில்வானில் அகலம் உண்டு
மேலவன்றன் புலமையிலும் அதனைக் கண்டேன்;
மைக்குன்ற வரைத்தேனில் இனிமை யுண்டு
மனத்துவளர் நட்பினிலும் அதனைக் கண்டேன்.

உடனுறையுங் காலத்தே எனது நெஞ்சில்
ஊறிவரும் பாடலுக்குச் செவிலி யானான்;
இடனறவே மனக்கவலை கவ்வும் வேளை
இனிய சொலித்தேற்றுகின்ற துணைவன் ஆனான்;
கடனறியும் உளப்பாங்கால் உண்மை யன்பு
காட்டுகிற மனப்போக்கால் இளவல் ஆனான்;
அடவிரைவில் பேராசான் ஆகி என்னை
அப்படியே விட்டுவிட்டு மதுரை போனான்.

அவன்நெஞ்சை நானறிவேன் எனது நெஞ்சை
அவனறிவான்; ஒருவருக்குள் ஒருவ ராகி
இவரிரட்டைப் புலவரென உரைக்கும் வண்ணம்
எஞ்ஞான்றும் எவ்விடத்தும் உலவி வந்தோம்;
அவன்தொழிலால் மதுரைக்குப் பிரிந்து சென்றான்
ஆயினும்எம் உள்ளங்கள் பிரியவில்லை
அவனுறவை இரட்டித்த முப்பத் தாண்டின்
அகவையிலும் நினைந்துநினைந் திளைஞன் ஆனேன்.

முதற்படியில் நின்றிருந்தான் அன்றி ருந்தே
　முகம்மலர அகம்மலரப் பழகி வந்தான்;
முதற்படியில் நின்றபடி முயற்சி தன்னால்
　முன்னேற்றப் படியேறி உயர்ந்து வந்தான்;
இதற்கிடையில் பலபடிகள் கடந்தும், முன்னர்
　இருந்தபடி யிருக்கின்றான் நட்பில் இன்றும்;
*மதர்ப்படியில் உருப்படியும் செருக்கு மட்டும்
　மனத்தடியில் சாகுபடி யாக வில்லை.

மனத்துக்குள் செருக்கில்லான் எனினும் சான்றோர்
　மதிக்கின்ற பெருமிதத்திற் குன்றமாட்டான்;
முனைப்புற்ற எவரிடத்தும் பணிய மாட்டான்
　முன்னேற்றம் தடைப்படினும் வளைய மாட்டான்;
எனக்குற்ற இளவலென விளங்கி நிற்பான்;
　எனினுமவன் அடிப்பொடியன் நட்பில் மட்டும்;
புனத்துக்குள் உலவிவரும் கவரி மான்போல்
　பூமனத்தன் வாழ்கின்றான் வாழ்க நன்றே.

உருவத்தாற் சிறியவன்றான் எனினும் நல்ல
　உள்ளத்தால் உயர்மதியால் பெரியன் ஆவன்;
பருவத்தால் முதிர்ந்துவரும் புலமை கொண்டான்
　பாதியிலே உதிர்ந்துவிழும் வெம்பல் இல்லை;
உருவத்தில் மெலியவன்றான் எனினும் கல்வி
　ஊற்றத்தால் புலமையினால் வலிமை மிக்கான்;
எருவைத்தாற் பயிர்வளரும்; புலமை வைத்தான்
　இவனிடத்தே தமிழ்வளரும் செழித்து நன்றே;

30.1.1980

* மதர்ப்படியில் உருப்படியும் - மதர்ப்பின் அடியில் உருவாகும்.

# 18
# பொற்கிழி பெற்றவன்

("மானின் நேர்வழி மாத ராய்வழு திக்கு மாபெரும் தேவி கேள்"
என்ற திருஞானசம்பந்தரின் தேவாரப் பண்ணில் பாடவும்)

சேரன் நல்லினங் கோவின் நூலினைச்
சிந்தை மேவிய ஆசையால்
ஓரும் நுண்புலம் கொண்டு தேர்ந்ததை
ஓதி உண்மகிழ் வுற்றவன்
யாரு மேமணம் சேரும் நட்பினை
ஆக்கும் புன்னகை கொள்முகன்
ஊரும் வாழ்த்திட நாடும் ஏத்திட
ஓங்கு பாமொழி வாயினன்.

சோலை நாண்மலர்த் தூய தேனினைச்
சூழும் யாழிசைத் தும்பிபோல்
காலை யானதும் ஓய்வி லாதெழு
கடமை யாற்றிடும் வாழ்வினன்
ஆல வாயெனும் மதுரை மாநகர்
ஆல யத்தவர் சாற்றிய
சால வல்லவர் பாடும் போட்டியில்
சார்ந்து பொற்கிழி பெற்றவன்

நாம நீர்க்கடல் லாவியே
    நாடி நல்லன கண்டவை
நாமும் கற்றிட ஆசை யுற்றவன்
    நல்ல நூல்களைத் தந்தவன்
பூமி யாள்பவர் தேரும் நூலினால்
    பொன்கள் ஆயிரம் பெற்றவன்
சோம சுந்தர நாமம் மேவிய
    தோழ னாமவன் வாழ்கவே.

**(கவிஞர் அருசோ அவர்கள் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் மூன்று நாள் ஆற்றில் 'சிலப்பதிகாரம் ஒரு புதிய பார்வை' தொடர் சொற்பொழிவினைக் கேட்டு 10.8.1981 அன்று வழங்கிய வாழ்த்து)**

## 19

## வணிக நோக்கறியான்

பயிலும்நாள் தொடங்கி என்பாற்
பழகிடும் நண்பன்; அன்பு
செயலிலே குறைவு காணேன்;
அன்றுபோற் செழுமை கண்டேன்,
மயலுறும் செருக்கே யில்லா
மதிமிகு புலமை கண்டேன்;
அயலென எண்ணா தென்னை
அவனுடன் பிறப்பென் றெண்ணும்.

உளத்திலே ஒன்றை வைத்தும்
உதட்டில்மற் றொன்றை வைத்தும்
கிளத்துதல் அறியா வாயன்;
கெடுதலை நினையா நெஞ்சன்
களைப்புறும் பொழுதில் மற்றோர்
கனிவுடன் செய்த நன்றி
உளத்தினிற் பதிய வைத்தே
உணர்ந்துணர்ந் துருகும் மேலோன்.

பிணிபல சூழ்ந்த போதும்
பிறக்கிடல் அவனுக் கில்லை
துணிவுடன் எதிர்த்து நின்றே
துயர்களை மறந்து நிற்பான்
பணிவுடன் இன்சொற் பேசிப்

பழகிடும் **பழநி வேலன்**
அணிமிகும் தூய நெஞ்சில்
அன்புடன் பண்புங் கொண்டான்.

கற்றவை நினைவிற் கொண்டான்
காட்டிய நெறியிற் செல்வான்
உற்றதை மறைத்தல் செய்யான்
உதவியே உவகை கொள்வான்
பெற்றதே போதும் என்பான்
பெருகிய ஆசை இல்லான்
நற்றவ முனிவன் போல
நாளெல்லாம் தனிமை கொண்டான்.

பணிபுரி நாளில் வந்து
பழநிவே லவனை நாடி
அணுகிநல் லுதவி பெற்றோர்
அளவிலர்; பழகும் நட்பில்
வணிகநோக் கறியா தென்றும்
வாழ்க்கையின் பயனாக் கொண்டான்
அணிதிகழ் ஒழுக்கத் தானை
அன்புடன் வாழ்த்து கின்றேன்.

**(உடன்பயின்ற நண்பர் மு.பழநிவேல் அவர்களைப் பற்றிப் பாடிய பாடல்)**

# 20

# கலைத்திறன் காட்டும் கணபதி

கலைத்தொழில் தேர்ந்த நண்பன்
**கணபதி** என்னும் பேரான்
மலைத்திடும் வண்ணம் கண்டான்
வள்ளுவர் கோட்டம் ஒன்று
நிலைத்திடும் பேரும் பெற்றான்
நெஞ்சினில் வஞ்சம் இல்லான்
கலைத்திறன் வாழ்க என்பேன்
கனிதமிழ் நிறைந்த நெஞ்சால்

வைத்திய நாதச் சிற்பி
மாதவன் செய்தான் என்று
மொய்த்துல குரைக்கும் வண்ணம்
மொய்ம்புற முனைந்த மைந்தன்
வைத்துள உளியால் இந்த
வையமே வியந்து போற்றக்
கைத்திறன் காட்டி நின்றான்
கல்லையும் கனிய வைத்தே.

கயல்விழிக் கண்ண கிக்குக்
களங்கமில் அன்னம் வைத்து
மயல்விழி மாத விக்கு
மாமயில் ஒன்று வைத்து
வியனுல கேத்தும் வண்ணம்
வியப்புறும் சிற்பம் செய்தான்
பயன்கொள நினையா நெஞ்சன்
படைத்தனன் புகாரில் அன்றே.

**(சென்னை வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, பூம்புகார் சிற்பக்கலைக்கூடம் ஆகியன யாத்த பெருஞ்சிற்பி கணபதியைப் பாடியது. சிற்பி கணபதி அவர்கள் கவிஞருடன் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவரும், நண்பரும் ஆவார்.)**

## 21

# பழனி தந்த பாட்டு

பாட்டென்ற பேரால் பழுதுபட்ட சொற்றொடரைக்
கேட்டென்றன் நெஞ்சங் கிறுகிறுத்தேன் - வேட்டெழுந்து
நாடகமாம் நன்மருந்தை நண்பன் பழநியெனும்
பாடல்வலான் தந்தான் படைத்து.

தேன்கலந்து தந்தனனோ தெள்ளமுதந் தந்தனனோ
நான்கலந்தே இன்புற்றேன் நாடோறும் - வான்பறந்தேன்
வாட்டுந் துயர்துறந்தேன் வையந் தனைமறந்தேன்
பாட்டை அவன்படிக்கக் கேட்டு.

கூற்றமிலா வாழ்வு கொடுத்த தமிழ்த்தாயே
ஏற்றவரம் இம்மகற்கும் ஈந்தருள்வாய் - சாற்றுக்
கனிச்சுவையை விஞ்சுங் கவிமாலை நின்றன்
அனிச்சுவடிக் கீந்தான் அவன்.

**('அனிச்சஅடி' நாடகக் காப்பியத்தைப் படிக்கக் கேட்டுக் கனவிற் பாடியது)**

## 22
# பாளைநகர்ப் பண்பாளன்

சொல்லப் பழகியவன் சொல்லரிய நண்புளத்தால்
வெல்லப் பழகியவன் வீரனவன் - நல்லனவன்
என்னுளத்தைத் தொட்டுணர்ந்தே ஏற்ற துணைபுரியும்
பொன்னுளத்தன் ஓர்வயிற்றோன் போல்.

உண்ணென் றுரைத்துரைத்தே ஊட்டி எனதுளத்தைத்
தண்ணென் றியற்றுந் தகவுடையன் - பண்ணொன்றும்
பாட்டெனவே என்பாற் பழகும் இயல்புடையன்
கூட்டுணர்வால் விஞ்சுமனங் கொண்டு.

வந்தோர் குறையகல வாழப் பரிந்துரைகள்
தந்து புகலளித்துத் தாங்குமிடம் - வந்தளனைக்
கேளாக எண்ணிக் கிளர்ந்தெழுந்த **அன்புமணி**
வேளாளன் வாழ்கின்ற வீடு.

கொஞ்சும் மொழியுடையன் கூடாரும் வந்திவன்பால்
தஞ்சம் எனஒருசொல் தந்துவிடின் - நெஞ்சுருகி
அஞ்சல் நிலையத் தலுவல் புரிவதனால்
அஞ்சலெனச் சொல்வான் அவன்.

கதிரடித்த நெல்லைக் களங்குவிக்கும் நெல்லைப்
பதியடுத்த பாளைநகர்ப் பண்பன் - மதிபடைத்த
வள்ளுவனார் சொற்றபடி வாழ்க்கைத் துணைநலந்தான்
கொள்ளுவதால் கொண்டான் குணம்.

---

ஓர் வயிற்றோன் - சகோதரன், அஞ்சல் - அஞ்சாதீர்

சீற்றத்தைக் கண்டதிலை சிங்கத்தைப் போல்வாழும்
ஏற்றத்தைக் கண்டேன் இனியவன்பால் -போற்றியதை
ஏட்டில் மகிழ்ந்தே எழுதிவைத்தேன் மாற்றுயர்ந்த
பாட்டுள் மணியைப் பதித்து.

பாளை விரிந்து பயனளிக்குந் தண்பதியாம்
பாளை, மணியால் பயன்கொடுக்கும் -வாளையொடு
நீர்பாயும் தண்பொருநை நீள்கரையில் வாழ்மணியன்
பேர்வாழ்க வாழ்கநலம் பெற்று.

27.11.1974

## 23

## உயர்ந்தவன்

உற்றஎன் தோழன் என்கோ
　　உடன்பிறப் பாளன் என்கோ
பெற்றஎன் மகனே என்கோ
　　பேணிநன் னூல்கள் என்பாற்
கற்றவன் நீயே என்கோ
　　கண்ணினும் சிறந்தாய் எல்லாச்
சுற்றமும் ஆனாய் என்கோ
　　தூயனே **சக்தி வேலே.**

அன்புடன் பண்பு கல்வி
　　ஆர்க்குமே பணியும் கொள்கை
முன்பெழுந் துதவும் உள்ளம்
　　முனிவிலா தினிய பேசும்
பொன்மனம் அடக்க மெல்லாம்
　　பூண்டுளாய் என்ப தாலே
என்மனம் நினக்கே யாக்கி
　　இருக்கின்றேன் இனிய நண்பா

மனையென நினக்கு வாய்த்த
　　மங்கைநல் லாளும் நீயும்
இனியநன் மக்கள் தாமும்
　　என்விழிக் கறுவை செய்த
மனைதனில் உடனிருந்து
　　மனமுவந் துதவி செய்த
தனிமனம் யார்க்கு வாய்க்கும்?
　　தமிழொடு வாழ்த்து கின்றேன்.

தழைத்திடும் இடுக்கண் யாவும்
*தளைத்தன நின்னைச் சுற்றி
உழைத்தனை அவற்றைத் தள்ளி
உயர்ந்தனை; உயரும் போது
களைத்துறும் உறவுக் கெல்லாம்
கைகொடுத் துதவி செய்தாய்
செழித்தனை மேலும் மேலும்
செழித்துநீ வாழ்க தம்பி

முனைவர்நீ ஆன செய்தி
முதலில்யான் கேட்ட காலை
எனதுளம் மகிழ்ந்த பாங்கை
எவ்வணம் எடுத்து ரைப்பேன்
கனியொடு பாலுந் தேனும்
கலந்திடும் சுவையைக் கண்டேன்
மனையொடு மக்கள் சுற்றம்
வளமெலாம் பெற்று வாழ்க

உளத்தினால் உயர்ந்தாய், பெற்ற
உடலினால் உயர்ந்தாய், கற்ற
வளத்தினால் உயர்ந்தாய், செய்யுள்
நாடக வளங்கள் ஆயக்
களத்தினில் புகுந்து வென்றாய்,
கற்றவர் முனைவர் என்ன
அழைத்திட உயர்ந்தாய், செய்கை
அனைத்திலும் உயர்ந்தாய் வாழி.

**(பேராசிரியர் ந.சக்திவேல் , 'முனைவர்' பட்டம் பெற்றமைக்கு மகிழ்ந்தளித்த வாழ்த்து)**

---

தளைத்தன - பிணித்தன

## 24

# அன்பு தரும் அழகன்

நடையழகன் உடலழகன் நண்ணாரைச்
சொற்போரில் நடுங்க வைக்கும்
விடையழகன் விழியழகன் விழைவுகொளும்
பண்பழகன் வெண்மை பூண்ட
உடையழகன் உருவழகன் உளத்தெழுந்த
அன்பழகன் அறுபா னாண்டின்
மடைதிறந்து வருகின்றான் மனத்துணர்வு
பொங்கிவர வாழ்த்து கின்றேன்.

ஆணழகன் இவனுக்கா ஆண்டறுப
தாயிற்று? நேரில் நின்று
காணுபவர் நம்புவரோ? கதையென்றே
கூறிடுவர்; கவர்ச்சி கொண்டு
பூணுமெழில் பூத்துவரப் பொலிகின்றான்
மணமகன்போல; போற்றிக் காக்கும்
மாணுடையான் கொண்டஎழில் மாறாமல்
வாழ்கவென வாழ்த்து வோம்நாம்.

திருந்துமெழில் எவ்வண்ணம் சேர்த்தனனோ?
நமக்கொன்றும் தெரிய வில்லை
அருந்தியநன் மருந்தெதுவோ? அவனொருகால்
நலத்துறையின் அமைச்ச ராகி

இருந்தமையால் வந்ததுவோ? இனியதமிழ்
　　தந்ததுவோ? என்றும் நெஞ்சில்
பொருந்திவரும் தூய்மையினால் பூத்ததுவோ?
　　புரிந்துகொள முடிய வில்லை.

இனியனிவன் மணநாளை என்தந்தை
　　பாவேந்தர் எழுதி வைத்தார்
கனிவுடையன் மணிநாளை அவர்மகனாம்
　　கவியரசன் பாடு கின்றேன்
எனிலஃதோர் பேறன்றோ! தலைமுறைகள்
　　இரண்டாலும் ஏத்தப் பெற்ற
தனியுரிமை கொள்கின்றான் தந்தைமகன்
　　தருகவிக்குப் பொருளாய் நின்றான்.

பகுத்தறிவுக் கோட்டைக்குள் பயின்றுவரும்
　　வீரனவன், பழமை என்று
வகுத்தமைத்த ஆரியத்து வஞ்சனைகள்
　　அத்தனையும் மாய்ந்து போகச்
செகுத்தழித்த பெரியாரைச் சிங்கமெனும்
　　ஐயாவை எந்த நாளும்
அகத்தமைத்து வாழுமகன் அஞ்சாத
　　**அன்பழகன்** அவன்பேர் வாழ்க!

மண்ணாளும் ஆசையினால் மாற்றார்பின்
　　செலவிழையான் மடமை மிஞ்சிப்
புண்ணான தமிழினத்தைப் போற்றுவதே
　　தொழிலானான்; புதுமை கண்ட

தண்ணான தமிழ்மானம் தன்மானம்
　　தழைத்துவரக் காஞ்சி தந்த
அண்ணாவின் வழிநடப்பான் அருளுடையான்
　　**அன்பழகன்** அவன்பேர் வாழ்க!

நிலைபொறுக்க முடியாமல் நெருக்கடிகள்
　　வந்தாலும் நெஞ்சில் நிற்கும்
தலைவருக்குத் துணைநின்று தாங்குதல்தான்
　　தார்மறவன் கடமை யாகும்;
நிலைபொறுக்க இயலாதார் நேரார்பால்
　　ஏகிடினும் நிலைத்து நின்று
கலைஞருக்குத் தோள்தந்தான் கழகத்தைக்
　　காக்கின்ற கடமை கொண்டான்.

கழகத்திற் புயலொன்று கடிதாக
　　வீசுங்கால் கனியைத் தேடிப்
பழமரத்து வெளவால்கள் பறந்தோடிப்
　　போனாலும் பற்றி நிற்க
விழுதுவிடும் ஆல்போல விலகாமல்
　　அசையாமல் நிலைத்தி ருந்த
அழகனவன் அன்பனவன் அவன்பேர்தான்
　　**அன்பழகன்** என்றும் வாழ்க!

கலைக்கழகம் பயின்றுவரும் காலத்தே
　　இணைந்திருவர் கழகம் சேர்ந்தார்
நிலைக்கின்ற பணிசெய்தார் நெடும்புகழும்
　　பலபெற்றார் ஆனால் தீயோர்
கலைக்கின்ற கூட்டத்தில் காணாமல்
　　ஒருமனிதர் சுரந்து விட்டார்
மலைப்பின்றி அன்பழகன் மதியமைச்சாய்க்
　　கழகத்தில் வாழு கின்றான்.

இதழ்விரித்த தாமரையில் இனியநறுந்
    தேனூறும்; இவன்றன் வாயின்
இதழ்விரித்து நாவசைத்தால் இனியதமிழ்
    தானூறும்; மக்கள் கூட்டம்
அதன்சுவையை நனிமாந்த அஞ்சிறைய
    தும்பிகளாய் அணுகி வந்து
மதுவருந்தி மனமகிழ்ந்து வாழ்த்திசையைப்
    பாடிடுவர் தமது வாயால்.

பல்கலையின் கழகத்தில் பயில்கின்ற
    நாள்முதலே சொற்போர் செய்து
வெல்கலையில் வல்லனவன் பேசுங்கால்
    வெட்டொன்று துண்டி ரண்டாச்
சொல்கலையில் சூரனவன் சொன்னதையே
    சொல்லாமல் மேலும் மேலும்
பல்வகையிற் சிந்தித்துப் படைத்திடுவான்
    நல்லமுது பருகும் வண்ணம்.

வேர்த்தெழுந்தோர் அரங்கேறி வினாவிடுத்தால்
    வினவியவர் வெட்கும் வண்ணம்
ஆர்த்தெழுந்து விடையிறுப்பான் அவன்தொடுக்கும்
    மறுப்புரையில் அடுக்கும் சொற்கள்
கூர்த்தெழுந்த அம்பாகும் கூடாரைப்
    புறங்காணச் செய்வ தற்குச்
சீர்த்தெழுந்த வேலாகும் சிந்தனைக்கு
    விருந்தாகும் தேனும் ஆகும்.

மிகத்துணிந்த பசும்பொன்னார் மேலொருநாள்
நமைத்தாக்க மேடை ஏறி
அகத்தெழுந்த பக்தியினால் ஆண்டவன்பால்
ஆசையினால் ஆர்த்தெ ழுந்து
பகுத்தறிவால் ஒருமுட்டை படைத்திடவும்
ஆமொஎன் றுருத்துக் கேட்க
நகைச்சுவையில் நம்மழகன் நறுக்கென்று
விடை தந்தான் நாணும் வண்ணம்.

பக்தியுளார் முட்டையிட்ட பாடத்தைப்
படித்ததிலை பாரில் கோழி
கத்திவந்த முட்டையிடும் கண்டுள்ளோம்
கனன்றுரைத்து பசும்பொன் னார்தாம்
பக்தியினால் முட்டையொன்று படைப்பாரா?
படைக்கட்டும் பார்ப்போம் என்ற
அத்துணிவைக் கண்டவையோர் அடடாவோ
அடடாவென் றார்த்து நின்றார்.

விளக்கெண்ணெய்ப் பேச்சறியான் விறுவிறுப்பும்
சுறுசுறுப்பும் விரைந்து நெஞ்சில்
கொளப்பண்ணும் பேச்சாளன் கொள்கைகளைத்
தெளிவாக கோத்தெ டுத்து
விளக்குவதில், இலக்கியத்து விரிவுரையில்,
நகைச்சுவைகள் விளைக்கும் பேச்சில்,
துளைக்கின்ற மறுப்புரையில் தோலாத
நாவுடைய தோழன் ஆவன்.

அரங்கேறி முழங்குங்கால் அஞ்சாத
ஐயாவின் துணிவி ருக்கும்
அரங்கேறி மொழியுங்கால் அருளுடைய
அண்ணாவின் கனிவி ருக்கும்
அரங்கேறி இதழசைத்தால் அழகுநடை
ஆரூரார் நயமி ருக்கும்
அரங்கேறி நின்றாலே அரங்கிற்கே
அழகுதரும் அழகன் வாழ்க!

தில்லிநகர் ஆளுநர்கோ தென்னாட்டில்
உலாவரஓர் திட்ட மிட்டார்
குல்லுகரின் வருகைக்கு நம்வெறுப்பைக்
காட்டுதற்குக் கூடிப் பேசி
நல்லதொரு முடிவெடுக்க நம்பெரியார்
நம்மவர்க்கோர் அழைப்பு விட்டார்
ஒல்லையிலே தலைநகர்க்குப் பொதுக்குழுவின்
உறுப்பினர்கள் ஓடி வந்தார்.

அன்றங்குப் பொதுக்குழுவில் ஐயாவை
அண்ணாவை மற்றும் அங்குச்
சென்றிருந்த அனைவரையும் ஆளவந்தார்
சிறைசெய்தார் அதனைக் கண்டு
தென்றலெனும் திரு வி க தலைமையிலே
திரண்டடெழுந்தோம் அழகன் அன்று
நின்றிருந்த சிங்கமென நின்றதை நாம்
நினைத்தாலே புல்ல ரிக்கும்.

அன்பகழகன் இல்லத்தில் அடிக்கடிநான்
அண்ணாவைக் கண்ட காட்சி
அன்பொழுகும் மணிமொழியார் அலுவலகத்
தவனுடன்நான் அளாவும் காட்சி
இன்புபெற அந்நாளில் இளந்தாடி
முகத்தானோ டினிதி ருந்து
முன்பழகும் காட்சியெலாம் முன்வந்து
கண்ணெதிரில் முகிழ்த்தல் கண்டேன்.

அவன்மனைக்கு நான்செல்வேன் அனைவரையும்
அருகழைப்பான் அவர்க்குக் காட்டி
இவன்நமது **முடியரசன்** என்றென்னை
இனிதுரைப்பான் அந்த அன்பை,
தவழ்கின்ற முறுவலுடன் எனக்குளத்தைத்
தந்துவக்கும் எளிய பண்பை
அவிழ்கின்ற உள்ளுணர்வால் தமிழ்தந்த
ஆர்வத்தால் வாழ்த்து கின்றேன்.

நீண்டதொரு பயணத்தில் நெடுத்தொலைவும்
துயர்பலவும் நீந்தி வந்தோம்
தாண்டியகல் பலவெனினும் தாண்டுதற்கு
வேண்டிவை இன்னும் உண்டு
கூண்டிலுறு பறவைக்குப் பால்பழங்கள்
கொடுப்பதனாற் பயனே இல்லை
வேண்டியவான் வெளியிடத்தே பறந்துசெல
விடுதலைதான் வேண்டும் இங்கே.

கூண்டதனைத் திறந்துவிடக் குயிலினங்கள்
உளங்குளிரக், குளிர்ந்த நெஞ்சில்
ஈண்டிவரும் பெருமகிழ்வால் இனியதமிழ்
இசைபாட, இடையீ டின்றி
நீண்டவெளி உரிமைபெற நினைந்திங்கு
நெடிதுழைக்கும் கலைஞ ருக்கு
வேண்டியநற் றுணையாகி விடுதலைக்குப்
புணையாகி வெல்க நண்பா!

கழகத்தின் செங்கோலாய்க், கலைஞர்க்கு
வெண்குடையாய்க், கனிந்து நிற்கும்
அழகுக்கோர் அரியணையாய்த், தமிழகத்தின்
அரணாகி யாரும் வந்து
பழகற்கு நல்லமுதாய்ப் பைந்தமிழின்
போர்வாளாய்ப், பண்பு சொல்லும்
வழிகட்குத் திருக்குறளாய் வாழ்கின்ற
அன்பழகன் வாழ்க நன்றே

மான்வாழும் மயில்வாழும் மாமலையில்
மலர்க்குறிஞ்சி சேர்த்து வைத்த
தேன்வாழும் தமிழ்போலத் தித்திப்பான்
பெயர்வாழ்க, திரியா தென்றும்
வான்வாழும் கதிரவன்போல் வையகத்தைச்
சூழ்கடல்போல் வளங்கள் ஓங்கி
யான்வாழும் நாளுடனே யாண்டுபல
வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

19.12.1982

**(பேராசிரியர் க.அன்பழகன் மணிவிழா வாழ்த்து)**

# 25
# தோள் தந்தான்

பகுத்தறிவுக் கோட்டைக்குள் பயின்றுவரும் வீரனவன்
வகுத்தமைத்த ஆரியத்து வஞ்சனைகள் அத்தனையும்
செகுத்தழித்த பெரியாரைச் சிங்கமெனும் ஐயாவை
அகத்துமைத்து வாழுமகன் அவன்பேர்தான் **அன்பழகன்**

மண்ணாளும் ஆசையினால் மாற்றார்பின் செலவிழையான்
புண்ணான தமிழினத்தைப் போற்றுவதே தொழிலானான்
தண்ணான தமிழ்மானம் தன்மானம் தழைத்துவர
அண்ணாவின் வழிநடப்பான் அவன்பேர்தான் அன்பழகன்!

நிலைபொறுக்க முடியாமல் நெருக்கடிகள் வந்தாலும்
தலைவருக்குத் துணைநிற்றல் தார்மறவன் தொழிலாகும்
இலைபொறுக்கும் இயல்புடையோர் ஏகிடினும் நெருக்கடியில்
கலைஞருக்குத் தோள்தந்தான் கழகத்தைக் காத்திருந்தான்.

கழகத்திற் புயலொன்று கடிதாக வீசுங்கால்
பழமரத்துவௌவால்கள் பறந்தோடிப் போனாலும்
விழுதிருக்கும் ஆல்போல விலகாது நிலைத்திருந்த
அழகுளத்தன் அன்புளத்தன் அவன்பேர்தான் அன்பழகன்

மான்வாழும் மயில்வாழும் மாமலையிற் சேர்த்துவைத்த
தேன்வாழும் தமிழ்போலத் தித்திப்பான் பெயர்வாழ்க!
வான்வாழும் கதிரவன்போல் வையத்தைச் சூழ்கடல்போல்
யான்வாழும் நாளுடனே யாண்டுபல வாழியவே!

**(பேராசிரியர் க. அன்பழகன் பிறந்த நாள் வாழ்த்து)**

## 26

# அழகின் சிரிப்பில் கலைஞர்

விரித்துவரும் வலையிலெலாம் தப்பி நின்று
வீழாமல் சிரிக்கின்ற தமிழ ணங்கே!
குறித்துவரும் பகையஞ்சிப் புறமிட் டோடக்
கூரறிவுப் படைதந்த எங்கள் தாயே!
நெருப்புபுனல் செல்கறையான் வாய்கள் தப்பி
நின்றொளிரும் ஏடுடையாய்! அம்மா! நின்றன்
சிரித்தமுகங் காண்பதற்கே என்றும் வாழ்வேன்
சிறியன்எனைக் காப்பதுநின் கடமை யாகும்.

அஞ்சுகத்தின் மடிவளர்ந்தாய், முத்து வேலர்
அகம்மகிழ நடைபயின்றாய், ஆரூர்ப் பள்ளிப்
பிஞ்சுமனத் தோழருடன் கல்வி கற்றாய்,
பெரியாரின் ஈரோட்டுப் பள்ளி சென்று
நெஞ்சுரத்தைச் சிக்கனத்தைக் கற்றுக் கொண்டாய்
நெகிழ்ந்துருகும் அண்ணாவின் கருணைமிக்க
நெஞ்சகத்தைக் காஞ்சியிலே பெற்றுக் கொண்டாய்
நெருக்கடியில் சிரிப்பதற்கு யாங்குக் கற்றாய்?

மேடையிலே வீசுகின்ற தென்றற் காற்றே
மெல்லியரின் இதழ்விரித்தால் மக்கள் நெஞ்ச
ஓடையிலே மலர்சிரிக்கும், மணம்சி ரிக்கும்,
உகந்தவர்தம் நெஞ்சமெலாம் சுளிசி றக்கும்;

கோடையிலே சிரித்தமலர் மணத்தை வாரிக்
    கொண்டுசெலும் பொதிகைமலைத் தென்றல்; நீயோ
மேடையிலே சிரித்தவர்தம் பணத்தை வாரி
    மெதுவாகக் கொண்டுசெலும் ஆருர்த் தென்றல்.

செங்கதிரோன் சிரித்துவிடின் புழுக்கந் தோன்றும்
    சிறியபனை விசிறிகளின் துணையை நாடும்;
செங்கதிரின் வெயில்காயத் தானே வந்து
    சிறியபுழு வீழ்ந்துடலம் சுருண்டு சாகும்;
பொங்கிவரும் நின்சிரிப்பால் பகைவர் நெஞ்சம்
    புழுக்கமுறும் விசிறிகளின் துணையை நாடும்;
எங்களுளங் கவர்ந்தவனே பகைப்பு ழுக்கள்
    இடந்தெரிய மாட்டாமல் வீழ்ந்து சாகும்.

திகழ்ந்துவரும் வெண்ணிலவு சிரித்தால் ஒன்று
    சேர்ந்திருக்கும் காதலர்க்குக் களிப்பை யூட்டும்;
மகிழ்ந்திருந்து பிரிந்தவர்க்கோ எரிச்சல் ஊட்டும்;
    மதியினையே திட்டுகிற மருட்சி யூட்டும்;
முகிழ்த்துவரும் நின்சிரிப்போ நின்னைச் சேர்ந்த
    முன்னேற்றக் கருத்தினர்க்கு மகிழ்ச்சி யூட்டும்;
இகழ்ந்துன்னைப் பிரிந்தவர்க்கோ எரிச்ச லூட்டும்;
    ஏதேதோ திட்டுகிற மருட்சி யூட்டும்.

உயர்வுக்கு வானத்தை உவமை சொல்வர்;
    உழைத்துவரும் உயர்வுக்கு வானம் நீதான்
மயிலுக்கு வான்சிரித்தால் தோகை ஆடும்
    மாந்தருக்கு நீசிரித்தால் ஓகை கூடும்;
பயமுறுத்தி இடியிடிக்கும் மின்னல் வீசும்
    பார்மகிழ மழைபொழியும் வான்சி ரித்தால்;
துயருறுத்த வருபகையை இடித்து மின்னிச்
    சொல்மாரி நனிபொழியும் நீசி ரித்தால்.

பாருக்குக் கடல்காவல்; பைந்த மிழ்ப்பண்
பாட்டுக்கு நீகாவல்; ஆழ்ந்த ஆணி
வேருக்கு மண்காவல்; தமிழர் நாட்டு
வேலிக்கு நீகாவல்; பெருகி ஓடும்
நீருக்குக் கரைகாவல்; கழகத் தோழர்
நெஞ்சுக்கு நீகாவல்; இந்த நாட்டில்
யாருக்கு யார்காவல் என்று மக்கள்
அஞ்சிவரும் இந்நாளில் நீதான் காவல்.

மணிகொழிக்கும் பொன்கொழிக்கும் சந்த னத்தின்
மணங்கொழிக்கும் எழில்கொழிக்கும் அருவி என்பர்;
அணிகொழிக்கும் பொருள்கொழிக்கும் எழில்கொ ழிக்கும்
அரியதமிழ் மணங்கொழிக்கும் நினது பேச்சில்;
அணில்கொறிக்கும் தீங்கனிகள் தொங்கும் சாரல்
அருவியொரு ஆறாகி வளங் கொழிக்கும்;
அணில்கொறித்த கனிதொங்கும் தமிழர் நாட்டை
அழகாக்கி வளமாக்கும் ஆறும் நீதான்.

எதிரிகட்கு வல்லினமாய், நின்னை அண்டி
இருப்பவர்க்கு மெல்லினமாய், இரண்டும் இல்லா
நொதுமலர்க்கோ இடையினமாய் மெய்யெ ழுத்து
நுவல்கின்ற மூவினமாய் விளங்கு கின்றாய்!
மதுரைநகர்ப் பாண்டியனார் சேரர் சோழர்
மன்னர்வழி மூவினத்தின் மெய்யும் ஆனாய்!
எதுவரினும் மெய்யாக விளங்கும் உன்னை
எவரெவரோ பொய்யாகப் பேசு கின்றார்!

பதியிலுளார் நின்பெயரை மு.க. என்று
பகர்வதற்குக் காரணமென்? முத்து வேலர்
புதல்வரென உணர்த்துதற்கா? இல்லை யில்லை
புலிநிகர்த்த நெஞ்சுடையான் எதிலும் என்றும்

முதல்வர்கரு ணாநிதிஎன் றுணர்த்து கின்ற
முத்திரைதான் அவ்வெழுத்து; மெய்யெ ழுத்தின்
முதலெழுத்தும் நீதானே; உயிராம் அண்ணா
முதலெழுத்தும் உன்னுடன்தான் இணைந்தி ருக்கும்.

பிணியுற்ற தமிழினத்தைப் பிழைக்க வைக்கப்
பெரியாராம் மருத்துவரோ அறுவை செய்தார்;
தணியட்டும் பிணியென்று மருந்தை அண்ணா
தந்திரமாக் கூட்டுக்குள் அடைத்துத் தந்தார்;
துணிவுற்ற திருமணத்தோய்! நீயோ அந்தத்
தொழிலுடனே வலிக்காமல் ஊசி போடும்
பணிகற்றாய்; பெயர்பெற்றாய், சித்தர் சொன்ன
பச்சிலையும் மூலிகையும் கற்றுக் கொண்டாய்.

மருத்துவனே பிணியகன்ற மாந்தர் நின்றன்
மருத்துவத்தின் திறங்கண்டு மகிழ்வு கொண்டு
வருத்தமற வாய்விட்டுச் சிரித்தார்; நீயும்
வளர்தமிழ்ச்சொல் வருவாயால் சிரித்து நின்றாய்;
சிறுத்தமதி படைத்தவரோ அதனைக் கண்டு
சிந்தைஎலாம் அழுக்காறு வளர்த்து நின்றார்;
திருத்தமுற மருத்துவத்தைக் கல்லார் இங்குத்
திரிகின்றார் மருத்துவர்போல் எனச்சி ரித்தாய்;

முடியரசன் எனும்பெயரைப் பூண்டி ருந்தும்
முடியிழந்து நிற்கின்றேன்; நீயும் இன்று
முடியிழந்து நிற்கின்றாய்; ஆனால் என்போல்
முடி ஒன்றும் நரைக்கவில்லை; யாண்டுப் பெற்றாய்?
இடியனைய துயர்வந்து தாக்கும் போதும்
இடியாமல் சிரிப்பதனால் பெற்றாய் போலும்!
முடியிழந்து நின்றாலும் மன்னா நின்றன்
முகத்தழகு சிரித்துவிளை யாடக் கண்டேன்.

'சிரிப்பென்னும் மருந்துண்டேன் அம்மருந்தைச்
சித்தர்திரு வள்ளுவனார் தந்தா'ரென்று
உரைக்கின்றாய் நெஞ்சுக்குள் என்செ விக்குள்
ஒருசிறிது விழக்கேட்டேன்; குறள்நூல் சொல்லி
விரிக்கின்ற பொருளனைத்தும் விரித்துச் சொல்லி
விளக்கிவரும் புலவன்நான்; எனினும் இன்னும்
வருத்திவரும் கலைக்கு மருந்து கண்டு
வாழ்வதற்குக் கற்கவில்லை; கலைஞன் நீதான்.

ஒருதுயரம் வந்தாலும் உள்ளம் வாடி
ஒடுங்குகின்றேன் சிரிப்பதற்கோ இயல வில்லை;
வருதுயரம் எதுவெனினும் நிமிர்ந்து நின்று
வாய்விட்டுச் சிரிக்கின்றாய் கலக்க மின்றி;
கருணைநிதி கலங்கிவிடின் கழகத் தோழர்
கலங்குவரே எனஎண்ணி மறைக்கின் றாயா?
வருபவைதாம் வரட்டுமெனை நாட்டுக்காக
வழங்கி விட்டேன் எனஎண்ணிச் சிரிக்கின்றாயா?

அறுசமயம் பிறசமயம் வெறுப்ப வன்தான்
ஆனாலும் அன்பழகற்(கு) அருகன் ஆனாய்;
பிரிவுதரும் சாதிக்குப் பகைவன் தான் நீ
பிழையறியாச் சாதிக்கு நண்பன் ஆனாய்;
'உறுதியுடன் விடுதலையைப் பெற்று விட்டோம்
உரிமையுள தென்னரசும் உடையோம்' என்று
முரசொலியை முழக்குகின்றாய் ஆனால் இந்த,
முடியரசன் பாட்டுக்குள் கைதி ஆனாய்.

சிவபெருமான் குறைமதியைத் தலையில் வைத்தான்;
சிந்தனையால் நிறைமதியைத் தலையில் வைத்தாய்;
சிவபெருமான் தலைமதியன்; நீயோ என்றும்
சிரிக்கின்ற முகமதியன்; அற்றை நாளில்

அவன்சிரித்தான் முப்புரத்தைச் சுட்டெ ரித்தான்;
ஆற்றலுளாய்! நீசிரித்தாய் நம்மை யண்டித்
தவறுசெயும் முப்புரியைச் சுட்டெரித்தாய்;
தனிமதியாய்! எமதுதென்னா டுடையாய் போற்றி.

பொங்கிஎழும் அலைக்கைகள் எடுத்துச் சென்ற
புகார்கண்டு சிரித்தவன் நீ; படைத்த சிற்பி
பொங்கிவரும் மனக்களிப்பால் நின்னை நோக்கிப்
பூம்புகார்ப் பெருந்தச்சன் என்று சொன்னார்;
இங்கவர்தாம் உளியொன்றும் தந்தா ரல்லர்;
ஆதலினால் மற்றொருவர் உளியை நின்பால்
தங்குதடை யில்லாமல் வீசப் பெற்றுத்
தமிழகத்தை உருவாக்கும் சிற்பி யானாய்.

'பேருலகில் நீசிரித்து வாழ வேண்டும்
பிறர்சிரிக்க வாழாதே' என்று சொல்லி,
ஆரொருவர் சிரித்தாலும் அவர்சி ரிப்பை
அழித்துவிட்டுத் தாம்மட்டும் சிரித்து நிற்பார்;
சீருடையாய்! நின்னுடனே பிறரும் சேர்ந்து
சிரிப்பதற்கே வாழ்வெடுத்தாய்; எளியர் தாமும்
சீரடைய வாழ்வுபெறச் சிரித்து வாழச்
சிரிக்கின்றாய் வாழ்கின்றாய் வாழ்த்து கின்றேன்.

மெருகூட்டும் முகங்கொண்டார் மக்கள் மன்றில்
மெய்யோபோல் குண்டுவிடும் இயல்புங் கொண்டார்
திருநாட்டின் மேல்மன்றில் எம்டன் குண்டைத்
தெரியாமல் போட்டாலும் சிரிக்கின் றாய்நீ;
கருவாட்டுக் கடைதிறக்கச் சென்ற போதும்
கருவென்ப துன்பெயரை நினைவில் கூட்டத்
திருநாக்கில் நரம்பின்றி நின்னைத் திட்டிச்
'சிறைவைப்பேன்' என்றாலும் சிரிக்கின் றாய்நீ.

பாளைநகர்க் கொட்டிலுக்குள் போவென் றாலும்
பாராளக் கோட்டைக்குள் வாவென் றாலும்
பாளைநிகர் சிரிப்புடனே செல்கின் றாய்நீ
பக்குவஞ்சேர் ஞானிஎன ஆகிவிட்டாய்;
காளைகளுக் குன்பெருமை தெரிய வில்லை
கலைத்துறையின் திலகமுந்தான் அறிய வில்லை;
நாளைவர லாறுரைக்கும் நாய கன்நீ
நான்புகழ்ச்சி சொல்லவில்லை உண்மை சொன்னேன்.

தருக்குடனே அதிகார போதை ஏறித்
தனிக்குடையின் கீழிருந்தோர்கொண்டு வந்த
நெருக்கடியில் சிரித்தவன்நீ; நின்னைக் காண
நிமிர்ந்தெழுந்த கூட்டத்தில் இடித்துத்தள்ளும்
நெருக்கடியில் சிரிப்பவன்நீ; உறுதி யோடு
நிற்பவர்தம் திருமணங்கள் நடத்தி வைத்துப்
பொறுப்புடனே கழகத்தைக் காக்கப் பேச்சில்
பொடிவைத்துச் சிரித்தெமையும் சிரிக்க வைத்தாய்.

திரையுலகில் பராசக்தி வந்த போதுன்
திறமையெலாம் கண்டவர்கள் புகழ்ந்து நின்றார்;
அரசியலில் பராசக்தி வந்தபோதுன்
ஆற்றலெலாம் கண்டவர்கள் வியந்து நின்றார்;
இருபெரிய பராசக்தி வலிமை எல்லாம்
எழுத்தாலே வென்றவன் நீ; இனிமேல் யார்க்கும்
வருமுலகில் இராசக்தி உன்னை வெல்ல;
வருபகைகள் நண்புகொள ஏங்கிநிற்கும்.

கம்பனொரு கதைசொன்னான்; இராமன் மேலே
கண்வைத்தாள் சூர்ப்பணகை, குறும்பு செய்தாள்;
வம்புபல இழைத்திருந்தாள், இளையோன் கண்டு,
வந்தவளை மூக்கறுத்தான்; அதனை நோக்கி

அம்புவிடும் வில்லாளன் இராமச் சந்த்ரன்
அரும்பிவரும் புன்முறுவல் பூத்து நின்றான்;
நம்பியவள் மூக்கறுத்தான் தம்பி; வாயில்
நகைதவழச் சிரித்திருந்தான் அண்ணன் என்றே;

தம்பிகரு ணாநிதியின் ஆட்சி கண்டு
தவறாகக் கண்வைத்தார் நேரு செல்வி;
வம்புகளை இழைத்திருந்தார்; குறும்பும் செய்தார்;
வஞ்சமனங் கொண்டவரைத் தஞ்சை மண்ணை
நம்பியிங்கு வந்தவரை மூக்கறுத்தார்
நாடாளும் முதலமைச்சர் இராமச் சந்த்ரன்;
நம்பியவர் மூக்கறுத்தார் அண்ணன்; வாயில்
நகைதவழச் சிரித்தாய்நீ தம்பி இன்று.

சிரிக்கின்ற முகம்வாழ்க, தமிழை என்றும்
சிந்திக்கும் அகம்வாழ்க, பகைகள் காணின்
நெரிக்கின்ற புருவங்கள் இனிது வாழ்க,
நீள்நிலத்தைச் சுமக்கின்ற தோள்கள் வாழ்க,
குறிக்கின்ற குறிதவறாப் பார்வை கொண்ட
குளிர்விழிகள் வாழியநின் கொற்றம் வாழ்க,
இருக்கின்ற எமக்கெல்லாம் துணையே வாழ்க
எமதுயிரின் உடன்பிறப்பே என்றும் வாழ்க.

திருவிடத்தின் இனவுணர்வுக் காப்பி யத்தைத்
தெளிவுபெற எழுதியவர் பெரியார்; அந்தப்
பொருளெடுத்து விளக்கவுரை எழுதித் தந்து
புத்துணர்வை ஊட்டியவர் அறிஞர்; மக்கள்
மருளொழிய, அறிவொளிகள் பரவி நிற்க,
மானமிகு காப்பியத்தைக் கற்றுத் தந்து
வருபவர்தாம் நம்கலைஞர்; இந்த ஆசான்
வாழ்கவென வாழ்த்துவது கடமை யன்றோ?

பேருருவ மரங்களையும் தன்னுள் கொண்ட
பெருமைகொளும் வித்தானார் பெரியார்; எங்கள்
பேரறிஞர் அவ்விதையில் முளைத்தெ ழுந்த
பேரால மரமாக விளங்கி நின்றார்;
பாரறிய அதுபடர்ந்து நிற்கும் போது
பக்கத்து விழுதாக நின்று காக்கும்
வீறுடையார் நம்கலைஞர் அன்றோ? அந்த
விழுதுக்கு நன்றிசொலி வாழ்த்தி நிற்போம்;

இனவுணர்வுச் சிந்தனையாம் அருவி வெள்ளம்
ஈரோட்டுப் பெருமலையில் தோன்றிக் காஞ்சி
மனவுணர்வில் வற்றாத ஆறாய் ஓடி,
மாநிலத்தார் நெஞ்சகத்தை நன்செய் யாக்கிக்;
கனவுகளை நனவாக்கி வருதல் கண்டோம்;
கார்குலவி நீர்பொழியும் ஆரூர் நெஞ்சம்,
புனல்பெருகும் ஆற்றுக்குக் கரையாய் நிற்கும்;
பொழுதெல்லாம் காத்திருக்கும்; வாழ்க நெஞ்சம்.

காப்பியத்தைக் கற்பிக்கும் ஆசா னாகிக்,
கருத்துநிழல் பரப்புகின்ற ஆலம ரத்தைக்
காப்புறுத்தத் தாங்குகிற விழுதும் ஆகிக்,
களமனைத்தும் வளப்படுத்தும் ஆற்றைக் காக்க
யாப்பமைந்த கரையாகிக், கழகம் காக்கும்
யாளிக்கு நிகராகும் கலைஞர் தம்மை
நாப்புலத்தால் மனப்புலத்தால் வாழ்த்தி நிற்போம்
நாம்வாழ எந்நாளும் போற்றி நிற்போம்.

**(இலக்கிய அணி, சென்னையில் 2.6.79 அன்று எழிலுற நடத்திய கலைஞர் விழாவில் - கவினுறு பாவரங்கத் தலைமை ஏற்றுப் பாடினார் கவியரசு முடியரசனார்! அவர் படைத்த தமிழ் விருந்து ஈண்டு காண்க! "அழகின் சிரிப்பில் கலைஞர்" என்பது பாவரங்கத் தலைப்பு)**

## 27

# தூற்றலுக்குத் துவளாதான்

வென்றவனை வெங்களத்தில் நின்றவனை
வேதனைகள் பலவும் ஏற்று
நன்றெனவே சிரித்தவனை நாளெல்லாம்
உழைத்தவனை நாட்டுக்காக
என்றுளமே மகிழ்ந்தவனை என்மக்கள்
அரியணையில் ஏற்றி வைத்தார்
நன்றியினை அவர்க்குரைப்பேன் நற்றமிழால்
வாழ்த்துரைப்பேன் நாடு வாழ

எனதுதமிழ்த் திருநாடே எனையீன்ற
தாய்நாடே இதற்கு முன்னர்
நினதுமனம் புண்ணாக நின்றவர்கள்
இன்றில்லை நீங்கி விட்டார்;
முனமொருகால் ஆண்டவன்தான் முதலமைச்சாய்
மீண்டுமிங்கு முனைந்து வந்தான்
மனமகிழத் தலைநிமிர்வாய் மனப்புண்ணை
ஆற்றிடுவான் மாதே வாழி.

சுடுகணைகள் எத்தனைதான் சொரிந்தாலும்
துவண்டுவிடான் துணிந்து நிற்பான்
விடுமுறைகள் அவற்கில்லை வேளைதொறும்
பணிபுரிவான் வெற்றி கொள்வான்

நடுவுநிலை பிறழாதான் நாட்டுநலங்
கருதிடுவான் நன்றே செய்வான்
தொடுவானச் செங்கதிராய்த் தோன்றிடுவான்
சுடரொளியைத் தொழுவோம் வாரீர்.

முன்னையெலாம் வடவருக்கு முன்னின்று
கைகட்டி முடங்கி நிற்போம்
பின்னைஅது மாறியது; பேரன்பு
கொண்டுநமைப் பேணி வந்து
கன்னல்மொழி பேசுகின்றார் கைகொடுக்க
வருகின்றார் வடபு லத்தார்;
இன்னநிலை வந்ததுதான் எப்படியோ?
இக்கலைஞன் ஆற்றலன்றோ!

ஆற்றலுக்குத் தலைமகனை அஞ்சாத
அரியேற்றை ஆண வத்தார்
தூற்றலுக்குத் துவளானைத் தொண்டர்க்குத்
துணையானைத் தொடுத்த போரில்
மாற்றலரை அஞ்சானை மதிமிகுத்த
திறலானை மானங் காக்க
ஆற்றிவரும் பணியானை அன்னைமனங்
கொண்டவனை வாழ்த்த வாரீர்.

**(மீண்டுங் கலைஞர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது பாடியது).**

**24.1.1989**

## 28

# முறுவலிக்கும் இளையவனே

சுறுசுறுப்பின் வார்ப்படமே சூடுதரும்
　　அரசியலைச் சொல்லும் ஏடே
விறுவிறுப்புச் சொற்போரில் விளையாடும்
　　கூர்வாளே வேதப் போக்கால்
கிறுகிறுத்த தமிழினத்தின் கேடகற்றி
　　மேலுயர்த்துங் கிழவா என்றும்
முறுவலிக்கும் இளையவனே முத்தமிழ்தேர்
　　மு.க.வே. உடன் பிறப்பே....

அன்றொருநாள் ஆட்சிபெறும் ஆணவத்தார்
　　உனைச்சிறையில் அடைத்து வைத்தார்
என்றறிந்த நல்லினைஞர் எரியூட்டித்
　　தமதுடலை எரித்துக் கொண்டார்;
ஒன்றிரண்டா? அம்மாவோ ஒப்தின்மேல்
　　எண்ணுடையார்; உலகில் எங்கும்
என்றுமொரு தலைவர்க்கும் இல்லாத
　　பெருமையை நீ ஏற்றாய் ஐயா!

புகழ்மொழியால் நண்பர்யார் புகுகின்ற
　　பகைவர்யார் புரிய வில்லை;
இகழ்மொழியும் புகழ்மொழியும் இரண்டுமொரு
　　நிகரெனவே எண்ணி நின்றால்,
பகைபுக ஓர் வழியில்லை; பணிதொடர
　　இடரில்லை; பழகி என்னை
வகை தெரிந்து கொண்டவன்நீ வாய்மொழியை
　　மனங்கொள்க வாழ்க நன்றே.

# 29

# வாழிய தமிழரசு

இந்நாட்டு வரலாற்றை நோக்குங் காலை
இருந்தவரும் புகுந்தவரும் ஆண்ட நாளில்
பொன்காட்டிப் பொருள்காட்டிப் புகழுங் காட்டிப்
பொருதவர்தம் புறங்காட்ட மறமுங் காட்டித்
தந்நாட்டை வளமுறுத்த வழிகள் காட்டித்
தனியாட்சி நடத்திவந்தார் மன்னர் என்று
பொன்னேட்டில் பொறித்துளதைக் கண்டோம் அன்று
புதியதொரு வரலாற்றைக் கண்டோம் இன்று.

அன்றிருந்த மன்னரெலாம் செங்கோல் ஏந்தி
ஆண்டிருந்த அந்நாளில் மன்ப தைக்கு
நன்றுணர்ந்து செய்தபெரும் நன்மையெல்லாம்
நாலைந்தும் ஆறேழும் என்ற எண்ணுள்
நின்றிருக்கும்; அதன்மேலும் ஒன்றி ரண்டு
நிகழ்ந்தாலும் நிகழ்ந்திருக்கும்; பகையும் போற்ற
இன்றிருக்கும் அரசுசெயும் நன்மை மட்டும்
எண்ணுக்குள் அடங்காமல் நீண்டி ருக்கும்.

பணிபுரியும் அலுவலர்கள் இயற்கை எய்தின்
படுதுயரில் அவர்குடும்பம் வீழா வண்ணம்
அணுகியதன் தலைவிதியை அழித்துக் காக்க
அரியதொரு விதியெழுதும் அரசு கண்டோம்;
மணிவிழியின் ஒளிமயங்கிக் கலங்கி நொந்து
மாற்றரிய வழியின்றித் தவித்து நிற்போர்
அணியணியாய் வந்துவிழி பெற்றுச் செல்ல
அவர்தமக்கு வழிகாட்டும் அரசு கண்டோம்.

தலையிலொரு முழத்துணியைச் சுற்றிக் கட்டித்
தனதிடையில் சிறுகந்தல் இறுகச் சுற்றி
உலையிலெழுங் காற்றெனவே மூச்சு வாங்க
உடல்பருத்த மாந்தரையும் ஏற்றி வைத்துத்
தலையிருந்து கால்வரையும் வியர்வை சிந்தி
தனிமனிதன் வண்டியினை இழுத்துச் செல்லும்
நிலையினியும் ஏனென்றால், படைப்போன் இந்த
நிலைஎழுதி விட்டானென் றுரைக்கக் கேட்டோம்.

விதியென்று சொல்வதெலாம் சோம்பி நிற்பார்
வீண்பேச்சு; படைத்தவற்குப் பழியும் ஆகும்;
மதிகொண்டு சிந்தித்துத் துயரம் தீர்க்க
மாற்றொன்று காண்பதுதான் ஆள்வோர் செய்கை;
அதுவின்றேல் அரிய ணைஏன்? தாழ்வு பெற்ற
அவர்தமக்குங் கைகொடுப்போம் என்று ணர்ந்து
மிதிவண்டி நல்கிஅவர் துயர்கு றைத்து
மீட்சிதரத் துணைநிற்கும் அரசு கண்டோம்.

அங்கமெலாங் குறைந்தழுகி முகம்வ தங்கி
அழகழிந்து புறங்கூனி நடைத ளர்ந்து
தங்கஒரு நிலையின்றித் தண்டு மின்றிப்
தள்ளாடிச் சோற்றுக்கு வழியு மின்றிப்
பொங்கிவரும் வேதனையை அழுது தீர்த்துப்
புழுவினுங்கீழ் நிலையினராய் இரந்து வாழும்
தொங்குமுடற் றொழுநோயர் வாழ்வை எண்ணத்
தொடங்கியவர் எவருள்ளார் காந்தி யன்றி?

புதுவாழ்வு தரவந்த காந்தி யண்ணல்
போற்றியநற் கொள்கைகளை நெஞ்சிற் கொண்டு,
விதிதானே தொழுநோயர் துயருக் கெல்லாம்
விதைஎன்ற சொல்மாற்றி வாழ்வு தந்து,
மதிவாழும் துணிவோடு கருணை வாழும்
மனங்கொண்ட அருட்செல்வர் ஆளும் ஆட்சி
இதுபோல வேறுண்டா? யாண்டும் இல்லை;
என்றென்றும் இவ்வரசு வாழ்க என்போம்.

பூவின்றிப் பொட்டின்றிக் கழுத்தில் கையில்
பூணுகின்ற அணியின்றிச் சுவைகள் உண்ண
நாவின்றி எதிரில்வரத் தகுதி யின்றி
நலமெல்லாம் பெறலின்றி நெஞ்சுள் நாளும்
கோவென்று கூவிஎழிற் கோதை மார்கள்
கொழுநர்தமை இழந்தமையால் வாழ்வு கெட்டுச்
சாவென்று வருமென்று நொந்து நொந்து
சலித்திருந்து நடைப்பிணமாய்க் கிடந்து ழன்றார்.

உற்றாரும் பெற்றாரும் கைம்மை யுற்ற
உயிர்ச்சிலையைக் கண்டுமனம் உருகி நிற்பர்;
'மற்றாரும் விலக்கரிய தலையெ ழுத்து
மாதிவட்கு வாய்த்தவிதம் கொடுமை' என்பர்;
கற்றாரும் மற்றாரும் விதியை நம்பிக்
காலத்தைக் கடத்தினரே யன்றி யந்தப்
பொற்பாவை வாழ்வுக்கு வழியைக் காணப்
புரியாமல் மதிமயங்கி வாழ்ந்து வந்தார்.

வேரடியிற் பழுத்தபலா கேட்பா ரற்று
வீணாதல் கண்டெழுந்து, மூடக் கொள்கை
வேரடியைப் பெயர்த்துவிட்டார் பெரியார்; அந்த
வீரத்தின் அடிச்சுவட்டில் நடந்து செல்லும்
சீருடைய நமதரசு துணிந்து, கண்ணீர்ச்
சிற்பங்கள் சிரித்திருக்க, வயது சென்றோர்
யாருடைய துணையுமின்றி வாழ்ந்தி ருக்க
ஈடில்லா மறுமலர்ச்சி வழங்கக் கண்டோம்.

'வறியவர்தம் புன்னகையில் இறைவன் உள்ளான்
வாழவழி ஏழையர்க்குக் காண்போம்' என்ற
அறிஞரவர் அண்ணாவின் இதயப் பாங்கை
அப்படியே நமதரசு பெற்ற தாலே
சிறியஇளங் குஞ்சுகளைப் பெற்றோ ரின்றிச்
சீரிழந்த குழந்தைகளைப் பேணிக் காக்கச்
செறிவுடைய நெறியமைத்து வாழ்நாள் எல்லாம்
சிரித்திருக்க அமைந்ததுகாண் கருணை இல்லம்.

இலைநமக்கு வழிஏதும் என்று வாடி,
எல்லாமே தலையெழுத்தென் றுரைத்து, வாழ்வின்
நிலையிழந்து கீழ்த்தளத்தில் உழல்வோர் எல்லாம்
நிமிர்ந்தெழுந்து நடந்துலகை விழித்து நோக்கும்
கலையிதனைக் கலைஞரலால் எவரே செய்வர்?
கடுகளவும் நன்றியுளார் ஒப்புக் கொள்வர்;
தலையெழுத்தை அழித்தெழுதுங் கையெ ழுத்தைத்
தமிழரசைப் பல்லாண்டு வாழ்க என்போம்.

## 30

# என்றும் உயர்க எழில் முல்லை

முல்லைச் சரத்துக்கு வெள்ளி விழாவென்னும்
சொல்லைச் செவிமடுத்தேன் சொக்கிநின்றேன் - புல்லிதழை
வேட்டலையும் கூட்டத்துள் வெள்ளிவிழா நாள்வரையில்
நாட்டியவன் யாரென்றேன் நான்.

முல்லைச் சரந்தொடுப்பான் முத்தமிழ்க்குத் தீங்குவரின்
சொல்லிற் சரந்தொடுப்பான் தூயனவன் - நல்லநல்ல
பாட்டுந் தொடுத்திருப்பான் பாவேந்தின் பொன்னடியான்
நாட்டினன்காண் என்றார் நயந்து.

பொன்னடியான் வாழ்கஎனப் பூரிப்பால் நான்மொழிந்தேன்
பின்னடையான் ஆள்வினையைப் பேணிநின்றேன் -
நன்னடையான்
என்றும்உயர்க எழில்முல்லைச் சரமென்றேன்
ஒன்றும் உணர்வால் உவந்து.

**(வெள்ளிவிழாக் கண்ட 'முல்லைச்சரம்' இதழுக்கு வாழ்த்து)**

**31**

## வாழிய கவிதை

பாழியல் வகுக்கும் ஏடு
படித்திட விழையும் நாட்டில்
ஏழிரண் டாண்டு காலம்
இடையறாக் 'கவிதை' என்னும்
தாளிகை கண்ட தென்றார்;
சற்றுநான் திகைத்துப் போனேன்;
வாழிய என்று சொன்னேன்
வளர்த்தவர் துணிவைக் கண்டு.

கவிதையை வளர்க்கும் பாங்கு
கற்றிலா வணிக மாக்கள்
செவியினிற் புகுந்து பாய்ந்து
சிந்தையைத் திருத்தும் வண்ணம்
குவியிடர் உற்ற போதும்
குலைவுறாக் 'கவிதை' என்னும்
சுவடியை நல்கி நிற்கும்
தோழர்நம் **தெசிணி** வாழ்க

அரைகுறை யாக வெந்த
அரிசியைச் சோறென் றோதிப்
புரைபடும் அறிவைக் காட்டும்
போலியர் சிலராற் பாட்டின்,
நெறிமுறை பிறழ்தல் கண்டேன்;
நிலைதடு மாறும் அந்த
உரைநடைக் கூட்ட மெல்லாம்
உணர்ந்திடக் 'கவிதை' வாழ்க.

## 32

## உலகத் தமிழ்க் கழக வாழ்த்து

கரும்பூறும் சாறுநிகர் தமிழைக் காக்கும்
கருத்துடன்முத் தமிழ்க்கழகம் இங்குக் கண்டீர்;
நரம்பேற உணர்வூட்டி, அறிவும் ஊட்டி,
நன்மானம், பகுத்தறிவுச் சுடருங் காட்டிச்
சுரும்பாக உழைக்கின்றீர் வாழ்த்து கின்றேன்;
சொல்வேந்தன் எங்குலத்துத் தலைவன் பேரால்
அரங்கேறி விழாவெடுக்க முயல்வீர்! உம்மை
அன்பூறும் செந்தமிழால் வாழ்த்து கின்றேன்.

**(25.08.1979 ஆம் நாள் பெங்களூர் உலகத் தமிழ்க் கழகக் கிளையில் நடைபெற்ற பாவேந்தர் விழாப் பாட்டரங்கில் தலைமையேற்ற பொழுது, உலகத் தமிழ்க் கழகத்தை வாழ்த்திப் பாடியது.)**